  - ○ பின்ஹோல் பியூபில்லோபிளாஸ்டி/ஊசித்துளை கண்மணி சீரமைப்பு (PPP) என்பது டாக்டர் அமர் அகர்வால் உருவாக்கிய நுண்சிகிச்சை தொழில்நுட்பமாகும்; இது கருவிழித் தழும்புகள், ஒழுங்கற்ற கருவிழிகள் உள்ளிட்ட பார்வைப் பிரச்சினைகள் கொண்ட தேர்ந்தெடுக்கப்பட்ட நோயாளிகளின் பார்வையை மேம்படுத்த உதவுகிறது.
- ❖ நான்கு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான குளோர்பெனிரமைன் மாலேட் மற்றும் பினைலெப்ரின் ஹைட்ரோகுளோரைடு கொண்ட நிலையான அளவு கலவை (FDC) மருந்துகளின் உற்பத்தி, விற்பனை மற்றும் விநியோகத்தை அரசு கட்டுப்படுத்தி உள்ளது.
  - ○ இந்தக் கலவைகள் சிறு குழந்தைகளுக்கு உடல்நல அபாயங்களை ஏற்படுத்தக் கூடும் என்பதோடு, இதற்கு பாதுகாப்பான மாற்று மருந்துகள் உள்ளன என்றும் அரசு தெரிவித்துள்ளது.
- ❖ நீர் ஒத்துழைப்பு, அமைதி மற்றும் பாதுகாப்பை வலியுறுத்தும் விதமாக 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23 முதல் 27 வரை உலக நீர் வாரம் கடைபிடிக்கப்படுகிறது.
  - ○ 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு Water for People & Progress என்பதாகும்.
- ❖ இந்தியா மற்றும் வியட்நாம் கடலோரக் காவல்படைகள் சென்னை கடற்கரையில் 'SAHYOG HOP-TAC' எனும் கூட்டு கடல்சார் பயிற்சியின் இரண்டாவது பதிப்பை நிறைவு செய்தன.
- ❖ அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அன்று ஒன்டாரியோ ஏரியை அமெரிக்க புவியியல் பெயரிடும் சேவைக்காக "அமெரிக்க ஏரி" என பெயர் மாற்றுவதற்கான நிர்வாக உத்தரவில் கையெழுத்திட்டார்.
  - ○ ஒன்டாரியோ ஏரியானது அமெரிக்காவின் ஐந்து பெரிய ஏரிகளில் ஒன்றாகும், மேலும் இது அமெரிக்கா மற்றும் கனடாவால் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.
- ❖ நார்வே மன்னர் ஹெரால்ட் V தனது 89 ஆவது வயதில் காலமானார்; அவர் 1991 ஆம் ஆண்டில் மன்னரானார் மற்றும் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நாட்டின் சடங்கு ரீதியான தலைவராகப் பணியாற்றினார்.
  - ○ தனது தந்தை ஐந்தாம் ஹரால்டின் மரணத்திற்குப் பிறகு, எட்டாம் ஹாக்கான் மன்னர் நார்வேயின் அரியணையை மரபுரிமையாகப் பெற்றார்.
- ❖ உற்பத்தி செய்யும் பகுதிகளில் இருந்து முக்கிய நுகர்வு மையங்களுக்கு இருப்பு வைக்கப் பட்ட வெங்காயத்தைக் கொண்டு செல்லும் முயற்சியின் ஒரு பகுதியாக, மகாராஷ்டிராவின் நாசிக்கில் இருந்து 450 டன்களுக்கும் அதிகமான வெங்காயத்தை ஏற்றிச் சென்ற முதல் காண்டா எக்ஸ்பிரஸ் டெல்லியை அடைந்தது.

- காணாமல் ஆக்கப்படுதல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பாதிக்கப் பட்டவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப் பட்டவர்களுக்கான சர்வதேச விழிப்புணர்வு தினமானது ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 30 அன்று அனுசரிக்கப்படுகிறது.
    - 2026 ஆம் ஆண்டு இந்த மாநாட்டின் 20 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது, இதன் முழக்கம் "Victims first. Actions now" என்பதாகும்.
- அமெரிக்காவின் செயின்ட் லூயிஸில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஃபேபியானோ கருவானாவை (அமெரிக்கா) 15–13 என்ற கணக்கில் தோற்கடித்து கிராண்ட் செஸ் டூரை (GCT) வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை R. பிரக்ஞானந்தா பெற்றார்.
- உத்தரப் பிரதேச மாநிலம் அமேதியில் உள்ள கோர்வா ஆயுத தொழிற்சாலையில் இந்தியாவின் முதல் 100% உள்நாட்டுத் தயாரிப்பான ஏ.கே-203 'ஷேர்' தாக்குதல் துப்பாக்கி வெற்றிகரமாகத் தயாரிக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டது.
    - இந்த துப்பாக்கியானது 2019 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்தியா-ரஷ்யா கூட்டு நிறுவனமான இந்தோ-ரஷ்யன் ரைஃபிள்ஸ் பிரைவேட் லிமிடெட் (IRRPL) மூலம் தயாரிக்கப் படுகிறது.
- இந்திய தொழில்நுட்பக் கழகம் மெட்ராஸ், ஏரோஸ்பைக் முனையுடன் கூடிய இந்தியாவின் முதல் உள்நாட்டு 5 kN காற்று உள்ளிழுக்கும் சுழலும் வெடிப்பு இயந்திரத்தை (RDE) வெற்றிகரமாகச் சோதித்து இதனால் நீடித்த அழுத்த அதிகரிப்பு எரிப்பு மூலம் நிலையான 5 kN உந்துவிசையை அடைந்தது.
    - புது தில்லியில் CSIR-தேசிய விண்வெளி ஆய்வகம் (CSIR-NAL) NJ-05 (5 கிலோ உந்துதல்), NJ-50 (50 கிலோ உந்துதல்) மற்றும் NJ-100 (100 கிலோ உந்துதல்) ஆகிய மூன்று உள்நாட்டு நுண் மற்றும் சிறிய எரிவாயு விசையாழி இயந்திரங்களை வெளியிட்டது.
- புது தில்லியில், குடியரசு துணைத் தலைவர் சி. பி. ராதாகிருஷ்ணன் அவர்கள் GNANI AI ஆல் உருவாக்கப்பட்ட இறையாண்மை கொண்ட செயற்கை நுண்ணறிவு (AI) கட்டமைப்பான 'ஞானி அர்த்தா'-வை அறிமுகப்படுத்தினார்.
    - இது Evon 3.3 என்ற பெரும் மொழி மாதிரி (LLM) மற்றும் செயற்கை நுண்ணறிவை நிஜ உலகப் பணிகள் மற்றும் நிறுவனங்களுடன் இணைக்கும் தளமான பிளெக்ஸஸ் (Plexus) ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
- புதிய தரவு மைய முதலீடுகளின் ஆதரவோடு, மும்பை மற்றும் சென்னைக்குப் பிறகு இந்தியாவின் மூன்றாவது சர்வதேச கடலடி கேபிள் நுழைவாயிலாக ஆந்திரப் பிரதேசம் மாற உள்ளது.
- உலக சமஸ்கிருத தினம் ஒவ்வொரு ஆண்டும் ஷ்ரவண பூர்ணிமா அன்று அனுசரிக்கப் படுகிறது; சமஸ்கிருத மொழியையும் அதன் கலாச்சார பாரம்பரியத்தையும் மேம்படுத்தவும் பாதுகாக்கவும் 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28 அன்று இது அனுசரிக்கப் பட்டது.
    - மத்திய கல்வி அமைச்சகம் வெளியிட்ட அறிவிப்புகளைத் தொடர்ந்து, 1969 ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் சமஸ்கிருத தினம் அதிகாரப்பூர்வமாக அனுசரிக்கப் படுகிறது.

தமிழ்நாடு செய்திகள்

நோயாளி பாதுகாப்பு நிர்வாகக் கட்டமைப்பு

- அரசு சுகாதார நிலையங்களில் நோயாளிகளின் பாதுகாப்பு மற்றும் நோயாளிகளின் அனுபவத்தை மேம்படுத்தும் விரிவான நிர்வாகக் கட்டமைப்பிற்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தக் கட்டமைப்பு ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பை மேம்படுத்துவதற்காக ஏற்கனவே உள்ள தர முயற்சிகளை ஓர் ஒற்றை நிர்வாக வழிமுறையின் கீழ் ஒருங்கிணைக்கிறது.
- இது உலக சுகாதார அமைப்பு (WHO), தேசிய தர உத்தரவாதத் தரநிலைகள் (NQAS) மற்றும் மருத்துவமனைகள் மற்றும் சுகாதார வழங்குநர்களுக்கான தேசிய அங்கீகார வாரியம் (NABH) ஆகியவற்றின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டது.
- இந்தக் கட்டமைப்பானது வழிகாட்டுதல் மற்றும் அணுகல்தன்மை, சுற்றுச்சூழல் சுகாதாரம், ஆதரவு சேவைகள், நோயாளி பாதுகாப்பு மற்றும் நோய்த்தொற்று தடுப்பு, நோயாளியின் அனுபவம் மற்றும் தரவுப் பகுப்பாய்வு மற்றும் தர மேம்பாட்டுடனான கண்காணிப்பு ஆகிய ஆறு தூண்களில் கட்டமைக்கப்பட்டுள்ளது.
- சுகாதாரத்துறை செயலாளர் தலைமையிலான மாநில உயர்மட்டக் குழு உட்பட மாநில, மாவட்ட மற்றும் மருத்துவமனை அளவிலான குழுக்களை அரசு அமைக்கும்.

எல் நினோ குறித்த நிபுணர் ஆலோசனைக் குழு

- 2026-27 மற்றும் 2027-28 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எல் நினோ வானிலை நிகழ்வின் சாத்தியமான தாக்கத்தைக் கண்காணித்து மதிப்பிடுவதற்காகத் தமிழ்நாடு அரசு ஒரு நிபுணர் ஆலோசனைக் குழுவை அமைத்துள்ளது.
- இக்குழு எல் நினோவின் தாக்கத்தை அறிவியல் பூர்வமாக மதிப்பிட்டு, தயார்நிலை மற்றும் பேரிடர் தணிப்பு நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கும்.
- இது மழைப்பொழிவு மற்றும் வறட்சி நிலைமைகளைக் கண்காணிப்பதுடன், பாதிக்கப்படக் கூடிய பகுதிகளைக் கண்டறிந்து, முன் எச்சரிக்கை அமைப்புகளுக்கு ஆதரவளிக்கும்.
- வறட்சி மற்றும் வெள்ளத் தடுப்பு தயார்நிலை குறித்து தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமைக்கு (TNDRRA) இக்குழு ஆலோசனை வழங்கும்.
- வருவாய் நிர்வாகத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் ஆணையர் தலைமையில் செயல்படும் இக்குழுவில், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை இந்தியத் தொழில்நுட்பக் கழகம் (IIT Madras), உலக வள நிறுவனம் (WRI) இந்தியா மற்றும் பிற நிறுவனங்களைச் சேர்ந்த நிபுணர்கள் இடம்பெற்றுள்ளனர்.

தமிழ்நாட்டில் குறுவை நெல் சாகுபடி பரப்பு சரிவு

- காவிரி ஆற்று நீர் பற்றாக்குறை காரணமாகத் தமிழ்நாட்டின் காவிரி டெல்டா பகுதிகளில் குறுவை நெல் சாகுபடி ஒரு லட்சத்திற்கும் அதிகமான ஏக்கர் பரப்பளவில் குறைந்துள்ளது.

- 2026 ஆம் ஆண்டு ஜூலை 27 நிலவரப்படி, குறுவை சாகுபடி 3.87 லட்சம் ஏக்கர் பரப்பளவைக் கொண்டுள்ளதுடன், இது 2025 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 5.05 லட்சம் ஏக்கராக இருந்தது.
- தஞ்சாவூர் அதிக சாகுபடி பரப்பளவை (1.29 லட்சம் ஏக்கர்) பதிவு செய்துள்ளது, அதைத் தொடர்ந்து மயிலாடுதுறை (97,000 ஏக்கர்) மற்றும் திருவாரூர் (88,700 ஏக்கர்) உள்ளன.
- ஜூன் 1 முதல் ஜூலை 28 வரைத் தமிழ்நாடு 3.57 ஆயிரம் மில்லியன் கன அடி (டிஎம்சி) காவிரி நீரை மட்டுமே பெற்றுள்ளது, இதன் விளைவாக சுமார் 34 டிஎம்சி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.
- நீர்வரத்து மேம்படாவிட்டால், சம்பா-தாளடி நெல் சாகுபடி அதன் வழக்கமான 12 லட்சம் ஏக்கரில் பாதியளவிற்கும் குறைவாகவே இருக்கக்கூடும்.

காவிரி நீர்ப் பிரச்சினை குறித்த புதிய தகவல்

- கர்நாடகா தமிழ்நாட்டிற்குக் காவிரி நீரைத் திறந்துவிட வேண்டும் என்ற காவிரி நீர் ஒழுங்குமுறைக் குழுவின் (CWRC) உத்தரவைக் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் (CWMA) உறுதி செய்துள்ளது.
- 2026 ஆம் ஆண்டு ஜூலை 29 முதல் 15 நாட்களுக்குத் தினமும் 3,500 கன அடி (cusecs) தண்ணீரைத் திறந்துவிட கர்நாடகாவிற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.
- வறட்சி, அணைகளில் நீர்வரத்து குறைவு மற்றும் குடிநீர் தேவைகள் தொடர்பான கவலைகளைக் குறிப்பிட்டு, கர்நாடகா இந்த உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்தது.
- காவிரி டெல்டாவில் நிலவும் கடும் தண்ணீர் பற்றாக்குறையைக் சுட்டிக்காட்டி, நாளொன்றுக்கு 7,000 கன அடி தண்ணீரைத் திறக்க வேண்டும் எனத் தமிழ்நாடு கோரிக்கை விடுத்தது.
- கர்நாடகாவின் அணைகளுக்கு நீர்வரத்து மேம்பட்டுள்ளதால், அதன் குடிநீர் தேவைகளைப் பாதிக்காமல் நீரைத் திறந்துவிட முடியும் என CWMA தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு சிங்கப்பெண்கள் தொழில்முனைவோர் கடன் திட்டம்

- கூட்டுறவுக் கடன்களை அதிகரிப்பதன் மூலமும், பயனாளிகளின் வரம்பை விரிவுபடுத்துவதன் மூலமும் சிங்கப்பெண்கள் தொழில்முனைவோர் கடன் திட்டத்தை விரிவுபடுத்த தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.
- கூட்டுறவு வங்கிகள் மற்றும் கடன் சங்கங்கள் மூலம் இத்திட்டத்தின் கீழான கடன்களை 25% அதிகரிக்குமாறு அதிகாரிகளுக்கு மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.
- தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்காக, சுயஉதவிக் குழுக்களுக்கு (SHGs) மட்டுமின்றி, இளைஞர்கள் மற்றும் விளிம்புநிலை மக்களையும் இத்திட்டம் இனி உள்ளடக்கும்.
- அனைத்துப் பிரிவுகளிலும் குறைந்தது 30% கடன்கள் புதிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்யுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
- இத்திட்டம் கூட்டுறவுத் துறையின் மூலம் கடன்கள் கிடைப்பதை மேம்படுத்துவதையும், மாநிலம் முழுவதும் தொழில்முனைவை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

தாயுமானவர் திட்டத்தின் பெயர் மாற்றம்

- முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் என்ற பெயரை தனது அதிகாரப்பூர்வ தகவல் தொடர்புகளில் இருந்து தமிழ்நாடு அரசு நீக்கியுள்ளது.
- இத்திட்டம் தற்போது மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான பொது விநியோகத் திட்ட (PDS) (ரேஷன்) பொருட்களை வீடு தேடி வழங்கும் திட்டம் என்று அதிகாரப் பூர்வமாக அழைக்கப்படுகிறது.
- இத்திட்டம் 65 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு அத்தியாவசிய ரேஷன் பொருட்களை அவர்கள் வீட்டிலேயே வழங்குகிறது.
- தமிழ்நாடு உண்மை/மெய்ம்மை சரிபார்ப்புக் குழுவின் தலைவராக குரு என்பவரை மாநில அரசு நியமித்துள்ளது.
- எந்தவொரு அதிகாரப்பூர்வ அரசு அறிவிப்பும் இன்னும் வெளியிடப்படவில்லை என்றாலும், உண்மை/மெய்ம்மை சரிபார்ப்புக் குழுவானது தகவல் ஒருமைப்பாடு மையம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

உடல் உறுப்பு தானத்திற்கான சிறந்த மாநில விருது - தமிழ்நாடு

- புதுடெல்லியில் நடைபெற்ற 16வது இந்திய உடல் உறுப்பு தான தின விழாவில், உடல் உறுப்பு தானத்திற்கான 'சிறந்த மாநில' விருதை தமிழ்நாடு பெற்றுள்ளது.
- மூளைச்சாவு அடைந்தவர்களின் உடல் உறுப்பு தானத்தில் மாநிலத்தின் சிறந்த செயல் பாட்டை அங்கீகரிக்கும் வகையில் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால் இவ்விருது வழங்கப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் 266 பேர் இறந்த பிறகு உறுப்பு தானம் செய்துள்ளனர் மற்றும் 1,476 உறுப்புகள் மாற்று அறுவை சிகிச்சைக்கு வெற்றிகரமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன.
- தமிழ்நாடு உடல் உறுப்பு மாற்று ஆணையமானது (TRANSTAN) 2008 ஆம் ஆண்டு முதல் இம்மாநிலத்தில் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை முறைப்படுத்தி, ஊக்குவித்து வருகிறது.
- இதயம் மற்றும் நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சையில் தமிழ்நாடு இந்தியாவில் முதலிடத்தில் உள்ளது.
- மேலும், 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் 2026 ஆம் ஆண்டு ஜூலை வரை மூளைச் சாவு அடைந்த 798 கொடையாளர்களை அரசு மரியாதையுடன் சிறப்பித்துள்ளது.
- 2008 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் 2026 ஆம் ஆண்டு ஜூலை வரை, இறந்த 2,490 கொடையாளர்களிடமிருந்து உடல் உறுப்பு தானத்தை தமிழ்நாடு எளிதாக்கியுள்ளது, இதன் மூலம் 14,532 உறுப்புகள் மாற்று அறுவை சிகிச்சை செய்யப் பட்டுள்ளன.

காவிரியின் நீர்வரத்து 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு சரிவு

- 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிகக் குறைந்த அளவிலான காவிரி நீரை தமிழ்நாடு பெற்றுள்ளது.
- ஜூலை மாதத்திற்கு ஒதுக்கப்பட்ட 31.24 டிஎம்சி (tmcft) நீருக்குப் பதிலாக, பிலிகுண்டுலுவில் 0.698 டிஎம்சி நீரை மட்டுமே மாநிலம் பெற்றுள்ளது.

- 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 2 நிலவரப்படி, பிலிகுண்டுலுவில் பெறப்பட்ட மொத்த காவிரி நீர் 3.687 டிஎம்சி ஆகும் (ஜூன்: 2.915 டிஎம்சி, ஜூலை: 0.698 டிஎம்சி, ஆகஸ்ட்: 0.074 டிஎம்சி).
- காவிரி நடுவர் மன்ற தீர்ப்பின்படி (உச்ச நீதிமன்றத்தால் திருத்தப்பட்டது), ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் தமிழ்நாடு 40.43 டிஎம்சி நீரைப் பெற்றிருக்க வேண்டும்.
- கர்நாடகா-தமிழ்நாடு எல்லையில் அமைந்துள்ள பிலிகுண்டுலு, 2013 ஆம் ஆண்டு முதல் அதிகாரப்பூர்வமாக காவிரி நீர் அளவிடப்படும் இடமாக இருந்து வருகிறது.

தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை 2026-27 - முக்கிய அம்சங்கள்

நிதிநிலை அறிக்கை கண்ணோட்டம் மற்றும் நிதி நிலை

- தமிழக நிதியமைச்சர் என். மரிய வில்சன் அவர்களால் 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5 அன்று சட்டமன்றத்தில் TVK தலைமையிலான அரசின் 2026-27 ஆம் ஆண்டிற்கான முதல் பட்ஜெட்டைத் தாக்கல் செய்தார்.
- இந்த பட்ஜெட் பெண்கள், மாணவர்கள், இளைஞர்கள், மூத்த குடிமக்கள், சுகாதாரம், கல்வி, தொழில்துறைகள், உள்கட்டமைப்பு, செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் நலத்திட்டங்களில் கவனம் செலுத்துகிறது.
- தமிழ்நாட்டின் மாநில சொந்த வரி வருவாய் (SOTR) 9.78% வளரும் என கணிக்கப் பட்டு உள்ளது.
- மாநிலத்தின் நிலுவையில் உள்ள கடன் ₹10.99 லட்சம் கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- 3,000 கோயில்களின் புனரமைப்புப் பணிகள், கும்பாபிஷேகம் மற்றும் 84 கோயில் தேர்களை சீரமைக்க ₹708 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கல்வி, இளைஞர் மற்றும் திறன் மேம்பாடு

- மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்குவதற்கான வெற்றி மடிக்கணினி திட்டத்திற்கு ₹2,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- புதிய பயணம், புதிய வேகம் திட்டத்தின் கீழ், 11 ஆம் வகுப்பு பயிலும் 5.3 லட்சம் மாணவர்களுக்கு தலைக்கவசம் மற்றும் தண்ணீர் பாட்டில்களுடன் மிதிவண்டிகள் வழங்குவதற்காக ₹277 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- பெருந்தலைவர் காமராஜர் மாதிரிப் பள்ளிகள் இலவச கல்வி, உணவு, தங்குமிடம், சீருடைகள், புத்தகங்கள் மற்றும் சுகாதார வசதிகளை வழங்குவதற்காக ₹125 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- சூப்பர் கிளீன், சூப்பர் கேம்பஸ் திட்டம் 10,000 பள்ளிகளில் தூய்மை, குடிநீர், கழிப்பறை வசதிகள் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக ₹139 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.
- பள்ளிக் கல்வித் துறைக்கு ₹44,527 கோடியும், உயர்கல்வித் துறைக்கு ₹8,393 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- 1 லட்சம் வேலை தேடுபவர்களுக்கு திறன் மற்றும் வேலைவாய்ப்புப் பயிற்சி மற்றும் இளைஞர்களுக்கு உள்ளகப் பயிற்சி வழங்குவதற்காக வெற்றித்திறன் பயிற்சித் திட்டத்திற்கு ₹150 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ₹90 கோடி செலவில் ஐந்து புதிய தொழில் பயிற்சி நிலையங்கள் (ITI) அமைக்கப்படும், மேலும் ₹50 கோடி செலவில் 10 ஒலிம்பிக் சிறப்பு மையங்கள் உருவாக்கப்படும்.

- 1 லட்சம் தங்கும் வசதிகளுடன் 200 விடுதிகளை மேம்படுத்துவதற்காக மாணவர் விடுதிகள் மற்றும் உள்கட்டமைப்பு கழகம் உருவாக்கப்படும்.

நலத்திட்டங்கள், பெண்கள் மற்றும் சமூக நீதி

- அண்ணன் சீர் திட்டத்தின் கீழ், தகுதியான மணப்பெண்களுக்கு 8 கிராம் (ஒரு சவரன்) தங்க நாணயம் மற்றும் பட்டுப் புடவை வழங்குவதற்காக ₹812 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.
- தாய் மாமன் தங்க மோதிரம் திட்டத்தின் கீழ் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் 1 கிராம் தங்க மோதிரம் வழங்குவதற்காக ₹560 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- தாய் பராமரிப்பு மையங்களில் கர்ப்பிணிப் பெண்களுக்கு உணவு, மருத்துவ பராமரிப்பு மற்றும் சுகாதார கண்காணிப்பை வழங்குவதற்காக ₹23 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.
- குடிசை வீடுகளில் வாழும் குடும்பங்களுக்கு வீடுகள் வழங்குவதற்காக வெற்றி வீடு திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.
- ஐந்து மாவட்டங்களில் திருநங்கைகளுக்கான அரண் காப்பகங்கள் அமைக்கப்படும்.
- அறிவுசார் குறைபாடு உள்ள குழந்தைகளுக்கான நம்பிக்கை இல்லம் மையங்கள் ₹4 கோடியில் அமைக்கப்படும்.
- ஹஜ் மானியம் ₹25,000 லிருந்து ₹35,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- மாற்றுத் திறனாளிகள் நலத்துறைக்கு ₹1,485 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொழில்நுட்பம், தொழில்துறை மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு

- இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் புத்தாக்க நகரமான அறிவகம், ஒரு செயற்கை நுண்ணறிவு பல்கலைக்கழகம், குறைக்கடத்தி பரிசோதனை ஆய்வகம், திறன் மையம் மற்றும் புத்தாக்க மையங்களை உள்ளடக்கியதாக இருக்கும்; இதற்கான சாத்தியக்கூறு ஆய்விற்கு ₹5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு செயற்கை நுண்ணறிவு திட்டம் (TN AI Mission) சுகாதாரம், விவசாயம், கல்வி மற்றும் குடிமக்கள் சேவைகளில் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான சேவைகளை அறிமுகப்படுத்தும்.
- கைவினைஞர்கள் மற்றும் வடிவமைப்பு கல்விக்கு ஆதரவளிப்பதற்காக ₹60 கோடி செலவில் தமிழ்நாடு வடிவமைப்பு நிறுவனம் நிறுவப்படும்.
- குலசேகரப்பட்டினம் விண்வெளி நிலையத்திற்கு அருகே திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடியில் விண்வெளித் தொழில் முதலீட்டு மண்டலம் உருவாக்கப்படும்.
- 1,000 குளிர்சாதன வசதி கொண்ட மின்சார மாநகரப் பேருந்துகள் (MTC) வாங்கப்படும், இதற்காக ₹500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ₹50 கோடி ஒதுக்கீட்டில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 20,000 மின்சார வாகன (EV) மின்னேற்று நிலையங்கள் உருவாக்கப்படும்.
- கோயம்புத்தூர் - அரியலூர் 765 கிலோவோல்ட் (kV) மின்கடத்திப் பாதை திட்டம் சுமார் ₹4,000 கோடி மதிப்பீட்டில் பொது-தனியார் கூட்டாண்மை (PPP) முறையில் செயல் படுத்தப் படும்.
- மூன்றாவது சென்னை பெருந்திட்டமானது (2027-2046) ₹25 கோடி ஒதுக்கீட்டில் தயாரிக்கப் படவுள்ளது.

ஆற்றல், சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளப் பாதுகாப்பு

- மேற்கூரை சூரியசக்தி மானியத் திட்டம், சூரியசக்தி தகடுகளை நிறுவும் வீட்டுப் பயனாளிகளுக்கு ₹1 லட்சம் வரை மானியம் வழங்கும்.
- சென்னை நுகர்வோர்களுக்கும் மற்றும் தமிழ்நாடு முழுவதும் உள்ள 50 லட்சம் தொழில்துறை மற்றும் வணிக நுகர்வோர்களுக்கும் திறன் மீட்டர்கள் பொருத்தப் படும்.
- TN-SHORE திட்டத்தின் மூலம் ₹322 கோடி ஒதுக்கீட்டில் 2,500 ஹெக்டேர் பரப்பளவில் சதுப்புநிலங்கள் மீட்டெடுக்கப்படும்.
- மனித-வனவிலங்கு மோதல் தணிப்பு திட்டம் 100 கிராமங்களை உள்ளடக்கும், இதற்காக ₹20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- பனை சார்ந்த பொருட்களை ஊக்குவிப்பதற்காக ₹16 கோடியில் தமிழ்நாடு பனை மேம்பாட்டுக் கழகம் நிறுவப்படும்.

விவசாயம், மீன்வளம், சுகாதாரம் மற்றும் ஊரக வளர்ச்சி

- காவிரி-வைகை-குண்டாறு நதிகள் இணைப்புத் திட்டம் முதற்கட்டமாக ₹150 கோடி ஒதுக்கீட்டுடன் தொடங்கப்படும்.
- பாரம்பரிய மீனவர்களுக்கு மீன்பிடி தடைக்கால நிவாரணம் குடும்பத்திற்கு ₹7,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது, இதன் மூலம் 1.93 லட்சம் குடும்பங்கள் பயனடைவார்கள், இதற்காக ₹135 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயத் தொழிலாளர்களை நில உரிமையாளர்களாக மாற்ற உதவும் மண்ணின் மகள் திட்டத்திற்கு ₹20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கான அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கு ₹300 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- பழங்குடியினர் குடியிருப்புகளுக்கான ஆன்றோர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு ₹250 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- முதியோர்களுக்கான நடமாடும் முதியோர் சிகிச்சை மையங்கள் ₹33 கோடியில் தொடங்கப்படும் என்பதுடன் இது இலவச சுகாதாரப் பரிசோதனைகள் மற்றும் மருந்துகளை வழங்கும்.

நாமக்கல் கவிஞர் மாளிகை - முதலமைச்சரின் புதிய அலுவலகம்

- இடப்பற்றாக்குறை காரணமாக தமிழ்நாடு முதலமைச்சர் தனது முதலமைச்சர் அலுவலகத்தை (CMO) சென்னையில் உள்ள புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையின் 10-வது தளத்திற்கு மாற்ற முடிவு செய்துள்ளார்.
- நாமக்கல் கவிஞர் மாளிகை என்பது 1975 ஆம் ஆண்டு புனித ஜார்ஜ் கோட்டை வளாகத்திற்குள் கட்டப்பட்ட 10 மாடி அரசு கட்டிடமாகும், இதில் பல அரசுத் துறைகள் மற்றும் மூத்த அதிகாரிகளின் அலுவலகங்கள் செயல்படுகின்றன.
- அரசு ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரித்ததால், 1950களின் பிற்பகுதியில் ஒரு பெரிய தலைமைச் செயலகக் கட்டிடத்திற்கான தேவை எழுந்தது; 1973 ஆம் ஆண்டில், தமிழ்நாடு அரசு 24,750 சதுர மீட்டர் தரைப்பரப்புடன் புனித ஜார்ஜ் கோட்டை வளாகத்திற்குள் 10 மாடிக் கட்டிடத்தைக் கட்ட முடிவு செய்தது.

- இந்தக் கட்டிடம் 1975 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 அன்று பொதுப்பணித்துறை அமைச்சர் பி.யு. சண்முகம் முன்னிலையில் முதலமைச்சர் மு. கருணாநிதியால் திறந்து வைக்கப் பட்டது.
- தமிழ் கவிஞர் நாமக்கல் கவிஞர் வெ. ராமலிங்கம் பிள்ளையின் நினைவாக இந்த கட்டிடத்திற்கு நாமக்கல் கவிஞர் மாளிகை என பெயரிடப்பட்டது.
- இக்கட்டிடம் 12 ஆண்டுகளுக்கு முன்பு ₹28 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டு முன்னாள் முதலமைச்சர் ஜெ. ஜெயலலிதாவால் திறக்கப்பட்டது.
- தற்போது, முதலமைச்சர் 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புனித ஜார்ஜ் கோட்டையின் பிரதான தொகுதியிலிருந்து செயல்படுகிறார்.
- புனித ஜார்ஜ் கோட்டை என்பது 1644 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியால் நிறுவப்பட்ட ஒரு பாதுகாக்கப்பட்ட வரலாற்று நினைவுச் சின்னமாகும், இது பின்னர் சென்னை மாகாணத்தின் நிர்வாக மையமாக மாறியது.
- இந்த மாற்றமானது வரலாற்று சிறப்புமிக்க வளாகத்தில் தொடர்ந்து செயல்படும் அதே வேளையில் அதிக நிர்வாக இடத்தை வழங்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.

கஜாசம்ஹாரமூர்த்தி சோழர் காலச் சிற்பங்கள்

- தமிழ்நாட்டில் உள்ள சோழர் கால கஜாசம்ஹாரமூர்த்தி சிற்பங்கள் பழங்கால வெண்கலம் மற்றும் கல் சிற்ப மரபுகளின் கலைச் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றன.
- மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள வழுவூர் அஷ்ட வீரட்டானங்களில் (எட்டு புனித சிவத் தலங்கள்) ஒன்றாகும், இங்கு சிவபெருமான் தனது வீரச் செயல்களை வெளிப்படுத்தியதாக நம்பப்படுகிறது.
- வழுவூர் வீரட்டேசுவரர் கோயிலில் யானை அரக்கனான கஜாசுரனை வதம் செய்த பிறகு சிவபெருமான் காட்சியளிக்கும் புகழ்பெற்ற கஜாசம்ஹாரமூர்த்தியின் வெண்கலச் சிலை உள்ளது; இந்த சிலை பொதுவாக முதலாம் ராஜராஜனின் (சோழ வம்சம்) ஆட்சிக் காலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது.
- பிரபஞ்ச நடனக் கலைஞராக சிவபெருமானைக் குறிக்கும் நடராஜரைப் போலல்லாமல், கஜாசம்ஹாரமூர்த்தி சிவபெருமானின் உக்கிரமான வடிவத்தைக் குறிக்கிறது, இது தமிழில் யானை உரித்த தேவர் என்று அழைக்கப்படுகிறது.
- மற்றொரு முக்கியமான கஜாசம்ஹாரமூர்த்தி சிற்பம் தஞ்சாவூர் மாவட்டம், புள்ளமங்கை பிரம்மபுரீஸ்வரர் கோயிலில் காணப்படுகிறது, அதே சமயம் தாராசுரம் கோயிலில் உள்ள ஒரு கல் சிற்பம் தஞ்சாவூர் மராட்டிய அரண்மனை வளாக கலைக் கூடத்தில பாதுகாக்கப் படுகிறது.

தமிழ்நாட்டின் முதல் சதுப்புநிலப் பாதுகாப்பு மையம்

- தமிழ்நாடு கடற்கரை மறுசீரமைப்பு முன்னெடுப்பின் (TN-SHORE) கீழ் கடலூர் மாவட்டம் கிள்ளை அருகே முழுக்குத்துறையில் தமிழ்நாட்டின் முதல் சதுப்புநிலப் பாதுகாப்பு மையம் நிறுவப்பட்டு வருகிறது.
- இந்தத் திட்டம் ₹26.50 கோடி மதிப்பீட்டைக் கொண்டுள்ளது மற்றும் சதுப்புநிலப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு, அறிவியல் ஆராய்ச்சி, பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஆகியவற்றை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்த மையம் சதுப்புநில சுற்றுச்சூழல் அமைப்புகளின் பாதுகாப்பு மற்றும் நிலையான மேலாண்மைக்கான மையமாக செயல்படும் மற்றும் பருவநிலை நெகிழ்வுத்தன்மை மற்றும் கடலோர சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேம்படுத்தும்.
- இந்த திட்டம் இந்தியாவில் உள்ள மிகப்பெரிய மற்றும் சுற்றுச்சூழல் ரீதியாக முக்கியமான சதுப்புநிலக் காடுகளில் ஒன்றான பிச்சாவரம் சதுப்புநிலக் காட்டுக்கு அருகில் அமைந்துள்ளது, மேலும் பாதுகாப்பு கல்வி மற்றும் நிலையான சூழல் சுற்றுலா வசதிகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உள்ளூர் சமூகங்களை ஈடுபடுத்தும் அதே வேளையில், இந்த மையம் சதுப்புநில பாதுகாப்பு குறித்த ராம்சார் ஒப்பந்த கடமைகளை ஆதரிக்கும் மற்றும் நிலையான சூழல் சுற்றுலா மூலம் வாழ்வாதார வாய்ப்புகளை வழங்கும்.

இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு நகரம் - அறிவகம்

- 2026-27 ஆம் ஆண்டிற்கான மாநில பட்ஜெட்டில் 'அறிவகம்' என்ற பெயரிலான இந்தியாவின் முதல் பிரத்தியேக செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் கண்டுபிடிப்பு நகரத்தை தமிழ்நாடு அறிவித்துள்ளது.
- இத்திட்டத்திற்கான சாத்தியக்கூறு ஆய்வானது ₹5 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப் படும்.
- அறிவகத்தில் செயற்கை நுண்ணறிவு (AI) பல்கலைக்கழகம், சர்வதேச திறன் மேம்பாட்டு மையம், குறைக்கடத்தி வன்பொருள் பரிசோதனை ஆய்வகம், பல-களக் கண்டுபிடிப்புக் காப்பகங்கள் மற்றும் குடியிருப்பு வசதிகள் ஆகியவை இடம்பெறும்.
- இத்திட்டமானது செயற்கை நுண்ணறிவு (AI), ஆழ்-தொழில்நுட்ப ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு, புத்தொழில்கள் மற்றும் திறமையான பணியாளர் மேம்பாடு ஆகியவற்றை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் இயங்கும் முதலீட்டு சேவை அமைப்பான Guidance 3.0-ஐ தமிழ்நாடு அறிமுகப்படுத்துவதோடு, அனைத்து தொழில்துறை ஒப்புதல்களையும் ஒரே தளத்தின் மூலம் வழங்குவதற்காக தமிழ்நாடு ஒற்றைச் சாளர வலைதளம் 3.0-ஐ மேம்படுத்தும்.

தமிழ்நாடு வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2026–27

- 2026-27 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையை சட்டப்பேரவையில் தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் ஆர்.வினோத் தாக்கல் செய்தார்.
- இந்த நிதிநிலை அறிக்கையானது விவசாயிகளின் நலன், நவீன தொழில்நுட்பம், நீர்ப் பாசனம், பயிர் பாதுகாப்பு மற்றும் நிலையான வேளாண்மை ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- வேளாண் இயந்திரமயமாக்கல் முன்னெடுப்பின் கீழ், ₹227.2 கோடி ஒதுக்கீட்டில் 24,000 விவசாயிகளுக்கு மானிய விலையில் விவசாய இயந்திரங்கள் வழங்கி ஆதரவளிக்கப் படும்.
- உழவர் செயற்கை நுண்ணறிவுத் திட்டமானது வானிலை அறிவிப்புகள், மண்வளக் கண்காணிப்பு மற்றும் சந்தைத் தகவல்களுக்காக செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் இயந்திரக் கற்றல் (ML) கருவிகளைப் பயன்படுத்தும்; இதற்காக ₹2 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது.

- விவசாயிகளுக்கான இலவச மின்சாரத் திட்டத்திற்கு 2026-27 ஆம் நிதியாண்டிற்கு ₹7,432 கோடி ஒதுக்கப்படும்.
- விவசாய நிலங்களில் ஊட்டச்சத்து அளவை மேம்படுத்த மண்வள மேம்பாட்டு நடவடிக்கைகள் ₹600 கோடியில் செயல்படுத்தப்படும்.
- உரங்களின் திறமையான பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக 1 லட்சம் விவசாயிகளுக்கு மண்வள அட்டைகள் வழங்கப்படும்; இதற்காக ₹4 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது.
- விவசாய நிலங்களைச் சுற்றி மரக்கன்றுகள் நடுவதை ஊக்குவிப்பதன் மூலம் வேளாண் காடுகளை மேம்படுத்த 'வேளாண் காடுகள் திட்டம்' ₹17.7 கோடியில் செயல் படுத்தப் படும்.
- மனித-வனவிலங்கு மோதலின் தாக்கங்களைக் குறைக்க காட்டுப்பன்றிகள் மற்றும் யானைகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் ₹7.35 கோடியில் பலப்படுத்தப்படும்.
- அண்ணல் அம்பேத்கர் வேளாண் உதவித் திட்டமானது, சிறு மற்றும் குறு பட்டியலிடப்பட்ட சாதியினர் (SC) மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியின (ST) விவசாயிகளுக்கு ₹56.7 கோடியில் ஆதரவளிக்கும்.
- தமிழ்நாடு சிறுதானியத் திட்டம், சிறுதானிய சாகுபடி மற்றும் உற்பத்தியானது ₹63.81 கோடியில் விரிவுபடுத்தப்படும்.
- பருத்திப் புரட்சி திட்டமானது, ஐந்து ஆண்டுத் திட்டத்தின் மூலம் பருத்தி விவசாயிகளுக்கு ₹27.2 கோடியில் ஆதரவளிக்கும்.
- சின்ன வெங்காயத்திற்கான சேமிப்பு வசதிகள் 57,000 மெட்ரிக் டன் கொள்ளளவுடன் ₹22 கோடி ஒதுக்கீட்டில் நிறுவப்படும்.
- வெற்றி வான்மகள் திட்டத்தின் கீழ், 100 பெண் விவசாயிகள் உட்பட 500 விவசாயிகளுக்கு ஆளில்லா விமானத் தொழில்நுட்பத்தில் பயிற்சி அளிக்கப்படும்; இதற்காக ₹4 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டிலிருந்து வேளாண் ஏற்றுமதியை மேம்படுத்த ₹8.4 கோடி ஒதுக்கப்படும்.
- அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஆண்டிற்கான உணவு தானிய உற்பத்தியை 131 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்த்த மாநில அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

மதுபானங்கள் மீதான சுற்றுச்சூழல் மற்றும் சமூக நலத் தீர்வை

- மதுபான விற்பனை மீது சுற்றுச்சூழல் மற்றும் சமூக நலத் தீர்வையை விதிப்பதற்கான மசோதாவை தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியது.
- இந்தத் தீர்வை மதுபான பாட்டில்கள் மற்றும் கொள்கலன்களின் மறுசுழற்சி, பாதுகாப்பான அகற்றம் மற்றும் மறுபயன்பாடு ஆகியவற்றிற்கு நிதியளிக்கும்.
- இதன் மூலம் கிடைக்கும் வருவாய், மதுப்பழக்கத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மறுவாழ்வு மற்றும் மது மீட்பு திட்டங்களுக்கும் வாழ்வாதார உதவிக்கும் பயன்படுத்தப்படும்.
- மதுப்பழக்கத்தால் ஏற்படும் தீமைகள் மற்றும் மதுபான கொள்கலன்களை முறையற்று அகற்றுதல் குறித்த பொது விழிப்புணர்வுப் பிரச்சாரங்களுக்கும் இது நிதியளிக்கும்.
- காடுகள், வனவிலங்குகள் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் மீட்டெடுக்கவும் இந்த நிதி பயன்படுத்தப்படும்.

- 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (VAT) சட்டத்தில் திருத்தம் செய்ய இந்த மசோதா முன்மொழிகிறது.

500 ஆண்டுகள் பழமையான விஷ்ணு சிலை கண்டெடுப்பு

- தமிழ்நாட்டின் ராணிப்பேட்டை மாவட்டம் புளியங்கண்ணு கிராமத்தில் வறண்ட பாலாறு ஆற்றுப்படுகையில் சுமார் 500 ஆண்டுகள் பழமையானது என நம்பப்படும் விஷ்ணு சிலை ஒன்று தோண்டியெடுக்கப்பட்டுள்ளது.
- கிரானைட் கல்லால் ஆன இந்தச் சிலை சுமார் 2 அடி உயரமும் 1.5 அடி அகலமும் கொண்டது.
- இப்பகுதியில் கோயில் கட்டுமானப் பணிகள் விரிவடைந்த விஜயநகரப் பேரரசு காலத்தைச் சேர்ந்ததாக இது இருக்கலாம் என உள்ளூர் வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர்.
- சிலையின் தலைப்பகுதி சற்று சேதமடைந்துள்ளது, அதே சமயம் சக்கரம் ஏந்திய கை உட்பட இரண்டு கைகள் சேதமின்றி முழுமையாக உள்ளன.
- 1878 ஆம் ஆண்டின் இந்தியப் புதையல் சட்டத்தின்படி, ஒரு அடிக்குக் கீழே புதைக்கப்பட்டு கண்டெடுக்கப்படும் புதையல் அரசாங்கச் சொத்தாகக் கருதப்பட்டு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு - சட்ட ஆணையம்

- மறுசீரமைக்கப்பட்ட தமிழ்நாடு மாநில சட்ட ஆணையத்தின் தலைவராக மணிப்பூர் உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி டி. கிருஷ்ணகுமாரை தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது.
- நீதிபதி ஆர்.எம்.டி. டீக்காராமன், டி.கே. ராமச்சந்திரன் மற்றும் ஏ. அருணகிரி ஆகியோர் முழுநேர உறுப்பினர்களாகவும், பி. மோகன்தாஸ் மற்றும் ஆர். கோவிந்தராஜன் ஆகியோர் பகுதி நேர உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- தமிழ்நாடு மாநில சட்ட ஆணையம் என்பது தற்போதுள்ள சட்டங்களை ஆராய்ந்து சட்ட அமைப்பை மேம்படுத்துவதற்கான மாற்றங்களை பரிந்துரைக்கும் ஒரு மாநில அளவிலான அமைப்பாகும்.
- தற்போதுள்ள சட்டங்களில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து தகுந்த திருத்தங்கள் அல்லது புதிய சட்ட நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பது இதன் பணிகளில் அடங்கும்.
- தமிழ்நாட்டிற்கான சமூக மற்றும் பொருளாதார சட்ட நடவடிக்கைகளையும் இந்த ஆணையம் பரிந்துரைக்கலாம்.
- முந்தைய மாநில சட்ட ஆணையத்தின் பதவிக்காலமும் 2020 ஆம் ஆண்டு ஜூன் 19 முதல் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டதுடன் இந்த ஆணையம் ஒரு குறிப்பிட்ட கால அவகாசத்துடன் செயல்படுவதை காட்டுகிறது.

தமிழ்நாடு போதைப் பொருள் தடுப்புச் சிறப்புப் படை

- மாநிலம் முழுவதும் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்கு எதிரான நடவடிக்கையை வலுப்படுத்துவதற்காக தமிழ்நாடு ₹264 கோடியில் போதைப்பொருள் தடுப்புச் சிறப்புப் படையை (ANTF) உருவாக்கியுள்ளது.

- தமிழ்நாடு முழுவதும் காவல்துறை ஆய்வாளர்கள் தலைமையிலான பிரத்யேக காவல் நிலையங்களுடன் 65 ANTF பிரிவுகள் நிறுவப்படும்.
- இப்படையானது கூடுதல் காவல்துறை இயக்குநர் (ADGP) அந்தஸ்துள்ள அதிகாரியின் தலைமையில் செயல்படும். மேலும், இதில் நுண்ணறிவு, இணைய கண்காணிப்பு, நிதி விசாரணை மற்றும் வழக்குத் தொடரும் குழுக்கள் இடம்பெற்றிருக்கும்.
- மாநில அளவிலான ஒருங்கிணைப்பு மற்றும் உளவுத்துறைப் பகிர்வுக்காக சென்னையில் உள்ள ANTF தலைமையகத்தில் 24 மணி நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறை ஒன்று நிறுவப்படும்.
- விழிப்புணர்வு, மறுவாழ்வு மற்றும் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளுடன், போதைப்பொருள் கடத்தல், சட்டவிரோத விற்பனை மற்றும் போதைப்பொருள் துஷ்பிரயோகம் ஆகியவற்றில் இப்படை கவனம் செலுத்தும்.

நீட் (NEET) விலக்கு தீர்மானம் 2026

- இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்விலிருந்து (NEET) விலக்கு அளிக்கக் கோரி தமிழ்நாடு சட்டமன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.
- இந்த விலக்கினை வழங்க சம்பந்தப்பட்ட மத்திய சட்டங்களில் திருத்தம் செய்ய வேண்டும் என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கே.ஜி. அருண்ராஜ் மத்திய அரசை வலியுறுத்தினார்.
- இத்தீர்மானம் தேசிய மருத்துவ ஆணையச் சட்டம் 2019, இந்திய மருத்துவ முறைக்கான தேசிய ஆணையச் சட்டம் 2020, தேசிய ஹோமியோபதி ஆணையச் சட்டம் 2020 மற்றும் பிற தொடர்புடைய சட்டங்களில் மாற்றங்களைக் கோரியது.
- பாரதிய ஜனதா கட்சியின் (BJP) ஒரே சட்டமன்ற உறுப்பினரான எம். போஜராஜன் இத்தீர்மானத்தை எதிர்த்ததுடன், வாக்கெடுப்புக்கு முன்பு வெளிநடப்பு செய்தார்.
- 2021 ஆம் ஆண்டில், நீட் தேர்விலிருந்து விலக்கு கோரும் தமிழ்நாடு இளநிலை மருத்துவப் பட்டப்படிப்புகளுக்கான சேர்க்கை மசோதாவை (சட்டமன்ற மசோதா எண். 43/2021) சட்டமன்றம் நிறைவேற்றியது.
- 2021 ஆம் ஆண்டின் மசோதா குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது ஆனால் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் நிறுத்தி வைக்கப் பட்டு உள்ளது.

இஸ்லாத்திற்கு மாறியவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கும் மாநில அரசின் அதிகாரம்

- பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் இஸ்லாத்திற்கு மாறும் போது அவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கும் மாநில அரசின் அதிகாரத்தை தமிழ்நாடு அரசு நியாயப்படுத்தியுள்ளது.
- பிற்படுத்தப்பட்ட வகுப்புகள், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகள், சீர்மரபினர் மற்றும் பட்டியலிடப்பட்ட சாதியினரைச் சேர்ந்தவர்கள் இஸ்லாத்திற்கு மாறினாலும், அவர்களுக்கு இடஒதுக்கீட்டுச் சலுகைகளை வழங்குவதற்கான கொள்கையை வகுத்துச் செயல்படுத்தும் மாநில அரசின் அதிகாரத்தை உறுதி செய்யக் கோரி தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவின் மீது தீர்ப்பளிக்க உச்ச நீதிமன்றம் ஒப்புக் கொண்டது.

- 2024 ஆம் ஆண்டு மார்ச் 9 அன்று பிறப்பிக்கப்பட்ட அரசாணையின் நோக்கம் என்னவென்றால், "சமூக மற்றும் கல்வி ரீதியாகப் பின்தங்கிய சமூகங்களைச் சேர்ந்தவர்கள் இஸ்லாத்திற்கு மாறிய ஒரே காரணத்திற்காக இடஒதுக்கீட்டுச் சலுகைகளை இழக்கக்கூடாது என்பதை உறுதி செய்வதும், மதம் மாறினாலும் சாதகமான நடவடிக்கைகளின் (affirmative action) பலன்களைத் தக்க வைத்து சமமான வாய்ப்பை உருவாக்குவதும் ஆகும்".
- "இஸ்லாத்தைத் தழுவிய ஒருவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பு (முஸ்லிம்) அந்தஸ்தைக் கோர முடியாது" என்று ஜூன் 25 அன்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருந்தது.
- கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய பட்டியலிடப்பட்ட சாதி உறுப்பினர் ஒருவர் இட ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகுதியில் போட்டியிட விரும்பியது தொடர்பான 'ஜி. மைக்கேல் எதிர் எஸ். வெங்கடேஸ்வரன்' வழக்கில் 1951-ஆம் ஆண்டில் சென்னை உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு, 'அரசியலமைப்பு (பட்டியல் சாதியினர்) ஆணை, 1950'-இன் பத்தி 3-இன் அரசியலமைப்புச் செல்லுபடியாகும் தன்மையை உறுதிப்படுத்தி 75 ஆண்டுகளாக நிலைத்திருப்பதாக நீதிபதி மிஸ்ரா வாய்மொழியாகக் குறிப்பிட்டார்.
- 1950-ஆம் ஆண்டின் ஆணையின் பத்தி 3-இன் படி, இந்து மதத்திலிருந்து மாறுபட்ட மதத்தைப் பின்பற்றும் எவரும் (பின்னர் சீக்கியம் மற்றும் பௌத்தம் ஆகியவை இதில் சேர்க்கப்பட்டன) பட்டியலிடப்பட்ட சாதி உறுப்பினருக்கான சலுகைகளைப் பெறத் தகுதியற்றவராகக் கருதப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.
- இருப்பினும், அரசியலமைப்பின் 15(4) மற்றும் 16(4) சரத்துகளின் கீழ், முன்பு சமூக மற்றும் கல்வி ரீதியாகப் பின்தங்கியிருந்த ஒருவர் மதம் மாறிய பிறகு அவரை 'பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்' என வகைப்படுத்துவதிலிருந்து 1951-ஆம் ஆண்டு தீர்ப்பு மாநிலத்தைத் தடுக்கவில்லை என்று மாநில அரசு வாதிட்டது.
- மார்ச் 24-ஆம் தேதியிட்ட அரசாணை "மத அடிப்படையிலான விலக்குகள் ஏதுமற்ற, பிற்படுத்தப்பட்ட வகுப்பு அறிவிப்பு என்ற முற்றிலும் தனித்துவமான வகையைச் சார்ந்தது" என்று அது கூறியது.
- ஓர் இந்து இஸ்லாத்திற்கு மாறும் போது, அவர் சார்ந்திருந்த இந்து சாதி அல்லது உட்பிரிவின் சலுகைகளைத் தொடர்ந்து பெற முடியாது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.
- மதம் மாறியவரின் இஸ்லாமிய மதத்திலான அந்தஸ்து, அவர் மதம் மாறுவதற்கு முன்பு சார்ந்திருந்த சாதியால் தீர்மானிக்கப்படுவதில்லை.
- சாதிப் படிநிலையைக் கொண்ட இந்து மதத்தைப் போலன்றி, தங்கள் மதங்கள் சமூக சமத்துவத்தை வழங்குகின்றன என்று கிறிஸ்தவ மதப்பரப்புநர்களும் இஸ்லாமியப் பிரச்சாரகர்களும் வலியுறுத்தியதை உயர் நீதிமன்றம் சுட்டிக் காட்டியிருந்தது.

'தமிழ்த் தாய் வாழ்த்து'க்கான தீர்மானம்

- மாநிலத்திலுள்ள அனைத்துக் கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் பிற பொது அமைப்புகளில் நிகழ்ச்சிகள் தொடங்குவதற்கு முன்னதாக 'தமிழ்த் தாய் வாழ்த்து' கட்டாயமாகப் பாடப் பட வேண்டும் என்பதற்கான தீர்மானத்தை தமிழ்நாடு சட்டமன்றம் ஒருமனதாக நிறைவேற்றியது.

- மாநிலப் பாடல் இசைப்பு குறித்து மத்திய உள்துறை அமைச்சகம் 2026 ஆம் ஆண்டு ஜூலை 9 அன்று தேதியிட்ட கடிதம் ஒன்றில் சில கருத்துகளைத் தெரிவித்து இருந்ததோடு, மாநில அரசு நிகழ்ச்சிகளின் தொடக்கத்தில் 'வந்தே மாதரம்' பாடலை இசைக்குமாறு மாநில அரசுக்கு அறிவுறுத்தியிருந்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 'தமிழ்த் தாய் வாழ்த்து' என்பது 1891-ஆம் ஆண்டில் மனோன்மணியம் சுந்தரனார் எழுதிய 'மனோன்மணியம்' நூலிலிருந்து எடுக்கப்பட்டதாகும்.
- அரசு நிகழ்ச்சிகளில் இதனை முதலில் பாட வேண்டும் என்று வலியுறுத்தும் அரசாணை 1970 ஆம் ஆண்டு நவம்பர் 23 அன்று நடைமுறைக்கு வந்ததாக அத்தீர்மானம் குறிப்பிட்டது.
- அதனைத் தொடர்ந்து, 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 12, அன்று திமுக அரசு இதனை மாநிலப் பாடலாக அங்கீகரித்து உத்தரவு பிறப்பித்தது.
- மாநில அரசின் இத்தீர்மானம் 'தமிழ்த் தாய் வாழ்த்து'க்கு முன்னுரிமை அளிக்கிறது.

தமிழ்த் தாய் வாழ்த்து

- மாநிலத்தில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் 'தமிழ்த் தாய் வாழ்த்து' முதலில் பாடப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்தும் சிறப்புத் தீர்மானம் ஒன்றை தமிழ்நாடு சட்டமன்றம் ஒருமனதாக நிறைவேற்றியது.
- தேசியப் பாடலான 'வந்தே மாதரம்' மற்றும் தேசிய கீதமான 'ஜன கண மன' ஆகியவற்றுக்கு முன்னதாகவே மாநிலத்தின் இந்தப் பாடல் பாடப்பட வேண்டும் என்று இத்தீர்மானம் வலியுறுத்தியது.
- 'தமிழ்த் தாய் வாழ்த்து'க்குச் சட்டப்பூர்வ அங்கீகாரம் அளிக்கும் வகையில் ஒரு சட்டத்தை இயற்றுமாறு தமிழ்நாடு அரசுக்கு எதிர்க்கட்சியான திமுக வலியுறுத்தியது.
- ஆளுநர் அல்லது மத்திய அரசு அதிகாரிகள் போன்ற உயர் பொறுப்பில் உள்ளவர்களைச் சட்டரீதியாகக் கட்டுப்படுத்த வெறும் தீர்மானம் மட்டும் போதாது என்று திமுக வாதிட்டது.
- தீர்மானம் என்பதும் சட்டம் என்பதும் முற்றிலும் மாறுபட்டவை.
- வெறும் தீர்மானம் ஆளுநரையோ அல்லது மத்திய அரசு அதிகாரிகளையோ கட்டுப்படுத்தாது.
- மாநிலம் முழுவதும் 'தமிழ்த் தாய் வாழ்த்து'க்கு முன்னுரிமை அளிக்கப்படுவதை உறுதி செய்ய, இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடரிலேயே முறையான மசோதா மூலம் சட்டப்பூர்வ அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.
- தீர்மானம் மட்டுமே போதுமானது என்ற சட்டமன்ற சபாநாயகரின் கருத்தை நிராகரித்த திமுக தலைவர், சட்டப்பூர்வமான சட்டம் இயற்றப்படாவிட்டால், ஆளுநர் போன்ற உயர் பொறுப்பாளர்கள் பங்கேற்கும் அதிகாரப்பூர்வ நிகழ்ச்சிகளில் இந்தப் பாடல் தவிர்க்கப்படவோ அல்லது இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படவோ வாய்ப்பு உள்ளது என்று வாதிட்டார்.
- பள்ளிகள் அல்லது சாதாரணச் சூழல்களில் தீர்மானம் பயன்படக்கூடும் என்றாலும், அனைத்து நிறுவனங்களிலும் முழுமையான அதிகாரப்பூர்வ நடைமுறைக்குச் சட்டப் பூர்வ அந்தஸ்து அவசியமாகும்.

தமிழ்த் தாய் வாழ்த்து குறித்த மத்திய அரசின் கருத்து

- அரசாங்க நிகழ்வுகளின் போது, வந்தே மாதரம் மற்றும் தேசிய கீதம் ஆகியவை பாடப் பட்ட பிறகு, தமிழ்த் தாய் வாழ்த்து என்ற அரசுப் பாடலை கடைசியாகத்தான் பாட வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் (MHA) வலியுறுத்தவில்லை.
- கூடுதல் அரசுத் தலைமை வழக்குரைஞர் (ASG) ஏ.ஆர்.எல். சுந்தரேசன் சென்னை உயர் நீதிமன்றத்தில் இதைத் தெரிவித்தார்.
- இது தொடர்பாகத் தொடரப்பட்ட ஒரு பொதுநல மனுவை, சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அமர்வின் முதல் பிரிவு நீதிபதிகள் விசாரித்து வந்தனர்.
- மத்திய உள்துறை அமைச்சகம் 2026 ஆம் ஆண்டு ஜனவரி 28 அன்று வெளியிட்ட ஒரு அறிவிக்கையை எதிர்த்து இந்த வழக்கு தொடரப்பட்டிருந்த நிலையில், அந்த அறிவிக்கைக்குப் பதிலாக 2026 ஆம் ஆண்டு ஜூலை 9 அன்று ஒரு புதிய அறிவிக்கை வெளியிடப்பட்டதால், இந்த வழக்கு பயனற்றதாகிவிட்டது.
- தேசியப் பாடலையும் தேசிய கீதத்தையும் ஒன்றாகப் பாட வேண்டும் என்றால், அவற்றை எந்த வரிசையில் பாட வேண்டும் என்று கூடுதல் அரசுத் தலைமை வழக்குரைஞர் கூறினார்.
- தேசியப் பாடலையும் தேசிய கீதத்தையும் ஒன்றாகப் பாட வேண்டும் என்றால், முதலில் தேசியப் பாடலையும், அதைத் தொடர்ந்து தேசிய கீதத்தையும் பாட வேண்டும்.
- மாநிலப் பாடலை எந்த வரிசைப்படி பாட வேண்டும் என்பது குறித்து ஒன்றியத்தால் எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

FCRA மசோதா திரும்பப் பெறுதல் - தமிழ்நாடு

- வெளிநாட்டுப் பங்களிப்பு (ஒழுங்குமுறை) திருத்த மசோதா, 2026ஐ அதன் தற்போதைய வடிவத்தில் திரும்பப் பெறக் கோரி மத்திய அரசை வலியுறுத்தி, தமிழ்நாடு சட்டப் பேரவை ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியது.
- FCRA (வெளிநாட்டுப் பங்களிப்பு ஒழுங்குமுறைச் சட்டம்) பதிவு காலாவதியானாலோ, புதுப்பிக்கப்படாமலோ, ரத்து செய்யப்பட்டாலோ அல்லது ஒப்படைக்கப்பட்டாலோ, தொண்டு நிறுவனங்களின் சொத்துக்களை கையகப்படுத்த, நிர்வகிக்க, அப்புறப்படுத்த அல்லது விற்க அரசாங்கத்தை அனுமதிக்கும் விதிகள் குறித்து இந்தத் தீர்மானம் கவலை எழுப்பியது.
- மாநில அரசுகள் மற்றும் தொண்டு, மத, கல்வி, மருத்துவ மற்றும் சமூக அமைப்புகளுடன் விரிவான ஆலோசனைகளை நடத்துமாறு இது மத்திய அரசை வலியுறுத்தியது.
- எந்தவொரு திருத்தமும் இயற்கை நீதி, விகிதாச்சாரம், சொத்து உரிமைகள், நியாயமான எதிர்பார்ப்பு மற்றும் கூட்டாட்சி தத்துவத்தைப் பாதுகாக்க வேண்டும் என்றும், வெளிநாட்டுப் பங்களிப்புகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறலை உறுதி செய்ய வேண்டும் என்றும் பேரவை கூறியது.
- சிறுபான்மையினரால் நடத்தப்படும் கல்வி மற்றும் சமூக நல நிறுவனங்கள் உட்பட தொண்டு நிறுவனங்களின் சுயாட்சியை இந்த மசோதா பாதிக்கும் என்றும் தீர்மானத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

திருச்சியில் சங்ககால நீர்ப்பாசன அமைப்பு

- தமிழ்நாட்டின் திருச்சி மாவட்டம் கூகூர் அருகே கொள்ளிடம் ஆற்றில் சங்ககாலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படும் நீர்ப்பாசன அமைப்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- இந்தியத் தொல்லியல் துறையானது (ASI) செங்கல் மற்றும் கல் அமைப்புகளை ஆய்வு செய்து, அவற்றை வரலாற்றுத் தொடக்க காலத்தைச் சேர்ந்த (கி.பி. 3 - 4 ஆம் நூற்றாண்டு) நீர்வரத்துக் கால்வாயாக இருக்கலாம் என அடையாளம் கண்டுள்ளது.
- அரை வட்ட வடிவ செங்கல் சுவர் மற்றும் கால்வாய் திறப்பை உருவாக்கியிருக்கக் கூடிய நீரில் மூழ்கிய இரண்டு இணைச் சுவர்கள் உட்பட இரண்டு அமைப்புகள் காணப் பட்டன.
- வெளிப்படுத்தப்பட்ட அமைப்பு சுமார் 2 அடி உயரமும் 4 அடி அகலமும் கொண்டது, மேலும் இது நீர் மேலாண்மைக்கான மதகு அல்லது உள்வரும்/வெளியேறும் கால்வாயாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.
- பெரிய செங்கற்கள் மற்றும் கட்டுமான முறை காவேரிப்பட்டினம் (பூம்புகார்) அருகே வானகிரியில் காணப்பட்ட பழங்கால நீர் மேலாண்மை அமைப்பை ஒத்திருக்கிறது.

பதினைந்து புதிய நீதிபதிகள்

- சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி, 15 புதிய நீதிபதிகளுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- இதன் மூலம், உயர் நீதிமன்றத்தின் அனுமதிக்கப்பட்ட நீதிபதிகள் எண்ணிக்கை 75 ஆக உள்ள நிலையில், தற்போது பணியாற்றும் நீதிபதிகளின் எண்ணிக்கை 66 ஆக உயர்ந்துள்ளது.
- வழக்கறிஞர் பிரிவிலிருந்து பதவி உயர்வு பெற்ற எட்டு பேரில், முதல் ஐந்து பேர் நேரடியாக உயர் நீதிமன்றத்தின் நிரந்தர நீதிபதிகளாக நியமிக்கப்பட்டனர்; மீதமுள்ளவர்கள் குறிப்பிட்ட காலத்திற்கு கூடுதல் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டனர்.
- இந்நீதிமன்றத்தில் 13 பெண் நீதிபதிகள் இருப்பது பெருமைக்குரிய விஷயமாகும்; இது நாட்டின் அனைத்து உயர் நீதிமன்றங்களிலும் உள்ள பெண் நீதிபதிகளின் எண்ணிக்கையில் மிக அதிகபட்சமாகும்.
- தற்போது நீதிபதிகளின் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை 75 ஆக உள்ளது.
- அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை 18-ஆக இருந்த காலத்தில்கூட, நீதிபதிகளின் எண்ணிக்கை ஒருபோதும் முழு அளவை எட்டியதில்லை.

நெல் மற்றும் கரும்பிற்கான சிறப்பு ஊக்கத்தொகையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க உயர்வு

- நெல் மற்றும் கரும்பிற்கான சிறப்பு ஊக்கத்தொகையில் 'வரலாற்றுச் சிறப்புமிக்க உயர்வை' தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் அறிவித்தார்.
- செப்டம்பர் மாதத்தில் நெல் கொள்முதல் தொடங்கப்படும் என்றும், குறைந்தபட்ச ஆதரவு விலையுடன் (MSP) கூடுதலாக, மெல்லிய ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ₹289 சிறப்பு ஊக்கத்தொகையை அரசு வழங்கும் என்றும் அவர் கூறினார்.
- சாதாரண ரக நெல்லுக்கான ஊக்கத்தொகை குவிண்டால் ஒன்றுக்கு ₹159 ஆக இருக்கும்.

- இந்த ஊக்கத் தொகையையும் சேர்த்து, மெல்லிய ரக நெல்லின் மொத்த விலை குவிண்டால் ஒன்றுக்கு ₹2,750 ஆகவும், சாதாரண ரக நெல்லின் விலை குவிண்டால் ஒன்றுக்கு ₹2,600 ஆகவும் இருக்கும்.
- வரலாற்றிலேயே முதல் முறையாக, மாநில அரசு ஓராண்டில் ஊக்கத்தொகையை ₹156 உயர்த்தியுள்ளது.
- 2025-26 ஆம் ஆண்டிற்காகச் சர்க்கரை ஆலைகளில் பதிவு செய்துள்ள கரும்பு விவசாயிகளுக்கு, மத்திய அரசு நிர்ணயித்துள்ள டன்னுக்கு ₹3,290.50 விலையுடன் கூடுதலாக, டன்னுக்கு ₹709.50 சிறப்பு ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று முதலமைச்சர் தெரிவித்தார்.
- இந்த அறிவிப்பின் மூலம் கரும்பு விவசாயிகளுக்கான மொத்த விலை டன்னுக்கு ₹4,000 ஆக உயரும், கரும்புக்கான சிறப்பு ஊக்கத் தொகை ₹134-க்கும் அதிகமாக உயர்த்தப் படுவது இதுவே முதல் முறையாகும்.
- சட்டமன்ற விதி எண் 110-இன் கீழ் முதலமைச்சர் இந்தத் தனி அறிக்கையை வெளியிட்டார்.
- விதி 110-ன் கீழ் வெளியிடப்படும் அறிக்கையின் மீது விவாதம் ஏதும் இருக்காது என்பதைச் சட்டமன்ற சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர் தெளிவுபடுத்தினார்.
- முன்பெல்லாம், அரசின் அறிவிப்புகளுக்காக அரசியல் கட்சி உறுப்பினர்கள் அரசுக்கு "நன்றி" தெரிவிக்க அனுமதிக்கப்பட்டனர்.

தொகுதி மறுசீரமைப்பு மாற்றம் - தமிழ்நாடு

- மக்களவையின் பலத்தை 543 இடங்களாக வைத்திருக்கவும், தற்போதுள்ள மாநிலங்களுக்கு இடையேயான இடங்களின் பகிர்வைத் தக்கவைக்கவும் மத்திய அரசை வலியுறுத்தி தமிழ்நாடு சட்டமன்றம் தீர்மானம் நிறைவேற்றியது.
- தற்போதைய மக்களவை-மாநிலங்களவை விகிதமான 2.2:1 என்ற விகிதத்தைப் பராமரிக்கவும் இந்தத் தீர்மானம் கோரியது.
- தற்போதுள்ள 543 இடங்களைப் பயன்படுத்தி 2029 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் பெண்களுக்கு 33% இடஒதுக்கீட்டை அமல்படுத்தவும், அதைத் தொடர்ந்து தாமதமின்றி மாநில சட்டமன்றத் தேர்தல்களிலும் இடஒதுக்கீடு வழங்கவும் அது வலியுறுத்தியது.
- 106-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம், 2023, மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் தொகுதி மறுசீரமைப்பு பயிற்சிக்குப் பிறகு மக்களவை மற்றும் மாநில சட்டமன்றங்களில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இடஒதுக்கீட்டை வழங்குகிறது.
- மக்களவை இடங்களில் தமிழ்நாட்டின் பங்கு தற்போது 7.18% ஆக உள்ளது; மொத்த இடங்களின் எண்ணிக்கை அதிகரித்தாலும் இந்த விகிதம் குறைக்கப்படாது என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கூறியிருந்தார்.
- தமிழ்நாடு சட்டப்பேரவையில் பெண்களின் பிரதிநிதித்துவம் முந்தைய பேரவையில் இருந்த 234 சட்டமன்ற உறுப்பினர்களில் 12 என்ற எண்ணிக்கையிலிருந்து தற்போது 23 ஆக உயர்ந்துள்ளது.

தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (MLACDS) 2026–27

- 2026-27 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு (MLACDS) தமிழ்நாடு அரசு ₹828.36 கோடியை ஒதுக்கியுள்ளது.

- இந்தத் தொகையானது அனைத்து 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் இத்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட வளர்ச்சிப் பணிகளின் பட்டியலுக்கு நிதியளிக்கும்.
- ஒவ்வொரு தொகுதியும் சரக்கு மற்றும் சேவை வரியாக (ஜிஎஸ்டி) ₹54 லட்சம் உட்பட ₹3.54 கோடியைப் பெறும்.
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இந்த ஒதுக்கீட்டிற்கான அரசாணையை வெளியிட்டது.
- 2026-27 முதல் 2030-31 ஆம் ஆண்டு வரையிலான MLACDS-க்கான விரிவான வழிகாட்டுதல்களை அரசு வெளியிட்டுள்ளது.
- சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் திட்ட முன்மொழிவுகளை மாவட்ட ஆட்சியர்களிடமோ அல்லது சென்னையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரிடமோ சமர்ப்பிக்கலாம்.
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் சம்பந்தப்பட்ட ஆட்சியர்களுக்கும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கும் நிதியை விடுவிப்பார்.

மத்திய வரிப் பகிர்வில் நியாயமான பங்கு குறித்த ஒருமனதான தீர்மானம்

- தமிழ்நாடு சட்டமன்றம் ஒரு அரசுத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றியது.
- இத்தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய நிதியமைச்சர் என். மரிய வில்சன், மத்திய வரிகளைப் பகிர்ந்தளிப்பதில் வெளிப்படையான, புறநிலைத்தன்மை கொண்ட மற்றும் சமத்துவமான வழிமுறையைக் கடைப்பிடிக்குமாறு மத்திய அரசை வலியுறுத்தினார்.
- நிதிசார் கூட்டாட்சி, சமத்துவம் மற்றும் நியாயம் ஆகிய அரசியலமைப்பு நெறிமுறைகளின்படி, மத்திய அரசுக்குச் செலுத்தப்படும் வரிகளிலிருந்து மாநிலத்திற்குரிய நிதிப் பகிர்வுப் பங்கு கிடைப்பதை உறுதி செய்யுமாறு மத்திய அரசை இத்தீர்மானம் வலியுறுத்தியது.

தமிழ்த்தாய் வாழ்த்து - தமிழ்நாடு அரசாணை

- நிகழ்ச்சிகளின் தொடக்கத்தில் 'தமிழ்த்தாய் வாழ்த்து' பாடுவதைக் கட்டாயமாக்கி தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.
- இந்த உத்தரவு தமிழ்நாட்டில் உள்ள கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் பிற பொது நிறுவனங்களுக்குப் பொருந்தும்.
- அலுவல் முறை நிகழ்வுகளில் தேசிய கீதத்திற்கு முன் 'வந்தே மாதரம்' இசைக்க வேண்டும் என்ற தனது ஜனவரி 28 ஆம் தேதியிட்ட வழிகாட்டுதலைப் பின்பற்றுமாறு மாநிலங்கள் மற்றும் மத்திய அமைச்சகங்களைக் கேட்டுக்கொண்டு மத்திய உள்துறை அமைச்சகம் ஜூலை 9 அன்று எழுதிய கடிதத்தைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- மாநிலப் பாடலாக அறிவிக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்களின்படி 'தமிழ்த்தாய் வாழ்த்து' பாடப்பட வேண்டும் என்று அரசாணையில் கூறப்பட்டுள்ளது.
- 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 10 அன்று முதலமைச்சர் சி. ஜோசப் விஜய் முன்மொழிந்த தீர்மானத்தை தமிழ்நாடு சட்டமன்றம் ஒருமனதாக நிறைவேற்றியதை அடுத்து, தலைமைச் செயலாளர் எம். சாய்குமார் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

- தமிழ்நாட்டில் நடைபெறும் அரசு விழாக்களின் தொடக்கத்தில் 'தமிழ்த்தாய் வாழ்த்து' பாடுவதை இத்தீர்மானம் கட்டாயமாக்கியுள்ளது.

தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாடு 2026

- மாநிலத்தின் முதல் முக்கிய முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.67,542 கோடிக்கும் அதிகமான மதிப்பிலான 97 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் (MoUs) தமிழ்நாடு கையெழுத்திட்டுள்ளது.
- இந்த திட்டங்கள் ஆறு மாதங்கள் முதல் ஒரு வருடத்திற்குள் செயல்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, மேலும் இவை மாநிலம் முழுவதும் முதலீடு மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- கடிகாரம், ஆபரணங்கள் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் ஆட்டோமேஷன் வசதிகளை விரிவுபடுத்துவதற்காக ஓசூரில் டைட்டன் நிறுவனம் ரூ.1,000 கோடியை முதலீடு செய்யவுள்ளது, இதன் மூலம் சுமார் 1,200 வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.
- சூரிய, காற்றாலை மற்றும் மின்கலன் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் 200 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டம் உட்பட இந்துஜா குழுமம் ரூ.2,500 கோடியை முதலீடு செய்யவுள்ளது.
- கிருஷ்ணகிரியில் புதிய ஆலை மற்றும் காஞ்சிபுரத்தில் உள்ள அதன் வசதியை விரிவுபடுத்துவதற்காக செயிண்ட்-கோபைன் நிறுவனம் ரூ.2,000 கோடியை முதலீடு செய்யவுள்ளது.
- அக்னிகுல் காஸ்மாஸ் மற்றும் ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் ஆகிய நிறுவனங்கள் தூத்துக்குடியில் விண்வெளித் துறை வசதிகளுக்காக முறையே ரூ.400 கோடி மற்றும் ரூ.250 கோடியை முதலீடு செய்யவுள்ளன.

டிஜிட்டல் சொத்துப் பதிவு

- வீட்டு மனைகள் மற்றும் குடியிருப்புகளை முதல்முறையாக பதிவு செய்வதற்கான கட்டாய 'வருகையில்லா ஆவணப்பதிவு மூலம் பதிவு செய்தல்' (Presence-less Registration) முறையை தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.
- வாங்குபவர்கள், விற்பவர்கள் மற்றும் சாட்சிகள் சார்பதிவாளர் அலுவலகத்திற்குச் செல்லாமலேயே ஆவணங்களை இணையவழியில் சமர்ப்பிக்கலாம்.
- வாங்குபவர், விற்பவர் மற்றும் சாட்சிகளின் ஆதார் அட்டைகள் இணையவழியில் பதிவேற்றப்பட்டு சரிபார்க்கப்படும்.
- பதிவாளர்கள் 24 மணி நேரத்திற்குள் ஆவணங்களைப் பதிவு செய்ய வேண்டும், அல்லது திருத்தத்திற்காக அனுப்ப வேண்டும் அல்லது அவற்றை நிராகரிக்க வேண்டும்.
- ஒவ்வொரு பக்கத்திலும் விரைவு பதில் (QR) குறியீடு இருக்கும், மேலும் மாறும் ஐந்து வண்ண ஒப்புதல் முறையானது போலி ஆவணங்களைத் தடுக்க உதவும்.
- பதிவு செய்த பிறகு, டிஜிட்டல் ஆவணம் பயனாளியின் உள்நுழைவில் (login) கிடைக்கும், அதே சமயம் சான்றளிக்கப்பட்ட நகல்களை 60 நாட்களுக்குப் பிறகு பெற்றுக் கொள்ளலாம்.

தாமிரபரணி நதிக்கு சட்டப்பூர்வ அந்தஸ்து

- மாசடைவதிலிருந்து தாமிரபரணி நதியைப் பாதுகாக்கும் வகையில், சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை தமிழ்நாட்டின் தாமிரபரணி (பொருநை) நதியை ஒரு தெய்வமாக அறிவித்து, அதற்கு ஒரு சட்டப்பூர்வ நபருக்கான அந்தஸ்தை வழங்கி உள்ளது.
- இந்த தீர்ப்பானது 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் சிவானுபாண்டியன் எதிர் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் வழக்கில் வழங்கப்பட்டது.
- இந்த வழக்கு, நதிக்கரையில் இறுதிச் சடங்குகள் மற்றும் கழிவுகளைக் கொட்டுவதால் ஏற்படும் மாசுபாட்டை சுட்டிக்காட்டியது.
- வெறும் மூன்று வாரங்களில், அதிகாரிகள் நதியிலிருந்து சுமார் 90 டன் துணிகள், 2 டன் சாம்பல் மற்றும் 3 டன் பிற கழிவுகளை சேகரித்தனர்.
- மேலும் மாசுபடுவதைத் தடுக்க குறிப்பிட்ட பாதுகாப்பு நிபந்தனைகள் பின்பற்றப் படுவதை உறுதி செய்ய மாநில அதிகாரிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.
- இந்த முடிவு, இயற்கையின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பிற்கு அதிக சட்ட முக்கியத்துவத்தை அளிக்கும் 'பூமி நீதித்துறை' (Earth Jurisprudence) கொள்கையுடன் தொடர்புடையது.
- முன்னதாக, உத்தரகண்ட் உயர் நீதிமன்றம் 2017 ஆம் ஆண்டில் கங்கை மற்றும் யமுனை நதிகளை சட்டப்பூர்வ வாழும்நதிகளாக/நபர்களாக அறிவித்தது, ஆனால் நடைமுறை மற்றும் நிர்வாகச் சிக்கல்கள் காரணமாக உச்ச நீதிமன்றம் பின்னர் அந்த உத்தரவுக்கு தடை விதித்தது.
- கட்டுரையில் விவாதிக்கப்பட்ட வழக்கில், மனிதரல்லாத மற்றும் உயிரற்ற பொருட்களுக்கு சட்டப்பூர்வ ஆளுமையை நீட்டிப்பது சாத்தியமில்லை என்று 2023 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- எனவே தாமிரபரணி நதிக்கான தீர்ப்பானது, மாசடைவதிலிருந்து நதியைப் பாதுகாக்க முற்படும் அதே வேளையில், நதியை ஒரு தெய்வமாக அங்கீகரிப்பதன் மூலம் வேறுபட்ட சட்ட வழியைப் பின்பற்றுகிறது.

தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை 2026 – சுகாதாரத் துறை

- தமிழ்நாடு முதலமைச்சரின் முதியோர் காப்பீட்டுத் திட்டத்தை அரசு தொடங்க உள்ளதுடன், இது 70 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய சுமார் 38 லட்சம் மூத்த குடிமக்களை உள்ளடக்கியதாகும்.
- இத்திட்டமானது வருமான உச்சவரம்பு ஏதுமின்றி, அங்கீகரிக்கப்பட்ட அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் புற்றுநோய் சிகிச்சை தொகுப்புகள், மேம்பட்ட இருதய அறுவை சிகிச்சைகள், உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் மற்றும் உயர்நிலை நோயறிதல் சேவைகள் உள்ளிட்ட இலவச மருத்துவ சிகிச்சைகளை வழங்கும்.
- தற்போதைய மற்றும் எதிர்கால சுகாதாரச் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் 87 ஆண்டுகள் பழமையான 1939 ஆம் ஆண்டின் தமிழ்நாடு பொதுச் சுகாதாரச் சட்டம் மாற்றப்பட்டு, அதற்குப் பதிலாக ஒரு நவீன, விரிவான சட்டம் கொண்டுவரப்படும்.
- மருத்துவமனைகளுக்கு வெளியே மருத்துவக் கண்காணிப்பற்ற முறையில் வீடுகளில் நடைபெறும் பிரசவங்களை தண்டனைக்குரிய குற்றமாக மாற்றும் புதிய விதிமுறைகள் கொண்டு வரப்படும்.

- நாட்டின் சுகாதாரத் தலைநகரமாக அறியப்படும் தமிழ்நாடு, மருத்துவ சேவைகள், ஆராய்ச்சி, மருத்துவ சுற்றுலா மற்றும் ஆயுஷ் (AYUSH) ஆகியவற்றை உள்ளடக்கிய உலகத்தரம் வாய்ந்த ஒருங்கிணைந்த மருத்துவ மையமான 'TN மெடிசிட்டி' (TN Medicity) ஒன்றை நிறுவும்.
- 1,257 அரசு சுகாதார நிலையங்கள் வாயிலாக 30 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய அனைவருக்கும் ஆண்டுதோறும் 14 அடிப்படை பரிசோதனைகளை இலவசமாக வழங்கும் 'நலம் 360 – அனைவருக்கான வருடாந்திர இலவச முழு உடல் பரிசோதனைத் திட்டம்' அறிமுகப்படுத்தப்படும்.
- இந்தப் பரிசோதனைகளில் இரத்த அழுத்தம், ECG, ஹீமோகுளோபின், முழுமையான ஹீமோகிராம், சீரற்ற இரத்த சர்க்கரை, யூரியா, கிரியேட்டினின், மொத்த கொழுப்பு, சீரம் பிலிரூபின், சிறுநீர் அல்புமின் மற்றும் VIA பரிசோதனை ஆகியவை அடங்கும்.
- மாநிலத்தில் முதல் முறையாக, பொது-தனியார் கூட்டாண்மை (PPP) மாதிரியின் மூலம் பெருநகரப் பகுதிகளில் வீடு தேடி வரும் நோயறிதல் சேவைகள் வாயிலாக மாதிரிகள் சேகரிப்பு மற்றும் பரிசோதனை வசதிகள் வழங்கப்படும்.
- சமூகம், குடும்பம் மற்றும் தனிநபர் அளவிலான முழுமையான ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக, நலம் 360 அலைபேசி செயலியின் ஆதரவுடன் சுகாதாரத் துறை ஒரு 'நேர்மறை சுகாதாரக் கொள்கையை' அறிமுகப்படுத்தும்.
- உலகத்தரம் வாய்ந்த மருத்துவ சேவைகளை வழங்கும் மாநில முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களை உருவாக்குவதற்காக 'சுகாதாரப் பராமரிப்பில் மாநில முக்கியத்துவம் வாய்ந்த தமிழ்நாடு நிறுவனங்கள் சட்டம்' எனும் புதிய சட்டம் அறிமுகப் படுத்தப்படும்.
- தமிழ்நாடு முதன்முறையாக, மாதவிடாய் நிற்கும் தருவாயில் (பெரி-மெனோபாஸ்) உள்ள பெண்களின் உடல் மற்றும் மனநலத் தேவைகளை முன்கூட்டியே கண்டறிவதோடு, பரிசோதனை, ஆலோசனை மற்றும் சிகிச்சை சேவைகளை வழங்குவதற்கான 'பெரி-மெனோபாசல் பராமரிப்புக் கொள்கையை' வகுக்கும்.
- இக்கொள்கையின் கீழ், அறிகுறிகள் மதிப்பீடு, அடிப்படை பரிசோதனைகள், ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் தேவைப்படுவோரை மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்குப் பரிந்துரைப்பதற்காக அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் வாரந்தோறும் ஒரு குறிப்பிட்ட நாளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.
- கர்ப்பிணிப் பெண்களின் இரத்த அழுத்தத்தைக் கண்காணிக்க புளூடூத் வசதி கொண்ட இரத்த அழுத்தக் கருவிகள் அறிமுகப்படுத்தப்பட்டு, சரியான நேரத்தில் சிகிச்சையளிப்பதை எளிதாக்கும் வகையில் நிகழ்நேரத் தரவுப் பரிமாற்றம் செய்யப் படும்.
- வகை 1 நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு அரசு மருத்துவமனைகளில் ஆண்டு முழுவதும் இலவசமாக இன்சுலின் வழங்கப்படும்.
- ₹6.37 கோடி செலவில் 'இரும்புக் கண்மணி - பள்ளி மாணவிகளுக்கான இரத்த சோகை தடுப்புத் திட்டம்' தொடங்கப்படும்.
- ஹப்-அண்ட்-ஸ்போக் (hub-and-spoke) மாதிரியின் மூலம் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் சுமார் 4.5 லட்சம் குழந்தைகளுக்கு ஏழு அரிய மரபணு நோய்களுக்கான பரிசோதனைகளை மேற்கொள்ளும் பிறந்த குழந்தைகளுக்கான அரிய மரபணு நோய் பரிசோதனை திட்டத்தை தமிழ்நாடு தொடங்கவுள்ளது.

- பிறந்த குழந்தைகளுக்கான இந்தப் பரிசோதனையில் பிறவி தைராய்டு குறைபாடு, பிறவி அட்ரீனல் ஹைப்பர்பிளாசியா, கேலக்டோசீமியா மற்றும் பயோட்டினிடேஸ் குறைபாடு ஆகியவற்றுடன் மற்ற மூன்று அரிய மரபணு நோய்களும் அடங்கும்.

புதிய மகப்பேறு விடுப்பு விதி

- பெண் அரசு ஊழியர்கள் தங்களின் மூன்றாவது குழந்தைக்கு 12 வாரங்கள் என இருந்த முந்தைய வரம்பை மாற்றி, 365 நாட்கள் மகப்பேறு விடுப்பு அளிக்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.
- முந்தைய விதியானது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உயிருள்ள குழந்தைகளைக் கொண்ட பெண் அரசு ஊழியர்களுக்கான மகப்பேறு விடுப்பை 12 வாரங்களாக வரம்பிட்டிருந்தது.
- இந்த புதிய முடிவின் மூலம் மூன்றாவது குழந்தைக்கு 365 நாட்கள் மகப்பேறு விடுப்பு மீண்டும் வழங்கப்படுகிறது.
- 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அடிப்படை விதி 101(A)-இல் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்திற்குப் பிறகு, 12 வார விடுப்பு என்ற முந்தைய விதி அறிமுகப்படுத்தப்பட்டது.
- மாநிலத்தில் குறைந்து வரும் கருவுறுதல் விகிதம் மற்றும் முதியவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு குறித்த தமிழ்நாட்டின் கவலையைத் தொடர்ந்து இந்த மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சுகாதாரக் காப்பீட்டு விரிவாக்கம்

- முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் காப்பீட்டுத் தொகையை தமிழ்நாடு அரசு ₹5 லட்சத்தில் இருந்து ₹25 லட்சமாக உயர்த்தி உள்ளது.
- திருநங்கைகளுக்கான மருத்துவச் சேவைகள் மற்றும் அறுவை சிகிச்சைகள் சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் வழங்கப்படும்.
- இம்மருத்துவமனைகள் திருநெல்வேலி, தூத்துக்குடி, செங்கல்பட்டு, திருவாரூர், தர்மபுரி மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.
- பெரம்பூரில் ₹300 கோடி செலவில் 400 படுக்கைகள் கொண்ட பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கட்டப்படும்.
- முதலமைச்சரின் புற்றுநோய் பராமரிப்புத் திட்டம் ₹673.44 கோடி செலவில் மேம்படுத்தப் படும்.
- ₹351 கோடி செலவில் ஏழு செவிலியர் கல்லூரிகள் மற்றும் செவிலியர், மருந்தியல் மற்றும் துணை மருத்துவப் படிப்புகளில் கூடுதல் இடங்கள் உருவாக்கப்படும்.

தமிழ்நாடு சாலைப் பாதுகாப்புத் திட்டம்

- சாலை விபத்து மரணங்களைக் குறைக்க தமிழ்நாடு அரசு ஆண்டுக்கு ₹500 கோடி செலவில் முதலமைச்சரின் சாலைப் பாதுகாப்பு இயக்கத்தைத் தொடங்கும்.
- இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையிலான சாலை விபத்துகள் நடக்கும் மாநிலமாக தமிழ்நாடு பதிவாகியுள்ளது.

- அதிவேகம் மற்றும் போக்குவரத்து விதிமீறல்களைக் கண்டறிய மாநில மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் தானியங்கி வாகன எண் பலகை கண்டறிதல் (ANPR) கேமராக்கள் பொருத்தப்படும்.
- வழித்தட விபத்து மீட்பு மற்றும் அவசரச் சேவைத் திட்டத்தின் கீழ், 25 அரசு மருத்துவ மனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அவசர கால உதவி மையங்களாக மேம்படுத்தப்படும்.
- 25 விபத்துப் பகுதிகள் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு, இந்த மருத்துவ வசதிகளுடன் இணைக்கப் படும்.

தமிழ்நாடு திறமை ஆராய்ச்சிப் பிரிவு

- எதிர்கால ஒலிம்பிக் போட்டிகளுக்கான இளம் விளையாட்டுத் திறமையாளர்களைக் கண்டறிந்து பயிற்சி அளிப்பதற்காக தமிழ்நாடு அரசு 'திறமை ஆராய்ச்சிப் பிரிவை' அமைக்கும்.
- இப்பிரிவு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் (SDAT) கீழ் ₹5 கோடி செலவில் நிறுவப்படும்.
- இது 8 முதல் 18 வயது வரையிலான திறமையான சிறுவர், சிறுமிகளைக் கண்டறிந்து பயிற்சி அளிக்கும்.
- ₹15 கோடி செலவில் 10 ஒலிம்பிக் சிறப்பு மையங்கள் நிறுவப்படும்.
- சென்னையில் மாற்றுத்திறனாளிகளுக்கான ஒலிம்பிக் சிறப்பு மையம் மற்றும் SDAT ஒலிம்பிக் ஹவுஸ் அமைக்கப்படும்.
- தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒலிம்பிக் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஒலிம்பிக் தங்கம் வெல்பவர்களுக்கான ரொக்கப் பரிசு ₹3 கோடியில் இருந்து ₹5 கோடியாக உயர்த்தப் படும்.

தமிழ்நாட்டில் அதிகரிக்கப் பட்ட பயிர்க்கடன் தள்ளுபடி

- தமிழ்நாடு முதலமைச்சர், குறு, சிறு மற்றும் பிற விவசாயிகளுக்கான பயிர்க்கடன் தள்ளுபடி வரம்பை ₹50,000-லிருந்து ₹75,000 ஆக உயர்த்தி அறிவித்தார்.
- ₹75,000 முதல் ₹1 லட்சம் வரையிலான கடன்களுக்கு அதிகபட்சமாக ₹75,000 தள்ளுபடி செய்யப் படும்.
- ₹1 லட்சத்திற்கு மேற்பட்ட கடன்களுக்கு அதிகபட்சமாக ₹35,000 தள்ளுபடி வழங்கப் படும்.
- சுமார் 13.34 லட்சம் விவசாயிகளுக்கு மொத்தம் ₹6,220 கோடி பயிர்க்கடனை அரசு தள்ளுபடி செய்யும்.
- முந்தைய தள்ளுபடி தொகையான ₹5,932.23 கோடியில், ₹5,267 கோடி ஏற்கனவே 13.34 லட்சம் விவசாயிகளின் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.
- இந்த கூடுதல் தள்ளுபடி அரசுக்கு சுமார் ₹953.06 கோடி கூடுதல் செலவை ஏற்படுத்தும் என்ற நிலையில் இது தமிழ்நாடு சட்டப்பேரவை விதி 110-இன் கீழ் அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் அதிகரிக்கப் பட்ட அகழாய்வு நிதி

- தொல்பொருள் ஆய்வுகள், அகழாய்வுகள் மற்றும் நீருக்கடி ஆய்வுகளுக்கான வருடாந்திர ஒதுக்கீட்டை தமிழ்நாடு அரசு ₹7 கோடியில் இருந்து ₹10 கோடியாக உயர்த்தியுள்ளது.

- தொல்பொருட்கள் மற்றும் அகழாய்வு மாதிரிகளை அறிவியல் பூர்வமாக பகுப்பாய்வு செய்ய ₹2 கோடி செலவில் நவீன தொல்லியல் ஆய்வகம் அமைக்கப்படும்.
- தமிழ் மரபுப் பாதுகாப்பு இயக்கத்தின் கீழ், முதற்கட்டமாக 76 பாதுகாக்கப்பட்ட சின்னங்கள் மற்றும் தொல்லியல் இடங்கள் ஐந்து ஆண்டுகளில் சீரமைக்கப்படும்.
- பண்டைய தமிழ் கல்வெட்டுகளை மக்கள் எளிதில் புரிந்து கொள்ள செயற்கை நுண்ணறிவைப் (AI) பயன்படுத்தி டிஜிட்டல் தரவுதளம் உருவாக்கப்படும்.
- பண்டைய தமிழர்களின் கடல்சார் வணிகத் தொடர்புகள் மற்றும் பண்டைய துறைமுகங்களை ஆவணப்படுத்த மூன்று ஆண்டு ஆராய்ச்சிக்கு ₹3 கோடி செலவிடப் படும்.
- மாநில அரசு 15 வரலாற்று சிறப்புமிக்க இடங்களைக் கண்டறிந்து, அவற்றைப் பாதுகாக்கப் பட்ட தொல்லியல் இடங்களாக அறிவிக்கும்.

தென்னக மண்டலக் குழு கூட்டம் 2026

- தமிழ்நாட்டின் மகாபலிபுரத்தில் நடைபெற்ற 31வது தென்னக மண்டலக் குழுவின் கூட்டத்திற்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமை தாங்கினார்.
- இந்தக் குழுவில் ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு மற்றும் தெலங்கானா ஆகிய மாநிலங்களும், புதுச்சேரி, அந்தமான் நிக்கோபார் தீவுகள் மற்றும் லட்சத்தீவுகள் ஆகிய ஒன்றியப் பிரதேசங்களும் இடம்பெற்றுள்ளன.
- மத்திய அரசு மற்றும் தென்னக மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களுக்கு இடையே ஒருங்கிணைப்பு தேவைப்படும் பிரச்சனைகள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப் பட்டது.
- மாநிலங்கள் மறுசீரமைப்புச் சட்டம், 1956-இன் பிரிவுகள் 15 முதல் 22 வரை தென்னக மண்டலக் குழு உருவாக்கப்பட்டு மத்திய-மாநில மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான விவாதங்களுக்கான மன்றமாகச் செயல்படுகிறது.
- இது பிராந்தியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும், வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைப்பதற்கும், கூட்டுறவை மேம்படுத்துவதற்குமான ஓர் ஆலோசனை அமைப்பாகச் செயல்படுகிறது.

தமிழ்நாடு கூட்டுறவுத் துறை சீர்திருத்தங்கள்

- புதிய மாநில கூட்டுறவுக் கொள்கை மற்றும் நலவாழ்வு மற்றும் வணிக முயற்சிகள் உட்பட கூட்டுறவுத் துறைக்கான பல நடவடிக்கைகளை 2026 ஆம் ஆண்டு மாநில பட்ஜெட்டில் தமிழ்நாடு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. வி. காந்திராஜ் அறிவித்தார்.
- கூட்டுறவு நிறுவனங்களை மக்கள் மையமான, வெளிப்படையான, பொருளாதார ரீதியாக நிலையான மற்றும் போட்டித்தன்மை கொண்டதாக மாற்றுவதற்கு தமிழ்நாடு ஒரு மாநில கூட்டுறவுக் கொள்கையை உருவாக்கும்.
- பெண்களை தொழில்முனைவோராக ஊக்குவிக்கும் வகையில் சுமார் ₹7,015 கோடி ஒதுக்கீட்டில் கூட்டுறவு வங்கிகள் மூலம் 'சிங்கப் பெண்கள் கடன் திட்டம்' செயல் படுத்தப் படும்.
- விவசாயம் சார்ந்த தொழில்களைத் தொடங்குவதற்கு விவசாயிகளுக்கு 9% வட்டியில் கிராமப்புற வணிகக் கடன்கள் வழங்கப்படும் என்பதோடு இந்த முன்னெடுப்பிற்கு ₹5,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

- கூட்டுறவு சங்கங்களால் தயாரிக்கப்படும் பொருட்களின் தரம், சந்தைப்படுத்தல், சந்தைப் பங்கு மற்றும் லாபத்தை மேம்படுத்த 'வெற்றி' என்ற பொதுவான வணிக முத்திரை அறிமுகப்படுத்தப்படும்.
- வாடகை கட்டிடங்களில் இயங்கி வரும் பொது விநியோகத் திட்ட (PDS) நியாய விலைக் கடைகளுக்கு ₹15 கோடி செலவில் 150 நிரந்தரக் கட்டிடங்கள் கட்டப்படும்.
- திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூர் தாலுகா ஆயக்குடி கிராமத்தில் 5,084 சதுர அடி நிலத்தில் ₹53 லட்சம் செலவில் புதிய வேளாண் விளைபொருள் ஏல மையம் அமைக்கப் படும்.
- மயிலாடுதுறை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள கூட்டுறவு சங்க வளாகங்களில் ₹50 லட்சம் செலவில் பெட்ரோல், டீசல் மற்றும் அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (CNG) நிரப்பும் நிலையங்கள் அமைக்கப்படும்.
- 80 கூட்டுறவு உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்களில் ₹25 லட்சம் மதிப்பீட்டில் மின்-ஏல முறைகள் அறிமுகப்படுத்தப்படும்.
- புதிதாக அமைக்கப்பட்டுள்ள 105 நியாயவிலைக் கடைகளுக்கு விற்பனையாளர்களை நியமிப்பதில் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (TANFED) மூலம் விவசாயிகளுக்கு வழங்கப் படும் உரங்கள் மற்றும் விதைகளின் விற்பனை தற்போதைய ₹898 கோடியிலிருந்து ₹2,500 கோடியாக உயர்த்தப்படும்.
- வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்காக, முதல் கட்டமாக 100 நியாயவிலைக் கடைகளில் ₹20 லட்சம் மதிப்பீட்டில் இருப்பு விவரங்களைக் காண்பிக்க ஒளி உமிழ் இருமுனைய (LED) பலகைகள் நிறுவப்படும்.
- அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கு ₹2 கோடி செலவில் நிகழ்நேர வாகனக் கண்காணிப்பு அமைப்பு அறிமுகப்படுத்தப்படும்.

முதலமைச்சரின் முதியோர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

- 70 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட சுமார் 38 லட்சம் மூத்த குடிமக்களுக்காக முதலமைச்சரின் முதியோர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை தமிழ்நாடு அரசு தொடங்கவுள்ளது.
- இத்திட்டமானது பயனாளியின் வருமானத்தைப் பொருட்படுத்தாமல் அங்கீகரிக்கப் பட்ட அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் இலவச மருத்துவச் சிகிச்சையை வழங்கும்.
- இது புற்றுநோய் சிகிச்சை, மேம்பட்ட இதய அறுவை சிகிச்சைகள், உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் மற்றும் உயர்நிலை நோயறிதல் சேவைகள் உள்ளிட்ட முக்கியச் சிகிச்சைகளை உள்ளடக்கும்.
- 70 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் எவ்வித வருமான தகுதி நிபந்தனையும் இன்றி இத்திட்டத்தின் கீழ் இணைக்கப்படுவார்கள்.
- இத்திட்டம் ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா (AB-PMJAY) திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- 2024 ஆம் ஆண்டில், 70 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட அனைத்து மூத்தக் குடிமக்களுக்கும் அவர்களின் வருமானத்தைப் பொருட்படுத்தாமல் சுகாதாரப் பாதுகாப்பை வழங்குவதற்காக ஒன்றிய அரசு AB-PMJAY திட்டத்தை விரிவுபடுத்தியது.

- தமிழ்நாட்டின் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் (CMCHIS) 2018 ஆம் ஆண்டில் AB-PMJAY திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டது.
- இந்தியாவின் வயதான மக்கள் தொகை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், முதியவர்களுக்கான சுகாதார அணுகலை வலுப்படுத்துவதை இந்தப் புதிய திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2050 ஆம் ஆண்டிற்குள், இந்தியாவில் ஐந்தில் ஒருவர் 60 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவராக இருப்பார் என மதிப்பிடப்பட்டுள்ளது.

தென் மண்டல சபையின் கூட்டம் குறித்த அறிவிப்பு

- 31வது தென் மண்டல சபையின் கூட்டம் தமிழ்நாட்டின் மாமல்லபுரத்தில் நடைபெற்ற நிலையில் இதற்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமை தாங்கினார்.
- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) தென் மாநிலங்கள் 30 சதவீதத்திற்கும் மேலாகப் பங்களிப்பதாக தமிழ்நாடு முதலமைச்சர் தெரிவித்தார் என்பதோடு மேலும் நிதிப் பகிர்வில் நியாயமான மற்றும் சமமான சிகிச்சை அளிக்கப் பட வேண்டும் என அழைப்பு விடுத்தார்.
- வளர்ச்சி, நிதி ஒழுக்கம் மற்றும் மக்கள் தொகை மாற்றம் உள்ளிட்ட மாநிலங்களின் தேவைகள் மற்றும் செயல்திறன் ஆகிய இரண்டையும் அடுத்த நிதிக்குழு கருத்தில் கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார்.
- சரக்கு மற்றும் சேவை வரி (GST) அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு வரி விதிப்பில் மாநிலங்களுக்கு அதிக நெகிழ்வுத் தன்மை வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்திய அவர், அரசியலமைப்பின் 279A(4)(e) சரத்தைக் குறிப்பிட்டார்.
- மாநிலங்களுக்கு இடையிலான நதிகள் குறித்துப் பேசுகையில், கீழ்மடை மாநிலங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதன் அவசியத்தையும், உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள், தீர்ப்பாயத் தீர்ப்புகள் மற்றும் சட்டப் பூர்வமான வழிமுறைகளை செயல் படுத்துவதையும் அவர் வலியுறுத்தினார்; மேலும் காவிரி மற்றும் முல்லைப் பெரியார் பிரச்சினைகளையும் அவர் சுட்டிக்காட்டினார்.
- பொம்மசந்திராவிலிருந்து ஓசூர் வரையிலான உத்தேசிக்கப்பட்ட பெங்களூரு மெட்ரோ நீட்டிப்பை மேற்கோள் காட்டி, தென் மாநிலங்களுக்கிடையே பொதுவான பொருளாதார மற்றும் தளவாடத் தொகுப்புகளை முன்மொழிந்த அவர், கடல்சார் பொருளாதாரம் மற்றும் நீலப் பொருளாதாரத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

தமிழ்நாடு இணையவழி குற்றப் பிரிவு மையம்

- சென்னையில் உள்ள இணையவழி குற்றத் தடுப்பு தலைமையகத்தை தமிழ்நாடு மாநில இணையவழி குற்றத் தடுப்பு ஒருங்கிணைப்பு மையமாக (TN-S4C) தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது.
- இந்த மையமானது இணையவழிக் குற்ற வழக்குகளில் மத்திய மற்றும் மாநில சட்ட அமலாக்க முகவர் நிறுவனங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பிற்கான மாநில தொடர்பு முகமையாக செயல்படும்.
- இணையக் குற்றங்களைத் தடுத்தல், கண்டறிதல் மற்றும் விசாரித்தல் ஆகியவற்றுடன் வழக்குத் தொடர ஆதரவு மற்றும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளுக்கு இது துணை புரியும்.

- 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 1 ஆம் தேதியிட்ட உச்ச நீதிமன்றத்தின் தாமாக முன்வந்து வழக்கெடுக்கும் (suo motu) பேராணை உத்தரவைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, குறிப்பாக "டிஜிட்டல் கைது" (Digital Arrest) வழக்குகளின் ஒருங்கிணைப்பு தொடர்பாக இது செயல்படும்.
- இத்தகைய மையங்களை மாநில அளவிலான தொடர்பு முகமைகளாக நிறுவுமாறு மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் (MHA) உத்தரவிட்டிருந்தது.
- TN-S4C அமைப்பானது நிறுவனங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பு, உளவுத்துறை பகிர்வு, திறன் மேம்பாடு மற்றும் இணையத் தடயவியல் ஆதரவு ஆகியவற்றை எளிதாக்கும்.

தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2031

- தமிழ்நாடு தனது புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் பங்கினை 2031 ஆம் ஆண்டிற்குள் 50% ஆக உயர்த்துவதற்கான 'தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2031'-ஐ அறிவித்துள்ளது.
- முக்கிய நகரப் பெருவழிகளுக்கு முன்னுரிமை அளித்து 20,000 மின்சார வாகன (EV) மின்னேற்று நிலையங்களை அமைப்பது இத்திட்டத்தில் அடங்கும்.
- 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத நிலவரப்படி, தமிழ்நாடு 5.50 லட்சம் பதிவு செய்யப்பட்ட மின்சார வாகனங்களையும் 2,425 மின்னேற்று நிலையங்களையும் கொண்டிருந்தது.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஒருங்கிணைப்பை ஆதரிப்பதற்காக ஆறு நிலையங்கள் மூலம் 1,000 மெகாவாட்-மணி (MWh) மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்புகளை (BESS) மாநிலம் நிறுவும்.
- திருத்தியமைக்கப்பட்ட விநியோகத் துறைத் திட்டத்தின் (RDSS) கீழ், திறன் அளவிகள் உட்பட ஒட்டுமொத்த தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்புகளை 10% ஆகக் குறைப்பதற்கான நடவடிக்கைகளுக்காக சுமார் ₹8,929.86 கோடி ஒப்புதல் அளிக்கப் பட்டு உள்ளது.

ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) - சென்னை குடிநீர் திட்டம்

- சென்னையின் குடிநீர் விநியோகம் மற்றும் சுகாதார உள்கட்டமைப்பை நவீனப் படுத்துவதற்காக இந்திய அரசும் ஆசிய வளர்ச்சி வங்கியும் (ADB) 230 மில்லியன் டாலர் மதிப்பிலான கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- சென்னை பருவநிலை-எதிர்ப்புத்திறன் கொண்ட நீர் பாதுகாப்பு மற்றும் கழிவுநீர் திட்டம், பாதுகாப்பான மற்றும் நம்பகமான குடிநீர் மற்றும் சுகாதார சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்தும்.
- 170 கி.மீ-க்கும் அதிகமான நீர்வழங்கல் மற்றும் கழிவுநீர் குழாய்கள் அமைக்கப்படும்.
- ஏழு நீர் இறைப்பு நிலையங்களும் 38 கழிவுநீர் இறைப்பு நிலையங்களும் மேம்படுத்தப் படும்.
- செயல்திறன் அடிப்படையிலான ஒப்பந்தங்கள் மூலம் நீர் பயன்பாட்டு மேலாண்மையை இத்திட்டம் வலுப்படுத்தும்.

- பருவநிலை எதிர்ப்புத்திறன், பொது சுகாதாரம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதையும், அதே நேரத்தில் சென்னையின் நீர் அமைப்பை மிகவும் திறமையானதாகவும் நிதி ரீதியாக நிலையானதாகவும் மாற்றுவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

சென்னை தினம் 2026

- ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 22 ஆம் தேதி சென்னை தினம் அனுசரிக்கப்படுகிறது, மேலும் 2026 ஆம் ஆண்டில் இது 1639 ஆம் ஆண்டில் மதராஸ் நிறுவப்பட்டதன் 387வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- 1639 ஆம் ஆண்டில் ஆங்கிலேயக் கிழக்கிந்திய நிறுவனம் உள்ளூர் ஆட்சியாளர்களிடமிருந்து மதராஸ்பட்டினத்தில் நிலத்தைப் பெற்ற நில மானியத்தை இந்நாள் நினைவு கூருகிறது.
- பின்னர் புனித ஜார்ஜ் கோட்டை நிறுவப்பட்டு, அதைச் சுற்றியே மதராஸ் ஒரு வர்த்தகக் குடியேற்றமாக வளர்ச்சியடைந்தது.
- சென்னை தினம் முதன்முதலில் 2004 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது; இது நகரத்தின் வரலாறு, பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் நவீன சென்னையாக அதன் பரிணாம வளர்ச்சியைக் குறிக்கிறது.
- 1969 ஆம் ஆண்டு ஜனவரி 14 அன்று மதராஸ் மாநிலம் அதிகாரப்பூர்வமாக தமிழ்நாடு என்று பெயர் மாற்றப்பட்டது, அதே நேரத்தில் மதராஸ் நகரம் 1996 ஆம் ஆண்டு ஜூலை 17 அன்று அதிகாரப்பூர்வமாக சென்னை என்று பெயர் மாற்றப்பட்டது.

நீர்மின் நிலையங்கள் நவீனமயமாக்கல்

- மின்சாரத் தேவையை பூர்த்தி செய்வதற்கும் மற்றும் மின் கட்டமைப்பின் நம்பகத் தன்மையை மேம்படுத்துவதற்கும் தமிழ்நாடு நீர்மின் திட்டங்களை மேம்படுத்தியும் மின்கலச் சேமிப்பை விரிவுபடுத்தியும் வருகிறது.
- 2026-27 ஆம் ஆண்டிற்கு, தமிழ்நாடு பசுமை ஆற்றல் கழகம் (TNGECL) 4,776 மில்லியன் யூனிட்டுகள் (MU) நீர்மின் உற்பத்தியை இலக்காகக் கொண்டுள்ளது.
- தமிழ்நாடு பசுமை ஆற்றல் கழகம் 107 இயந்திரங்களுடன் 47 நீர்மின் நிலையங்களை இயக்கி வருகிறது, இதன் மொத்த நிறுவப்பட்ட திறன் 2,325.90 மெகாவாட் (MW) ஆகும்.
- மாயாறு மற்றும் கோதையாறு உள்ளிட்ட பழைய மின் நிலையங்களில் புனரமைப்பு, நவீனமயமாக்கல் மற்றும் திறன் மேம்படுத்துதல் (RMU) பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- 2026 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் ஆறு துணை மின் நிலையங்களில் 1,000 மெகாவாட்-மணி (MWh) மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்புகளை (BESS) அமைக்கும் பணிகளை மாநில அரசு மேற்கொண்டு வருகிறது.
- மேலும் 11 துணை மின் நிலையங்களில் 1,500 மெகாவாட்-மணி (MWh) மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்புகளை (BESS) அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது, இது 2027 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் செயல்பாட்டிற்கு வரும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

ஐந்தாம் நூற்றாண்டு நடுகல்

- தமிழ்நாட்டின் தென்காசி மாவட்டம் மலையடிப்பட்டி கிராமத்தில் சங்க காலத்தைச் சேர்ந்த 5 ஆம் நூற்றாண்டு நடுகல் கல்வெட்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு மாநிலத் தொல்லியல் துறை (TNSDA) மேற்கொண்ட அகழாய்வின் போது இந்தக் கண்டுபிடிப்பு நிகழ்த்தப்பட்டது.
- சங்க காலத்தில் பயன்பாட்டில் இருந்து, பின்னர் கற்கள் மற்றும் செங்கற்களால் நிரப்பப்பட்ட படிக்கட்டுகளுடன் கூடிய செங்கல் கிணற்றுக்குள் இந்த நடுகல் கண்டெடுக்கப் பட்டது.
- இந்த நடுகல் 1 மீட்டர் நீளமும் 0.30 மீட்டர் அகலமும் கொண்டது மற்றும் நான்கு வரிகள் கொண்ட கல்வெட்டைக் கொண்டுள்ளது.
- இதன் எழுத்துக்கள் தமிழ்-பிராமி எழுத்து முறையில் இருந்து வட்டெழுத்துக்கு மாறிய இடைநிலைக் காலத்தைக் குறிக்கிறது.
- இந்த கல்வெட்டு கறுக்கன், சூளகன், நன்னன் மற்றும் கொடியன் ஆகியோரைக் குறிப்பிடுகிறது மற்றும் இது கறுக்கன் சூளகனின் மகனான நன்னன் கொடியனின் நினைவாக நடப்பட்டதைச் சுட்டிக்காட்டுகிறது.
- சங்க காலம் மற்றும் சங்கம் மருவிய கால நடுகற்களில் பொதுவாக போர்வீரர்களின் உருவங்கள் காணப்படாது என்றும், இந்த நடுகல்லிலும் போர்வீரரின் உருவம் பொறிக்கப் படவில்லை என்றும் தொல்லியலாளர்கள் தெரிவித்தனர்.
- போர்வீரர்களின் உருவங்கள் இல்லாத பிற சங்க கால நடுகற்கள் புலிமான்கோம்பை, அப்பனூர் மற்றும் மல்லிகாபுரம் ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- மலையடிப்பட்டியில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் சங்க கால மக்களின் வாழ்க்கை, தொழில்கள் மற்றும் வணிகம் குறித்த தகவல்களை வழங்கும் தொல்பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

புனித ஜார்ஜ் கோட்டை பாரம்பரிய மறுசீரமைப்பு

- தமிழ்நாட்டின் சென்னையில் உள்ள புனித ஜார்ஜ் கோட்டையில் அமைந்துள்ள 230 ஆண்டுகள் பழமையான எக்ஸ்சேஞ்ச் கட்டிடத்தை (பரிவர்த்தனை கட்டிடம்) மறு சீரமைக்க உள்ளதாக இந்திய தொல்லியல் ஆய்வுத் துறை (ASI) அறிவித்துள்ளது.
- இந்தக் கட்டிடத்தில் காலனித்துவ கால அருங்காட்சியகம் ஒன்றும் உள்ளது என்பதுடன் இது மறுசீரமைப்புப் பணிகளுடன் சேர்த்து புதுப்பிக்கப்படும்.
- எக்ஸ்சேஞ்ச் கட்டிடம் 1795 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டு, தொடக்கத்தில் மதராஸ் வங்கியைக் கொண்டிருந்தது; இதன் மேல் கூடம் பொது பரிவர்த்தனை கூடமாக செயல்பட்டது.
- இந்த அருங்காட்சியகத்தில் காலனித்துவ கால ஆயுதங்கள், நாணயங்கள், பதக்கங்கள், சீருடைகள், ஆவணங்கள் மற்றும் இந்தியா மற்றும் ஐரோப்பாவைச் சேர்ந்த பிற வரலாற்றுத் தொல்பொருட்கள் உள்ளன.
- 17 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியால் நிறுவப்பட்ட புனித ஜார்ஜ் கோட்டை, சென்னையின் ஒரு முக்கியமான வரலாற்று அடையாளமாகும்.

இடைத்தேர்தல் தடை - சென்னை உயர்நீதிமன்றம்

- தமிழ்நாட்டின் ஐந்து சட்டமன்றத் தொகுதிகளுக்கான தேர்தல் வழக்குகள் முடிவடையும் வரை அங்கு இடைத்தேர்தல் நடத்தப்பட மாட்டாது என இந்தியத் தேர்தல் ஆணையம் (ECI) சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.
- திருச்சி கிழக்கு, பெருந்துறை, அம்பாசமுத்திரம், விராலிமலை மற்றும் கரூர் ஆகியவையே அந்தத் தொகுதிகளாகும்.
- இந்த ஐந்து தொகுதிகளிலும் தேர்தல் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. அதில் மனுதாரர்கள் தங்களைத் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்களாக அறிவிக்கவும் கோரி உள்ளனர்.
- 1951 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 84 மற்றும் பிரிவு 151-A ஆகியவற்றுடன் உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளையும் இந்தியத் தேர்தல் ஆணையம் மேற்கோள் காட்டியுள்ளது.
- இடைத்தேர்தல் குறித்த அறிவிப்பை வெளியிட இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு விதிக்கப் பட்டிருந்த இடைக்காலத் தடையை 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 8 வரை சென்னை உயர் நீதிமன்றம் நீட்டித்துள்ளது.
- 2026 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலைத் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்கள் ராஜினாமா செய்ததால் இந்த ஐந்து இடங்களும் காலியாகின.

தமிழ்நாடு சட்டமன்ற முன்னறிவிப்பு விதி

- தமிழ்நாடு சட்டமன்ற விதி 55 மற்றும் விதி 56-இன் கீழ் சமர்ப்பிக்கப்படும் முன்னறிவிப்புகள் ஏற்கப்படுவதற்கு முன்பு, அவற்றை உறுப்பினர்களும் ஊடகங்களும் வெளியிடுவதற்கு சட்டமன்ற சபாநாயகர் தடை விதித்துள்ளார்.
- விதி 55 என்பது விவாதத்திற்காக எழுப்பப்படும் பிரச்சினைகளைக் கையாள்கிறது. அதேவேளையில் விதி 56 ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் குறிக்கிறது.
- உறுப்பினர்கள் ஒப்புதல் பெறுவதற்கு முன்னதாகவே இத்தகைய முன்னறிவிப்புகளை ஊடகங்களுடனும் சமூக ஊடகங்களிலும் பகிர்வதாக சபாநாயகர் தெரிவித்தார்.
- விதி 36(5)-இன் படி, ஒரு முன்னறிவிப்பானது சபாநாயகரால் ஏற்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சுற்றறிக்கையாக அனுப்பப்படும் வரை அதனை வெளியிடக் கூடாது.
- ஊடகங்களும் இத்தகைய முன்னறிவிப்புகள் ஒப்புதல் பெறுவதற்கு முன்பு அவற்றை வெளியிட வேண்டாம் என சபாநாயகர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அன்னபூரணி சூப்பர் சிக்ஸ் LPG திட்டம்

- தமிழ்நாடு அரசானது அன்னபூரணி சூப்பர் சிக்ஸ் திட்டத்தை 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24 அன்று மாநில சட்டமன்றத்தில் அறிவித்ததோடு இத்திட்டம் 2027 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பொங்கல் திருநாளன்று தொடங்கப்பட உள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், தகுதியான குடும்பங்களுக்கு வீட்டு உபயோக திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய எரிவாயு (LPG) சிலிண்டர்களுக்கான தொகை திருப்பி வழங்கப் படுவதுடன் இத்தொகை நேரடிப் பலன் பரிமாற்றம் (DBT) மூலம் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக மாற்றப்படும்.

- ஆண்டு வருமானம் ₹2.5 லட்சத்திற்கும் குறைவாக உள்ள குடும்பங்கள், நடுத்தர மற்றும் குறு விவசாயிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளைக் கொண்ட குடும்பங்கள் இதற்குத் தகுதியானவர்கள்.
- இத்திட்டத்திற்கு ஆண்டுக்கு ₹4,000 கோடி நிதியொதுக்கீடு தேவைப்படும் என மதிப்பிடப் பட்டுள்ளது.
- இது தமிழ்நாட்டின் பொது விநியோக மற்றும் நலத் திட்டக் கட்டமைப்புடன் இணைக்கப் பட்டுள்ளதுடன் குடும்பங்களின் சமையல் எரிபொருள் செலவுகளைக் குறைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் இலவச பேருந்துப் பயணத் திட்ட விரிவாக்கம்

- 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 2 (காந்தி ஜெயந்தி) முதல் பல வகையான பேருந்துகளில் பெண்களுக்கு இலவச பேருந்துப் பயணத்தை வழங்குவதற்காக 'வெற்றிப் பயணம்' திட்டத்தை விரிவுபடுத்துவதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.
- விரிவாக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் விரைவுப் பேருந்துகள், குறைந்த நிறுத்தங்களைக் கொண்ட பேருந்துகள் (LSS), டீலக்ஸ்/உயர்தரப் பேருந்து மற்றும் புறநகர் பேருந்துகளிலும் பெண்கள் இலவசமாகப் பயணம் செய்யலாம்.
- முன்னதாக, நகரங்கள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் இயக்கப்படும் சாதாரணப் பேருந்துகளிலும், 40 கி.மீ வரையிலான மலைப்பாதை வழித்தடங்களிலும் மட்டுமே பெரும்பாலும் இலவசப் பயணம் கிடைத்தது.
- இதற்கு வருமான வரம்போ அல்லது வேறு கட்டுப்பாடுகளோ இல்லை என்பதோடு மேலும், திருநங்கைகளும் இத்திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- இந்த விரிவாக்கத் திட்டத்தினால் தமிழ்நாடு அரசுக்கு ஆண்டுக்கு சுமார் ₹6,000 கோடி செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பரந்தூர் விமான நிலையத் திட்டம்

- முன்மொழியப்பட்ட பரந்தூர் விமான நிலையத் திட்டம் கைவிடப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்தார்.
- தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் மற்றும் விவசாய நிலங்கள், மனித குடியிருப்புகளில் ஏற்படும் தாக்கத்தை ஆய்வு செய்த பின்னர், சென்னையின் இரண்டாவது விமான நிலையத்திற்கான மாற்று இடங்களை மாநில அரசு அடையாளம் காணும்.
- மீனம்பாக்கத்தில் உள்ள தற்போதைய சென்னை விமான நிலையத்தில் இந்திய விமான நிலைய ஆணையத்தின் (AAI) ஒத்துழைப்புடன் அணுகு சாலை மற்றும் மேம்பாலத்துடன் புதிய முனையம் 5 உருவாக்கப்படும்.
- சென்னை விமான நிலையம் தற்போது ஆண்டுக்கு சுமார் 30 மில்லியன் பயணிகளை கையாளுகிறது; முனையம் 3-க்கு பிறகு 35 மில்லியனாகவும், முனையம் 5-க்கு பிறகு 55 மில்லியனாகவும் திறன் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- பரந்தூர் திட்டம் முக்கியமாக விவசாய நிலங்கள் மற்றும் மனித குடியிருப்புகளில் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தின் காரணமாக கைவிடப்பட்டது.

தமிழ்நாடு அறிவு (TN-ARIVU) பாடத்திட்டம்

- தமிழ்நாடு 2027-28 ஆம் கல்வியாண்டு முதல் செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுடன் கூடிய TN-ARIVU (பகுப்பாய்வுச் சிந்தனை, பகுத்தறிவு, புத்தாக்கம், புதிய முயற்சிகள் மற்றும் தொழில்முனைவு, திறன் மேம்பாடு) பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்தும்.
- இப்பாடத்திட்டத்தில் 1 முதல் 5 வரையிலான வகுப்புகளுக்கு 'அறிவு ஃபவுண்டேஷன்', 6 முதல் 8 வரையிலான வகுப்புகளுக்கு 'அறிவு டிஸ்கவரி' மற்றும் 9 முதல் 12 வரையிலான வகுப்புகளுக்கு 'அறிவு எட்ஜ்' ஆகியவை இருக்கும்.
- பள்ளிக் கல்வித்துறை முக்கியமாக செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் விளையாட்டுகளில் கவனம் செலுத்தி, மொத்தம் ₹44,527 கோடி மதிப்பீட்டில் 31 முன்னெடுப்புகளைச் செயல்படுத்தும்.
- மதிச்சுடர் திட்டம் 2026-27 ஆம் ஆண்டில் 6 முதல் 12 வரையிலான வகுப்புகளுக்கு செயல்படுத்தப்படும், அதே சமயம் வெற்றிப்பாதை திட்டமானது 172 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் தேசிய அளவிலான நுழைவுத் தேர்வுகளுக்கு பயிற்சி, மாதிரித் தேர்வுகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்கும்.
- PLAY (உடல் செயல்பாடு, கற்றல், கலை மற்றும் இளைஞர்கள்) முயற்சியின் கீழ், மாணவர்கள் விளையாட்டு, கலை மற்றும் பிற இணைப் பாடச் செயல்பாடுகளுக்கு தினசரி நேரத்தைப் பெறுவார்கள்; 50 அரசுப் பள்ளிகள் ஸ்போர்ட்ஸ் பிளஸ் பள்ளிகளாக உருவாக்கப்படும்.

ஈட்டி மரங்கள் மீது உயர் நீதிமன்றம்

- தொடர்புடைய வழக்கின் தீர்ப்பு வரும் வரை தனியார் நிலங்களில் ஈட்டி (ரோஸ்வுட்) மரங்களை வெட்டுவதற்கோ அல்லது அகற்றுவதற்கோ அனுமதி வழங்குவதை சென்னை உயர் நீதிமன்றம் நிறுத்தி வைத்துள்ளது.
- 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஈட்டி மரங்கள் (பாதுகாப்பு) சட்டம் மற்றும் அதன் 1995 ஆம் ஆண்டு விதிகளை ரத்து செய்வதற்கான முன்மொழிவை ஏற்றுக்கொண்ட அரசாணை எண் 88-ஐ நீதிமன்றம் நிறுத்தி வைத்துள்ளது.
- ஈட்டி மரம் தென்னிந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்ட ஒரு அரிய வகை மரம் மற்றும் இயற்கையாகவே மீண்டும் வளர்வதற்கான சாத்தியக் கூறுகள் இல்லாதவாறு உள்ளதால், சட்டத்தை ரத்து செய்வதற்கான பரிந்துரை தர்க்கத்திற்கு முரணானது என்று நீதிமன்றம் கூறியது.
- 2025 ஆம் ஆண்டு ஜூன் 9 தேதியிட்ட 1994 ஆம் ஆண்டுச் சட்டம் மற்றும் 1995 ஆம் ஆண்டு விதிகளை ரத்து செய்வது தொடர்பான அரசாணைக்கு இந்த வழக்கு சவால் விடுக்கிறது.
- நீதிப்பேராணை மனு முடித்து வைக்கப்படும் வரை, தனியார் நிலங்களில் இருந்து ஈட்டி மரங்களை வெட்டவோ அல்லது அகற்றவோ அதிகாரிகள் அனுமதி வழங்க முடியாது.

ஆசிரியர் தகுதித் தேர்வு (TET) விதியிலிருந்து விலக்கு

- 2010 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23 ஆம் தேதிக்கு முன் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு ஆசிரியர் தகுதித் தேர்விலிருந்து (TET) விலக்கு கோரும் தீர்மானத்தை தமிழ்நாடு சட்டமன்றம் ஒருமனதாக நிறைவேற்றியது.

- இத்தீர்மானம் 2009 ஆம் ஆண்டு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் பிரிவு 23-இல் திருத்தம் செய்யக் கோருகிறது.
- 2010 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23 முதல் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் தகுதித் தேர்வை (TET) தேசிய ஆசிரியர் கல்வி சபை (NCTE) கட்டாயமாக்கியது.
- 15 முதல் 20 ஆண்டுகள் பணியாற்றிய சுமார் 3,28,701 ஆசிரியர்கள் பதவி உயர்வு மற்றும் பணியைத் தொடர்வதற்கு TET தேவையால் பாதிக்கப்படலாம்.
- 2028 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 ஆம் தேதிக்குள் இந்த ஆசிரியர்கள் TET-இல் தேர்ச்சி பெற வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- மத்திய அரசு சட்டப்பூர்வ நடவடிக்கை எடுத்து NCTE மூலம் அறிவிப்பை வெளியிட வேண்டும் என இத்தீர்மானம் வலியுறுத்துகிறது.

தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்

- தமிழ்நாடு 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 அன்று 'தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை' தொடங்க தயாராகி வருகிறது என்பதோடு இதன் கீழ் தகுதியான புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு 1 கிராம் தங்க மோதிரம் வழங்கப்படும்.
- அரசு சுகாதார நிறுவனங்களில் பிறந்த தகுதியான குழந்தைகளுக்கு இத்திட்டம் பொருந்தும், மேலும் 2026 ஆம் ஆண்டு ஜூன் 22 அன்று அல்லது அதற்குப் பிறகு பிறந்த குழந்தைகளும் இதில் அடங்குவர்.
- இதன் மூலம் ஆண்டுதோறும் சுமார் 4.4 லட்சம் பிறந்த குழந்தைகள் பயன்பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது, இதற்காக ஆண்டுக்கு சுமார் ₹755.83 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- இந்த மோதிரம் 1 கிராம் தங்கம் மற்றும் BIS ஹால்மார்க் செய்யப்பட்டதாக இருக்கும்; இத்திட்டம் பாலினம் அல்லது பிறப்பு அடிப்படையைப் பொருட்படுத்தாமல் தகுதியான பிறந்த குழந்தைகளை உள்ளடக்கியது.
- பாதுகாப்பான சேமிப்பு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ள 107 விரிவான அவசர மகப்பேறியல் மற்றும் புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கான பராமரிப்பு (CEmONC) மையங்கள் மூலம் மோதிரங்கள் விநியோகிக்கப்படும்.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஆணையத்தின் நிதி

- 16-வது நிதி ஆணையம் (FC) 2026-31 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு (ULBs) சிறப்பு உள்கட்டமைப்பு மற்றும் நகரமயமாக்கல் மானியங்கள் தவிர, ₹27,000 கோடிக்கும் மேலாக பரிந்துரைத்துள்ளது.
- 2026-27 ஆம் ஆண்டு முதல் ₹20,054 கோடி அடிப்படை மானியமாக விடுவிக்கப்படும்.
- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் செயல்திறன் மானியம் மற்றும் மாநிலச் செயல்திறன் மானியமாக தலா ₹2,507.50 கோடி பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன் இது நிபந்தனைகளுக்கு உட்பட்டு 2027-28 ஆம் ஆண்டு முதல் விடுவிக்கப்படும்.
- கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகராட்சிகள் சிறப்பு உள்கட்டமைப்பு பிரிவின் கீழ் தலா ₹3,500 கோடி வரையிலான திட்டங்களை மேற்கொள்ளலாம்.

- 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் தமிழ்நாட்டிற்கு ஒரு முறை நகரமயமாக்கல் பிரீமியமாக ₹2,000 கோடியும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது; இது புறநகர் கிராமங்களை அருகிலுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைப்பதன் மூலம் நகரமயமாக்கலை ஆதரிக்கும்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களில் பருவநிலையைத் தாங்கக்கூடிய உள்கட்டமைப்பை அமைப்பதற்காக ₹791 கோடி சிறப்பு மானியத்தையும் ஆணையம் பரிந்துரை செய்து உள்ளது என ஆதாரத் தகவல்களில் உள்ள அறிக்கை கூறுகிறது.

தமிழ்நாட்டில் யூதர்களின் வர்த்தகத் தொடர்புகள்

- கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அருகே உள்ள ஆனந்தூரில் உள்ள தான்தோன்றீஸ்வரர் கோயிலில் கண்டுபிடிக்கப்பட்ட 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ் கல்வெட்டு, சிவபெருமான் கோயிலில் ஒரு மண்டபம் கட்டுவதற்கு நான்கு யூத வணிகக் குழுக்கள் நிதியளித்ததை வெளிப்படுத்துகிறது.
- இக்கல்வெட்டு இடைக்கால தமிழ்நாட்டில் யூத வணிகச் சமூகங்களின் இருப்பு மற்றும் பொருளாதாரப் பங்குக்கான சான்றுகளை வழங்குகிறது.
- 13 ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் யூத வணிகர்களுக்கும் உள்ளூர் சமூகங்களுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் கலாச்சாரத் தொடர்புகளை இந்தப் பதிவு எடுத்துக்காட்டுகிறது என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.
- இடைக்கால காலத்தில் இந்து மத கட்டிடக்கலைக்கு நிதியளிப்பதில் வெளிநாட்டு வணிகக் குழுக்கள் பங்கேற்றன என்பதை இது காட்டுவதால் இந்தக் கண்டுபிடிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது.
- இந்தக் கல்வெட்டு தமிழில் எழுதப்பட்டுள்ளது மற்றும் இது ஒரு சிவன் கோயிலான தான்தோன்றீஸ்வரர் கோயில் வளாகத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

தமிழ்நாடு கனிம நிறுவனம்

- 2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் தமிழ்நாடு கனிம வள மேம்பாட்டுக் கழகம் (TNMRDC) என்ற புதிய பொதுத்துறை நிறுவனத்தை (PSU) தமிழ்நாடு அரசு அமைக்க உள்ளது.
- இந்தப் புதிய பொதுத்துறை நிறுவனம் சுரங்கப் பணி, கனிமங்களை வெட்டியெடுத்தல், தரத்தை மேம்படுத்துதல், இறக்குமதி, மதிப்பு கூட்டுதல், சந்தைப்படுத்துதல் மற்றும் கனிம விற்பனை ஆகியவற்றை மேற்கொள்ளும்.
- நவீன டிஜிட்டல் உள்கட்டமைப்பைக் கொண்ட ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் கனிமங்கள் தொடர்பான செயல்பாடுகளை நிகழ்நேரத்தில் கண்காணிக்கும்.
- ஆளில்லா விமான அமைப்பு (UAV) மற்றும் செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சட்டவிரோத சுரங்கங்களில் ஈடுபடும் பகுதிகளைக் கண்காணிப்பு பிரிவு கண்டறியும்.
- குண்டுபெரும்பேடு மற்றும் வெள்ளறை ஏரிகளில் தாவர புதைபடிவப் பூங்கா அமைக்கப் படுவதுடன் இவை சுமார் 60 கோடி ஆண்டுகள் பழமையானவை என நம்பப்படுகிறது.

- பொது-தனியார் கூட்டாண்மை (PPP) மாதிரியின் கீழ் கைவிடப்பட்ட சுரங்கங்கள் மற்றும் குவாரிகளில் சுரங்க சுற்றுலா மையங்களை அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கையை (DPR) மாநில அரசு தயாரிக்கும்.

தமிழ்நாடு தொழில்துறை பூங்காக்கள்

- மாநிலச் சட்டப்பேரவையில் புதிய தொழில்துறை பூங்காக்கள் மற்றும் தொழிலாளர் தங்கும் வசதி திட்டங்களை தமிழ்நாடு அரசு அறிவித்தது.
- கங்கைகொண்டானில் உள்ள சிப்காட் (SIPCOT) தொழில்துறை பூங்காவில் 2,500க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கான வீடுகள் கட்ட ₹130 கோடி செலவிடப்படும்.
- தூத்துக்குடி மாவட்டம் முடிவைத்தானேந்தலில் ₹1,390 கோடி மதிப்பில் 2,570 ஏக்கர் பரப்பளவில் புதிய தூய்மையான மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொழில்துறை பூங்கா உருவாக்கப்படும்.
- தூத்துக்குடி மாவட்டம் சில்லாநத்தத்தில் ₹774 கோடி மதிப்பில் 1,294 ஏக்கர் பரப்பளவில் மின்சார வாகன (EV) உற்பத்தி பூங்கா அமைக்கப்படும்.
- புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவிலில் சிறிய ஜவுளிப் பூங்காக்களும், விழுப்புரம் மாவட்டம் ஓமந்தூர் மற்றும் நாமக்கல் மாவட்டம் லத்துவாடியில் தொழில் துறைப் பூங்காக்களும் அமைக்கப்படும்.
- குவாண்டம் பாதுகாப்பான மாநிலம் (Quantum Safe State) குறித்த ஆய்வு மற்றும் சிவகாசி பட்டாசு பொது வசதி மையம் ஆகியவையும் அறிவிக்கப்பட்டுள்ளன.

PSTM இடஒதுக்கீடு சட்டத் திருத்தம்

- கடந்த 15 ஆண்டுகளில் தமிழ் வழியில் பயின்றோருக்கான (PSTM) இடஒதுக்கீட்டின் கீழ் செய்யப் பட்ட அரசுப் பணி நியமனங்களைப் பாதுகாக்கும் வகையில் தமிழ்நாடு அரசு சட்டத் திருத்தம் மேற்கொண்டுள்ளது.
- 20% PSTM முன்னுரிமையைக் கோரிய 84 அரசுப் பணியாளர்கள் தொடர்பான வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டில் வழங்கிய தீர்ப்பைத் தொடர்ந்து இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது.
- 2010 ஆம் ஆண்டுச் சட்டம், நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படும் காலியிடங்களில் தமிழ் வழியில் படித்தவர்களுக்கு 20% இடஒதுக்கீடு வழங்குகிறது.
- 2010 ஆம் ஆண்டு செப்டம்பர் 7 ஆம் தேதி முதல் அறிவிக்கப்பட்ட PSTM அறிவிப்புகள், தேர்வுகள் மற்றும் நியமனங்களை இந்தத் திருத்தம் செல்லுபடியாக்குவதோடு, தொடர்புடைய தொடர் நடவடிக்கைகளையும் பாதுகாக்கிறது.
- எதிர்காலத்தில், PSTM முன்னுரிமையை ஏற்கனவே பயன்படுத்தியவர்கள், அதிக ஊதியம் பெறும் பதவிகளுக்கு மட்டுமே அதை மீண்டும் பயன்படுத்த முடியும்.
- ஆளுநர் ஆர்.வி. அர்லேகர் இந்த மசோதாவிற்கு 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6 அன்று ஒப்புதல் அளித்தார், அதன் பிறகு இது தமிழ்நாடு அரசு இதழில் வெளியிடப்பட்டது.

தமிழ்நாடு சமூக நீதி நல வாரியம்

- தலித்துகளின் நலனுக்காக சமூக நீதி நல வாரியம் அமைக்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

- கல்வி, மருத்துவம் மற்றும் திருமணங்களுக்கு இந்த வாரியம் நிதி உதவி வழங்கும்.
- சமூக நீதித் துறையின் கீழ் 67 நடவடிக்கைகளை மாநில அரசு அறிவித்தது.
- ரூபாய் 160 கோடி செலவில் 150 சமூக நீதி விடுதிகள் கட்டப்படும்.
- பழங்குடியினர் ஆராய்ச்சி நடவடிக்கைகளை விரிவுபடுத்த நீலகிரியில் பழங் குடியினர் பண்பாட்டு மையம் அமைக்கப்படும்.

தாய்மாமன் தங்க மோதிரத் திட்டம்

- அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு ஒரு கிராம், 22 காரட் தங்க மோதிரம் வழங்கும் தாய்மாமன் தங்க மோதிரத் திட்டத்தை தமிழ்நாடு அரசு தொடங்க உள்ளது.
- முன்னாள் முதலமைச்சர் சி.என். அண்ணாதுரையின் பிறந்த நாளான 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 அன்று இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட உள்ளது.
- அரசு நிறுவனங்களில் பிரசவிக்கும் குழந்தைகள் தமிழ்நாட்டில் வசிப்பவர்கள் தகுதி உடையவர்கள் ஆவர், மேலும் இத்திட்டம் பிறப்பு வரிசையைப் பொருட்படுத்தாமல் அனைத்து பிறந்த குழந்தைகளையும் உள்ளடக்கியது.
- தகுதியுடையவர்கள் கர்ப்பிணிப் பெண்கள் கர்ப்பம் மற்றும் குழந்தை ஒருங்கிணைந்தக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு (PICME) திட்டத்தின் கீழ் பதிவு செய்திருக்க வேண்டும் மற்றும் இனப்பெருக்க மற்றும் குழந்தை சுகாதார (RCH) அடையாள அட்டையை வைத்திருக்க வேண்டும்.
- இத்திட்டம் ஆண்டுதோறும் சுமார் 4,41,667 அரசு மருத்துவமனை பிரசவங்களை உள்ளடக்கும், இதற்காக ஆண்டுக்கு தோராயமாக ரூபாய் 755.83 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.
- தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம் (TNMSC) மோதிரங்களைக் கொள்முதல் செய்யும், அவை மையம் மற்றும் ஆரக் கட்டமைப்பின் (hub-and-spoke model) கீழ் நியமிக்கப்பட்ட அரசு மருத்துவமனைகள் மூலம் விநியோகிக்கப்படும்.
- இத்திட்டம் 2026 ஆம் ஆண்டு ஜூன் 22 முதல் முன் தேதியிட்டுச் செயல்படுத்தப்படும், மேலும் அந்தத் தேதி முதல் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளும் தகுதி உடையவர்கள் ஆவர்.

சென்னையின் தொழில் வரைபடம்

- மெட்ராஸ் — பல நூற்றாண்டுகளுக்கு முன்பே அதன் வணிக வரலாறு வடிவம் பெறத் தொடங்கிய ஒரு நகரம் ஆகும்.
- மெட்ராஸ் மாகாணத்தின் தொழில் வளர்ச்சி ஒரு தீவிரமான அக்கறைக்குரிய விஷயமாக இருந்தது, மேலும் 1899-ஆம் ஆண்டில், அப்பகுதியில் தொழிற்துறை தொழில்நுட்பக் கல்வியை ஊக்குவிப்பதற்காக வேண்டி, அப்போது கிண்டியில் உள்ள பொறியியல் கல்லூரியில் இருந்த ஆல்ஃபிரட் சாட்டர்டன் நியமிக்கப்பட்டார்.
- 1639-ஆம் ஆண்டில் புனித ஜார்ஜ் கோட்டையிலிருந்து, மெட்ராஸ் பருத்தித் துணிகள், அவுரி, தோல்கள் போன்றவற்றை உற்பத்தி செய்வதை விட ஏற்றுமதி செய்தது.
- 1880-களில் உருவாக்கப்பட்ட செயற்கைத் துறைமுகம், ஒரு திறந்த துறைமுகத்தை ஒரு செயல்படும் துறைமுகமாக மாற்றியது.

- 1876-ஆம் ஆண்டில் பின்னியின் பக்கிங்ஹாம் ஆலையும், 1881-ஆம் ஆண்டில் கர்நாடக ஆலையும் பெரம்பூரில் பல்லாயிரக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பு அளித்தன.
- சிம்ப்சன் 1840-ஆம் ஆண்டில் குதிரை வண்டி தயாரிப்பைத் தொடங்கினார்.
- சென்னை இந்தியாவின் டெட்ராய்ட் என்று அறியப்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, மெட்ராஸ் வாகனத் துறைக்கான அடித்தளங்களை அமைத்துக் கொண்டு இருந்தது.
- மெட்ராஸுக்கு வந்த முதல் கார் 1900-களின் முற்பகுதியில் வந்தது. அப்போது நகரின் புகழ்பெற்ற வண்டி தயாரிப்பாளர்களான சிம்ப்சன்ஸ், இதில் ஒரு பங்கு வகித்தனர்.
- 1948-ஆம் ஆண்டில், இந்தியாவின் ஸ்டாண்டர்ட் மோட்டார் ப்ராடக்ட்ஸ் மற்றும் அசோக் லேலண்ட் (அசோக் மோட்டார்ஸ்) போன்ற வாகனத் துறையின் முன்னோடிகளுக்கு மெட்ராஸ் தாயகமாக விளங்கியது.
- அதே சமயம், என்ஃபீல்டு இந்தியா 1956-ஆம் ஆண்டில் இருசக்கர வாகன உற்பத்தியைத் தொடங்கியது.
- சென்னையைத் தலைமையிடமாகக் கொண்ட டிராக்டர்ஸ் அண்ட் ஃபார்ம் எக்யூப்மென்ட் லிமிடெட் (TAFE), இரண்டாவது பெரிய டிராக்டர் உற்பத்தியாளர் ஆகும்.
- MRF என அறியப்படும் மெட்ராஸ் ரப்பர் தொழிற்சாலை, மெட்ராஸில் ஒரு சிறிய பொம்மை பலூன் உற்பத்தியாளராகத் தனது பயணத்தைத் தொடங்கி, இந்தியாவின் மிகப்பெரிய டயர் தயாரிப்பாளர்களில் ஒன்றாக வளர்ந்தது.
- இந்தியன் வங்கி 1907-ஆம் ஆண்டில் மெட்ராஸில் தனது பயணத்தைத் தொடங்கியது, அதைத் தொடர்ந்து 1937-ஆம் ஆண்டில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி (IOB) தொடங்கப் பட்டது.
- 1958-ஆம் ஆண்டில், மெட்ராஸ், டெல்லியின் ஓக்லாவுடன் இணைந்து, இந்தியாவின் முதல் தொழிற்பேட்டைகளில் ஒன்றான கிண்டி தொழிற்பேட்டையைத் திறந்தது.
- 2030-ஆம் ஆண்டிலும் சென்னை ஒரு வாகன, மின்னணு மற்றும் சேவை நகரமாகவே திகழும்; மேலும், உலகளாவிய திறன் மையம் (GCC - Global capability center) அதன் அதிக ஊதியம் வழங்கும் முதலாளிகளாகத் தொடரும்.
- மெட்ராஸ் அதன் அடித்தளத்தை அமைத்தது, அதற்கு அடுத்த கட்டத்தை சென்னை கட்டமைத்து வருகிறது.

பாதிக்கப்பட்ட தம்பதிகளுக்குப் புகலிடம்

- கௌரவக் கொலைகள் அல்லது சாதிப் படுகொலைகள் மற்றும் அது தொடர்பான வன்முறைகளால் பாதிக்கப்படக்கூடிய மற்றும் பாதிக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் குடும்பங்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் வகையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு 'பாதுகாப்பான இல்லத்தை' அமைக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.
- 2018 சக்தி வாஹினி எதிர் இந்திய ஒன்றியம் வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பையடுத்தும், கௌரவக் கொலைகளில் இருந்து தப்பியவர்கள் மற்றும் ஆர்வலர்களின் கோரிக்கைகளைத் தொடர்ந்தும் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக சமூக நீதித்துறை அமைச்சர் வன்னி அரசு கூறினார்.
- பெண்களின் பார்வையில், இந்தப் புகலிடம் முழுமையான உயிர்நாடியாக உள்ளது.
- சாதி கலப்புத் திருமணங்களில் ஈடுபடும் தம்பதிகளுக்கு ஏற்படும் துன்புறுத்தல் அல்லது அச்சுறுத்தல்கள் குறித்த புகார்களைப் பெறுவதற்காக, தமிழகம் 2018-ஆம் ஆண்டிலேயே 24 மணி நேர உதவி எண்ணுடன் கூடிய சிறப்புப் பிரிவுகளை நிறுவி இருந்தது.

தடுப்புக் காவலுக்கான ஆலோசனைக் குழு

- தமிழ்நாடு அரசு தடுப்புக் காவலுக்கான ஆலோசனைக் குழுவை மறுசீரமைத்தது.
- இது தொடர்பாக உள்துறை, மதுவிலக்கு மற்றும் கலால் துறை அரசாணை ஒன்றை வெளியிட்டது.
- தமிழ்நாடு அரசு சமீபத்தில், 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு தடுப்புக் காவல் சட்டத்தின் ஆலோசனைக் குழுவை மறுசீரமைத்து, ஓய்வுபெற்ற சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி வி. பாரதிதாசனை அதன் தலைவராக நியமித்துள்ளது.
- அந்த ஆணையின்படி, சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதிகளான பி. கலையரசன் மற்றும் வி. பார்த்திபன் இருவரும் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.
- ஆலோசனைக் குழு என்பது, ஒரு தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் ஒருவரை மூன்று மாதங்களுக்கு மேல் காவலில் வைக்கப் போதுமான காரணம் உள்ளதா என்பதை மறுஆய்வு செய்யும் நீதிபதிகளைக் கொண்ட ஒரு அரசியலமைப்பு அமைப்பாகும்.
- ஆலோசனைக் குழு என்பது, அரசியலமைப்பின் 22(4) சரத்தில் நிலை நிறுத்தப் பட்டுள்ளபடி, இந்தியாவில் தடுப்புக் காவல் தொடர்பான நிர்வாகத்தின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் ஒரு அரசியலமைப்புப் பாதுகாப்பாகும்.
- நிரூபிக்கப்பட்ட குற்றத்திற்காக வழங்கப்படும் தண்டனைத் தடுப்பிலிருந்து வேறுபட்டு, எதிர்காலத்தில் நிகழவிருக்கும் ஒரு செயலைத் தடுப்பதற்காக விசாரணையின்றி சிறை வைக்கப்படும் தடுப்புக்காவல், அதன் தாராளமயமற்ற தன்மை இருந்த போதிலும், சட்டத்தை உருவாக்கியவர்களால் வேண்டுமென்றே தக்க வைக்கப் பட்டது, ஆனால் அது நடைமுறைச் சோதனைகளால் பாதுகாக்கப்பட்டது.
- சரத்து 22(4)-இன்படி, தடுப்புக்காவலுக்கு அங்கீகாரம் அளிக்கும் எந்தவொரு சட்டமும், பொருத்தமான உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியின் பரிந்துரைகளின்படி அமைக்கப் பட்ட ஒரு ஆலோசனைக் குழு, அந்தக் காலக்கெடு முடிவதற்குள், அத்தகைய தடுப்பிற்குப் போதுமான காரணம் இருப்பதாகத் தனது கருத்தில் அறிக்கை சமர்ப்பிக்காத வரையில், மூன்று மாதங்களுக்கு மேல் தடுப்பாணையை அனுமதிக்க முடியாது.
- ஆலோசனைக் குழுவின் அமைப்பே ஒரு பாதுகாப்பாகும்.
- 44-வது அரசியலமைப்புத் திருத்த விவாதத்திற்குப் பிறகு செய்யப்பட்ட திருத்தங்களின் படி, நடைமுறையில் உள்ள சட்டப்பூர்வ நிலையின்படி, அந்தக் குழுவில் உயர் நீதிமன்ற நீதிபதிகளாக இருப்பவர்கள், இருந்தவர்கள் அல்லது நியமிக்கப் படுவதற்குத் தகுதி பெற்ற மூன்று நபர்கள் இருக்க வேண்டும்.
- அதன் தலைவர் உயர் நீதிமன்றத்தில் பதவியில் இருக்கும் நீதிபதியாக இருக்க வேண்டும்.
- இந்தக் குழு, பொருத்தமான தலைமை நீதிபதியின் பரிந்துரையின் பேரில் அமைக்கப் படுகிறது என்பதன் மூலம் இது நேரடி நிர்வாகத் தேர்விலிருந்து அதைப் பாதுகாக்கிறது.
- 1978 ஆம் ஆண்டின் 44வது திருத்தம், வாரியத்தின் பரிந்துரையின்றி அனுமதிக்கப் படும் தடுப்புக் காவல் காலத்தை மூன்று மாதங்களிலிருந்து இரண்டு மாதங்களாகக் குறைக்கவும், ஓய்வு பெற்ற நீதிபதிகளைக் கொண்ட அமைப்புத் தேவையைச் சேர்க்கவும் முயன்றது, ஆனால் அது தொடர்புடைய விதிகள் ஒருபோதும் நடைமுறைக்குக் கொண்டு வரப்படவில்லை, எனவே அரசியலமைப்பின் 22(4) சரத்தின் மூன்று மாத குறைந்தபட்ச வரம்பு தொடர்ந்து நடைமுறையில் உள்ளது.

தேசியச் செய்திகள்

மேற்குத் தொடர்ச்சி மலை சுற்றுச்சூழல் உணர்திறன் பகுதிக்கான அறிவிப்பு

- மேற்குத் தொடர்ச்சி மலையானது சுற்றுச்சூழல் உணர்திறன் பகுதிக்கான (ESA) வரைவு அறிவிப்பை, முந்தைய வரைவு இறுதி முடிவின்றி காலாவதியானதை அடுத்து மத்திய அரசு மீண்டும் வெளியிட்டுள்ளது.
- முன்மொழியப்பட்ட சுற்றுச்சூழல் உணர்திறன் பகுதி (ESA) குஜராத், மகாராஷ்டிரா, கோவா, கர்நாடகா, கேரளா மற்றும் தமிழ்நாடு முழுவதும் 56,825.7 சதுர கிலோமீட்டர் பரப்பளவை உள்ளடக்கியதாகும்.
- இறுதி அறிவிப்பை வெளியிடுவதை மத்திய அரசு பரிசீலிக்கும் முன்னர், இந்த வரைவு 60 நாட்களுக்குப் பொதுமக்களின் ஆட்சேபனைகளுக்காகத் திறந்திருக்கும்.
- இது அறிவிக்கப்பட்டால், ESA-க்குள் சுரங்கம், குவாரி, மணல் அள்ளுதல், புதிய அனல் மின் நிலையங்கள், குறிப்பிட்ட தொழிற்சாலைகள் மற்றும் பெரிய கட்டுமானத் திட்டங்கள் ஆகியவற்றைத் தடை செய்யும்.
- சேர்க்கப்பட வேண்டிய பகுதிகள் குறித்த ஆறு மாநிலங்களுடனான வேறுபாடுகள் மற்றும் விவசாயம், உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் குறித்த கவலைகள் காரணமாக இந்த முன்மொழிவு 2011 ஆம் ஆண்டு முதல் நிலுவையில் உள்ளது.

வினாத் தாள் கசிவு தடுப்பு மசோதா

- பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவை, வினாத் தாள் கசிவு குற்றங்களுக்கான தண்டனையை கணிசமாகக் கடுமையாக்கும் ஒரு வரைவுச் சட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- முன்மொழியப்பட்ட திருத்தங்களின்படி, வினாத் தாள் கசிவுகளில் குற்றவாளிகளாகக் கண்டறியப் பட்ட நபர்களுக்குக் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் சிறைத் தண்டனையும், அதனுடன் நிதி அபராதமும் விதிக்கப்படலாம்.
- ஒழுங்கமைக்கப்பட்ட வினாத் தாள் கசிவு கும்பல்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளுக்கு அதிக பட்சமாக 10 ஆண்டுகள் சிறைத்தண்டனையும், ரூ.10 கோடி வரையிலான அபராதமும் விதிக்கப்படும்.
- இந்த வரைவுச் சட்டம், காலவரையறைக்குட்பட்ட விசாரணைகள் மற்றும் கட்டாய விரைவு நீதிமன்ற விசாரணைகளுக்கான விதிகளையும் அறிமுகப்படுத்துகிறது.
- இந்த முன்மொழிவின்படி, வினாத் தாள் கசிவு வழக்குகளின் விசாரணைகள் மூன்று மாதங்களுக்குள் முடிக்கப்பட வேண்டும்.
- தற்போதுள்ள சட்டம், வினாத் தாள் கசிவுகளில் ஈடுபடும் நபர்களுக்கு மூன்று முதல் ஐந்து ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கிறது.
- ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு தற்போது ஐந்து முதல் 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும், குறைந்தபட்சம் ரூ.1 கோடி அபராதமும் விதிக்கப்படுகிறது.
- தேர்வு மோசடி மூலம் லாபம் ஈட்டும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களையும் நிறுவனங்களையும் தடுப்பதையும், அதே நேரத்தில் தேர்வர்கள் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதையும் இந்தத் திருத்தங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன.

- தேர்வு மோசடிக்கு எதிரான சட்டக் கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில், பொதுத் தேர்வுகள் (முறைகேடுகளைத் தடுத்தல்) சட்டம், 2024-ஐ திருத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டின் இந்தச் சட்டம், UPSC மற்றும் SSC போன்ற முகமைகளால் நடத்தப்படும் ஆட்சேர்ப்புத் தேர்வுகளையும், NEET, JEE மற்றும் CUET உள்ளிட்ட முக்கிய நுழைவுத் தேர்வுகளையும் உள்ளடக்கியது.
- தொடர்ச்சியான தேர்வு முறைகேடுகள் குறித்த பரவலான கவலைக்குப் பிறகு, வினாத்தாள் கசிவுகள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட தேர்வு முறைகேடுகளைக் கையாள்வதற்காக குறிப்பாக இயற்றப்பட்ட முதல் மத்திய சட்டம் பொதுத் தேர்வுகள் (முறைகேடுகளைத் தடுத்தல்) சட்டம், 2024 ஆகும்.

இந்தியாவின் டிஜிட்டல் தளங்களின் விரிவாக்கம்

- இந்தியாவின் உலகளாவிய டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு (DPI) முயற்சிகளை வலுப்படுத்தும் வகையில், இந்தியா ஸ்டேக்கை (India Stack) ஏற்க 24 நாடுகள் இந்தியாவுடன் கூட்டு சேர்ந்துள்ளன.
- இந்தியா ஸ்டேக் என்பது ஒருங்கிணைந்த கட்டண இடைமுகம் (UPI), டிஜிலாக்கர், ஆதார், மின்னணு வாடிக்கையாளரை அறிதல் (e-KYC), மின்னணு கையொப்பம் (eSign) மற்றும் கணக்கு ஒருங்கிணைப்புக் கட்டமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.
- கென்யா மற்றும் கியூபாவில் டிஜிலாக்கர் பயன்பாடு தொடங்கியுள்ளது, அதே நேரத்தில் UPI வணிகர் கொடுப்பனவுகள் 10 சர்வதேச சந்தைகளில் கிடைக்கின்றன.
- டிஜிட்டல் ஆளுமை தளங்களை விரிவுபடுத்துவதற்காக லாவோஸ், சீஷெல்ஸ், அர்மீனியா, பிஜி, கயானா, கொலம்பியா மற்றும் வெனிசுலா போன்ற நாடுகளுடனும் இந்தியா பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.
- இந்த முன்னெடுப்பானது டிஜிட்டல் ஆளுமை, நிதி உள்ளடக்கம், காகிதமில்லா பொதுச் சேவைகள் மற்றும் சர்வதேச டிஜிட்டல் ஒத்துழைப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தொலைக்காட்சி மதிப்பீட்டுக் கொள்கை, 2026

- இது தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டது.
- இது 2014 ஆம் ஆண்டு வழிகாட்டுதல்களுக்குப் பதிலாக அமல்படுத்தப்பட்டுள்ளது.
- இக்கொள்கையின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய சீர்திருத்தங்கள் பின்வருமாறு:
    - நிகரச் சொத்து மதிப்புக்கான தகுதி அளவுகோலை ரூ. 20 கோடியிலிருந்து ரூ. 5 கோடியாகக் குறைத்தல்;
    - இணைக்கப்பட்ட தொலைக்காட்சிகள் மற்றும் ஓடிடி தளங்களில் கிடைக்கும் தொலைக் காட்சி அலைவரிசைகள் உள்ளிட்ட பல தளங்களில் தொழில்நுட்பச் சார்பற்ற பார்வையாளர் அளவீடு;
    - அளவீடு செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையை 50,000-லிருந்து 80,000-ஆக விரிவுபடுத்துவதன் மூலம் மாதிரி அளவை அதிகரித்தல்;
    - ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் ஒருமுறை நிறுவன ஆய்வுகளை நடத்துதல்;
    - பார்வையாளர் தரவுகளைக் கணக்கிடும்போது முகப்புப் பக்கத்தை விலக்குதல்;

- ஆண்டுதோறும் சுதந்திரமான தணிக்கைகள்; மற்றும்
- இணங்காதவர்களுக்கான தரப்படுத்தப்பட்ட அபராதக் கட்டமைப்பு.

❖ தொலைக்காட்சி மதிப்பீட்டுக் கொள்கை, 2026, தொலைக்காட்சி மதிப்பீட்டுச் சேவைகளை வழங்கப் பதிவு செய்யப்படக் கூடிய முகமைகளின் எண்ணிக்கையில் எந்தக் கட்டுப்பாட்டையும் விதிக்கவில்லை.

MSME மேம்பாட்டு (திருத்த) மசோதா, 2026

❖ 2006 ஆம் ஆண்டின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் (MSME) மேம்பாட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்காக, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் (MSME) மேம்பாட்டு (திருத்த) மசோதா, 2026-ஐ மாநிலங்களவை அறிமுகப்படுத்தியுள்ளது.

❖ முதலீடு மற்றும் ஆண்டு வருவாயின் அடிப்படையில் MSME-களை வகைப்படுத்த மத்திய அரசுக்கு இந்த மசோதா அதிகாரம் அளிக்கிறது மற்றும் தன்னார்வ டிஜிட்டல் பதிவுக்கான வசதியை வழங்குகிறது.

❖ MSME கட்டணப்பட்டியல்களுக்கு (invoices) உரிய நேரத்தில் பணம் செலுத்துவதற்காக வர்த்தக வரவுகள் தள்ளுபடி அமைப்பை (TReDS) பயன்படுத்துவதை மத்திய பொதுத் துறை நிறுவனங்களுக்கு (CPSEs) இது கட்டாயமாக்குகிறது.

❖ விரைவான தகராறுத் தீர்வை உறுதி செய்வதற்காக மத்தியஸ்தம் மற்றும் நடுவர் மன்றத்திற்கான நிலையான காலக்கெடுவை இந்த மசோதா அமைக்கிறது மற்றும் குறிப்பிட்ட வைப்புத் தொகையுடன் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய அனுமதிக்கிறது.

❖ குற்றவியல் நடவடிக்கைகளுக்குப் பதிலாக எச்சரிக்கைகள் மற்றும் தரப்படுத்தப்பட்ட பண அபராதங்களை விதிப்பதன் மூலம் இது சில குற்றங்களை குற்றவியல் நடவடிக்கையிலிருந்து நீக்குகிறது, அதே நேரத்தில் மேம்பாட்டு ஆணையர் தீர்ப்பு வழங்கும் அதிகாரியாக செயல்படுவார்.

சமுத்திர மந்தன் திட்டம்

❖ 2030-31 ஆம் நிதியாண்டு வரை செயல்படுத்துவதற்கான 'சமுத்திர மந்தன்' – தேசிய கடல்சார் ஆய்வுத் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

❖ இது பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு மத்திய துறைத் திட்டமாகும் என்பதோடு ஆழ்கடல் மற்றும் அதி-ஆழ்கடல் ஆய்வுக்காக ₹84,084 கோடி நிதி ஒதுக்கீடு இதற்கு செய்யப்பட்டுள்ளது.

❖ இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக, கடலோர ஹைட்ரோ கார்பன் வளங்களை ஆராய்வதையும், 600 மில்லியன் மெட்ரிக் டன் எண்ணெய்க்குச் சமமான (MMTOE) இருப்புக்களை இலக்காகக் கொள்வதையும் இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ இது முப்பரிமாண நில அதிர்வு ஆய்வுகள், கடல்சார் துளையிடும் உள்கட்டமைப்பு மற்றும் உள்நாட்டு உற்பத்திக்கான எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தி மற்றும் சேவை மண்டலத்தை அமைப்பதில் கவனம் செலுத்துகிறது.

❖ கிருஷ்ணா-கோதாவரி, காவிரி, மகாநதி மற்றும் அந்தமான் பகுதிகள் உள்ளிட்ட இந்தியாவின் கடல் படுகைகள், பயன்படுத்தப்படாத குறிப்பிடத்தக்க எண்ணெய் மற்றும் எரிவாயு திறனைக் கொண்டுள்ளன.

பிரதான் மந்திரி சூர்ய சரோவர் யோஜனா

- ஆற்றல் சேமிப்பு அமைப்புகளுடன் கூடிய மிதக்கும் சூரிய ஒளி மின்னழுத்த (FSPV) திட்டங்களை உருவாக்குவதற்கான பிரதான் மந்திரி சூர்ய சரோவர் யோஜனா (PM-SSY) திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இது ₹5,070 கோடி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட ஒரு மத்திய துறைத் திட்டமாகும், என்பதுடன் மேலும் 2030-31 ஆம் ஆண்டிற்குள் 5,000 மெகாவாட் (MW) மிதக்கும் சூரிய ஒளி மின் திறனை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்திட்டம் நீர்த்தேக்கங்கள் மற்றும் உள்நாட்டு நீர்நிலைகளில் சூரிய ஒளித் திட்டங்களை ஆதரிக்கிறது மற்றும் திட்டம் தொடங்கப்பட்ட பிறகு மெகாவாட்டிற்கு ₹1 கோடி மத்திய நிதி உதவியை (CFA) வழங்குகிறது.
- மின்சாரம் கிடைப்பதை உறுதி செய்வதற்காகக் குறைந்தபட்சம் இரண்டு மணிநேர (10,000 மெகாவாட்-மணிநேரம் - MWh) சேமிப்புத் திறன் கொண்ட ஆற்றல் சேமிப்பு அமைப்புகளையும் (ESS) இது உள்ளடக்கியுள்ளது.
- இத்திட்டத்தை இந்திய சூரிய ஆற்றல் நிறுவனம் (SECI) செயல்படுத்தும் மற்றும் இது சுமார் ₹28,500 கோடி முதலீட்டை ஈர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதான் மந்திரி கிசான் திட்டம் நீட்டிப்பு

- பிரதான் மந்திரி கிசான் சம்மன் நிதி (PM-KISAN) திட்டத்தை 2026-27 முதல் 2030-31 ஆம் ஆண்டு வரை ₹3.15 லட்சம் கோடி நிதி ஒதுக்கீட்டுடன் தொடர மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தொடங்கப்பட்ட PM-KISAN திட்டம், வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு மத்திய துறைத் திட்டமாகும், இது நிலம் வைத்திருக்கும் விவசாய குடும்பங்களுக்கு வருமான ஆதரவை வழங்குகிறது.
- நேரடிப் பயன் பரிமாற்ற (DBT) முறையின் மூலம் தகுதியான விவசாயிகளுக்கு தலா ₹2,000 வீதம் மூன்று சம தவணைகளில் ஆண்டுக்கு ₹6,000 இத்திட்டம் வழங்குகிறது.
- விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு வெளிப்படையான மற்றும் நேரடியான பயன் பரிமாற்றத்தை உறுதி செய்ய ஆதார் அடிப்படையிலான அங்கீகாரம் மற்றும் டிஜிட்டல் சரிபார்ப்பை இத்திட்டம் பயன்படுத்துகிறது.
- இதுவரை 23 தவணைகள் மூலம் விவசாயிகளுக்கு ₹4.47 லட்சம் கோடிக்கும் மேல் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன், இது விதைகள், உரங்கள், நீர்ப்பாசனம் மற்றும் விவசாய இயந்திரங்களுக்கான செலவுகளைச் சமாளிக்க அவர்களுக்கு உதவுகிறது.
- விதைகள், உரங்கள், நீர்ப்பாசனம் மற்றும் பண்ணை இயந்திரங்கள் போன்ற விவசாய செலவுகளை சமாளிக்க இந்த முன்னெடுப்பானது விவசாயிகளுக்கு உதவுகிறது.

'தான்வீர்' (DAANVEER) முன்னெடுப்பு

- 'தான்வீர்' என்பது கிராம ஊராட்சிகளில் உள்ள உடனடி கணினித் தேவையை நிவர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல் உள்ளூர் அமைப்புகளை வலுப்படுத்துவதற்கான நீண்ட கால, குடிமக்கள் சார்ந்த ஒரு கட்டமைப்பாக உருவெடுக்கும் வகையில் வடிவமைக்கப் பட்ட ஒரு தளமாகும்.

- இது ஒரு வெளிப்படையான, முழுமையான டிஜிட்டல் மற்றும் சரிபார்க்கக்கூடிய தளமாகும்; இது இந்தியாவில் உள்ள கிராம ஊராட்சிகளின் அடையாளம் காணப்பட்ட தொழில்நுட்பம் மற்றும் உள்கட்டமைப்புத் தேவைகளுக்குப் பங்களிக்கக் குடிமக்கள் மற்றும் அமைப்புகளை அனுமதிக்கிறது.
- இதன் மூலம், ஒவ்வொரு கிராம ஊராட்சியும் டிஜிட்டல் வசதி கொண்டதாகவும், இணைப்பு வசதி பெற்றதாகவும், எதிர்காலத் தேவைகளை எதிர்கொள்ளத் தயாரானதாகவும் மாற்றப்படுகிறது.
- இந்த முன்னெடுப்பானது, உலகம் முழுவதும் உள்ள குடிமக்கள் தங்கள் சொந்த கிராமங்களின் வளர்ச்சிக்கு அர்த்தமுள்ள வகையில் பங்களிப்பதன் மூலம் தங்கள் பூர்வீக வேர்களுடன் மீண்டும் இணைய ஒரு வாய்ப்பை வழங்குகிறது.
- இது தனிநபர்கள் மற்றும் அமைப்புகள் தரப்படுத்தப்பட்ட மற்றும் தரச் சரிபார்ப்பு செய்யப்பட்ட கணினித் தொகுப்புகளைத் தகுதியுள்ள கிராம ஊராட்சிகளுக்கு நேரடியாக வழங்க உதவுகிறது.
- இது புது தில்லியில் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தால் தொடங்கி வைக்கப்பட்டது.
- இது தேசிய தகவல் மையம் (NIC) மற்றும் DigiHaat ஆகியவற்றுடன் இணைந்து உருவாக்கப் பட்டுள்ளது.

மாநிலங்களவையில் 'வந்தே மாதரம்' மசோதா

- தேசிய கௌரவ அவமதிப்புத் தடுப்பு (திருத்த) மசோதா, 2026-ஐ மாநிலங்களவை நிறைவேற்றியுள்ளது.
- இந்த மசோதா, தேசிய கௌரவ அவமதிப்புத் தடுப்புச் சட்டம், 1971-இல் மேலும் திருத்தங்களை மேற்கொள்ளும்.
- தேசிய கீதமான 'ஜன கண மன'-க்கு அளிக்கப்படும் அதே சட்டப்பூர்வமான பாதுகாப்பை 'வந்தே மாதரம்' பாடலுக்கும் வழங்குவதே இந்த முன்மொழியப்பட்ட சட்டத்தின் நோக்கமாகும்.
- இக்குற்றங்களுக்கு மூன்று ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை, அபராதம் அல்லது இவை இரண்டும் தண்டனையாக விதிக்கப்படலாம்.
- 'வந்தே மாதரம்' பாடலின் ஆறு சரணங்களையும் பாட வேண்டும் என்பதையும் இம்மசோதா கட்டாயமாக்குகிறது.
- அரசு விழாக்களில், குறிப்பாக தேசிய கீதம் இசைக்கப்படும் அல்லது பாடப்படும் விழாக்களில், தேசியப் பாடலையும் இசைக்கவோ அல்லது பாடவோ வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் மாநிலங்களுக்கு அறிவுறுத்தியதைத் தொடர்ந்து இந்த முன்மொழிவு வந்துள்ளது.
- தேசியப் பாடலும் தேசிய கீதமும் பாடப்படும் போதோ அல்லது இசைக்கப்படும் போதோ, தேசியப் பாடலே முதலில் பாடப்படவோ அல்லது இசைக்கப்படவோ வேண்டும்.
- தேசியப் பாடலான 'வந்தே மாதரம்' 1875-ஆம் ஆண்டில் பங்கிம் சந்திர சட்டர்ஜியால் இயற்றப்பட்டது.
- 1937 ஆம் ஆண்டில் ஜவஹர்லால் நேரு காங்கிரஸ் தலைவராக இருந்தபோது, 'வந்தே மாதரம்' பாடலின் இரண்டு சரணங்களை மட்டுமே பாடுமாறு வரையறுத்தார்.

- மறுபுறம், 1928-ஆம் ஆண்டில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் காங்கிரஸ் தலைவராக இருந்த போது, இப்பாடலுக்கு முழுமையான மற்றும் கண்ணியமான இசை வடிவத்தை அமைக்குமாறு திமிர் பரன் பானர்ஜியிடம் கேட்டுக்கொண்டார்.
- 1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று, முதல் சுதந்திர தினத்தின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில், அகில இந்திய வானொலியில் காலை 6:30 மணிக்கு 'வந்தே மாதரம்' பாடலை முழுமையாகப் பாடுமாறு சர்தார் வல்லபாய் படேல் பண்டிட் ஓம்கார்நாத் தாக்கூரைக் கேட்டுக் கொண்டார்.
- 1950-ஆம் ஆண்டு ஜனவரி 24 அன்று, 'ஜன கண மன'க்கு அளிக்கப்படும் அதே மரியாதை 'வந்தே மாதரம்' பாடலுக்கும் அளிக்கப்படும் என்று அரசியலமைப்பு நிர்ணய சபையில் டாக்டர் ராஜேந்திர பிரசாத் தெரிவித்தார்.

இந்தியாவின் விளையாட்டு இயக்கத்தின் சீரமைப்பு

- இந்தியாவின் விளையாட்டுச் சூழலை வலுப்படுத்தும் வகையில், சீரமைக்கப்பட்ட கேலோ இந்தியா திட்டம் மற்றும் தேசிய விளையாட்டு கூட்டமைப்புகளுக்கான மேம்படுத்தப்பட்ட உதவி (ANSFs) திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இத்திட்டம் 2026-27 ஆம் நிதியாண்டு (FY) முதல் 2030-31 ஆம் நிதியாண்டு வரை மொத்தம் ₹36,441 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.
- இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தால் 2016-17 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட கேலோ இந்தியா திட்டம், அடிமட்ட அளவில் விளையாட்டுகளை மேம்படுத்துதல், திறமைகளை கண்டறிதல் மற்றும் விளையாட்டு உள்கட்டமைப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது ஆரம்பகால திறமை கண்டறிதல் மற்றும் தடகள மேம்பாட்டிற்காக வளர்ந்து வரும் கேலோ இந்தியா விளையாட்டு வீரர்கள் (E-KIAs), கேலோ இந்தியா ஃபீடர் பள்ளிகள் (KIFS) மற்றும் கேலோ இந்தியா உட்கிருஷ்ட வித்யாலயாக்களை (KIUV) அறிமுகப் படுத்துகிறது.
- இத்திட்டம் தேசிய சிறப்பு மையங்கள் (NCOEs), கேலோ இந்தியா மாநில சிறப்பு மையங்கள் (KISCEs) மற்றும் இந்திய விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் (SAI) பயிற்சி மையங்கள் (STCs) உள்ளிட்ட பயிற்சி மையங்களை வலுப்படுத்துகிறது.
- பயிற்சித் தரத்தை மேம்படுத்தவும், விளையாட்டு வீரர்களைக் கண்காணிக்கவும் மற்றும் விளையாட்டு நிதி நிர்வாகத்தை மேம்படுத்தவும் தேசிய பயிற்சியாளர் அங்கீகார வாரியம் (NCAB) மற்றும் ஒருங்கிணைந்த டிஜிட்டல் விளையாட்டு தளத்தையும் இது நிறுவுகிறது.

பசுமை அனுமதிகள் மீதான உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

- பின்பற்றப்பட்ட சுற்றுச்சூழல் அனுமதி தொடர்பான மத்திய அரசின் 2021 ஆம் ஆண்டு அலுவலகக் குறிப்பாணையை உச்ச நீதிமன்றம் ரத்து செய்துள்ளது.
- சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் எதிர்காலத்தில் வழங்கப்படும் எந்தவொரு பொது மன்னிப்பும், ஒரு நிர்வாக உத்தரவிலிருந்து அல்லாமல், ஒரு சட்டப்பூர்வ அறிவிப்பின் மூலமே வழங்கப்பட வேண்டும் என்றும், 2006 ஆம் ஆண்டின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு (EIA) கட்டமைப்பின் கீழ், மேலெழுந்த பொது நலன் சார்ந்த திட்டங்களுக்கு மட்டுமே அது வரையறுக்கப்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

- முன்னரே, செல்லுபடியாகும் சுற்றுச்சூழல் அனுமதி இல்லாமல் தொடங்கப்பட்ட பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு, பின்னோக்கிய அங்கீகாரத்தை வழங்குவதற்கு ஒரு நிர்வாக உத்தரவால் நிரந்தரமான மற்றும் இணையான ஒரு முறையை உருவாக்க முடியாது.
- இருப்பினும், நீதிமன்றம் பின்னோக்கிய சுற்றுச்சூழல் அனுமதிகளை முற்றிலுமாகத் தடை செய்யவில்லை.
- உண்மையில், அது ஒரு சமரசக் கருத்தை ஏற்றுக்கொண்டு, "அளவிடப்பட்ட முறைப்படுத்தலுக்கு" அழைப்பு விடுத்துள்ளது.
- பின்பற்றப்பட்ட சுற்றுச்சூழல் முறைப்படுத்தல், "ஒரு குறுகிய, காலவரையறைக்கு உட்பட்ட, காரணத்துடன் கூடிய மற்றும் மேற்பார்வையிடப்பட்ட கால அவகாசத்திற்குள்" கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்றும், "மேலெழுந்த பொது நலன்" சார்ந்த திட்டங்களில் மட்டுமே செய்யப்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் கூறியது.
- இந்தத் தீர்ப்பு எதிர்காலத்திலிருந்து பொருந்தும், இதன் மூலம் பின்னோக்கிய சுற்றுச் சூழல் அனுமதிகளைப் (ECs) பெற்ற திட்டங்கள் இடிப்பு மற்றும் பிற தண்டனை நடவடிக்கைகளிலிருந்து காப்பாற்றப்படும். பொருத்தமான வழக்குகளில் முழுமையான நீதியை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட அரசியலமைப்பின் 142-வது சரத்தின் கீழ் உச்ச நீதிமன்றம் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தியது.
- அந்த அலுவலகக் குறிப்பாணையானது விகிதாசார மற்றும் நியாயமான தன்மைக்கான சோதனையைப் பூர்த்தி செய்யவில்லை என்றும், அரசியலமைப்பின் 14 மற்றும் 21-வது சரத்துகளை மீறுவதாகவும் அது கூறியது.
- இந்தியாவின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டுக் (EIA) கட்டமைப்பு சுற்றுச்சூழல் அனுமதி (EC) தேவைப்படும் திட்டங்கள், கட்டுமானம் அல்லது செயல்பாடுகள் தொடங்குவதற்கு முன்பே அதைப் பெற வேண்டும் என்ற ஒரு எளிய கொள்கையை அடிப்படையாகக் கொண்டது.
- 2006-ஆம் ஆண்டின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையானது, "முன் சுற்றுச்சூழல் அனுமதி" பெறுவதை வெளிப்படையாகக் கட்டாயமாக்குகிறது. இது, மீள முடியாத சுற்றுச்சூழல் சேதம் ஏற்படுவதற்கு முன்பே, சூழலியல் தாக்கங்களை மதிப்பிடவும், பொதுமக்களின் ஆட்சேபனைகளைக் கேட்கவும், பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கவும் கட்டுப்பாட்டாளர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது.
- சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA) என்பது 1986-ஆம் ஆண்டின் சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் வருகிறது.

பிறப்பு மற்றும் இறப்பு பதிவு மசோதா, 2026

- இம்மசோதா உள்துறை இணையமைச்சர் நித்யானந்த் ராய் அவர்களால் மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது, தாமதமான பதிவுகளுக்கான கடுமையான விதிமுறைகள் மற்றும் படிநிலை அடிப்படையிலான ஒப்புதல் செயல்முறையை உருவாக்க, 1969-ஆம் ஆண்டின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச் சட்டத்தை (2023-ஆம் ஆண்டில் திருத்தப்பட்டவாறு) திருத்துகிறது.
- தற்போதைய சட்டத்தின்படி, ஒரு பிறப்பு அல்லது இறப்பு நிகழ்ந்து ஓராண்டுக்குப் பிறகு அது குறித்த தகவல் பதிவாளரிடம் அளிக்கப்பட்டால், அதைப் பதிவு செய்ய ஒரு தனிப்பட்ட உத்தரவு தேவைப்படுகிறது.

- அத்தகைய உத்தரவை (i) மாவட்ட நீதித்துறை நடுவர் (District Magistrate), (ii) உட்கோட்ட நீதித்துறை நடுவர் (Sub-divisional Magistrate) அல்லது (iii) மாவட்ட நீதித்துறை நடுவரால் அங்கீகரிக்கப்பட்ட நிர்வாக நீதித்துறை நடுவர் (Executive Magistrate) ஆகியோர் பிறப்பிக்கலாம்.
- தகவலின் துல்லியத்தன்மையைச் சரிபார்த்த பின்னரும், நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்திய பின்னரும் இந்த உத்தரவு பிறப்பிக்கப்படலாம்.
- ஆனால், இரண்டு ஆண்டுகளுக்கு மேலான தாமதம் ஏற்படும் பட்சத்தில், 'முதல் வகுப்பு நீதித்துறை நடுவர்' (Judicial Magistrate of the First Class) மட்டுமே அத்தகைய உத்தரவைப் பிறப்பிக்க முடியும் என்று இம்மசோதா வகை செய்கிறது.
- முன்மொழியப்பட்டுள்ள இந்தச் சட்டம், தாமதத்தின் கால அளவைப் பொறுத்து இரண்டு நிலைகளைக் கொண்ட ஒப்புதல் நடைமுறையை அறிமுகப்படுத்துகிறது.
- தற்போதைய சட்டத்தின்படி, பிறப்பு மற்றும் இறப்புகளைப் பதிவு செய்வது கட்டாயம் ஆகும்; மேலும், இச்சட்டத்தின் கீழ் வழங்கப்படும் சான்றிதழ் ஒரு தனிநபருக்குச் சட்டப்பூர்வ அடையாளத்தை அளிக்கிறது.
- தாமதமான பதிவுக்கான நடைமுறைகளை மேலும் கடுமையாக்கவும், பிறப்பு மற்றும் இறப்புகள் குறித்த தகவல்களை உரிய நேரத்தில் தெரிவிப்பதை ஊக்குவிக்கவும் இந்த புதிய மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது.

'ஒரு அதிகாரிக்கு ஓர் அரசு வாகனம்' கொள்கை

- நிதி அமைச்சகம் "ஒரு அதிகாரிக்கு ஓர் அரசு வாகனம்" என்ற கடுமையான கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- தேவையற்ற செலவுகளைக் குறைப்பதையும், அரசு வளங்கள் தவறாகப் பயன்படுத்தப் படுவதைத் தடுப்பதையும் நோக்கமாகக் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- திருத்தப்பட்ட விதிகளின்படி, தகுதியுள்ள அதிகாரிகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட அரசு வாகனங்களை ஒதுக்க முடியாது என்பது தெளிவாகிறது; மற்றொரு அமைச்சகம், துறை, பொதுத்துறை நிறுவனம் (PSU) அல்லது தன்னாட்சி அமைப்பில் கூடுதல் பொறுப்புகளை அவர்கள் வகித்தாலும் கூட இந்த விதி பொருந்தும்.
- செலவினத் துறையின் (Department of Expenditure) ஓர் அலுவலகக் குறிப்பாணை மூலம் இந்த புதிய அறிவுறுத்தல்களை வெளியிட்டுள்ளது.
- அரசு வாகனங்கள் அதிகாரப்பூர்வ நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப் படுவதை உறுதி செய்வதே இதன் நோக்கமாகும்.
- திருத்தப்பட்ட விதிமுறைகளின் கீழ், ஏற்கனவே அரசுப் பணியாளர் வாகனத்தைப் பயன்படுத்தும் உரிமை பெற்ற ஒரு அதிகாரி, மற்றொரு அலுவலகம் அல்லது அமைப்பின் பொறுப்பை ஏற்றாலும் அதே வாகனத்தைத் தொடர்ந்து பயன்படுத்த வேண்டும்.
- அத்தகைய சூழல்களில் கூடுதல் அதிகாரப்பூர்வ வாகனத்திற்கு அனுமதி அளிக்கக் கூடாது என்று அமைச்சகங்கள் மற்றும் துறைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.
- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரப்பூர்வ பணி அல்லது பயணங்களின் போது தவிர, பொதுத் துறை நிறுவனங்கள், தன்னாட்சி அமைப்புகள் அல்லது பகுதி-அரசு அமைப்புகளுக்குச் சொந்தமான வாகனங்களை மத்திய அரசு அதிகாரிகள் பயன்படுத்துவதையும் அரசு தடை செய்துள்ளது.

- பயன்படுத்தப்படாத அல்லது உபரியாக உள்ள வாகனங்களை அதிகாரப்பூர்வமற்ற பயன்பாட்டிற்கு உட்படுத்தாமல், பாதுகாப்பான முறையில் வைத்திருக்க வேண்டும் என்று துறைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
- நிர்வாகத் திறனை மேம்படுத்துதல், பணிகளில் தேவையற்ற இரட்டிப்பைத் தவிர்த்தல் மற்றும் அரசு வளங்களைச் சிறப்பாக நிர்வகித்தல் ஆகியவை இதன் நோக்கங்கள் ஆகும்.
- நிதி ஒழுக்கத்தை வலுப்படுத்துவதும், வரி செலுத்துவோரின் நிதியால் உருவாக்கப் பட்ட வளங்கள் மத்திய அரசு முழுவதும் பொறுப்புடன் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதும் இந்த நடவடிக்கையின் முக்கிய நோக்கமாகும்.

சேவை உற்பத்திக் குறியீட்டின் (ISP) துணைத் துறை அளவிலான சோதனைப் பதிப்பு வெளியீடு

- புள்ளி விவரம் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகமானது (MoSPI), நாட்டின் சேவைத் துறையில் உள்ள 19 துணைத் துறைகளுக்கான முதல் சோதனை 'சேவை உற்பத்திக் குறியீட்டை' (ISP) வெளியிட்டுள்ளது.
- இது தற்போதுள்ள 'தொழில்துறை உற்பத்திக் குறியீட்டிற்கு' (IIP) இணையானதாக அமையும்.
- முறையான சேவைத் துறையில் நடைபெறும் குறுகிய காலச் செயல்பாடுகளை மாதந்தோறும் அளவிடும் முறையை இது முதன்முறையாக வழங்குகிறது.
- 2024-25 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்ட இந்தக் குறியீடு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கான தரவுகளை உள்ளடக்கியதுடன், இந்தியாவின் சேவைத் துறையில் சுமார் 60 சதவீதப் பங்களிப்பைக் கணக்கில் கொள்கிறது.
- இந்தியாவின் சேவைத் துறையை அளவிடும் முறையை மேம்படுத்துவதும், நாட்டின் புள்ளி விவர அமைப்பை வலுப்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.
- சோதனைத் தொடரின் நிலைத்தன்மையை மதிப்பீடு செய்து அதன் வரம்பை விரிவுபடுத்திய பிறகு, முழுமையான சேவை உற்பத்திக் குறியீடு அறிமுகப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது என்பதோடு முதல் கட்டத் தரவுகள் சேவைத் துறையில் பரவலான வளர்ச்சியைக் காட்டுகின்றன.
- காலப்போக்கில், சுகாதார சேவைகள் மற்றும் குடியிருப்பு உரிமை தொடர்பான வணிகங்கள் போன்ற துறைகளைச் சேர்ப்பதன் மூலம் இந்தக் குறியீட்டின் வரம்பு விரிவுபடுத்தப்படும்.
- இது பொருளாதாரத்தில் முறையான சேவைத் துறையின் பங்களிப்பில் சுமார் 85 முதல் 90 சதவீதம் வரையிலான வரம்பை எட்டச் செய்யும்.
- கடந்த ஆண்டின் இதே மாதத்துடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 19 துணைத் துறைகளில் 14 துறைகள் இரட்டை இலக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன; அதேவேளையில், மீதமுள்ள கிட்டத்தட்ட அனைத்துத் துறைகளும் நேர்மறையான வளர்ச்சியையே பதிவு செய்துள்ளன.
- மிக வேகமாக வளர்ந்து வரும் துறைகளாக தங்குமிடம் மற்றும் உணவுச் சேவைகள் (37.2 சதவீதம்) மற்றும் சில்லறை வர்த்தகம் (30.8 சதவீதம்) ஆகியவை உள்ளன.
- தொழில்கள் அல்லது வணிகங்கள் மீது கூடுதல் இணக்கச் சுமையைச் சுமத்தாமல், அரசு அமைச்சகங்கள் மற்றும் ஜிஎஸ்டி (GST) பதிவுகள் உள்ளிட்ட நிர்வாகத் தரவுகளை மட்டுமே பயன்படுத்தி இந்தக் குறியீடு உருவாக்கப்பட்டுள்ளது.

- ஜிஎஸ்டி தரவு கிடைக்காத பட்சத்தில், நிர்வாகத் தரவு மற்றும் 'சேவைத்துறை நிறுவனங்களுக்கான வருடாந்திர கணக்கெடுப்பு' (ASISSE) ஆகியவற்றின் கலவை பயன்படுத்தப்படுகிறது.
- ISP என்பது ஒரு உற்பத்தி அளவீடு ஆகும்; எனவே, இதை மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) கணக்கீட்டில் பயன்படுத்தப்படும் 'மொத்த மதிப்பு கூட்டல்' (GVA) உடன் ஒப்பிடக் கூடாது.
- ஜிஎஸ்டி மற்றும் நிர்வாகத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், ISP தற்போது முறையான துறை சார்ந்த நிறுவனங்களை மட்டுமே உள்ளடக்கியுள்ளது.
- அதன்படி, ISP-ல் சேர்க்கப்படாத சேவைகள் என்பவை, அரசின் முக்கியச் செயல்பாடுகள் தொடர்பானவை அல்லது சந்தை சாராத செயல்பாடுகள் மற்றும் முறைசாராத் துறையின் ஆதிக்கம் கொண்டவையாகும். எனவே, இது சந்தை சாராத அரசு நடவடிக்கைகள், தனிப்பட்ட சேவைகள் மற்றும் முறைசாராத் துறை ஆகியவற்றை விலக்கி வைக்கிறது.
- நாட்டின் மொத்த மதிப்பு கூட்டலில் (GVA) பாதிக்கும் மேற்பட்ட பங்களிப்பைச் சேவைத் துறை வழங்குகிறது.
- ISP அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம், பொருளாதாரம் சார்ந்த சேவை, தொழில் மற்றும் விவசாயம் ஆகிய மூன்று முக்கியத் துறைகளுக்கும் இனி வழக்கமான மாதாந்திர அல்லது காலாண்டு உற்பத்திக் குறியீடுகள் கிடைக்கும்.

உச்ச நீதிமன்ற (நீதிபதிகள் எண்ணிக்கை) திருத்த மசோதா, 2026

- உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையை 34 லிருந்து 38 ஆக உயர்த்துவதற்கான உச்ச நீதிமன்ற (நீதிபதிகள் எண்ணிக்கை) திருத்த மசோதா, 2026-ஐ மக்களவை நிறைவேற்றியது.
- இந்த மசோதா, இந்திய தலைமை நீதிபதியை (CJI) தவிர்த்து நீதிபதிகளின் எண்ணிக்கையை 37 ஆக உயர்த்துகிறது.
- இது உச்ச நீதிமன்ற (நீதிபதிகள் எண்ணிக்கை) திருத்த அவசரச் சட்டம், 2026-க்கு மாற்றாக 2026 ஆம் ஆண்டு ஜூலை 20 அன்று மத்திய சட்டத் துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் அவர்களால் இம்மசோதா அறிமுகப்படுத்தப்பட்டது.
- நீதித்துறை திறனை மேம்படுத்துவதையும் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கையை குறைப்பதையும் இந்த அதிகரிப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சட்டமியற்றுவதன் மூலம் உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை மாற்றுவதற்கு நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது.

இந்தியாவின் உடல் உறுப்பு தான மைல்கல்

- இந்தியா தனது 16வது இந்திய உடல் உறுப்பு தான தினத்தை அனுசரித்து சாதனை அளவிலான உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை சாதனைகளை முன்னிலைப் படுத்துவதுடன், உடல் உறுப்பு தானத்தை வலுப்படுத்த புதிய முயற்சிகளையும் தொடங்கியுள்ளது.
- இந்தியா 2025 ஆம் ஆண்டில் சாதனை அளவாக 20,138 உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளதுடன் 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 4,990 அறுவை சிகிச்சைகளுடன் ஒப்பிடுகையில், இதுவே ஒரே ஆண்டில் நடைபெற்ற மிக அதிக அளவிலான அறுவை சிகிச்சையாகும்.

- 2023 ஆம் ஆண்டில் தேசிய டிஜிட்டல் உறுதிமொழி இணையதளம் தொடங்கப்பட்டதில் இருந்து, ஆதார் மூலம் சரிபார்க்கப்பட்ட உடல் உறுப்பு தான உறுதிமொழிகளின் எண்ணிக்கை இந்தியாவில் 5 லட்சத்தைக் கடந்துள்ளது.
- மொத்த உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கையில் அமெரிக்கா மற்றும் சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா உலகளவில் 3வது இடத்தில் உள்ளதோடு மேலும் உயிருள்ள கொடையாளர்களின் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் இந்தியா உலகளாவிய அளவில் முன்னணியில் உள்ளது.
- உடல் உறுப்பு தான சுற்றுச்சூழல் அமைப்பை வலுப்படுத்துவதற்காக 'ஜக் ஜக் ஜியோ அபியான்' (Jug Jug Jiyo Abhiyaan), e-Pratyaropan டிஜிட்டல் தளம் மற்றும் தேசிய உடல் உறுப்பு மற்றும் திசு மாற்று அமைப்பு (NOTTO) அலைபேசி செயலி ஆகியவற்றை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியா முழுவதும் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை நடைமுறைகளை தரப்படுத்துவதற்காக தேசிய மூளைத் தண்டு இறப்புச் சான்றிதழ் வழிகாட்டுதல்கள் மற்றும் மாற்று அறுவை சிகிச்சைக்கான தேசிய வழிகாட்டுதல்களையும் அரசாங்கம் வெளியிட்டது.

இந்தியாவின் முதல் தொலைத்தொடர்பு உற்பத்தி மண்டலம்

- இந்தியாவின் முதல் தொலைத்தொடர்பு உற்பத்தி மண்டலம் - மத்தியப் பிரதேசத்தின் குவாலியரில் நிறுவப்படும்.
- இதனை, தகவல் தொடர்பு அமைச்சகத்தின் கீழ் உள்ள தொலைத்தொடர்புத் துறை (DoT) மேற்கொள்ளும்.
- இந்தியா, தற்போதுள்ள சுமார் 50 கோடி பயனர்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கி, 2030-ஆம் ஆண்டுக்குள் 100 கோடி (1 பில்லியன்) மக்களை 5ஜி தொழில் நுட்பத்துடன் இணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியா மொபைல் காங்கிரஸ் 2026-இன் 10-வது பதிப்பிற்கான கருத்துருவை மத்திய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் வெளியிட்டார் ('எல்லைகளற்ற வளர்ச்சி').
- புது தில்லியில் நடைபெறவுள்ள ஆசியாவின் மிகப்பெரிய டிஜிட்டல் தொழில்நுட்ப மன்றத்தின் ஒரு மைல்கல் பதிப்பு இதுவாகும்.
- இந்தியா மொபைல் காங்கிரஸ் (IMC) 2026-இன் 10-வது பதிப்பு நான்கு முக்கிய தூண்களை மையமாகக் கொண்டுள்ளது.
- இது, டிஜிட்டல் முறையில் வலுவூட்டப்பட்ட, பாதுகாப்பான மற்றும் வளர்ச்சி சார்ந்த எதிர்காலத்தை உருவாக்கும் இந்தியாவின் தொலைநோக்குப் பார்வையைப் பிரதிபலிக்கிறது.
- 'சிருஷ்டி – எதிர்காலத்தை உருவாக்குதல்', இது அடுத்த தலைமுறை டிஜிட்டல் உள்கட்டமைப்பை வடிவமைக்கும் புத்தாக்கம், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் மற்றும் தீர்வுகளை வளர்ப்பதில் கவனம் செலுத்தும்.
- சுரக்ஷா – நம்பிக்கையை வலுப்படுத்துதல், இது பாதுகாப்பான, மீள்திறன் கொண்ட மற்றும் நம்பகமான டிஜிட்டல் சூழல் அமைப்புகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும்.
- சஷக்த் – வாய்ப்புகளை விரிவுபடுத்துதல், இது டிஜிட்டல் வாய்ப்புகளுக்கான அனைவரையும் உள்ளடக்கிய அணுகலை உறுதி செய்வதோடு, குடிமக்கள், வணிகங்கள், புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் சமூகங்களுக்கு அதிகாரம் அளிக்க தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- சம்வர்தன் – வளர்ச்சியை ஊக்குவித்தல், இது பொருளாதார வளர்ச்சி, முதலீடு, தொழில்முனைவு, வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் இந்தியா ஒரு உலகளாவிய தொழில்நுட்பத் தலைவராக உருவெடுப்பதில் டிஜிட்டல் தொழில்நுட்பங்களின் பங்கை எடுத்துரைக்கும்.

ஒரே நாடு, ஒரே உரம் திட்டம்

- 'ஒரே நாடு, ஒரே உரம்' திட்டம் 2026 ஆம் ஆண்டின் காரீப் பருவத்தில் இந்தியா முழுவதும் உரம் கிடைப்பதையும் விநியோகத்தையும் மேம்படுத்தியுள்ளது.
- இத்திட்டம் பிரதான் மந்திரி பாரதிய ஜன்உர்வரக் பரியோஜனாவின் (PMBJP) கீழ் 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24 முதல் தொடங்கப்பட்டது, மேலும் அனைத்து உர நிறுவனங்களும் மானிய விலையிலான உரங்களை பொதுவான "பாரத்" பிராண்டின் / நிறுவன அடையாளத்தின் கீழ் விற்க வேண்டும்.
- யூரியா, டை-அம்மோனியம் பாஸ்பேட் (DAP), மியூரியேட் ஆஃப் பொட்டாஷ் (MOP) மற்றும் NPKS (நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் மற்றும் சல்பர்) உரங்கள் உள்ளிட்ட மானிய விலையிலான உரங்கள் பாரத் பிராண்டின்/நிறுவன அடையாளத்தின் கீழ் சந்தைப்படுத்தப்படுகின்றன.
- பல பிராண்டின்/நிறுவன அடையாளங்களால் விவசாயிகளிடையே ஏற்படும் குழப்பத்தை நீக்குதல், வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல், நியாயமற்ற நடைமுறைகளைக் குறைத்தல் மற்றும் மாநிலங்கள் முழுவதும் உரங்கள் சமமாக கிடைப்பதை உறுதி செய்தல் ஆகியவற்றை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஒருங்கிணைந்த உர மேலாண்மை அமைப்பின் (iFMS) மூலம் உர இயக்கம் கண்காணிக்கப் படுகிறது, இது விநியோகச் சங்கிலிகளைக் கண்காணிக்கும் மற்றும் நிகழ்நேர இருப்பை பராமரிக்க உதவும் இணைய அடிப்படையிலான தளமாகும்.

இந்தியாவின் உள்நாட்டு மூழ்கல் ஆதரவுக் கப்பல் (DSV) – NPIUN

- சமீபத்தில், இந்தியாவின் இரண்டாவது மூழ்கல் ஆதரவுக் கப்பல் கடற்படைக்கு வழங்கப்பட்டது.
- இதை உருவாக்கிய ஹிந்துஸ்தான் ஷிப்யார்ட் லிமிடெட், விசாகப்பட்டினத்தில் ஒப்படைக்கப்பட்டது.
- இது ஆழ்கடல் மூழ்கல் நடவடிக்கைகள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல் மீட்பு நடவடிக்கைகளுக்காக உருவாக்கப்பட்ட ஒரு சிறப்பு மூழ்கல் ஆதரவுக் கப்பலாகும்.
- மேம்பட்ட இயக்க நிலைப்படுத்தல், செறிவூட்டல் மூழ்கல் அமைப்புகள் மற்றும் தொலைவிலிருந்து இயக்கப்படும் வாகனங்களுக்கான நிலைநிறுத்தும் கருவிகள் ஆகியவை இதன் இலக்குகளாகும்.
- இது ஆழ்கடல் மூழ்கல் மீட்புக் கப்பலுக்கு (DSRV) தாய்/முதன்மைக் கப்பலாகச் செயல்படுகிறது.
- ஐஎன்எஸ் நிஸ்தாருக்குப் (2025) பிறகு உள்நாட்டில் கட்டப்பட்ட இரண்டாவது மூழ்கல் ஆதரவுக் கப்பல் இதுவாகும்.
- ஆத்ம நிர்பர் பாரத் கொள்கைக்கு இணங்க, இதன் உள்நாட்டு உள்ளடக்கம் 75% ஆக இருக்கும்.

இந்தியாவின் முதல் பிரத்தியேக இராணுவ மருத்துவத் துறை

- இது லக்னோவில் உள்ள மத்திய கட்டளை மையத்தின் கட்டளை மருத்துவமனையில் திறந்து வைக்கப்பட்டது.
- இது இராணுவ மருத்துவ சேவைகள் தலைமை இயக்குநரகத்தின் கீழ் செயல்பட்டது.
- போர் மருத்துவத் தயார்நிலை, போர்க்கள அதிர்ச்சி சிகிச்சை, மனநல மருத்துவம், சுற்றுச்சூழல் மருத்துவம், மருத்துவ தளவாடங்கள் ஆகியவை இதன் முக்கியக் கவனங்களாக இருக்கும்.
- இந்த மையம் முதலில் கல்வித் திட்டங்களுடன் தொடங்கி, பின்னர் HADR மற்றும் CBRNE பாதுகாப்புக்கான சிறப்பு மையங்களாக விரிவுபடுத்தப்படும்.
- HADR – மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணம்;
- CBRNE – இரசாயன, உயிரியல், கதிரியக்க, அணு மற்றும் அதிக ஆற்றல் கொண்ட வெடிபொருட்கள்.
- சிறப்பு மையங்களும் உலகளாவிய இராணுவ மருத்துவ மையமும் ரக்ஷா வியூக தொலைநோக்குப் பார்வை 2026-30-ஆம் ஆண்டின் கீழ் உள்ளன.
- இது உள்நாட்டு கோட்பாடுகள், செயற்கை நுண்ணறிவு சார்ந்த சுகாதார கண்காணிப்பு, மீள்திறன் மற்றும் போர்க்கள மருத்துவத்தில் புதுமைகளை வலுப்படுத்துகிறது.

மச்சிலிப்பட்டினம் ASW போர்க்கப்பல்

- இந்தியக் கடற்படை 'மச்சிலிப்பட்டினம்' எனும் நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்பு மற்றும் ஆழமற்ற நீர்நிலைப் போர் நடவடிக்கைகளுக்கான கப்பலை (ASW SWC) அறிமுகப் படுத்தியது.
- இது கொச்சின் ஷிப்யார்ட் லிமிடெட் நிறுவனத்தால் கட்டப்பட்டது.
- வரலாற்றுச் சிறப்புமிக்க துறைமுக நகரமான மச்சிலிப்பட்டினத்தின் (ஆந்திரப் பிரதேசம்) செழுமையான கடல்சார் பாரம்பரியத்தை இக்கப்பலின் பெயர் பிரதிபலிக்கிறது.
- கடலோரப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் – அதாவது நீருக்கடியில் கண்காணிப்பு, நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்புப் போர், கண்ணிவெடி தொடர்பான போர் நடவடிக்கைகள் மற்றும் குறைந்த தீவிரத்தன்மை கொண்ட செயல்பாடுகள் ஆகியவை இதன் இலக்குகளாகும்.

ஐஏஎஸ்வி திரிவேணி குழு

- வரலாற்றுச் சிறப்புமிக்க அனைத்துப் பெண்கள் பாய்மரப் படகுப் பயணத்திற்காக ஐஏஎஸ்வி திரிவேணி குழுவை மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் கௌரவித்தார்.
- இந்திய ராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையைச் சேர்ந்த ஒன்பது பெண் அதிகாரிகள், நாட்டின் முதல் முப்படைகளின் அனைத்துப் பெண்கள் உலகச் சுற்றுப் பயணமான 'சமுத்திர பிரதட்சிணா'வை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளனர்.
- அவர்கள் நான்கு கடல்களைக் கடந்து சுமார் 25,500 கடல் மைல்கள் பயணம் செய்தனர்.
- இந்தப் பயணம், அனைத்து தீர்க்கரேகைகளையும் கடந்து, பூமத்திய ரேகையை இருமுறை கடந்து, சர்வதேச தேதிக் கோட்டைத் தாண்டி, லீவின் முனை, ஹார்ன் மற்றும்

நன்னம்பிக்கை முனை ஆகிய மூன்று பெரிய முனைகளையும் சுற்றி வந்ததன் மூலம், உலகச் சுற்றுப் பயணத்திற்கான சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அளவுகோல்களையும் பூர்த்தி செய்தது.

- மேலும், இந்தக் குழுவினர் டிரேக் கணவாயை வெற்றிகரமாகக் கடந்து, மதிப்புமிக்க ஹார்னர்ஸ் முனை சகோதரத்துவத்தில் உறுப்பினர் தகுதியைப் பெற்றனர்.

திரிசூல் நடவடிக்கை

- 2019 ஆம் ஆண்டு முதல் 36 நாடுகளிலிருந்து 274 தப்பியோடிய குற்றவாளிகளை இந்தியாவுக்குக் கொண்டுவர 'திரிசூல் நடவடிக்கை' உதவியுள்ளது.
- பயங்கரவாதம், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம், போதைப்பொருள் பயங்கரவாதம், நிதி மோசடி, கொலை, பாலியல் குற்றங்கள் மற்றும் மனித கடத்தல் தொடர்பான வழக்குகளில் தொடர்புடைய தப்பியோடிய குற்றவாளிகளை இந்த நடவடிக்கை கண்காணிக்கிறது.
- வெளிநாடுகளில் பதுங்கியிருக்கும் தப்பியோடிய குற்றவாளிகளைக் கண்டறிய செயற்கைக்கோள் படங்கள், கண்காணிப்பு உள்ளீடுகள் மற்றும் டிஜிட்டல் தடயங்களை இது பயன்படுத்துகிறது.
- மத்திய புலனாய்வுப் பிரிவு (CBI), உளவுத்துறைப் பணியகம் (IB), ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவு (RAW), மாநில காவல்துறைப் படைகள் மற்றும் இன்டர்போல் ஆகியவற்றிற்கிடையேயான ஒருங்கிணைப்பை இந்த நடவடிக்கை உள்ளடக்கியது.
- சர்வதேச ஒத்துழைப்பு வழிமுறைகளின் கீழ் 2025 ஆம் ஆண்டில் 70 குற்றவாளிகளையும், 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்குள் 45 குற்றவாளிகளையும் இந்தியா திரும்பக் கொண்டு வந்துள்ளது.

e-zero முதல் தகவல் அறிக்கைகள் - 2025

- டெல்லி அதிக எண்ணிக்கையிலான e-zero முதல் தகவல் அறிக்கைகளைப் பதிவு செய்துள்ளது.
- e-zero முதல் தகவல் அறிக்கை முறை கடந்த ஆண்டு 2025 ஆம் ஆண்டு மே மாதத்தில் தொடங்கப்பட்டது.
- இது இந்திய சைபர் குற்ற ஒருங்கிணைப்பு மையம் (I4C) வழியாக உள்துறை அமைச்சகத்தால் செயல்படுத்தப்பட்டது.
- இது பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா (BNSS), 2023-இன் கீழ் செயல்படுகிறது.
- e-zero முதல் தகவல் அறிக்கைகளின் கீழ் 12 ஆயிரம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- டெல்லி 6,115 e-zero முதல் தகவல் அறிக்கைகளைப் பதிவு செய்துள்ளது, அதைத் தொடர்ந்து சண்டிகர் உள்ளது.
- உள்துறை அமைச்சகம் 18 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் இணையவழி குற்ற வழக்குகளுக்காக e-zero முதல் தகவல் அறிக்கை முறையை அறிமுகப்படுத்துகிறது.
- இது சைபர் நிதி மோசடியால் பாதிக்கப்பட்டவர்கள் நேரடியாக இணையம் வழியாகவோ அல்லது உதவி எண் மூலமாகவோ குற்றத்தைப் புகாரளிக்க அனுமதிக்கிறது, இதன் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் எந்தவித கட்டுப்பாடுகளும் இன்றி பூஜ்ஜிய முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்ய முடிகிறது.

- நியமிக்கப்பட்ட மாநில அல்லது ஒன்றியப் பிரதேச மின்னணு-குற்றக் காவல் நிலையத்தில் இது தானாகவே ஒரு மின்னணு-பூஜ்ஜிய முதல் தகவல் அறிக்கையாக (e-Zero FIR) மாற்றப்படும்.
- இருப்பினும், ஒரு மின்னணு-பூஜ்ஜிய முதல் தகவல் அறிக்கையை ஒரு வழக்கமான முதல் தகவல் அறிக்கையாக மாற்றுவதற்கு, புகார்தாரர் புகாரைப் பதிவுசெய்த மூன்று நாட்களுக்குள் தத்தமது அதிகார வரம்பிற்குட்பட்ட இணையக் குற்றக் காவல் நிலையத்திற்குச் செல்ல வேண்டும்.
- பாரதிய நாகரிக் சுரக்ஷா சம்ஹிதாவின் (BNSS) கீழ் உள்ள பூஜ்ஜிய முதல் தகவல் அறிக்கை, சம்பவம் எங்கு நடந்திருந்தாலும், எந்தவொரு காவல் நிலையமும் ஒரு புலன் விசாரணைக்குரிய குற்றத்திற்காக முதல் தகவல் அறிக்கையைப் பதிவுசெய்ய அனுமதிக்கிறது.
- கட்டாயப் பதிவு, பூஜ்ஜிய வரிசை எண் மற்றும் அதைத் தொடர்ந்த இடமாற்றம் ஆகியவை இதன் முக்கிய அம்சங்களாகும்.
- BNSS பிரிவு 173: பழைய நிர்வாக வழிகாட்டுதல்களுக்குப் பதிலாக, பூஜ்ஜிய முதல் தகவல் அறிக்கை செயல்முறைக்கு முறையான சட்டப்பூர்வ அங்கீகாரத்தை வழங்குகிறது.
- பிராந்திய மறுப்பு இல்லை: அதிகார வரம்பு என்ற காரணத்தைக் கூறி, புலன் விசாரணைக்குரிய குற்றம் தொடர்பான புகாரை காவல் அதிகாரிகள் நிராகரிக்க முடியாது.
- வரிசை எண் "0": ஆரம்பக் காவல் நிலையம் "0" என்ற எண்ணை ஒதுக்குகிறது, ஏனெனில் அது முக்கிய வழக்கைத் தக்கவைத்துக் கொள்ளவோ அல்லது விசாரிக்கவோ செய்யாது.
- பாதிக்கப்பட்டவர் அல்லது புகார்தாரர், தனக்கு வசதியான எந்தவொரு காவல் நிலையத்திலும் வாய்மொழியாகவோ, எழுத்துப்பூர்வமாகவோ அல்லது மின்னணுத் தொடர்பு மூலமாகவோ தகவலை அளிக்கிறார்.
- உடனடி நடவடிக்கை: தேவைப்பட்டால், உள்ளூர் காவல் நிலையம் மருத்துவ உதவி அல்லது ஆதாரங்களைப் பாதுகாத்தல் போன்ற அவசர நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கிறது.
- வழக்கு மாற்றம்: கோப்புகள் சரியான அதிகார வரம்புக்குட்பட்ட காவல் நிலையத்திற்கு உடனடியாக அனுப்பப்படுகின்றன. அங்கு அது ஒரு வழக்கமான எண்ணிடப்பட்ட முதல் தகவல் அறிக்கையாக (FIR) மாற்றப்பட்டு, முக்கிய விசாரணை தொடங்கப்படுகிறது.
- அதிகார வரம்பைப் பொருட்படுத்தாமல், எந்தவொரு காவல் நிலையமும் ஒரு புலன் விசாரணைக்குரிய குற்றத்திற்காக முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்ய அனுமதிக்கும் இந்தியாவின் குற்றவியல் நீதி அமைப்பில் ஒரு குறிப்பிடத்தக்க சீர்திருத்தம்.
- இது பிராந்திய எல்லைகளால் ஏற்படும் தாமதமின்றி, உடனடி நடவடிக்கையை உறுதி செய்கிறது.

GI மற்றும் Beyond 2.0 உச்சிமாநாடு

- இந்தியாவின் புவிசார் குறியீடு (GI) பெற்ற கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்களை மேம்படுத்துவதற்காக GI & Beyond 2.0 என்ற உச்சி மாநாடானது புது தில்லியில் நடைபெற்றது.
- இந்தியக் கைத்தறிப் பொருட்களின் தெரிவுநிலை மற்றும் சந்தை அணுகலை மேம்படுத்துவதற்காக டிஜிட்டல் கைத்தறி வரைபடம் (Digital Handloom Atlas) - "ஒரு தளம். முடிவற்ற சந்தைகள்" (One Platform. Endless Markets) தொடங்கப்பட்டது.

- லடாக்கின் நம்பு ஜவுளி, லடாக் பஷ்மினா ஜவுளி, இமாச்சல குட்மா மற்றும் இமாச்சல லிங்சே ஆகியவற்றிற்கு புதிய புவிசார் குறியீட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
- ஜார்க்கண்டின் மூங்கில் கைவினைப்பொருள், ஜார்க்கண்ட் டஸ்ஸர் பட்டுச் சேலை மற்றும் துணிகள், ஜார்க்கண்டின் முண்டா நகைகள் மற்றும் பரேலி சுட்டமண் (Terracotta) ஆகியவற்றுக்கும் புவிசார் குறியீட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
- இந்த உச்சிமாநாட்டில் 100-க்கும் மேற்பட்ட புவிசார் குறியீடு பதிவு செய்யப்பட்ட கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன; கைவினைஞர்கள் மற்றும் நெசவாளர்களின் நேரடி செயல் விளக்கங்களும் இடம் பெற்றன.
- இந்தியாவின் கைத்தறி ஏற்றுமதியை மேம்படுத்துவதில் 60 ஆண்டுகளைக் குறிக்கும் வகையில் கைத்தறி ஏற்றுமதி மேம்பாட்டு சபை (HEPC) தனது வைர விழா இலச்சினையை வெளியிட்டது.

இந்தியப் புள்ளியியல் நிறுவன மசோதா, 2026

- 1959 ஆம் ஆண்டு இந்தியப் புள்ளியியல் நிறுவனச் சட்டத்தை மாற்றுவதற்கும் அதன் நிர்வாகக் கட்டமைப்பை மாற்றுவதற்குமாக இந்தியப் புள்ளியியல் நிறுவனம் (ISI) மசோதா, 2026 மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இந்தியப் புள்ளியியல் நிறுவனம் பி.சி. மகலனோபிஸ் என்பவரால் 1931 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது, மேலும் 1959 ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாக அறிவிக்கப்பட்டது.
- இந்தியப் புள்ளியியல் நிறுவனத்தை ஒரு சங்கத்திலிருந்து சட்டப்பூர்வமான நிறுவன அமைப்பாக மாற்றவும், அதன் முக்கிய கொள்கைகளை வகுக்கும் அமைப்பாக 11 உறுப்பினர்களைக் கொண்ட ஆளுநர் குழுவை உருவாக்கவும் இந்த மசோதா முன் மொழிகிறது.
- இந்தியாவின் குடியரசுத் தலைவர் அதன் பார்வையாளராக (Visitor) இருப்பார், அதே சமயம் படிப்புகள் மற்றும் தேர்வுகள் போன்ற கல்வி சார்ந்த விஷயங்களை ஒரு கல்விக் குழு நிர்வகிக்கும்.
- இயக்குநரின் நியமனம் மற்றும் மறுஆய்வு ஆகியவற்றில் மாற்றங்களைச் செய்யவும், தற்போதுள்ள நிறுவனத்தின் சொத்துகள், பொறுப்புகள், பணியாளர்கள் மற்றும் கல்வித் திட்டங்களை புதிய சட்டப்பூர்வ அமைப்புக்கு மாற்றவும் இந்த மசோதா முன்மொழிகிறது.
- இந்தியப் புள்ளியியல் நிறுவனம் கொல்கத்தாவில் நிறுவப்பட்டது, மேலும் இது தில்லி, பெங்களூரு, சென்னை மற்றும் தேஜ்பூர் ஆகிய இடங்களில் மையங்களைக் கொண்டு உள்ளது.

பிரதம மந்திரி வித்யாலக்ஷ்மி திட்டத்தின் சமீபத்திய தகவல்

- பிரதம மந்திரி வித்யாலக்ஷ்மி திட்டம், பிணையமில்லாக் கடன்கள் மற்றும் வட்டி ஆதரவுடன் உயர்கல்விக்கான அணுகலை விரிவுபடுத்துகிறது.
- இது பிணையமில்லா மற்றும் ஜாமீன்தார் இல்லாத கல்விக் கடன்களை வழங்குவதற்காக கல்வி அமைச்சகத்தின் ஒரு முன்னெடுப்பாகும்.
- இந்தியாவில் உள்ள எந்தவொரு அங்கீகரிக்கப்பட்ட தரமான உயர்கல்வி நிறுவனத்திலும் (QHEI) தகுதியின் அடிப்படையில் சேர்க்கப்பட்ட அனைத்து மாணவர்களும் இந்தக் கடன்களைப் பெறலாம்.

- தரமான கல்விக்கான அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் சமமான அணுகலை மையமாகக் கொண்டு, தேசிய கல்விக் கொள்கை, 2020 மற்றும் நிலையான வளர்ச்சி இலக்கு 4 ஆகியவற்றின் நோக்கங்களை ஆதரிப்பதற்காக இந்தத் திட்டம் தொடங்கப் பட்டது.
- இந்தியாவின் உயர்கல்வி சேர்க்கை விகிதம் 2014-15 ஆம் ஆண்டில் 23.7% ஆக இருந்து 2023-24 ஆம் ஆண்டில் 30% ஆக குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் கண்டுள்ளது.
- பிரதம மந்திரி வித்யாலக்ஷ்மி திட்டம், தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பின் (NIRF) ஒட்டுமொத்த, வகை சார்ந்த மற்றும் துறை சார்ந்த பிரிவுகளில் முதல் 100 இடங்களுக்குள் உள்ள உயர்கல்வி நிறுவனங்களை உள்ளடக்கியது.
- பிரதம மந்திரி வித்யாலக்ஷ்மி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கல்விக் கடன்களுக்கு உச்ச வரம்பு எதுவும் இல்லை. மேலும், அனுமதிக்கப்படும் தொகையானது பாடக் கட்டணம் மற்றும் பிற அங்கீகரிக்கப்பட்ட கல்விச் செலவுகளைப் பொறுத்தது.
- இந்தக் கடனானது, கல்விக் கட்டணம் மற்றும் நிறுவனக் கட்டணங்கள், விடுதி மற்றும் உணவுக் கட்டணங்கள், நிறுவனத்தால் வசூலிக்கப்படும் திரும்பப் பெறக்கூடிய மற்றும் திரும்பப் பெற முடியாத கட்டணங்கள், மடிக்கணினி மற்றும் படிப்பு காலத்திற்கான வாழ்க்கைச் செலவுகள் ஆகியவற்றை உள்ளடக்கும்.
- பிரதம மந்திரி வித்யாலக்ஷ்மி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன்கள், பட்டியல் வங்கிகள், மண்டல கிராமிய வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப் படுகின்றன.
- மேலும், ரூ. 7.5 லட்சம் வரையிலான கடன்களுக்கு அரசாங்கம் 75% கடன் உத்தரவாதத்தை வழங்குகிறது.
- மேலும், கடன் வாங்குபவர்கள் பிரிவு 80E-இன் கீழ் செலுத்தப்படும் வட்டிக்கு வரிச் சலுகைகளைப் பெறலாம்.
- பிரதம மந்திரி வித்யாலக்ஷ்மி ஒரு தனித்த திட்டம் அல்ல; இது ஏற்கனவே உள்ள பிரதம மந்திரி உச்சாதர் சிக்சா புரோத்சாஹன் மத்திய துறை வட்டி மானியத் திட்டம் அல்லது PM-USP CSIS-க்கு ஒரு துணைத் திட்டமாக விளங்குகிறது.
- PM-USP CSIS திட்டமானது, ஆண்டு குடும்ப வருமானம் ரூ. 4.5 லட்சம் உள்ள மாணவர்களுக்கான கடன்களை உள்ளடக்கியதுடன், அவர்கள் 100% வட்டி மானியத்தைப் பெறலாம்.

பாரத் கடல்சார் காப்பீட்டுக் கூட்டமைப்பு (BMIP)

- இது இந்தியாவின் முதல் இறையாண்மை ஆதரவு பெற்ற கடல்சார் காப்பீடு மற்றும் இடர் பகிர்வு அமைப்பாகும்.
- இது நிதி அமைச்சகத்தின் நிதிச் சேவைகள் துறையால் (DFS) தொடங்கப்பட்டது.
- மேற்கு ஆசியப் போரின் உச்ச கட்டத்தில் காணப்பட்ட நிலைகளுக்கு இணையாக, போர் இடர் காப்பீட்டு விகிதங்கள் ஏறக்குறைய 35-40 சதவீதம் குறைந்துள்ளன.
- இது கடல்சார் போர் இடர் காப்பீட்டுப் பாதுகாப்பின் தொடர்ச்சியை உறுதி செய்கிறது.
- இது உள்நாட்டுக் காப்பீட்டுத் திறனின் வளர்ச்சியை ஊக்குவிப்பதோடு, இந்தியாவின் கப்பல் மற்றும் வர்த்தகத் துறையினரிடையே நம்பிக்கையை மேம்படுத்துகிறது.

வங்கியாளர்களின் புத்தகங்கள் சாட்சிய மசோதா 2026

- 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5 அன்று மக்களவையில் வங்கியாளர்களின் புத்தகங்கள் சாட்சிய மசோதா, 2026 ஆனது குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.
- காலனித்துவ காலத்தில் இயற்றப்பட்ட 1891 ஆம் ஆண்டின் வங்கியாளர்களின் புத்தகங்கள் சாட்சிய சட்டத்திற்குப் பதிலாக இந்த மசோதா கொண்டு வரப்பட்டுள்ளது.
- பேரேடுகள், ரொக்கப் புத்தகங்கள் மற்றும் கணக்குப் புத்தகங்கள் உள்ளிட்ட வங்கிப் பதிவுகளின் சான்றளிக்கப்பட்ட நகல்களை சட்ட நடவடிக்கைகளில் சாட்சியமாகப் பயன்படுத்த தற்போதைய சட்டம் அனுமதிக்கிறது.
- நவீன வங்கி நடைமுறைகள் மற்றும் மின்னணுப் பதிவுகளைப் பிரதிபலிக்கும் வகையில் இந்த மசோதா சட்ட கட்டமைப்பைப் புதுப்பிக்கிறது.
- நீதிமன்றங்கள் மற்றும் பிற சட்ட நடவடிக்கைகளில் வங்கிப் பதிவுகளை சாட்சியமாகப் பயன்படுத்துவதற்கான சட்டப்பூர்வ கட்டமைப்பை இது வழங்குகிறது.

இந்திய மருந்தக ஆணையம் - உலக சுகாதார அமைப்பு

- இந்திய மருந்தக ஆணையத்தை (IPC) மருந்தியல் கண்காணிப்புக்கான தென்கிழக்கு ஆசியப் பிராந்தியச் சிறப்பு மையம் மற்றும் மருந்துகளின் தரத்திற்கான தொழில் நுட்ப மையமாக உலக சுகாதார அமைப்பு (WHO) அங்கீகரித்துள்ளது.
- நேபாளத்தின் காத்மாண்டுவில் நடைபெற்ற தென்கிழக்கு ஆசிய ஒழுங்குமுறை வலைப்பின்னலின் (SEARN) 10வது ஆண்டு கூட்டத்தின் போது இந்த அங்கீகாரம் அறிவிக்கப்பட்டது.
- உறுப்பு நாடுகளிடையே மருந்து ஒழுங்குமுறை அமைப்புகளை வலுப்படுத்தச் செய்வதற்காக உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்கு ஆசியப் பிராந்திய அலுவலகத்தால் (SEARO) 2016 ஆம் ஆண்டில் SEARN நிறுவப்பட்டது.
- பிராந்தியம் முழுவதும் மருந்து பாதுகாப்பு கண்காணிப்பு, மருந்து தரத் தரநிலைகள் மற்றும் ஒழுங்குமுறை திறன் மேம்பாடு ஆகியவற்றில் இந்திய மருந்தக ஆணையத்தின் பணிகளை இந்த அங்கீகாரம் ஏற்றுக்கொள்கிறது.

இந்தியாவில் வணிக ரீதியான நிலக்கரிச் சுரங்கம்

- 2020-ஆம் ஆண்டில் வணிகரீதியான நிலக்கரி ஏலங்கள் தொடங்கப்பட்டதிலிருந்து, உள்நாட்டு நிலக்கரி உற்பத்தி தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக ஒரு பில்லியன் டன்களைத் தாண்டியுள்ளதுடன், தனியார் துறையின் பங்களிப்பும் கணிசமாக விரிவடைந்துள்ளது.
- நிலக்கரி நாட்டின் முதன்மை ஆற்றல் தேவைகளில் கிட்டத்தட்ட 55 சதவீதத்தைப் பூர்த்தி செய்வதுடன், மின்சார உற்பத்தியில் 70 சதவீதத்திற்கும் அதிகமாகப் பங்களிக்கிறது.
- இந்தியா உலகின் ஐந்தாவது பெரிய நிலக்கரி வளங்களைக் கொண்டுள்ளதுடன், உலகளவில் நிலக்கரியின் இரண்டாவது பெரிய உற்பத்தியாளராகவும் நுகர்வோராகவும் திகழ்கிறது.
- 350-க்கும் மேற்பட்ட சுரங்கங்களில் சுமார் ஐந்து லட்சம் சுரங்கத் தொழிலாளர்கள் நிலக்கரி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்.

- அதனைத் தொடர்ந்து, 2015-ஆம் ஆண்டின் நிலக்கரிச் சுரங்கங்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம், வெளிப்படையான ஏலங்கள் மூலம் நிலக்கரித் தொகுதிகளை மறுஒதுக்கீடு செய்வதற்கான ஒரு சட்டப்பூர்வ கட்டமைப்பை நிறுவியது.
- 2020-ஆம் ஆண்டில், வணிகரீதியான நிலக்கரிச் சுரங்கம் தொடங்கப்பட்டது.
- இந்தச் சீர்திருத்தம், நிறுவனங்கள் நிலக்கரியை எந்தவொரு நுகர்வோருக்கும் சந்தை விலையில் சுதந்திரமாக விற்க அனுமதித்ததுடன், நிலக்கரியை சொந்தத் தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்த முடியும் என்ற முந்தைய கட்டுப்பாட்டையும் நீக்கியது.
- புதிய ஆட்சிமுறையானது, ஒரு டன்னுக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டண முறைக்கு பதிலாக, வருவாய் பகிர்வு மாதிரியை அறிமுகப்படுத்தியது. இதன் கீழ், வெற்றிகரமான ஏலதாரர்கள், தேசிய நிலக்கரி குறியீட்டுடன் இணைக்கப்பட்ட தங்கள் வருவாயின் ஒரு சதவீதத்தை அரசாங்கத்திற்குச் செலுத்துகின்றனர்.
- மேலும் இது, தானியங்கி வழிமுறையின் மூலம் 100 சதவீத நேரடி வெளிநாட்டு முதலீட்டையும் அனுமதிக்கிறது.

இந்தியாவின் பாலிசிலிகான் PLI திட்டம்

- புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகமானது (MNRE) பாலிசிலிகான் உற்பத்திக்காக ஒரு பிரத்யேக உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகை (PLI) திட்டத்தை தயாரித்து வருகிறது.
- இந்தியாவில் தற்போது பாலிசிலிகான் உற்பத்தித் திறன் இல்லை என்பதால், இது சீனா போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதையே பெரிதும் நம்பியுள்ளது.
- முன்மொழியப்பட்ட இத்திட்டம் 10 ஜிகாவாட் (GW) அளவிற்கும் மேலான உள்நாட்டு பாலிசிலிகான் உற்பத்தித் திறனை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பாலிசிலிகான் என்பது சூரிய மின்கலங்களை (solar cells) தயாரிப்பதற்கான மூலப் பொருளாகும், மேலும் இது குறைகடத்திகள் தொழில்துறைக்கும் முக்கியமானதாகும்.
- இந்த நடவடிக்கை இந்தியாவின் சூரியசக்தி விநியோகச் சங்கிலியை வலுப்படுத்தவும், இறக்குமதி சார்பைக் குறைக்கவும் மற்றும் உள்நாட்டு மதிப்பை அதிகரிக்கவும் நோக்கமாக கொண்டுள்ளது.

இந்தியா – லெசோதோ உறவுகள் 2026

- சமீபத்தில் டெல்லியில் நடைபெற்ற கூட்டு இருதரப்பு ஒத்துழைப்பு ஆணையத்தின் போது, இந்தியாவும் லெசோதோவும் இருதரப்பு ஒத்துழைப்பின் முழு அளவையும் ஆய்வு செய்தன.
- தெற்கு-தெற்கு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான தங்களின் பகிரப்பட்ட அர்ப்பணிப்பில் வேரூன்றிய, பல்வேறு துறைகளில் இந்தியாவும் லெசோதோவும் நெருங்கிய நட்புறவையும் ஒத்துழைப்பு உறவுகளையும் கொண்டுள்ளன.
- கூட்டு இருதரப்பு ஒத்துழைப்பு ஆணையத்தின் அடுத்த கூட்டம் 2027-ஆம் ஆண்டில் மசேருவில் (லெசோதோவின் தலைநகரம்) நடைபெறும் என்று இரு நாடுகளும் ஒப்புக் கொண்டன.
- லெசோதோ, தென்னாப்பிரிக்காவால் சூழப்பட்ட ஒரு நிலத்தால் சூழப்பட்ட நாடு ஆகும்.
- இது "வானத்தில் உள்ள ராஜ்ஜியம்" அல்லது "மலை ராஜ்ஜியம்" என்றும் அழைக்கப் படுகிறது.

- முழுவதும் 1400 மீட்டர் உயரத்திற்கு மேல் அமைந்துள்ள உலகின் ஒரே நாடு இதுவாகும்.
- லெசோதோ, தெற்கு ஆப்பிரிக்காவின் மிக உயரமான சிகரத்தைக் கொண்ட மலோட்டி மலைத்தொடரில் அமைந்துள்ளது.
- டிராகன்ஸ்பெர்க் மற்றும் மலோட்டி மலைகள் இதன் முக்கிய மலைத்தொடர்கள் ஆகும்.
- இந்த நாட்டின் 80%-க்கும் அதிகமான பகுதி 1,800 மீட்டருக்கு (5,906 அடி) மேல் அமைந்து உள்ளது.
- லெசோதோ உலகின் தென்கோடியில் அமைந்துள்ள நிலத்தால் சூழப்பட்ட நாடாகும்.
- மற்றொரு நாட்டின் நிலப்பரப்பால் முழுமையாகச் சூழப்பட்ட உலகின் மூன்று சுதந்திர நாடுகளில் இதுவே மிகப்பெரியது; வாடிகன் நகரம் மற்றும் சான் மரினோ ஆகியவை மற்ற இரண்டு நாடுகளாகும்.
- இத்தாலிய தீபகற்பம் மற்றும் ஐரோப்பாவிற்கு வெளியே அமைந்துள்ள ஒரே சுதந்திர நாடும், ஒரு குறுநாடாக இல்லாத ஒரே நாடும் இதுவே ஆகும்.

CAPF சட்டம் குறித்து உச்ச நீதிமன்றம்

- மத்திய ஆயுதக் காவல் படைகளின் (CAPF) 'குரூப் ஏ' (Group A) பிரிவைச் சேர்ந்த 3,000-க்கும் மேற்பட்ட அதிகாரிகள், 'மத்திய ஆயுதக் காவல் படை (பொது நிர்வாகம்) சட்டம், 2026'-ஐ எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர்.
- முந்தைய நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு கொண்டு வரப்பட்ட இச்சட்டம் அரசியலமைப்புக்கு முரணானது என்றும், அரசியலமைப்பின் 14, 16 மற்றும் 21-வது சரத்துகளை மீறுவதாகவும் மனுதாரர்கள் வாதிட்டுள்ளனர்.
- இச்சட்டம், CAPF பிரிவு அதிகாரிகள் பதவி உயர்வு மூலம் தலைமைப் பதவிகளை அடைவதைக் கடினமாக்கும்.
- CAPF தலைமையிடங்களில் இந்தியக் காவல் பணி (IPS) அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைத்து, CAPF அதிகாரிகள் உயர்பதவிகளை அடைவதை எளிதாக்க வேண்டும் என்று 2025 ஆம் ஆண்டு மே மாதத்தில் உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு நேர்மாறான நடவடிக்கையைச் செயல்படுத்தும் நோக்கிலேயே இந்தச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.
- அனைத்து CAPF-களிலும், 'இன்ஸ்பெக்டர் ஜெனரல்' (IG) நிலையிலான மொத்தப் பதவிகளில் 50 சதவீதமும், 'கூடுதல் இயக்குநர் ஜெனரல்' (ADG) நிலையிலான பதவிகளில் குறைந்தது 67 சதவீதமும், 'சிறப்பு இயக்குநர் ஜெனரல்' மற்றும் 'இயக்குநர் ஜெனரல்' நிலையிலான அனைத்துப் பதவிகளும் பணி மாறுதல் (deputation) அடிப்படையில் IPS அதிகாரிகளைக் கொண்டு நிரப்பப்பட வேண்டும் என்று இச்சட்டம் கூறுகிறது.
- இதுவரை, இத்தகைய நியமனங்கள் நிர்வாக உத்தரவுகளின் அடிப்படையிலேயே மேற் கொள்ளப்பட்டு வந்தன.
- 'துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல்' (DIG) பதவிகளில் 50 சதவீதத்தை 'குரூப் ஏ' CAPF அதிகாரிகளுக்கு ஒதுக்கும் நடைமுறைக்கும் இச்சட்டத்தில் இடமளிக்கப்படவில்லை.
- இதனால், அப்பதவிகளில் அதிக எண்ணிக்கையிலான IPS அதிகாரிகள் பணி மாறுதலில் நியமிக்கப்படுவதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது.
- 'சஞ்சய் பிரகாஷ் எதிர் இந்திய அரசு வழக்கு' வழக்கில் 2025 ஆம் ஆண்டு மே 23 அன்று உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பைச் செயல்படுத்த உத்தரவிடுமாறு மனுதாரர்கள் கோரியுள்ளனர்.

- மேலும், அனைத்து CAPF-களிலும் உள்ள 'உயர் நிர்வாக நிலை' (HAG) பதவிகளை, பணி மாறுதல் மூலம் மட்டுமே நிரப்பாமல், அந்தந்தப் படைகளின் தகுதியுள்ள நிர்வாகப் பிரிவு அதிகாரிகளைக் கொண்டு நிரப்ப வேண்டும் என்றும், இதர நிவாரணங்களையும் அவர்கள் கோரியுள்ளனர்.
- CAPF-களின் 'குரூப் ஏ' நிர்வாகப் பிரிவு அதிகாரிகள் அனைத்து வகையிலும் 'ஒழுங்கமைக்கப்பட்ட குரூப் ஏ சேவைகள்' (Organized Group A Services) பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று 2025 ஆம் ஆண்டு மே 23 அன்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.
- அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் CAPF-களில் IG நிலை வரை IPS அதிகாரிகளின் பணி மாறுதல் நியமனங்களைக் படிப்படியாகக் குறைப்பதுடன், ஆறு மாதங்களுக்குள் பணி மற்றும் சேவை விதிகள் குறித்து காலக்கெடுவுடன் கூடிய மறுஆய்வு மேற்கொள்ளுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. உள்துறை அமைச்சகம் (MHA) அந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்தது; ஆனால், 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 28 அன்று நீதிமன்றம் மறுஆய்வு மனுவைத் தள்ளுபடி செய்ததன் மூலம், அந்தத் தீர்ப்பு இறுதியானது.
- மத்திய ஆயுதக் காவல் படை (CAPF) மூன்று குழுக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது: எல்லைப் பாதுகாப்புப் படைகள் (அஸ்ஸாம் ரைபிள்ஸ், எல்லைப் பாதுகாப்புப் படை, இந்தோ-திபெத்திய எல்லைக் காவல் படை மற்றும் சஷஸ்திர சீமா பல்), உள்நாட்டுப் பாதுகாப்புப் படைகள் (மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படை மற்றும் மத்திய ரிசர்வ் காவல் படை) மற்றும் சிறப்பு அதிரடிப் படை (தேசிய பாதுகாப்புப் படை)..
- சட்டமன்ற நடவடிக்கையின் மூலம் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை ரத்து செய்யும் விளைவை இச்சட்டம் கொண்டுள்ளது என்று அந்த மனுவில் வாதிடப்பட்டது.
- அந்த நடவடிக்கை அதிகாரப் பகிர்வுக் கோட்பாட்டிற்கு முரணானதாகும்.

மூன்றாம் தரப்புக் காப்பீடு குறித்த உச்ச நீதிமன்றத்தின் உத்தரவு

- புதிய வாகனங்களுக்கான கட்டாய மூன்றாம் தரப்பு மோட்டார் வாகனக் காப்பீட்டு கால அளவை உச்ச நீதிமன்றம் ஓராண்டுக்கு நீட்டித்துள்ளது.
- இதன் மூலம், புதிய கார்களுக்கு இனி நான்கு ஆண்டுகளுக்கும், இருசக்கர வாகனங்களுக்கு ஆறு ஆண்டுகளுக்கும் காப்பீட்டுப் பாதுகாப்பு கிடைக்கும்.
- சட்டரீதியான கட்டாயம் இருந்தபோதிலும், அதிர்ச்சியளிக்கும் எண்ணிக்கையிலான வாகனங்கள் மூன்றாம் தரப்பு காப்பீடு இல்லாமலேயே இந்தியச் சாலைகளில் இயக்கப் படுவதை நீதிமன்றம் சுட்டிக் காட்டியது.
- இதனால் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களும் அவர்களது குடும்பத்தினரும் இழப்பீடு பெறுவதற்குப் பல்வேறு இடங்களுக்கு போக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.
- செல்லுபடியாகும் காப்பீடு இல்லாத வாகனங்களுக்கு எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் வழங்குவதை மறுக்கும் வகையிலான ஒரு நடைமுறையை நீதிமன்றம் முன்மொழிந்தது.
- மேலும், போக்குவரத்து விதிமீறல்களைக் கண்டறிய நெடுஞ்சாலைகள் மற்றும் சாலைகளில் பொருத்தப்பட்டுள்ள 'தானியங்கி வாகன எண் பலகை கண்டறியும் ஒளிப்படக்கருவிகளை' (ANPR), 'இந்தியக் காப்பீட்டுத் தகவல் பணியகம்' (IIB) பராமரிக்கும் காப்பீட்டுத் தரவுகள் மற்றும் 'வாகன்' (VAHAN) இணையதளத்தில் உள்ள வாகனப் பதிவுத் தரவுகளுடன் இணைக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

- 'எஸ். ராஜசேகரன் எதிர் இந்திய அரசு' வழக்கில் 2018-இல் வழங்கப்பட்ட தீர்ப்பில், புதிய வாகனங்களை வாங்குபவர்கள், அவற்றை வாங்கும்போதோ அல்லது பதிவு செய்யும் போதோ கார்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கும், இருசக்கர வாகனங்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கும் மூன்றாம் தரப்பு காப்பீட்டைப் பெற வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் ஏற்கனவே உத்தரவிட்டிருந்தது.

சேர்ந்து வாழும் உறவுகள் குறித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

- குடும்ப வன்முறைக் குற்றத்தை சேர்ந்து வாழும் உறவுகளுக்கும் உச்ச நீதிமன்றம் விரிவுபடுத்தியுள்ளது.
- "திருமணத்தின் தன்மையிலான உறவுகள்" எனத் தகுதிபெறும், பரஸ்பர சம்மதத்துடன் வயதுவந்தோர் இணைந்து வாழும் உறவுகளுக்கும் குடும்ப வன்முறை எனும் குற்றவியல் சட்டம் பொருந்தும் என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- 1860 ஆம் ஆண்டின் இந்திய தண்டனைச் சட்டத்தின் 498A பிரிவின் கீழ், சேர்ந்து வாழும் உறவில் உள்ள ஒரு ஆண் மீது வழக்குத் தொடர முடியுமா என்ற கேள்வியை விசாரிக்கும் போது இந்தத் தீர்ப்பு வந்துள்ளது.
- இந்திய தண்டனைச் சட்டத்தின் 498A பிரிவு (குடும்ப வன்முறை), தற்போது பாரதிய நியாய சம்ஹிதையின் 85 மற்றும் 86 பிரிவுகளால் மாற்றப்பட்டுள்ளதோடு இது திருமணமான உறவுகளுக்கு மட்டும் வரையறுக்கப்படக்கூடாது.
- நவீன, நகர்ப்புற வாழ்க்கையில் சேர்ந்து வாழும் உறவுகள் ஒரு யதார்த்தமாக இருந்தன.
- இன்றைய காலகட்டத்தில் ஒரு பெண்ணின் திருமண நிலைக்கும், குடும்பச் சூழலில் வன்முறையைத் தடுப்பதே 498A பிரிவின் நோக்கம் என்பதால், அதற்கும் நேரடித் தொடர்பு இல்லை என்று நீதிமன்றம் கூறியுள்ளது.
- திருமணம் போன்ற தன்மையுடைய மற்றும் திருமணம் செய்துகொள்வதற்கான அவசியமான நோக்கத்தைக் காட்டும் உறவுகளே “திருமணத்திற்கு மிகவும் நெருக்கமானவை” என்று நீதிமன்றம் வாதிட்டது.

உச்ச நீதிமன்றத்தின் பாலின உணர்திறன் தீர்ப்பு அறிக்கை

- பாலினப் பாகுபாடுகளை எதிர்த்துப் போராடுவதற்கான 2023 ஆம் ஆண்டின் கையேட்டை மாற்றி, Judgments and Gender: Sensitivity and Compassion in Writing Judgments என்ற அறிக்கையை இந்திய உச்ச நீதிமன்றம் வெளியிட்டது.
- ‘வழக்குத் தொடுப்பவர்’ (prosecutrix) என்ற வார்த்தைக்குப் பதிலாக, பாதிக்கப்பட்டவர், தப்பியவர் அல்லது புகார்தாரர் போன்ற நடுநிலையான சொற்களைப் பயன்படுத்த இந்த அறிக்கை பரிந்துரைக்கிறது.
- அறநெறி சார்ந்த மொழி, பாதிக்கப்பட்டவரைக் குறை கூறுதல் மற்றும் தப்பியவரின் கடந்த கால பாலியல் வரலாறு குறித்த தேவையற்ற கேள்விகளைத் தவிர்க்குமாறு நீதிமன்றங்களை இது கேட்டுக் கொள்கிறது.
- மன அதிர்வு குறித்த விழிப்புணர்வுடன் கூடிய அணுகுமுறை, சாட்சிகளை மரியாதையுடன் நடத்துதல் மற்றும் தப்பியவர்களின் கண்ணியம் மற்றும் தனியுரிமையைப் பாதுகாத்தல் ஆகியவற்றை இது பரிந்துரைக்கிறது.

- அனைவரையும் உள்ளடக்கிய நீதித்துறை மொழிக்கான 'பாலியல் நோக்குநிலை, பாலின அடையாளம், வெளிப்பாடு மற்றும் பாலினப் பண்புகள்' (SOGIESC) கட்டமைப்பையும் இது ஊக்குவிக்கிறது.

டிஜிட்டல் கைது மோசடிகள் மீதான விதிகள்

- அதிகரித்து வரும் டிஜிட்டல் கைது மோசடிகளைக் கையாள்வதற்காக, இடைத்தரகர் கணக்குகளுக்கான நிலையான செயல்பாட்டு நடைமுறைகளை (SOPs) வகுக்குமாறு இந்திய ரிசர்வ் வங்கிக்கு இந்திய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதுடன், நாடு முழுவதும் இ-ஜீரோ முதல் தகவல் அறிக்கைகள் (e-Zero FIRs) மற்றும் பாதிக்கப்பட்டோருக்கான இழப்பீட்டுக் கட்டமைப்புகளை நடைமுறைப்படுத்தவும் உத்தரவிட்டது.
- மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்திய சைபர் குற்ற ஒருங்கிணைப்பு மையம் (I4C) சமர்ப்பித்த நான்காவது நிலை அறிக்கையைப் பரிசீலித்த பின்னரே இந்த உத்தரவுகளைப் பிறப்பித்தது.
- மேலும், டிஜிட்டல் கைது மோசடிகளுக்குப் பலியாகும் மக்களுக்காக, பகிரப்பட்ட பொறுப்பு மற்றும் பாதிக்கப்பட்டோருக்கான இழப்பீட்டுக் கட்டமைப்பை அறிமுகப் படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு மத்திய அரசிடம் அது கேட்டுக் கொண்டது.
- அதன் முக்கிய உத்தரவுகளில், சைபர் மோசடி மூலம் கிடைக்கும் பணத்தை சட்ட விரோதமாக மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் இடைத்தரகர் வங்கிக் கணக்குகளைக் கையாள்வதற்கான ஒரு நிலையான செயல்பாட்டு நடைமுறையை (SOP) நான்கு வாரங்களுக்குள் வகுக்குமாறு இந்திய ரிசர்வ் வங்கியை (RBI) நீதிமன்றம் கேட்டுக் கொண்டது.

50 லட்சம் வீட்டுக்கூரை சூரியசக்தி அமைப்புகள்

- 'பிரதான் மந்திரி சூர்யா கர் முஃப்த் பிஜ்லி யோஜனா' திட்டத்தின் கீழ் பயன்பெறும் இந்தியக் குடும்பங்களின் எண்ணிக்கை 50 லட்சத்தைக் கடந்துள்ளதாக மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் பிரஹலாத் ஜோஷி தெரிவித்து உள்ளார்.
- வீட்டுக் கூரைகளில் சூரியமின் தகடுகளை அமைப்பதை ஊக்குவிப்பதன் மூலம் குடும்பங்களுக்கு இலவச மின்சாரத்தை வழங்குவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வீட்டுக் கூரைகளில் சூரியமின் தகடுகளை அமைக்கும் குடும்பங்களுக்கு, மாதம் 300 யூனிட் வரை இலவச மின்சாரம் மற்றும் ₹78,000 வரை நேரடி நிதியுதவி ஆகியவற்றை வழங்குவதை இத்திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது.
- இத்திட்டம் 2027 ஆம் ஆண்டு மார்ச் 31 அன்று நிறைவடைகிறது.
- இது உலகின் மிகப்பெரிய வீட்டுக்கூரை சூரியமின் உற்பத்தித் திட்டமாகும்.
- இது 2024-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட, புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் ஒரு மத்தியத் துறைத் திட்டமாகும்.
- கடந்த பத்தாண்டுகளில் இந்தியா 300 ஜிகாவாட்டிற்கும் (GW) அதிகமான புதைபடிவ எரிபொருள் சாராத மின் உற்பத்தித் திறனைச் சேர்த்துள்ளது.

- 2030-ஆம் ஆண்டுக்குள் 500 ஜிகாவாட் என்ற இலக்கை அடைவதற்கான பாதையில் இந்தியா உறுதியாகச் சென்று கொண்டிருக்கிறது.
- ஜூன் 30 நிலவரப்படி, இந்தியாவின் நிறுவப்பட்ட சூரியமின் உற்பத்தித் திறன் 162.15 ஜிகாவாட்டாக இருந்தது.
- இதில் 125.6 ஜிகாவாட் அளவிலான பெரிய அளவிலான திட்டங்கள் (utility-scale projects), 30.11 ஜிகாவாட் அளவிலான வீட்டுக்கூரைத் திட்டங்கள் மற்றும் 6.43 ஜிகாவாட் அளவிலான மின்-கட்டமைப்பு சாராத திட்டங்கள் ஆகியவை அடங்கும்.
- இந்தியா உலகின் இரண்டாவது மிகப்பெரிய எஃகு உற்பத்தியாளராகத் திகழ்கிறது.

NCDC திருத்த மசோதா

- மக்களவை தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழக (NCDC) திருத்த மசோதா 2026-ஐ நிறைவேற்றியது.
- கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு மேம்பாட்டிற்காக செயல்படும் நிறுவனங்களுக்கு நேரடியாக கடன்கள் மற்றும் மானியங்களை வழங்க NCDC-ஐ இந்த மசோதா அனுமதிக்கிறது.
- மத்திய அரசின் ஒப்புதலுடன், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களின் பங்கு மூலதனத்திலும் NCDC பங்கேற்கலாம்.
- 1962 ஆம் ஆண்டின் தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகச் சட்டத்தின் கீழ் 1963 ஆம் ஆண்டில் NCDC நிறுவப்பட்டது.
- இந்த மசோதா உணவுப் பொருட்களின் வரையறையை விரிவுபடுத்துகிறது மற்றும் தொழில்துறை பொருட்களுக்கான உதவி குறித்த புவியியல் கட்டுப்பாடுகளை நீக்குகிறது.
- இந்த மாற்றங்கள் கூட்டுறவுத் துறைக்கு வேகமான மற்றும் நெகிழ்வான நிதி ஆதரவை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

பெப்சிகோ உருளைக்கிழங்கு விவகாரத்தில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

- 'லேஸ்' (Lay's) சிப்ஸ் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் FL 2027 (FC-5) ரக உருளைக் கிழங்கிற்கான 'பெப்சிகோ இந்தியா' (PepsiCo India) நிறுவனத்தின் பதிவை உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது.
- பெப்சிகோ விவசாயிகளின் மீது வழக்கு தொடர்ந்தது என்ற காரணத்திற்காக மட்டுமே 2001 ஆம் ஆண்டின் தாவர வகைகள் மற்றும் விவசாயிகள் உரிமைகள் பாதுகாப்பு (PPVFR) சட்டத்தின் பிரிவு 34(h)-இன் கீழ் அதன் பதிவை ரத்து செய்ய முடியாது என்று நீதிமன்றம் கூறியது.
- பெப்சிகோ தங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தால், விவசாயிகள் இந்தச் சட்டத்தின் பிரிவு 39(1)(iv)-இன் கீழ் பாதுகாப்பைக் கோரலாம்.
- பெப்சிகோ 2018-19 ஆம் ஆண்டில் காப்புரிமை மீறல் குற்றச்சாட்டின் கீழ் குறைந்தது ஒன்பது குஜராத் விவசாயிகள் மீது வழக்கு தொடர்ந்தது, ஆனால் 2019 ஆம் ஆண்டு மே மாதத்தில் நிபந்தனையின்றி அனைத்து வழக்குகளையும் திரும்பப் பெற்றது.

- 2021 ஆம் ஆண்டில் பெப்சிகோவின் 2016 ஆம் ஆண்டுப் பதிவு ரத்து செய்யப்பட்ட பின்னர் இந்த சர்ச்சை தொடங்கியது, பின்னர் 2024 ஆம் ஆண்டில் டெல்லி உயர் நீதிமன்றத்தால் இந்த முடிவு ரத்து செய்யப் பட்டது.

கோபர்தன் திட்டம்

- GOBARdhan என்பது இயற்கை உயிர் வேளாண் வளங்களை ஒருங்கிணைக்கும் நிதியம் என்று பொருள்படும்.
- இது சுருக்கப்பட்ட உயிரிவாயுவுக்கான இந்தியாவின் தேசிய ஒருங்கிணைந்த திட்டம் ஆகும்.
- இது 2036 ஆம் ஆண்டு வரை நடைமுறையில் இருக்கும் தேசிய சுற்றறிக்கை உயிரி ஆற்றல் திட்டமாகும்.
- ஸ்வச் பாரத் திட்டத்தின் (கிராமப்புறம்) இரண்டாம் கட்டத்தின் கீழ், கிராமங்களில் தூய்மையை உறுதி செய்வதற்காக, கால்நடைகளின் சாணம், சமையலறையில் எஞ்சியவை போன்றவற்றை உயிரி எரிவாயு மற்றும் உயிரி-கழிவுக் கூழாக மாற்றுவதன் மூலம், திடக்கழிவு மேலாண்மையின் (SWM) ஒருங்கிணைந்த அங்கமாக கோபர்தன் உள்ளது.
- இது ஸ்வச் பாரத் திட்டத்தின் (கிராமப்புறம்) ஒரு பகுதியாக ஜல் சக்தி அமைச்சகத்தின் கீழ் உள்ள குடிநீர் மற்றும் சுகாதாரத் துறையால் (DDWS) முதன்மையாக ஒருங்கிணைக்கப் படுகிறது.
- இருப்பினும், சுருக்கப்பட்ட உயிரி வாயு (CBG) மற்றும் கழிவுகளிலிருந்து செல்வத்தை வலியுறுத்தும் விரிவாக்கப்பட்ட தேசிய முன்னெடுப்பாக, இது புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் வேளாண்மை போன்ற பிற அமைச்சகங்களுடன் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்துடன் (MoPNG) நெருக்கமாக ஒருங்கிணைக்கப்பட்ட முழு அரசாங்க அணுகுமுறையில் செயல்படுகிறது.
- ஸ்வச் பாரத் திட்டத்தின் (கிராமப்புறம்) (SBM-G) கட்டம்-II என்பது மத்திய அரசின் நிதியுதவித் திட்டமாகும்.
- இந்தத் திட்டம் CBG இன் உள்நாட்டு உற்பத்தியை பத்து மடங்கு அதிகரிக்கவும், பெரிய அளவிலான தனியார் முதலீட்டைத் திரட்டவும் விரும்புகிறது.
- இது நாட்டின் அபரிமிதமான விவசாய எச்சங்கள், கால்நடைகளின் சாணம், ஆலைச் சேறு, நகராட்சி கரிம கழிவுகள் மற்றும் பிற உயிரி வளங்களை சுத்தமான எரிபொருள், கரிம உரம், கிராமப்புற வருமானம் மற்றும் தேசியப் பொருளாதார மதிப்பாக மாற்றும்.
- இது இந்தியாவின் எதிர்கால ஆற்றல் கலவையின் முக்கிய தூணாக சுருக்கப்பட்ட உயிரிவாயுவை நிறுவும்.
- இது உறுதிசெய்யப்பட்ட ஆஃப்டேக், நிர்வகிக்கப்பட்ட விலை, மூலதன மானியங்கள், குழாய் உள்கட்டமைப்பு மற்றும் எளிதாக நிதி அணுகல் மூலம் உள்நாட்டு சுருக்கப்பட்ட உயிர்வாயு உற்பத்தியை கிட்டத்தட்ட பத்து மடங்கு அதிகரிக்க முயல்கிறது.
- இத்திட்டமானது தொழில்துறையினரால் கோரப்படும் ஊதிய விலை, உறுதி செய்யப்பட்ட கொள்முதல்,மற்றும் மூலதன ஆதரவு ஆகிய மூன்று இன்றியமையாதவற்றைக் குறிக்கிறது.
- மிகவும் முக்கியமான கூறுகளில் ஒன்று தேவையான குழாய் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதாகும், இது CBG இன் பரவலான தத்தெடுப்புக்கு அவசியம், ஏனெனில் இது

நம்பகமான உறுதிசெய்யப்பட்ட கொள்முதலை உறுதிசெய்து பரந்த எரிவாயு கட்டத்துடன் தடையற்ற ஒருங்கிணைப்பை செயல்படுத்துகிறது.

- CBGக்கான மெட்ரிக் மில்லியன் பிரிட்டிஷ் தெர்மல் யூனிட்டிற்கு (MMBTU) ₹2,110 என்ற நிலையான நிர்வாக விலையை கோபர்தன் மேலும் அறிமுகப்படுத்துகிறது.
- இது எரிசக்தி பாதுகாப்பு, விவசாயிகள் மற்றும் கிராமப்புற நிறுவனங்கள், கழிவுகளில் இருந்து செல்வம், ஆத்மநிர்பர் பாரத் மற்றும் விக்சித் பாரதத்தின் பார்வை ஆகியவற்றுக்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது.
- உள்நாட்டு CBG உற்பத்தியில் கிட்டத்தட்ட பத்து மடங்கு வளர்ச்சி, இந்தியாவின் சுத்தமான எரிவாயு பொருளாதாரத்தின் புதிய தூணாக உருவாகிறது.
- புதுப்பிக்கத்தக்க வாயு எரிபொருளின் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் அதிக ஆற்றல் பாதுகாப்பு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட புதைபடிவ எரிபொருட்களை குறைந்த அளவில் சார்ந்துள்ளது.
- வலுவான திட்ட நம்பகத்தன்மை, நிலையான விலை மற்றும் நிறுவன நிதிக்கான மேம்பட்ட அணுகல் ஆகியவற்றால் ஆதரிக்கப்படும் தனியார் முதலீட்டின் புதிய முறை.
- விவசாயிகள், தீவனச் சேகரிப்பாளர்கள், கூட்டுறவு மற்றும் கிராமப்புற தொழில் முனைவோருக்கு புதிய வருமான வாய்ப்புகள் மூலம் வலுவான கிராமப்புற வாழ்வாதாரங்கள்.
- விவசாய எச்சங்கள், கால்நடைகளின் சாணம், நகராட்சி அங்ககக் கழிவுகள் மற்றும் பிற உயிரி வளங்கள் ஆகியவற்றின் மூலம் அறிவியல் கழிவு மேலாண்மை.
- புதைபடிவ எரிபொருட்களை மாற்றுவதன் மூலமும் கரிமக் கழிவுகளை உற்பத்தி ரீதியாகப் பயன்படுத்துவதன் மூலமும் குறைந்த பசுமை இல்ல வாயு வெளியேற்றம்.
- அதிக உற்பத்தி, மதிப்பு கூட்டல் மற்றும் FOM மற்றும் LFOM பயன்பாடு மூலம் ஒரு பெரிய கரிம உரம் பொருளாதாரம்.
- ஒரு தேசிய கட்டமைப்பு, டிஜிட்டல் நிர்வாகம் மற்றும் எளிமைப்படுத்தப்பட்ட நிறுவன ஏற்பாடுகள் மூலம் விரைவான மற்றும் எளிதான திட்டத்தை செயல்படுத்துதல்.

அகில்மர ஏற்றுமதி செயல்பாட்டுத் திட்டம்

- இந்தியாவின் அகில்மரக் கட்டை மற்றும் அகில் எண்ணெய் ஏற்றுமதியை அதிகரிப்பதற்காக வடகிழக்கு பிராந்தியத்தில் (NER) இருந்து அகில்மர ஏற்றுமதி மேம்பாட்டிற்கான வழிகாட்டுதலை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.
- இந்தியாவில் மதிப்பிடப்பட்டுள்ள 139.89 மில்லியன் அகில் மரங்களில் 96.6% வடகிழக்கில் உள்ளன, இதில் அஸ்ஸாம் மிகப்பெரிய பங்கைக் கொண்டுள்ளது.
- அஸ்ஸாம் மற்றும் திரிபுரா ஆகியவை முக்கிய வள மையங்களாகும்; அகில் வாசனை திரவியங்கள், தூபங்கள் மற்றும் உயர்தர அகில் எண்ணெய் தயாரிப்புகளில் பயன்படுத்தப்படுகிறது.
- இந்த வழிகாட்டுதலானது செயலாக்கம், மேம்பட்ட பிரித்தெடுத்தல், சான்றிதழ், கண்காணிப்பு, பிராண்டிங்/அடையாளமிடல் மற்றும் வலுவான உலகளாவிய சந்தை இணைப்புகளில் கவனம் செலுத்துகிறது.
- ஏற்றுமதியாளர்கள் மற்றும் சர்வதேச சந்தை மேம்பாட்டிற்கு ஆதரவளிக்க 2026 ஆம் ஆண்டு மே மாதத்தில் அகில் ஏற்றுமதி மேம்பாட்டுக் குழு அமைக்கப்பட்டது.

- வடகிழக்கு பிராந்தியத்திற்கான பிரதமரின் மேம்பாட்டு முயற்சியின் (PM-DevINE) கீழ் அஸ்ஸாம் மற்றும் திரிபுராவில் அகில் தொகுப்புகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

கப்பல் மறுசுழற்சியில் இந்தியாவின் முதலிடம்

- கப்பல் மறுசுழற்சி செய்யும் உலகின் முன்னணி நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது, அதன் உலகளாவியப் பங்கை 2024 ஆம் ஆண்டில் 30.1% இலிருந்து 2025 ஆம் ஆண்டில் 35.4% ஆக உயர்த்தியுள்ளது.
- இந்தியா 2025 ஆம் ஆண்டில் 2.99 மில்லியன் மொத்த டன் (GT) கப்பல்களை மறுசுழற்சி செய்தது, இது 2024 ஆம் ஆண்டில் 1.86 மில்லியன் GT-யை விட 60% அதிகமாகும்.
- குஜராத்தில் உள்ள அலங்க்-சோசியா (Alang-Sosiya) தொகுதி இந்தியாவின் கப்பல் மறு சுழற்சியில் சுமார் 98% பங்கைக் கொண்டுள்ளது, இதன் ஆண்டுத் திறன் சுமார் 6 மில்லியன் GT ஆகும்.
- கப்பல் மறுசுழற்சி சட்டம் 2019, கப்பல் மறுசுழற்சி விதிகள் 2021 மற்றும் கப்பல் மறுசுழற்சி விதிமுறைகள் 2026 ஆகியவை பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் ஒழுங்குமுறை இணக்கத்தை வலுப்படுத்துகின்றன.
- 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் நடைமுறைக்கு வந்த கப்பல்களின் பாதுகாப்பான மற்றும் சுற்றுச்சூழல் ரீதியான மறுசுழற்சிக்கான ஹாங்காங் சர்வதேச ஒப்பந்தத்துடன் இந்தியா தனது கட்டமைப்பை இணைத்துள்ளது.
- இந்தியா மறுசுழற்சி திறனை சுமார் 9 மில்லியன் கப்பலின் காலி எடையை (டன்களில்) (LDT) அதிகரிக்க திட்டமிட்டுள்ளது மற்றும் முற்றங்களை நவீனமயமாக்குவதற்கு ₹53.5 கோடியை வழங்கியுள்ளது.

இந்திய கண்டெய்னர்/சரக்கு கொள்கலன் உற்பத்தி திட்டம்

- உள்நாட்டு கண்டெய்னர்/சரக்கு கொள்கலன் உற்பத்தியை அதிகரிக்கவும், இறக்குமதி சார்பைக் குறைக்கவும் ₹10,000 கோடி மதிப்பிலான கண்டெய்னர்/சரக்கு கொள்கலன் உற்பத்தி உதவித் திட்டத்தை (CMAS) அரசாங்கம் முன்மொழிந்துள்ளது.
- இத்திட்டம் ஐந்து ஆண்டுகளுக்குச் செயல்படுத்தப்படும் என்பதுடன் மேலும் இது இந்தியாவின் வருடாந்திர கண்டெய்னர்/சரக்கு கொள்கலன் உற்பத்தித் திறனை சுமார் 7.5 லட்சம் இருபது-அடிக்கு சமமான அலகுகளாக (TEUs) உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது புதிய தொழிற்சாலைகள், தற்போதுள்ள அலகுகளின் விரிவாக்கம், சோதனை உள்கட்டமைப்பு, திறன் மேம்பாடு மற்றும் திறன் உருவாக்கம் ஆகியவற்றை ஆதரிக்கும்.
- இந்தியா தற்போது உள்நாட்டுத் தேவைகள் மற்றும் மறுசீரமைப்புக்காக ஆண்டுக்கு சுமார் 2 மில்லியன் காலி கண்டெய்னர்/சரக்கு கொள்கலன்களை இறக்குமதி செய்கிறது.
- இந்தத் திட்டத்தின் மூலம் கண்டெய்னர்/சரக்கு கொள்கலன் உற்பத்தி மற்றும் தொடர்புடைய தொழில்களில் சுமார் 3,000 நேரடி மற்றும் 50,000 மறைமுக வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

புதிய கங்கை வெள்ளப்பெருக்கு சமவெளி விதிகள் 2026

- கங்கையின் வெள்ளப்பெருக்கு சமவெளியை மறுவரையறை செய்து, கங்கை நதி (புத்துயிரூட்டல், பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) ஆணையங்கள் ஆணை, 2016-ஐ மத்திய அரசு திருத்தியுள்ளது.
- இந்தத் திருத்தம் "கட்டுமானமில்லா மண்டலம்" (construction-free zone) என்ற வார்த்தையை நீக்கிவிட்டு, செயல்படும் வெள்ளப்பெருக்கு சமவெளி, ஒழுங்குமுறை மண்டலம் (regulatory zone) மற்றும் எச்சரிக்கை மண்டலம் (warning zone) ஆகியவற்றை அறிமுகப்படுத்துகிறது.
- செயல்படும் வெள்ளப்பெருக்கு சமவெளி என்பது 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் பகுதியாகும்.
- ஒழுங்குமுறை மண்டலம் என்பது 5 முதல் 25 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏற்படும் வெள்ளத்தை உள்ளடக்கியது, அதே சமயம் எச்சரிக்கை மண்டலம் 25 முதல் 100 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏற்படும் வெள்ளத்தை உள்ளடக்கியது.
- மாசுபாட்டைக் குறைக்கவும், இயற்கையான நிலத்தடி நீரை பாதுகாக்கவும் கங்கை கரைகள் மற்றும் வெள்ளப்பெருக்கு சமவெளிகள் பராமரிக்கப்பட வேண்டும்.

பட்டியல் சாதியினர்/பட்டியல் பழங்குடியினருக்கான சலுகைப் பிரிவு

- இந்திய உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஒரு தொகுதி மனுக்கள், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைப் (OBC) போலவே, பட்டியலிடப்பட்ட சாதியினர் (SC) மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) ஆகிய இட ஒதுக்கீட்டுப் பிரிவுகளிலும் சலுகைப் பிரிவு விலக்கைக் கோருகின்றன.
- "பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினருக்கு சலுகைப் பிரிவுக் கொள்கைகள் பொருந்தாது" என்று நீதித்துறை முன்னுதாரணங்கள் தெளிவுபடுத்தியுள்ளன என மத்திய அரசு வாதிட்டது.
- மேலும், மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ஒரு பிரமாணப் பத்திரத்தில் உச்ச நீதிமன்றத்திடம் இதைத் தெரிவித்துள்ளது.
- கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசின் கீழ் உள்ள சேவைகளில் இட ஒதுக்கீட்டைத் தவிர, பட்டியலிடப்பட்ட சாதியினர், பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான "பெரும்பாலான" நலத்திட்டங்கள் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களில், "திட்டங்களின் பலன்கள் உண்மையில் தகுதியானவர்களுக்குச் சென்றடைவதை உறுதி செய்யும் வருமானத் தகுதிச் சோதனை" ஏற்கனவே உள்ளது.
- இட ஒதுக்கீட்டுக் கொள்கையில் மாற்றம் செய்வது, குறிப்பாக இட ஒதுக்கீட்டுப் பிரிவுகளுக்குள் வருமான அடிப்படையிலான முன்னுரிமைகளை அறிமுகப் படுத்துவது, இட ஒதுக்கீட்டுப் பிரிவு பயனாளிகளின் சமூக-பொருளாதாரத் தரவுகள் உட்பட, ஒரு முழுமையான ஆய்வு மற்றும் ஆழ்ந்த அனுபவ ஆய்வுக்குப் பின்னரே செய்யப்பட வேண்டும்.
- பட்டியலிடப்பட்ட சாதியினர், பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப் பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் முக்கிய நோக்கம், "சமூக சமத்துவம் மற்றும் சமூக நீதியை அடைவது, வரலாற்று ரீதியான பாதகங்களையும் பாகுபாடுகளையும் களைவது, விளிம்புநிலை சமூகங்களுக்குப் பொருளாதார அதிகாரமளித்தல் மற்றும் மேம்பாட்டை உறுதி செய்வது, மற்றும் கல்வி, பொதுச்

சேவைகள், முடிவெடுக்கும் செயல்முறைகளில் அவர்களின் முழுமையான பங்கேற்பை ஊக்குவிப்பது" ஆகியனவாகும்.

- பட்டியலிடப்பட்ட சாதியினர்/பட்டியலிடப்பட்ட பழங்குடியினருக்கு வருமான அடிப்படையிலான 'கிரீமி லேயர்/உயரடுக்கு பிரிவினர்' முறையைக் கோரும் தற்போதைய விவகாரம், அரசியலமைப்புச் சட்டப் பிரச்சினையை எழுப்பவில்லை என்றும், அரசியலமைப்பின் கீழ் உள்ள எந்தவொரு அடிப்படை உரிமையையும் மீறுவதாக அமையவில்லை என்றும் அரசு கூறியுள்ளது.
- எம். நாகராஜ் வழக்கில் மேற்கோள் காட்டப்பட்ட தீர்ப்பு, 'கிரீமி லேயர்/உயரடுக்கு பிரிவினர்' என்ற கருத்தை மட்டுமே குறிப்பிட்டிருந்தது என்றும், அது இதர பிற்படுத்தப் பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீடு தொடர்பான ஒரு "பொதுவான கருத்தாக"த் தோன்றுகிறது என்றும் மத்திய அரசு கூறியது.
- பஞ்சாப் மாநிலம் எதிர் தேவிந்தர் சிங் வழக்கில் ஏழு நீதிபதிகள் கொண்ட அமர்வு 2024-ல் வழங்கிய தீர்ப்பிற்குப் பிறகு, பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினருக்கான இட ஒதுக்கீட்டில் 'கிரீமி லேயர்' முறையை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற வாதம் வேகம் பெற்றது.
- அந்தத் தீர்ப்பில், ஓய்வு பெற்ற நீதிபதி பி.ஆர். கவாய் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான (OBCs) அளவுகோல்களிலிருந்து வேறுபட்டிருந்தாலும், பட்டியலிடப்பட்ட சாதியினர் (SCs) மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினருக்கான (STs) ஒரு சிறந்த பிரிவை அடையாளம் காண அரசாங்கம் ஒரு வழியைக் கண்டறிய வேண்டும் என்று தனது கருத்தில் குறிப்பிட்டிருந்தார்.
- 2024 ஆம் ஆண்டின் தீர்ப்பு, பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினருக்கான இட ஒதுக்கீட்டை துணைப் பிரிவுகளாகப் பிரிக்கும் கொள்கையைத் தொடர மாநில அரசுகளுக்கு அனுமதி அளித்திருந்தது.
- SC மற்றும் ST பட்டியல்களில் சமூகங்களைச் சேர்க்கவோ அல்லது நீக்கவோ நாடாளுமன்றத்திற்கு மட்டுமே அதிகாரம் உள்ளது என்றும், இது நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்கு உட்பட்டது அல்ல என்றும் மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது.
- இருப்பினும், பட்டியல்களில் சமூகங்களைச் சேர்ப்பது அல்லது நீக்குவது தொடர்பான நாடாளுமன்றத்தின் அதிகாரத்திற்கும், ஏற்கனவே உள்ள பட்டியல்களுக்குள் சமூகங்களை வகைப்படுத்துவது தொடர்பான நிர்வாகத் துறையின் அதிகாரத்திற்கும் இடையிலான வேறுபாட்டை 'தவிந்தர் சிங்' (Davinder Singh) தீர்ப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

'ஒரு மூலிகை, ஒரு தரம்' முன்னெடுப்பிற்கான நீட்டிப்பு

- ஆயுஷ் அமைச்சகமும், சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகமும் (MoHFW) 'ஒரு மூலிகை, ஒரு தரம்' (One Herb, One Standard) முன்னெடுப்பை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டித்துள்ளன.
- இந்த முன்னெடுப்பானது ஆயுர்வேதம், சித்த மருத்துவம், சோவா-ரிக்பா, யுனானி மற்றும் ஹோமியோபதி ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் மருத்துவத் தாவரங்களுக்கான பொதுவான அறிவியல் தரங்களை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதிக்கான மருந்தக ஆணையம் (PCIM&H) மற்றும் இந்திய மருந்தக ஆணையம் (IPC) ஆகியவை தங்களது புரிந்துணர்வு ஒப்பந்தத்தை (MoU) மூன்று ஆண்டுகளுக்குப் புதுப்பித்துள்ளன.

- 2022 ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் தொடங்கப்பட்ட முதல் கட்டத்தில், இந்த இரு நிறுவனங்களும் மருத்துவத் தாவரங்கள் குறித்து 50 தனிவரைவு நூல்களை உருவாக்கின.
- பாரம்பரிய மருந்துகளின் நம்பகத்தன்மை மற்றும் உலகளாவிய ஏற்புத்தன்மையை மேம்படுத்தும் வகையில், தரப்படுத்தலை விரிவுபடுத்தவும், சர்வதேச தரத் தேவைகளுடன் இந்தியத் தரங்களை சீரமைக்கவும் இந்தப் புதுப்பிக்கப்பட்ட முன்னெடுப்பு உதவும்.

300 ஜிகாவாட் புதைபடிவ எரிபொருள் அல்லாத மின் உற்பத்தித் திறன்

- இந்தியா, புதைபடிவ எரிபொருள் அல்லாத மின் உற்பத்தித் திறனில் 300 ஜிகாவாட்டை அதிகாரப்பூர்வமாகத் தாண்டியுள்ளதுடன் 2026-ஆம் ஆண்டுக்குள் இந்தத் திறன் 300.50 ஜிகாவாட்டை எட்டும்.
- இந்தத் தூய்மையான ஆற்றல், தற்போது இந்தியாவின் மொத்த மின் உற்பத்தித் திறனில் (சுமார் 552 ஜிகாவாட்) 54%-க்கும் அதிகமாக உள்ளது. இதனால், புதைபடிவ எரிபொருள் அடிப்படையிலான மின் உற்பத்தித் திறன் பாதிக்கும் கீழே சென்றுள்ளது.
- புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் (MNRE) படி திறன் விவரம்:
  - சூரிய சக்தி – 164.59 ஜிகாவாட் (2014-ல் 2.8 ஜிகாவாட்டாக இருந்தது)
  - காற்றாலை சக்தி – 58.14 ஜிகாவாட்
  - நீர் மின்சாரம் (பெரிய மற்றும் சிறிய) – 57.24 ஜிகாவாட்
  - உயிரி மின்சாரம் – 11.75 ஜிகாவாட்
  - அணுசக்தி – 8.78 ஜிகாவாட்.

சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் திருத்த மசோதா 2026

- கனிம உரிமைகள் மற்றும் கனிமங்கள் நிறைந்த நிலங்கள் மீது வரி விதிக்கும் மாநிலங்களின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) திருத்த மசோதா, 2026-ஐ நாடாளுமன்றம் நிறைவேற்றியது.
- இந்த மசோதா 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12 அன்று மக்களவையிலும், 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13 அன்று மாநிலங்களவையிலும் நிறைவேற்றப்பட்டது; இதனை நாடாளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டும் என்ற கோரிக்கைகளை அரசு நிராகரித்தது.
- நிலக்கரி, சுண்ணாம்பு, இரும்புத் தாது, தாமிரம் மற்றும் மாங்கனீசு போன்ற முக்கிய கனிமங்களை ஒழுங்குபடுத்துவதை இந்த மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது, அதே வேளையில் 49 சிறிய கனிமங்கள் மீது மாநிலங்கள் தொடர்ந்து அதிகாரங்களைக் கொண்டிருக்கும்.
- இந்த நடவடிக்கை இந்தியா முழுவதும் சீரான கனிம விகிதங்களை உறுதி செய்வதையும் தொழில்களுக்குத் தேவையான முக்கிய கனிமங்கள் மீதான மத்திய கட்டுப்பாட்டைப் பராமரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- அரசின் கூற்றுப்படி, ஒட்டுமொத்த கனிம வருவாயில் மாநிலங்களின் பங்கு 2014-15 இல் 65 சதவீதத்திலிருந்து 85 சதவீதமாக அதிகரித்துள்ளது, அதே வேளையில் நிலக்கரி வருவாயில் அவற்றின் பங்கு 51 சதவீதத்திலிருந்து 96 சதவீதமாக உயர்ந்துள்ளது.

- கனிம வருவாயில் சுமார் 11 சதவீதம் மத்திய அரசிற்கும், சுமார் 88 சதவீதம் மாநிலங்களுக்கும் செல்கிறது என்று அரசு கூறியது, மேலும் இந்த திருத்தத்தால் எந்தவொரு மாநிலத்திற்கும் வருவாய் இழப்பு ஏற்படாது என்றும் கூறியது.

இந்தியாவின் அணுசக்தி செயல்பாட்டுத் திட்டம்

- அணுசக்தி திட்டத்தின் கீழ் 2047 ஆம் ஆண்டுக்குள் 100 GWe (கிகாவாட் மின்சாரம்) அணுசக்தித் திறனை அடைவதை இந்தியா நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2033 ஆம் ஆண்டிற்குள் குறைந்தபட்சம் ஐந்து உள்நாட்டு சிறிய அணு உலைகளை (SMRs) ரூ.20,000 கோடி ஆதரவுடன் உருவாக்க அரசு திட்டமிட்டுள்ளது.
- பாபா அணு ஆராய்ச்சி மையம் (BARC) 220 MWe (மெகாவாட் மின்சாரம்) பாரத் SMR மற்றும் 55 MWe SMR-55 உள்ளிட்ட உள்நாட்டு உலைகளை உருவாக்கி வருகிறது.
- ஷாந்தி சட்டம் (SHANTI Act - இந்தியாவை உருமாற்றுவதற்கான அணுசக்தியின் நிலையான பயன்பாடு மற்றும் மேம்பாட்டுச் சட்டம்) தனியார் பங்கேற்பு மற்றும் 49 சதவீதம் வரையிலான நேரடி அந்நிய முதலீட்டிற்கான சட்டக் கட்டமைப்பை வழங்குகிறது.
- உள்நாட்டு உற்பத்தியை ஆதரிப்பதற்காக இந்தியத் தொழில்துறைகளுக்கு SMR தொழில்நுட்பத்தை BARC மாற்றி வருகிறது.

JPC மதிப்பாய்வில் FCRA மசோதா

- வெளிநாட்டு பங்களிப்பு (ஒழுங்குமுறை) திருத்த மசோதா, 2026, மக்களவையால் 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12 அன்று நாடாளுமன்றக் கூட்டுக்குழுவின் (JPC) பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது.
- ஒரு நாடாளுமன்றக் கூட்டுக்குழுவில் மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் இடம் பெற்றிருப்பர், இது ஒரு குறிப்பிட்ட மசோதா அல்லது சிக்கலை விரிவாக ஆராய்கிறது.
- இது சாட்சிகளை அழைக்கலாம், ஆவணங்களை ஆய்வு செய்யலாம் மற்றும் மாற்றங்களைப் பரிந்துரைக்கலாம், ஆனால் அதன் பரிந்துரைகள் அரசாங்கத்தை கட்டுப்படுத்தாது.
- விரிவான ஆய்வு மற்றும் பங்குதாரர்களின் ஆலோசனை மூலம் சிக்கலான சட்டங்களை ஆராய நாடாளுமன்றக் குழுக்கள் உதவுகின்றன.
- 14வது மக்களவையில் (2004-09) சுமார் 60 சதவீத மசோதாக்கள் குழுக்களுக்கு அனுப்பப் பட்டன, ஆனால் இது 17வது மக்களவையில் (2019-24) சுமார் 16 சதவீதமாகக் குறைந்தது.

நிலக்கரி முறையான பணிப்பாய்வில் இந்தியாவின் முன்னிலை

- குளோபல் எனர்ஜி மானிட்டரின் (GEM) குளோபல் கோல் மைன் டிராக்கரின் (GCMT) படி, உலகளாவிய நிலக்கரி சுரங்க முன்மொழிவுகள் 2025 ஆம் ஆண்டில் 11 சதவீதம் அதிகரித்து ஆண்டுக்கு 2,521 மில்லியன் டன்களாக (Mtpa) உள்ளன.
- இந்தியா தனது முன்மொழியப்பட்ட திறனை 329 Mtpa இலிருந்து 638 Mtpa ஆக கிட்டத் தட்ட இரட்டிப்பாக்கியுள்ளது, அதே நேரத்தில் சீனா 1,321 Mtpa உடன் மிகப் பெரியதாக உள்ளது.

- சீனா, இந்தியா, ஆஸ்திரேலியா, ரஷ்யா மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகியவை இணைந்து முன்மொழியப்பட்ட உலகளாவிய நிலக்கரி சுரங்கத் திறனில் சுமார் 92 சதவீதமாக உள்ளன.
- முன்மொழியப்பட்ட திறனில் சுமார் 70 சதவீதம் இன்னும் கட்டுமானத்திற்கு முந்தைய அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஆனால் தொடங்கப்படாத கட்டத்தில் உள்ளது, அதே நேரத்தில் 2025 ஆம் ஆண்டில் 113 Mtpa புதிய திறன் மட்டுமே செயல்பாட்டுக்கு வந்தது.
- இந்தியாவின் முன்மொழியப்பட்ட திறன் வெப்ப நிலக்கரியால் ஆதிக்கம் செலுத்தப் படுகிறது, இது சுமார் 603 Mtpa ஆகும் என்பதோடு இது அதன் உள்நாட்டு முறையான பணிப் பாய்வில் 94 சதவீதமாக உள்ளது.

2026ல் இந்தியாவின் மிகப்பெரிய எல்பிஜி (LPG) விநியோகஸ்தர்

- 2026ம் ஆண்டில் இந்தியாவின் மிகப்பெரிய எல்பிஜி (LPG) விநியோகஸ்தராக அமெரிக்கா திகழும்.
- இந்தியாவின் எல்பிஜி இறக்குமதியில் 67 சதவீதப் பங்களிப்பை அமெரிக்கா கொண்டு உள்ளது.
- ஆற்றல் விநியோக ஆதாரங்களைப் பல்வகைப்படுத்தும் பரந்த முயற்சியின் ஒரு பகுதியாக, இந்தியாவின் எல்பிஜி தேவையில் சுமார் 10 சதவீதத்தை அமெரிக்காவிலிருந்து பெறுவது என்ற அரசின் முந்தைய முடிவை அடுத்தே இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது.
- மேற்கு ஆசியாவில் மோதல் தொடங்குவதற்கு முன்பு, இந்தியா தனது சிலிண்டர் அடைக்கப்பட்ட ஹைட்ரோகார்பன் எரிவாயு (எல்பிஜி) தேவையில் கிட்டத்தட்ட 60 சதவீதத்தை இறக்குமதி செய்து வந்தது; இதில் சுமார் 90 சதவீதம் ஹார்முஸ் நீரிணை வழியாகவே வந்தது.
- வளைகுடா நாடுகளிலிருந்து இறக்குமதி குறைந்துள்ளதை ஈடுசெய்யும் வகையில், இந்தியா தனது உள்நாட்டு எல்பிஜி உற்பத்தியையும் அதிகரித்துள்ளது.
- மேலும், கச்சா எண்ணெய் விநியோகத்திற்கான நாடுகளின் எண்ணிக்கையை 27-லிருந்து 41-ஆக இந்தியா விரிவுபடுத்தியுள்ளது.
- ஆழ்கடல் எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்வை ஊக்குவிக்கும் நோக்கில், 84,000 கோடி ரூபாய் மதிப்பிலான 'சமுத்ரா மந்தன்' திட்டத்திற்கும் அரசு சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.

தேசிய பாதுகாப்பு வழிகாட்டுதல்கள்

- மத்திய உள்துறை அமைச்சகம் (MHA) புதிய தேசிய பாதுகாப்பு வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- சர்வதேச எல்லைக்கு 1 கி.மீ சுற்றளவுக்குள் சூரிய சக்தி, காற்று மற்றும் கலப்பு (hybrid) புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களுக்கு முழுமையான தடை விதிக்கப்பட்டுள்ளது; அதேவேளையில், 50 கி.மீ தொலைவு வரை அமைந்துள்ள திட்டங்களுக்குப் பாதுகாப்பு அனுமதி கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- இந்த எல்லைப் பகுதிகளில் கட்டுப்பாட்டுக் கோடு (LoC), உண்மையான கட்டுப்பாட்டுக் கோடு (LAC) மற்றும் சர்வதேச எல்லை (IB) ஆகியவை அடங்கும்.

- LoC, LAC மற்றும் IB ஆகியவற்றிலிருந்து 20 கி.மீ தொலைவுக்குள் முன்மொழியப்படும் திட்டங்களுக்கு, பாதுகாப்பு அமைச்சகத்திடமிருந்து தனிப்பட்ட 'தடையின்மைச் சான்றிதழ்' (NOC) பெறுவதும் அவசியமாகும்.
- அனைத்து புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களுக்கான விண்ணப்பங்களும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்திடம் (MNRE) மட்டுமே சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- இந்த வழிகாட்டுதல்கள் வெளிநாட்டினரின் பங்கேற்பு மற்றும் பணியாளர் நியமனம் ஆகியவற்றின் மீதும் கட்டுப்பாடுகளை விதிக்கின்றன.
- உள்துறை அமைச்சகத்தின் அனுமதியின்றி பாகிஸ்தான், வங்கதேசம் மற்றும் சீனாவைச் சேர்ந்த பொறியாளர்கள், பணியாளர்கள் அல்லது தொழிலாளர்களை விண்ணப்ப தாரர்கள் ஈடுபடுத்தக்கூடாது என்று இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- LAC-க்கு அருகிலுள்ள தற்போதைய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்கள் பெரும்பாலும் சிறிய அளவிலானவை; அதேசமயம் ராஜஸ்தான் மற்றும் குஜராத்தில் உள்ள சர்வதேச எல்லைப் (IB) பகுதிகளை ஒட்டியுள்ள திட்டங்கள் ஒப்பீட்டளவில் பெரியவை.
- ஜம்மு-காஷ்மீரில், கட்டுப்பாட்டுக் கோடு (LoC) பகுதியையொட்டி பெரும்பாலும் கட்டிடங்களின் கூரைகளில் அமைக்கப்படும் சூரியமின் சக்தித் திட்டங்களே (solar rooftop installations) உள்ளன; அதே வேளையில் கார்கில் மற்றும் லடாக் பகுதிகளில் சூரிய சக்தி ஒளி மின்னழுத்த (solar photovoltaic) திட்டங்கள் உள்ளன.

சப்த தாரா கட்டமைப்பு

- 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று நடைபெற்ற சுதந்திர தின உரையின் போது பிரதமர் நரேந்திர மோடி சப்த தாரா (சக்தியின் சப்ததாரா) கட்டமைப்பை அறிமுகப் படுத்தினார்.
- இது தேசிய வளர்ச்சியின் ஏழு முக்கியப் பகுதிகளை உள்ளடக்கி, 2047 ஆம் ஆண்டிற்குள் வளர்ந்த பாரதம் (விக்சித் பாரத்) என்ற இலக்கை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உற்பத்தி, விவசாயம் மற்றும் உணவு பதப்படுத்துதல், தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகள், கதி சக்தி, பாதுகாப்பு சுயசார்பு, பசுமை மற்றும் நீலப் பொருளாதாரம் மற்றும் இந்தியாவின் மென்திறன் (soft power) ஆகியவை அந்த ஏழு பகுதிகளாகும்.
- தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளின் கீழ், அடுத்த ஓராண்டில் 1 கோடி இளைஞர்களுக்கு செயற்கை நுண்ணறிவில் (AI) பயிற்சி அளிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.
- 2047 ஆம் ஆண்டிற்குள் 100 ஜிகாவாட் அணுசக்தி திறனை இலக்காக இந்தியா நிர்ணயித்துள்ளது, மேலும் அடுத்த 6 முதல் 7 ஆண்டுகளில் ஐந்து புதிய அணு உலைகள் செயல்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நவீன குடிமைப் பாதுகாப்பு தொண்டர் படை

- 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று புது தில்லி செங்கோட்டையில் நடைபெற்ற சுதந்திர தின உரையின் போது, "மிகப்பெரிய, நவீன" குடிமைப் பாதுகாப்பு தொண்டர் படையை பிரதமர் அறிவித்தார்.

- முன்மொழியப்பட்ட இந்தப் படையானது நவீனப் பாதுகாப்பு சவால்கள் மற்றும் அவசர காலச் சூழ்நிலைகளின் போது பொதுமக்கள் பாதுகாப்பை வலுப்படுத்தும்.
- இந்தியாவின் குடிமை (சிவில்) பாதுகாப்பு அமைப்பானது 1968 ஆம் ஆண்டின் சிவில் பாதுகாப்புச் சட்டம் மற்றும் விதிகளால் நிர்வகிக்கப்படுகிறது.
- குடிமைப் பாதுகாப்பு தொண்டர்கள் அவசர காலங்களில் எச்சரிக்கை அமைப்புகள், வெளியேற்றம், மீட்பு, முதலுதவி, தீயணைப்பு மற்றும் முக்கியமான உள்கட்டமைப்புகளின் பாதுகாப்பு ஆகியவற்றிற்கு ஆதரவளிக்கின்றனர்.
- புதிய தொண்டர் படையானது நவீன பயிற்சி மற்றும் மேம்பட்ட அவசரகால-பதிலளிப்பு நெறிமுறைகளைப் பெறும்.
- ஊர்க்காவல் படையினர் (Home Guards) என்பது மாநிலக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஒரு தொடர்புடைய துணைப் படையாகும், மேலும் இவர்கள் காவல்துறை, சிவில் நிர்வாகம் மற்றும் பேரிடர்-பதிலளிப்புக் குழுக்களுக்கு உதவுகின்றனர்.

1 கோடி இளைஞர்களுக்கு செயற்கை நுண்ணறிவு திறன் மேம்பாடு

- ஓராண்டிற்குள் 1 கோடி (10 மில்லியன்) இந்திய இளைஞர்களுக்கு செயற்கை நுண்ணறிவு (AI) திறன்களில் பயிற்சி அளிக்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று அறிவித்தார்.
- இந்த முன்னெடுப்பானது இளைஞர்களுக்கு செயற்கை நுண்ணறிவு திறன்களை வழங்கி, வளர்ந்து வரும் தொழில்நுட்ப வாய்ப்புகளுக்கு அவர்களைத் தயார் படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- புது தில்லி செங்கோட்டையில் நடைபெற்ற 80-வது சுதந்திர தின உரையின் போது இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.
- இது சப்த தாரா கட்டமைப்பின் கீழ் தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளில் பரந்த கவனத்தை செலுத்துவதன் ஒரு பகுதியாகும்.
- பல்வேறு துறைகளில் செயற்கை நுண்ணறிவின் விரைவான விரிவாக்கத்தை அரசாங்கம் எடுத்துரைத்தது.
- இந்த முன்னெடுப்பானது இந்தியாவின் தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புச் சூழலை வலுப்படுத்துவதையும், உலகளாவிய செயற்கை நுண்ணறிவுப் பொருளாதாரத்தில் இளைஞர்கள் பங்கேற்க உதவுவதையும் நோக்கமாகக் கொண்டு உள்ளது.

2027 மக்கள் தொகை கணக்கெடுப்பு: 40 கேள்விகள்

- சாதி, ஆதார், வாக்காளர் அடையாள அட்டை, வங்கிக் கணக்குகள் மற்றும் பிற விவரங்கள் உட்பட 2027 மக்கள் தொகை கணக்கெடுப்பின் இரண்டாம் கட்டத்திற்கான 40 கேள்விகளை மத்திய அரசு அறிவித்துள்ளது.
- சுதந்திர இந்தியாவில் முதல் முறையாக, பட்டியலிடப்பட்ட சாதியினர் (SCs) மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (STs) தவிர, அனைத்து சமூகத்தினருக்கும் சாதி பதிவு செய்யப்பட உள்ளது.
- 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பில் கேட்கப்பட்ட 29 கேள்விகளுடன் ஒப்பிடச் செய்கையில், இப்புதிய வினாப்பட்டியலில் 13 புதிய கேள்விகள் சேர்க்கப் பட்டு உள்ளன.

- பெற்றோரின் விவரங்கள், வாழ்க்கைத் துணையின் பெயர், தேசியம், டிஜிட்டல் கல்வியறிவு, நிரந்தர முகவரி மற்றும் கோவிட்-19 தடுப்பூசி போடப்பட்ட இடம் ஆகியவை புதிய விவரங்களில் அடங்கும்.
- பொருந்தக்கூடிய இடங்களில் வங்கிக் கணக்குகள், அலைபேசி எண், ஆதார், வாக்காளர் அடையாள அட்டை, கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) மற்றும் ஓட்டுநர் உரிமம் ஆகிய விவரங்களும் சேகரிக்கப்படும்.
- பனி படர்ந்த பகுதிகளில் 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட்/செப்டம்பர் மாதங்களிலும், இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் 2027 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலும் மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடங்கும்.

தீர்ப்பாயங்கள் சீர்திருத்த மசோதா, 2026

- தீர்ப்பாயங்கள் சீர்திருத்த மசோதா, 2026-ஐ மக்களவை நிறைவேற்றியுள்ளது.
- பல்வேறு தீர்ப்பாயங்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் தகுதி, நியமனம் மற்றும் பணி நிபந்தனைகள், அத்துடன் தீர்ப்பாயங்களின் நிர்வாகம் மற்றும் செயல்பாடுகளில் செயல்திறனை மேம்படுத்துதல், சுதந்திரம், வெளிப்படைத்தன்மை மற்றும் சீரான தன்மையை உறுதி செய்தல் ஆகியவற்றை இம்சோதா நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும், இச்சட்டம் 'தேசிய தீர்ப்பாயங்கள் ஆணையத்தை' (NTC) அமைப்பதையும் முன்மொழிகிறது.
- இந்த ஆணையம் ஒரு தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்: இதில் இரண்டு நீதித்துறை சார்ந்த உறுப்பினர்களும், இரண்டு தொழில்நுட்பத் துறை சார்ந்த உறுப்பினர்களும் இடம்பெறுவர்.
- உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி அல்லது உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி ஒருவர் இதன் தலைவராக இருப்பார்.
- புது தில்லியைத் தலைமையிடமாகக் கொண்ட இந்த ஆணையம் (NTC), தீர்ப்பாயங்களில் உள்ள காலிப் பணியிடங்களுக்கான தேர்வு நடைமுறைகளை நடத்துதல், செயல்பாடுகளை மதிப்பாய்வு செய்தல் மற்றும் வழக்குத் தகவல்களுக்கான புதிய டிஜிட்டல் களஞ்சியத்தை நிர்வகித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் ஒரு சுதந்திரமான அமைப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- தீர்ப்பாயங்களின் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படும் முறையில் சீரான தன்மையையும் வெளிப்படைத்தன்மையையும் கொண்டுவருவதை இத்தீர்ப்பாயங்கள் சீர்திருத்த மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது.
- புதிய கட்டமைப்பின் கீழ், ஒவ்வொரு தீர்ப்பாயத்திற்கும் 'தேடல் மற்றும் தேர்வுக்கான குழுக்களை' (Search-cum-Selection Committees) இந்த ஆணையம் அமைக்கும்.
- இக்குழுக்களில் ஆணையத்தின் உறுப்பினர்கள், ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் மூத்த அரசுச் செயலாளர்கள் ஆகியோர் இடம்பெறுவர்.
- வேட்பாளர்களின் தகுதியை மதிப்பிடுவதில் இக்குழுக்களுக்கு உதவ, தொடர்புடைய துறைகளைச் சேர்ந்த நிபுணர்களை உள்ளடக்கிய குழுவை அமைப்பது இதன் ஒரு சிறப்பம்சமாகும்.
- முக்கியமாக, தீர்ப்பாயங்களில் தற்போது நிலவும் நீண்டகால காலிப்பணியிடப் பிரச்சினைகளைக் குறைக்கும் நோக்கில், பரிந்துரைகளைப் பெற்ற மூன்று

மாதங்களுக்குள் மத்திய அரசு அவற்றின் மீது நடவடிக்கை எடுத்து நியமனங்களை மேற்கொள்ள வேண்டும் என்று இம் மசோதா கட்டாயமாக்குகிறது.

- நிலைத்தன்மை மற்றும் நீதித்துறையின் சுதந்திரத்தை உறுதி செய்வதற்காக, பல்வேறு தீர்ப்பாயங்களுக்கான பணி நிபந்தனைகளை இம் மசோதா சீராக்குகிறது.
- தீர்ப்பாயத் தலைவர்கள் ஐந்து ஆண்டுகள் அல்லது 70 வயது பூர்த்தியாகும் வரை பதவியில் இருப்பார்கள் என்று இது முன்மொழிகிறது.
- அதேபோல, உறுப்பினர்கள் ஐந்து ஆண்டுகள் அல்லது 67 வயது பூர்த்தியாகும் வரை பதவியில் இருப்பார்கள்.
- பொறுப்புக் கூறலும் இதில் முக்கியக் கவனம் செலுத்தப்படும் ஒரு அம்சமாகும்.
- தீர்ப்பாயத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு எதிரான புகார்கள் மீதான விசாரணைகளை 'தேசிய தீர்ப்பாய ஆணையம்' (NTC) மேற்பார்வையிடும்.
- திவால் நிலை அல்லது ஒழுக்கக்கேடான நடத்தை போன்ற குறிப்பிட்ட குற்றங்களுக்காக அவர்களைப் பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் மத்திய அரசிடம் இருந்தாலும், முறையற்ற நடத்தை அல்லது இயலாமை ஆகிய காரணங்களுக்காகப் பதவி நீக்கம் செய்வதற்கு உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையிலான குழுவின் முறையான விசாரணை தேவைப்படுகிறது.
- தரவு இடைவெளியைக் குறைக்கும் வகையில், 'தேசிய தீர்ப்பாயத் தரவு வலைப்பின்னல்' (National Tribunals Data Grid) ஒன்றை உருவாக்க இம் மசோதா முன்மொழிகிறது.
- வருமான வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் மற்றும் தேசிய பசுமைத் தீர்ப்பாயம் போன்ற இம் மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்ப்பாயங்கள் தொடர்பான அனைத்து வழக்கு விவரங்களையும் கொண்ட ஒரு விரிவான களஞ்சியமாக இந்தப் இணையதளம் (portal) செயல்படும்.

பின்னணி

- 2026 ஆம் ஆண்டின் இந்த மசோதா, உச்ச நீதிமன்றத்தின் 2021 ஆம் ஆண்டு வழிகாட்டுதலுக்கு ஒரு சட்டரீதியான பதிலாகும். இது தீர்ப்பாய சீர்திருத்தச் சட்டம், 2021-க்கு மாற்றாகக் கொண்டு வரப்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவின் 16 தீர்ப்பாயங்களின் "செயல்திறனின்மை மற்றும் சுதந்திரமின்மை"யை உச்ச நீதிமன்றம் முன்னதாகக் குறிப்பிட்டிருந்தது.
- அதே தீர்ப்பில், குறுகிய பதவிக்காலங்கள், கட்டுப்படுத்தப்பட்ட வயது வரம்புகள் மற்றும் நியமனங்கள் மீதான கடுமையான நிர்வாகக் கட்டுப்பாடு ஆகியவை நீதித்துறை சுதந்திரத்தையும் அதிகாரப் பிரிவினையையும் மீறுவதாகக் கூறி, தீர்ப்பாய சீர்திருத்தங்கள் (முறைப்படுத்தல் மற்றும் சேவை நிபந்தனைகள்) அவசரச் சட்டம், 2021-இன் முக்கிய விதிகளை உச்ச நீதிமன்றம் ரத்து செய்தது.
- தீர்ப்பாய சீர்திருத்த மசோதா, இந்தியாவில் உள்ள நீதித்துறை சார்ந்த அமைப்புகளின் செயல்பாட்டை மறுவடிவமைக்கக்கூடும்.
- "தீர்ப்பாயங்களை நிர்வாகத் தலையீட்டிலிருந்து பாதுகாப்பதே" அரசின் நோக்கம், இதுவே மெட்ராஸ் பார் அசோசியேஷன் தீர்ப்பில் உச்ச நீதிமன்றத்தின் சட்டரீதியான வாதமாக இருந்தது.
- எல். சந்திர குமார் எதிர் இந்திய ஒன்றிய (1997) வழக்கில் வழங்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க ஏழு நீதிபதிகள் கொண்ட அமர்வின் தீர்ப்பில்கூட, தீர்ப்பாயங்களை நிர்வாகத் தலையீட்டிலிருந்து பாதுகாக்க ஒரு ஒற்றை, சுதந்திரமான ஒருங்கிணைப்பு அமைப்பின் தேவையை உச்ச நீதிமன்றம் கருத்தியல் ரீதியாக வரையறுத்தது.

- இங்கு, உயர் நீதிமன்றங்களுக்கு (சரத்து 226/227-இன் கீழ்) மற்றும் உச்ச நீதிமன்றத்திற்கு (சரத்து 32-இன் கீழ்) வழங்கப்பட்டுள்ள நீதித்துறை மறுஆய்வு அதிகாரம், இந்திய அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பின் ஒரு பிரிக்க முடியாத பகுதியாகும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- தீர்ப்பாயங்களின் நோக்கம் நீதிமன்றங்களுக்குப் பதிலாக அமைவதல்ல, மாறாக நவீன ஆட்சியில் துணை நிறுவனங்களாகச் செயல்படுவதே ஆகும்.
- விரைவான மற்றும் திறமையான நீதி வழங்கலை உறுதி செய்யும் நோக்கத்துடன், வரி விதிப்பு, நிறுவனச் சட்டம், சுற்றுச்சூழல், பங்குச் சந்தை, அறிவுசார் சொத்துரிமை மற்றும் பிற ஒழுங்குமுறைத் துறைகள் போன்ற சிறப்பு விஷயங்களை அவை கையாளுகின்றன.

புதிய 11 சர்வதேச துறைமுகங்கள்

- இந்திய அரசின் கீழ் உள்ள மத்திய உள்துறை அமைச்சகம் மேலும் 11 சர்வதேச துறைமுகங்களை அறிவித்துள்ளது.
- இதில் 9 தரைவழித் துறைமுகங்களும் 2 விமான நிலையங்களும் அடங்கும்.
- புதிதாக சேர்க்கப்பட்ட தரைவழித் துறைமுகங்கள் தர்ரங்கா, கெடே, கோஜடங்கா, ஹரிதாஸ்பூர், ஜெய்கான், டாவ்கி, மோரே மற்றும் அட்டாரி (சாலை) ஆகும், இவற்றுடன் போபால் மற்றும் திருப்பதியில் உள்ள விமான நிலையங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.
- இது மின்னணு விசாவின் நன்மையையும் பயன்பாட்டையும் மேலும் மேம்படுத்தும்.
- இந்தியா ஏறக்குறைய 95% மின்னணு விசா விண்ணப்பங்களை 72 மணி நேரத்திற்கும் குறைவான நேரத்தில் வழங்குகிறது.
- மின்னணு விசா வைத்திருக்கும் வெளிநாட்டினர் நுழைவதற்கான சர்வதேச துறைமுகங்களின் மொத்த எண்ணிக்கை இப்போது 88 ஆக உயர்ந்துள்ளது.
- இந்திய விசா நடைமுறையை, குறிப்பாக சுற்றுலா விசா நடைமுறையை தாராளமய மாக்கவும் எளிமையாக்கவும் எடுக்கப்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கை, மின்னணு விசா வசதியை அறிமுகப்படுத்தியதாகும்.
- மின்னணு பயண அங்கீகாரத்துடன் (ETA) கூடிய மின்னணு விசா வசதி, 43 நாடுகளின் குடிமக்களுக்காக 2014-ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இந்த வசதி தற்போது 172 நாடுகளைச் சேர்ந்த குடிமக்களுக்குக் கிடைக்கிறது.
- இந்தியா இப்போது சுமார் 78 சதவிகித விசாக்களை மின்னணு விசாக்களாக வழங்குகிறது.
- மலையேற்றம் மற்றும் கப்பல் பயணங்களுக்கான குழு விசாக்கள் உட்பட, 17 துணைப் பிரிவுகளின் கீழ் மின்-விசா தற்போது கிடைக்கிறது.
- பாகிஸ்தான் கடவுச்சீட்டு வைத்திருக்கும் அல்லது பாகிஸ்தான் வம்சாவளியைச் சேர்ந்த சர்வதேசப் பயணிகளுக்கு மின்-விசா வசதி இல்லாததால், அவர்கள் இந்தியத் தூதரகத்தில் வழக்கமான விசாவுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

இந்தியா முழுவதும் மின்சார வாகன மின்னேற்றும் நிலையங்கள் 2026

- இந்த ஆண்டு ஜூலை மாத நிலவரப்படி 6,805 மின்சார வாகன மின்னேற்றும் நிலையங்கள் (EVCS) நிறுவப்பட்டுள்ள நிலையில், மின்சார வாகன (EV) மின்னேற்றும் உள் கட்டமைப்பில் கர்நாடகா இந்தியாவின் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக உருவெடுத்துள்ளது.

- இது கனரகத் தொழில்கள் அமைச்சகத்தின் சமீபத்திய தரவுகளின்படி தெரிய வந்து உள்ளது.
- கர்நாடகா, மகாராஷ்டிராவை விட சற்றே பின்தங்கியுள்ளது.
- தமிழ்நாட்டில் 3,839 மின்னேற்றும் நிலையங்களும், தெலங்கானாவில் 3,739 நிலையங்களும், கேரளாவில் 3,399 நிலையங்களும் உள்ள நிலையில் ஆந்திரப் பிரதேசத்தில் 1,976 நிலையங்களும், கோவாவில் 314 நிலையங்களும் உள்ளன.
- மின்சார வாகன மின்னேற்றும் நிலையங்களை அமைப்பது உரிமம் பெறாத ஒரு செயலாகும் என்பதோடு இது, 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் மின்சார அமைச்சகம் வெளியிட்ட வழிகாட்டுதல்களின்படி, தனியார் நிறுவனங்கள் மின்னேற்றும் நிலையங்களை நிறுவ அனுமதிக்கிறது.
- 2024-ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட பிரதம மந்திரி இ-டிரைவ் திட்டம் (PM E-DRIVE Scheme), கனரகத் தொழில்கள் அமைச்சகத்தின் (MHI) ஒரு முக்கிய முன்முயற்சியாகும்.
- பிரதம மந்திரி இ-டிரைவ் திட்டத்தின் கீழ், மத்திய அமைச்சகங்கள், மத்திய பொதுத் துறை நிறுவனங்கள், மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் அவற்றின் பொதுத்துறை நிறுவனங்கள் பொது மின்னேற்றும் நிலையங்களுக்கான முன் மொழிவுகளைச் சமர்ப்பிக்கத் தகுதி பெற்றுள்ளன.
- அவர்கள் தாங்களாகவே வசதிகளை நிறுவி இயக்கலாம் அல்லது சார்ஜ் பாயிண்ட் ஆபரேட்டர்களை ஈடுபடுத்தலாம்.
- தேசிய மின்சார வாகனப் போக்குவரத்து இயக்கத் திட்டம் (NEMMP 2020), இந்தியாவில் மின்சார வாகனங்களின் பயன்பாட்டையும் உள்நாட்டு உற்பத்தியையும் விரைவு படுத்துவதற்கான ஒரு மூலோபாய வரைபடத்தை கோடிட்டுக் காட்டுகிறது.
- இது எரிசக்திப் பாதுகாப்பை வலுப்படுத்துதல் மற்றும் தூய்மையான, நிலையான போக்குவரத்தை ஊக்குவித்தல் ஆகிய இரட்டை நோக்கங்களைக் கொண்டுள்ளது.
- NEMMP 2020 கட்டமைப்பின் கீழ், மின்சார வாகனப் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக 2015-ஆம் ஆண்டில் FAME இந்தியா திட்டம் தொடங்கப்பட்டது.
- இத்திட்டம் வாங்குபவர்களுக்கு ஊக்கத்தொகைகளை வழங்கியது, சார்ஜிங் உள் கட்டமைப்பை உருவாக்குவதற்கும் உற்பத்திக்கும் ஆதரவளித்ததுடன் இதன் முதல் கட்டம் 2019 ஆம் ஆண்டு மார்ச் வரை தொடர்ந்தது, அதைத் தொடர்ந்து இரண்டாம் கட்டம் 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் வரை ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டது.
- இ-அம்ரித் கருவி ஒருவரின் இருப்பிடத்தின் அடிப்படையில் சார்ஜிங் நிலையத்தைக் கண்டறிய உதவுகிறது.

நடமாடும் உணவுப் பரிசோதனை ஆய்வகங்களுக்கான இந்தியாவின் முதல் அங்கீகாரத் திட்டம்

- இது தேசிய பரிசோதனை மற்றும் அளவுத்திருத்த ஆய்வகங்களுக்கான அங்கீகார வாரியத்தால் (NABL) தொடங்கப்பட்டது.
- இந்த முயற்சியானது, நம்பகமான, தர உறுதி செய்யப்பட்ட மற்றும் சர்வதேச அளவில் தரப்படுத்தப்பட்ட உணவுப் பரிசோதனை சேவைகளை சமூகங்களுக்கு அருகிலேயே கிடைக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- நம்பகமான, தர உறுதி செய்யப்பட்ட மற்றும் சர்வதேச அளவில் தரப்படுத்தப்பட்ட பரிசோதனை சேவைகளை நடமாடும் உணவுப் பரிசோதனை ஆய்வகங்கள் சமூகங்களுக்கு அருகிலேயே வழங்குவதற்கான ஒரு கட்டமைப்பை இது நிறுவுகிறது.
- இது உணவுப் பாதுகாப்பு கண்காணிப்பை வலுப்படுத்தும், தரப் பரிசோதனைக்கான அணுகலை மேம்படுத்தும், விரைவான ஒழுங்குமுறைத் தலையீடுகளை ஆதரிக்கும் மற்றும் நுகர்வோர் நம்பிக்கையை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- NABL என்பது இந்திய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ், தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையின் (DPIIT) கீழ் அமைக்கப் பட்ட ஒரு தன்னாட்சி அமைப்பான இந்தியத் தரக் கவுன்சிலின் (QCI) ஓர் அங்கத்துவ வாரியமாகும்.
- இது இந்தியாவில் உள்ள இணக்க மதிப்பீட்டு அமைப்புகளுக்கு (ஆய்வகங்களுக்கு) அங்கீகார சேவைகளை வழங்குகிறது.
- இந்தியாவில், NABL அங்கீகாரம் என்பது பொதுவாக பல்வேறு அரசு/ ஒழுங்குமுறை/ சட்டரீதியான அமைப்புகளின் அங்கீகாரங்களுக்கு முன்னோடியாக உள்ளது.

உதர சக்தி பயிற்சி 26

- இந்திய விமானப்படை மற்றும் ராயல் மலேசிய விமானப்படை ஆகியவை மலேசியாவின் சுபாங் விமானப்படை தளத்தில் 'உதாரா சக்தி 2026' (Udara Shakti 2026) என்ற இருதரப்புப் பயிற்சியை மேற்கொண்டு வருகின்றன.
- இந்தியாவின் ரஃபேல் (Rafale) போர் விமானங்கள் முதன்முறையாக இப்பயிற்சியில் பங்கேற்பது இதன் சிறப்பம்சமாகும்.
- மலேசியாவின் Su-30MKM ரக விமானங்களின் பயன்பாடு காரணமாக, இந்தியா மற்றும் மலேசியா இடையே கூடுதல் பாதுகாப்பு-தொழில்துறைத் தொடர்பு உள்ளது.
- விமானத்திலிருந்து ஏவக் கூடிய பிரம்மோஸ் (BrahMos) சூப்பர்சோனிக் ஏவுகணை மீதும் மலேசியா ஆர்வம் காட்டியுள்ளது.
- இந்தியா ஏற்கனவே தரைவழியாக ஏவப்படும் பிரம்மோஸ் அமைப்பை பிலிப்பைன்ஸுக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

இப்பயிற்சி குறித்த விவரங்கள்:

- இது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் பயிற்சியாகும்.
- இதன் அனைத்துப் பதிப்புகளும் மலேசியாவிலேயே நடத்தப்பட்டுள்ளன.

'மைத்ரி' பயிற்சி 2026

- 'மைத்ரி' பயிற்சியின் இந்த ஆண்டுப் பதிப்பிற்காக, இந்திய ராணுவம் ஒரு படை அணியை இந்த மாத இறுதியில் தாய்லாந்திற்கு அனுப்பவுள்ளது.
- 'மைத்ரி' என்பது இந்தியாவாலும் தாய்லாந்தாலும் மாறி மாறி நடத்தப்படும் ஒரு இரு தரப்புப் பயிற்சியாகும்.
- இதற்கு முந்தைய 14-வது பதிப்பு, கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் மேகாலயாவின் உம்ரோயில் உள்ள கூட்டுப் பயிற்சி மையத்தில் நடைபெற்றது.

- இந்த ஆண்டுப் பயிற்சி தாய்லாந்தில் நடைபெறவுள்ளது; இது மாறி மாறி நடத்தப்படும் இப்பயிற்சி முறையின் வெளிநாட்டுப் பயணப் பகுதியைக் குறிக்கிறது.
- தென்கிழக்கு ஆசிய நாடொன்றுடன் இந்தியா நீண்ட காலமாக நடத்தி வரும் ராணுவப் பயிற்சிகளில் 'மைத்ரி' பயிற்சியும் ஒன்றாகும்.

அறிவிக்கப்பட வேண்டிய நோய் - புற்றுநோய்

- புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து நோயாளிகளுக்கு உரிய சிகிச்சை அளிப்பதற்காக, அதனை அறிவிக்கப்பட வேண்டிய நோயாக அறிவிக்குமாறு 19 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- 36 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் 17 மாநிலங்கள் ஏற்கனவே புற்றுநோயை அறிவிக்கப்பட வேண்டிய நோயாக அறிவித்துள்ளன என்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டதை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
- நாடு முழுவதும் புற்றுநோயை அறிவிக்கப்பட வேண்டிய நோயாக அறிவிக்கக் கோரி தொடரப்பட்ட பொதுநல வழக்கின் (PIL) அடிப்படையில் இந்த வழக்கு விசாரிக்கப் பட்டது.
- அறிவிக்கப்பட வேண்டிய நோயாக அறிவிக்கப்படுவதன் மூலம், புற்றுநோய் பாதிப்புகள் குறித்து சுகாதார அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட வேண்டும், இது தரவு சேகரிப்பு மற்றும் கண்காணிப்பை மேம்படுத்த உதவும்.
- அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கும் ஏன் கட்டாய வழி காட்டுதல்கள் வழங்கப்படவில்லை என்றும் மத்திய அரசிடம் உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.
- நாடு முழுவதும் புற்றுநோயை அறிவிப்பதில் ஒரே மாதிரியான கொள்கை தேவை என்பதை நீதிமன்றம் வலியுறுத்தியது.
- காசநோய், டெங்கு, மலேரியா, காலரா, ஹெபடைடிஸ், தட்டம்மை, லெப்டோஸ்பைரோசிஸ் மற்றும் போலியோ ஆகியவை பொதுவாக அறிவிக்கப்பட வேண்டிய நோய்களில் அடங்கும்.

இந்தியாவின் வேளாண்மைப் பொருளாதாரத்தின் விரிவாக்கம்

- கடந்த பத்தாண்டுகளில், அதிகரித்த விவசாய உற்பத்தி, விவசாயிகளுக்கான கூடுதல் ஆதரவு, நிறுவன ரீதியிலான கடன் வசதிகள் எளிதாகக் கிடைத்தல் மற்றும் தொழில் நுட்பம் மற்றும் நிலையான விவசாய முறைகளை அதிகளவில் பின்பற்றுதல் ஆகியவற்றின் மூலம் இந்தியாவின் விவசாயம் மற்றும் அது சார்ந்த துறைகள் குறிப்பிடத் தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளன.
- இந்தியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழும் விவசாயத் துறை, நாட்டின் மொத்தப் பணியாளர்களில் சுமார் 46.1 சதவீதத்தினருக்கு வாழ்வாதாரத்தை வழங்குகிறது.
- விவசாயம் மற்றும் அது சார்ந்த துறைகளின் 'மொத்த மதிப்பு கூடுதல்' (Gross Value Added) மதிப்பானது, 2014-15-ஆம் ஆண்டில் ரூ. 20.94 லட்சம் கோடியாக இருந்த நிலையில் இருந்து, 2025-26-ஆம் ஆண்டில் ரூ. 52.08 லட்சம் கோடியாக (மதிப்பீடு) உயர்ந்துள்ளது.
- அதேபோல, விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத் துறைக்கான நிதிநிலை ஒதுக்கீடும் 2013-14-ஆம் ஆண்டில் ரூ. 27,663 கோடியாக இருந்ததிலிருந்து, 2026-27-ஆம் ஆண்டில் ரூ. 1,40,528.78 கோடியாக அதிகரித்துள்ளது.

அதிக உற்பத்தியை அறுவடை செய்தல்

- மூன்றாவது முன்கூட்டிய மதிப்பீடுகளின்படி, 2013-14-ஆம் ஆண்டில் 265.05 மில்லியன் டன்னாக இருந்த உணவு தானிய உற்பத்தி, 2025-26-ஆம் ஆண்டில் 376.56 மில்லியன் டன்னாக அதிகரித்துள்ளது.
- இதே காலக் கட்டத்தில், தோட்டக்கலை உற்பத்தி 280.70 மில்லியன் டன்னிலிருந்து 377.78 மில்லியன் டன்னாக (மதிப்பீடு) உயர்ந்துள்ளது.
- அதேவேளையில், எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி 2014-15-ஆம் ஆண்டில் 27.51 மில்லியன் டன்னிலிருந்து 2025-26-ஆம் ஆண்டில் 43.06 மில்லியன் டன்னாக அதிகரித்து உள்ளது.
- PM-KISAN போன்ற திட்டங்கள் மூலம் விவசாயிகளுக்கான நேரடி ஆதரவும் விரிவு படுத்தப்பட்டுள்ளது.
- பிரதான் மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் (Pradhan Mantri Fasal Bima Yojana) கீழ், 2016-17-ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 92.46 கோடிக்கும் அதிகமான விவசாயிகளின் விண்ணப்பங்களுக்குக் காப்பீடு அளிக்கப்பட்டுள்ளது.
- பால் உற்பத்தியில் இந்தியா உலக அளவில் முன்னணியில் உள்ளது; உலகளாவிய உற்பத்தியில் ஏறக்குறைய 25 சதவீதப் பங்கை இந்தியா கொண்டுள்ளது.
- கோழி மற்றும் இறைச்சி உற்பத்தியும் அதிகரித்துள்ளது; முட்டை உற்பத்தியில் உலக அளவில் இந்தியாவும் இரண்டாவது இடத்தையும், இறைச்சி உற்பத்தியில் நான்காவது இடத்தையும் வகிக்கிறது.

கடுகு மரபணு வளங்களுக்கான NBA நிதி

- தேசியப் பல்லுயிர் ஆணையம் (NBA), மெஸ்ஸர்ஸ் பயோனியர் ஓவர்சீஸ் பெரு நிறுவனத்திடமிருந்து அணுகல் மற்றும் பயன் பகிர்வு (ABS) மூலம் நிதியை விடுவித்து உள்ளது.
- பயோனியர் ஓவர்சீஸ் பெருநிறுவனமானது, இந்தியாவின் உயிரியல் வளங்களைப் பயன்படுத்தி பத்து வணிகரீதியான கடுகு (பிராசிகா ஜுன்சியா) கலப்பின வகைகளை உருவாக்கியுள்ளது.
- ஒவ்வொரு மாநிலத்திலும் கடுகு சாகுபடி செய்யப்படும் பரப்பளவின் அடிப்படையில் ABS பங்கு கணக்கிடப்பட்டுள்ளது.
- இந்த செயல்முறையானது, நகோயா நெறிமுறை மற்றும் குன்மிங்-மான்ட்ரியல் உலகளாவியப் பல்லுயிர் தன்மை கட்டமைப்பின் இலக்கு 13 ஆகியவற்றின் கீழ் உள்ள நியாயமான மற்றும் சமமான பயன் பகிர்வுக் கொள்கையுடன் ஒத்துப் போகிறது.
- இந்தியாவின் கடுகு சாகுபடியில் ஏறக்குறைய 42 சதவீதம் ராஜஸ்தானில் உள்ளது.
- இதுவே அதிகபட்ச பயனைப் பெறுகிறது.
- இதனைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசம் மற்றும் மத்தியப் பிரதேசம் உள்ளன.

8வது பிரிக்ஸ் (BRICS) கடல் மற்றும் துருவப் பகுதி அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் கூட்டம்

- 2026-ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் பிரிக்ஸ் தலைமைத்துவத்தின் ஒரு பகுதியாக, கடல் மற்றும் துருவப் பகுதி அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் (OPST) குறித்த பிரிக்ஸ் பணிக்குழுவின் 8-வது கூட்டம் கோவாவில் நடைபெற்றது.

- இக்கூட்டத்தைப் புவி அறிவியல் அமைச்சகத்தின் (MoES) கீழ் இயங்கும் தேசிய துருவ மற்றும் கடல் ஆராய்ச்சி மையம் (NCPOR) நடத்தியது.
- கடல்சார் அறிவியல் மற்றும் துருவப் பகுதி ஆய்வுகளில் ஒத்துழைப்பை மேற்கொள்வதற்கான நடுத்தர கால (5 ஆண்டுகள்) செயல் திட்டம் குறித்து 11 உறுப்பு நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இதில் விவாதித்தனர்.
- உறுப்பு நாடுகளுக்கு இடையே அறிவியல் ஒத்துழைப்பு, அறிவுப் பரிமாற்றம், திறன் மேம்பாடு மற்றும் கூட்டு ஆராய்ச்சியை ஊக்குவிப்பதற்காக 2018-ஆம் ஆண்டில் இந்த பிரிக்ஸ் OPST பணிக்குழு நிறுவப்பட்டது.

2026 ஆம் ஆண்டு வரைவு SHANTI விதிகள்

- அணுசக்தித் துறையானது 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 அன்று நிலையான பயன்பாடு மற்றும் அணுசக்தி மேம்பாடு (SHANTI) வரைவு விதிகள், 2026-ஐ வெளியிட்டது.
- வரைவு விதிகளானது அணுசக்திப் பொறுப்பு, காப்பீடு மற்றும் அணு உலை இயக்குநர்களின் நிதிப் பாதுகாப்பு ஆகியவற்றுக்கான தேவைகளை அமைக்கின்றன.
- அணுசக்திப் பொருட்களைக் கொண்டு செல்லும் போது ஏற்படும் சேதம் உட்பட, அணுசக்தி சேதத்திற்கு உலை இயக்குநர்கள் கடுமையான, தவறற்ற பொறுப்பைக் கொண்டிருப்பார்கள்.
- சேமிப்புக் குளங்களில் இருந்து பயன்படுத்தப்பட்ட எரிபொருள் அகற்றப்படும் வரை நிதிப் பாதுகாப்பு செல்லுபடியாகும்.
- இந்த விதிகள் வெளிநாட்டு உலை தொழில்நுட்பம், பயன்பாட்டு மின்சாரம், ஹைட்ரஜன் உற்பத்தி, செயல்முறை வெப்பம் மற்றும் மருத்துவ ஐசோடோப்பு உற்பத்தி ஆகியவற்றையும் உள்ளடக்கியது.

கனிமத் தொகுதிகளுக்கான மின்னணு-ஏலம்

- முக்கியமான மற்றும் உத்திசார் கனிமத் தொகுதிகளின் 8வது தவணை ஏலத்திற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியை சுரங்க அமைச்சகம் பீகார் மாநிலம் பாட்னாவில் நடத்தியது.
- இந்தத் தவணையானது ஒன்பது மாநிலங்களில் உள்ள 20 கனிமத் தொகுதிகளை உள்ளடக்கியது, இதில் 3 சுரங்க குத்தகைகள் மற்றும் 17 கலப்பு உரிமங்கள் அடங்கும்.
- கிராஃபைட், அரிய பூமி தனிமங்கள், லித்தியம், வெனடியம், காலியம், டைட்டானியம் மற்றும் டங்ஸ்டன் போன்ற உயர் தொழில்நுட்ப மற்றும் உத்திசார் தொழில்களுக்கு முக்கியமான கனிமங்கள் இதில் அடங்கும்.
- சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1957 இன் கீழ் மின்னணு-ஏல முறை மூலம் இந்த ஏலம் 2026 ஆம் ஆண்டு ஜூலை 15 அன்று தொடங்கப்பட்டது.
- சுரங்கக் குத்தகை என்பது கனிமங்களை வெட்டியெடுக்க அனுமதிக்கிறது, அதே சமயம் கலப்பு உரிமம் என்பது மேலதிக ஆய்வு தேவைப்படும் பகுதிகளுக்கான சுரங்கக் குத்தகையுடன் ஆய்வு உரிமைகளையும் இணைக்கிறது.

மின்சாரத் துறைக்கான இணையப் பாதுகாப்பு விதிகள் 2026

- மத்திய மின்சார ஆணையமானது (CEA) 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் கீழ் 2026 ஆம் ஆண்டு மின்சாரத் துறை இணையப் பாதுகாப்பு விதிமுறைகளை அறிவித்து உள்ளதுடன் இது 2027 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் நடைமுறைக்கு வருகிறது.
- இந்த விதிகள், 50 மெகாவாட் (MW) அல்லது அதற்கு மேற்பட்ட கொள்ளளவு கொண்ட மின்சார உற்பத்தி நிலையங்கள், சொந்த மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் ஆற்றல் சேமிப்பு அமைப்புகள், அத்துடன் மின்சாரப் பரிமாற்றகங்கள் மற்றும் நேரடி வர்த்தகத் தளங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளன.
- கணினி பாதுகாப்பு நிகழ்வு மறுமொழி குழு-மின்சாரம் (CSIRT-Power) என்பது இதன் ஒருங்கிணைப்பு முகமையாகும், மேலும் இணையச் சம்பவங்கள் குறித்து இந்திய கணினி அவசர கால மறுமொழி குழுவிற்கும் (CERT-In) தெரிவிக்கப்பட வேண்டும்.
- பொதுவான இணையச் சம்பவங்கள் குறித்து ஆறு மணி நேரத்திற்குள்ளும், முக்கியமான அமைப்புகளின் மீதான இணைய நாசவேலைகள் குறித்து 24 மணி நேரத்திற்குள்ளும் தெரிவிக்கப்பட வேண்டும்.
- தகவல் தொழில்நுட்ப (IT) அமைப்புகளில் இருந்து செயல்பாட்டு தொழில்நுட்ப (OT) அமைப்புகளைப் பிரித்து வைத்திருக்கவும், மின்சாரத் துறை சார்ந்த முக்கிய தரவுகளை இந்தியாவிற்குள்ளேயே பாதுகாப்பாகச் சேமித்து வைக்கவும் இந்த விதிகள் கோருகின்றன.

ஹர் கர் ஜல் மைல்கல்

- ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் 2 லட்சத்திற்கும் அதிகமான கிராமங்கள் 'ஹர் கர் ஜல்' (Har Ghar Jal) சான்றிதழ் பெற்றவையாக அறிவிக்கப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு கிராமப்புற வீட்டிற்கும் பாதுகாப்பான மற்றும் போதுமான குடிநீரை வழங்குவதற்காக 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று ஜல் ஜீவன் திட்டம் தொடங்கப் பட்டது.
- இத்திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து குழாய் மூலம் குடிநீர் இணைப்பு பெற்ற கிராமப்புற வீடுகளின் எண்ணிக்கை 3.23 கோடியில் இருந்து 15.91 கோடியாக அதிகரித்துள்ளது.
- இந்த திட்டத்தின் கீழ் 12.68 கோடிக்கும் அதிகமான கூடுதல் கிராமப்புற வீடுகள் குழாய் மூலம் குடிநீர் இணைப்புகளைப் பெற்றுள்ளன.
- ஜல் சக்தி அமைச்சகத்தின் கூற்றுப்படி, இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட போது 16.7% ஆக இருந்த இதன் பரவல் தற்போதுள்ள நிலைக்கு அதிகரித்துள்ளது.

ஜல் ஜீவன் திட்டத்தின் முன்னேற்றம்

- ஜல் ஜீவன் திட்டம் (JJM) ஏழு ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது, மேலும் ஊரகப் பகுதிகளில் குழாய் வழி குடிநீர் இணைப்பு வசதி 2019 ஆம் ஆண்டில் 16.72 சதவீதத்தில் இருந்து 2026 ஆம் ஆண்டில் 82.24 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- தற்போது 15.91 கோடிக்கும் அதிகமான ஊரகக் குடும்பங்கள் குழாய் வழி குடிநீர் இணைப்புகளைப் பெற்றுள்ளன, இதில் 2019 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்ட 12.68 கோடி புதிய இணைப்புகளும் அடங்கும்.

- 1.01 லட்சம் கிராம ஊராட்சிகளுடன், 2.04 லட்சம் கிராமங்கள் ஹர் கர் ஜல் (HGJ - அனைத்து வீடுகளுக்கும் குடிநீர்) என சான்றளிக்கப்பட்டுள்ளன.
- மேலும், இத்திட்டத்தின் மூலம் 9.34 லட்சம் பள்ளிகள் மற்றும் 9.73 லட்சம் அங்கன்வாடி மையங்களுக்கும் குழாய் வழி குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- ஜல் ஜீவன் திட்டம் 2.0-ஆனது, முறையான சேவைகளை வழங்குதல், நீர் ஆதார நிலைத் தன்மை, மக்கள் பங்கேற்பு மற்றும் நீண்டகாலச் செயல்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்தும்.
- மத்திய அரசு ஜல் ஜீவன் இயக்கத்தை 2028 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை நீட்டித்து உள்ளது.

இந்தியாவின் எருமை இறைச்சி ஏற்றுமதி

- 2025–26 ஆம் ஆண்டில் இந்தியாவின் எருமை இறைச்சி ஏற்றுமதி 25.6% உயர்ந்து 5.1 பில்லியன் டாலரை எட்டியுள்ளதுடன் இது நாட்டின் சிறந்த வேளாண் ஏற்றுமதிப் பொருளாக மாறியுள்ளது.
- 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலத்தில் ஏற்றுமதி 66.6% உயர்ந்து கிட்டத்தட்ட 1.5 பில்லியன் டாலராக இருந்தது, சராசரி மதிப்பு டன் ஒன்றுக்கு $4,392 ஆக உயர்ந்தது.
- வியட்நாம் மற்றும் மலேசியாவுடன் எகிப்து, உஸ்பெகிஸ்தான், இந்தோனேசியா, ஈராக் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளும் முக்கிய கொள்முதல் நாடுகளாக மாறியதன் மூலம் ஏற்றுமதி சந்தைகள் பன்முகப்படுத்தப்பட்டுள்ளன.
- இந்தியாவில் ஏற்றுமதிக்காக APEDA-ஆல் அங்கீகரிக்கப்பட்ட 83 ஒருங்கிணைந்த இறைச்சிக் கூடங்கள் மற்றும் இறைச்சி பதப்படுத்தும் ஆலைகள் உள்ளன.
- எருமை இறைச்சியானது ஏற்றுமதி, வயதான, மலட்டுத்தன்மை கொண்ட அல்லது குறைந்த பால் தரும் எருமைகளுக்குச் சந்தையை வழங்குவதன் மூலம் பால் பண்ணைத் துறைக்கு ஆதரவு அளிப்பதுடன் இது விவசாயிகள் அவற்றை மாற்றி உற்பத்தி திறன் கொண்ட விலங்குகளை வாங்க உதவுகிறது.

கர்நாடக மாநிலம் மற்றும் பிறர் எதிர் பிரதீக் பரசுராம்புரியா வழக்கு

- தேர்தல்களில் கணக்கில் காட்டப்படாத பணத்தைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்தும் வகையில், கர்நாடக மாநிலம் மற்றும் பிறர் எதிர் பிரதீக் பரசுராம்புரியா வழக்கில் உச்ச நீதிமன்றம் வழிகாட்டுதல்களை வழங்கியது.
- கர்நாடகாவின் பல்லாரியில் 2014 ஆம் ஆண்டில் நடைபெற்ற மக்களவை இடைத் தேர்தலில் பிரதீக் பரசுராம்புரியாவிடமிருந்து ₹20.48 லட்சம் ரொக்கம் மற்றும் பிற பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதிலிருந்து இவ்வழக்கு உருவானது.
- தேர்தல் தொடர்பான ரொக்கம் அல்லது சொத்து பறிமுதல் செய்யப்பட்டால், அதற்கான எழுத்துப்பூர்வ காரணங்களுடன் 24 மணி நேரத்திற்குள் மாவட்ட ஆட்சியர் (DM), கூடுதல் மாவட்ட ஆட்சியர் (ADM) அல்லது தகுதியான நீதிமன்றத்திடம் தெரிவிக்கப் பட வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.
- ₹10 லட்சத்திற்கும் அதிகமான ரொக்கத்தைக் கண்டறியும் நிலையான கண்காணிப்புக் குழுக்கள் (SST) உடனடியாக வருமான வரித்துறை அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டும்.

- தேர்தல் தொடர்பான குற்றங்கள் குறித்த விசாரணைகள் ஒரு வருடத்திற்குள் முடிக்கப்பட வேண்டும்; தாமதங்கள் பதிவு செய்யப்பட்டு, காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் மூலம் இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு (ECI) தெரிவிக்கப்பட வேண்டும்.
- வேட்பாளர்களுக்கு எதிரான தேர்தல் தொடர்பான குற்றவியல் வழக்குகளைத் திரும்பப் பெறுவதற்கு முன் உயர் நீதிமன்ற ஒப்புதல் கட்டாயமாகும், மேலும் இது போன்ற வழக்குகளை விரைவாகத் தீர்க்க சிறப்பு நீதிமன்றங்களை அமைக்குமாறு உயர் நீதிமன்றங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
- 2026 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் தேதிக்குள் இணக்க அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு இந்தியத் தேர்தல் ஆணையம் மற்றும் மாநில அரசுகளுக்கு உத்தரவிடப் பட்டது.

PNG இணைப்பு ஊக்குவிப்பு திட்டம்

- இந்தியா முழுவதும் உள்நாட்டு குழாய்வழி இயற்கை எரிவாயு (PNG) இணைப்புகளை விரைவுபடுத்துவதற்கான ஊக்குவிப்பு திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்து உள்ளது.
- இத்திட்டம் 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 1 ஆம் தேதி முதல் தொடங்கப்பட்டு, நகர எரிவாயு விநியோக (CGD) நிறுவனங்கள் மூலம் வீடுகளுக்கான PNG இணைப்புகளை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவில் தற்போது 1.74 கோடி அளவிலான உள்நாட்டு PNG இணைப்புகள் உள்ளன.
- தகுதியான CGD நிறுவனங்கள், பகுதி சார்ந்த வரம்பிற்கு மேல் வழங்கப்படும் ஒவ்வொரு கூடுதல் கட்டண இணைப்பிற்கும் குறைந்த விலையிலான உள்நாட்டில் நிர்வகிக்கப் படும் விலை முறை (APM) எரிவாயுவில் கூடுதலாக 200 தரநிலை கன மீட்டர்களை (SCM) பெறும்.
- இத்திட்டம் இரண்டு கட்டங்களாக தலா ஆறு மாதங்களுக்கு செயல்படுத்தப்படும் என்பதோடு மேலும் PNG இணைப்புகளுக்கான முதலீட்டை திரும்பப் பெறும் காலத்தை சுமார் 10 ஆண்டுகளில் இருந்து சுமார் 3 ஆண்டுகளாகக் குறைக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- தேசிய PNG திட்டம் 2.0, விரைவான ஒப்புதல்கள், தரப்படுத்தப்பட்ட வழி உரிமை (RoW) கட்டணங்கள் மற்றும் புதிய PNG இணைப்புகளுக்கான ஒருங்கிணைந்த டிஜிட்டல் தளம் ஆகியவை பிற நடவடிக்கைகளில் அடங்கும்.

2027 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு மாற்றுத்திறனாளிகள் பிரிவுகள்

- 2016 ஆம் ஆண்டின் மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் (RPwD) சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப் பட்ட அனைத்து 21 குறைபாடுகளையும் தனித்தனியாக பதிவு செய்வதற்குப் பதிலாக, 2027 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு வினாத்தாள் 9 பரந்த குறைபாடு வகைகளை மட்டுமே முன்மொழிகிறது என்று மாற்றுத் திறனாளிகள் உரிமை குழுக்கள் கவலை தெரிவித்துள்ளன.
- பார்வை, செவித்திறன், பேச்சு, இயக்கம், அறிவுசார் குறைபாடு, மனநல பாதிப்பு, அமிலத் தாக்குதல், நாள்பட்ட நரம்பியல் நோய் மற்றும் இரத்தக் கோளாறு ஆகியவை முன்மொழியப்பட்ட வகைகளில் அடங்கும்.
- 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பானது ஆறு குறைபாடு வகைகளின் அடிப்படையில் இந்தியாவின் மக்கள் தொகையில் 2.21% ஆக உள்ள 2.68 கோடி மாற்றுத் திறனாளிகளைப் பதிவு செய்தது.

- 2016 ஆம் ஆண்டின் RPwD சட்டமானது ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம் குறைபாடு, குறிப்பிட்ட கற்றல் குறைபாடு, குள்ளத்தன்மை மற்றும் பல குறைபாடுகள் உட்பட அங்கீகரிக்கப் பட்ட குறைபாடுகளை 7-இல் இருந்து 21 ஆக விரிவுபடுத்தியது.
- இந்த ஒன்பது வகைகளும் குறிப்பிட்ட குறைபாடுகளை உள்ளடக்கிய பரந்த குழுக்கள் என்றும், தீவிரத்தின் அடிப்படையில் மூன்று குறைபாடுகள் வரை பதிவு செய்ய வினாத் தாள் அனுமதிக்கிறது என்றும் இந்திய தலைமைப் பதிவாளர் அலுவலகம் (ORGI) தெரிவித்துள்ளது.

மரண தண்டனை குறித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

- மரண தண்டனையை நிறைவேற்றும் முறையாக தூக்கிலிடுவதன் அரசியலமைப்பு செல்லுபடியாகும் தன்மையை உச்ச நீதிமன்றம் நிலைநிறுத்தியுள்ளது, இது சரத்து 21 அல்லது கண்ணியத்திற்கான உரிமையை மீறவில்லை என்று தீர்ப்பளித்துள்ளது.
- தூக்கிலிடுவதை நிலைநிறுத்திய தீனா மற்றும் இந்திய ஒன்றியம் வழக்கு (Deena v. Union of India) இடையேயான 1983 ஆம் ஆண்டு தீர்ப்பை நீதிமன்றம் சுட்டிக் காட்டி உள்ளது, மேலும் பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதாவின் (BNSS) பிரிவு 393(5)-இன் கீழ் நாடாளுமன்றம் தூக்கிலிடுவதைத் தக்க வைத்துள்ளதையும் குறிப்பிட்டுள்ளது.
- மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளுக்கு தண்டனை நிறைவேற்றப்படும் போது கூட அரசியலமைப்பு பாதுகாப்பு தொடர்கிறது என்றும், நீண்ட-துளி (long-drop) முறையானது கண்ணியத்துடன் மற்றும் மிருகத்தனம் அல்லது சீரழிவு இல்லாமல் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- சட்ட ஆணையத்தின் 187 வது அறிக்கை (2003) ஒரு மாற்று முறையாக கொடிய ஊசியை (lethal injection) பரிந்துரைத்தது, ஆனால் அத்தகைய பரிந்துரைகள் நாடாளுமன்றத்தை கட்டுப்படுத்தாது என்று நீதிமன்றம் குறிப்பிட்டது.
- முந்தைய தீனா வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையை புதிய அறிவியல் அல்லது அனுபவ சான்றுகள் அடிப்படையில் மாற்றினால், எதிர்கால மறுபரிசீலனைக்கு இந்த சிக்கலை நீதிமன்றம் திறந்து வைத்துள்ளது.

'தொழில்துறை' வரையறை – உத்தரப் பிரதேச மாநிலம் Vs ஜெய் பிர் சிங் வழக்கு

- தொழிலாளர் சட்டத்தின் கீழ் "தொழில்துறை" (industry) என்பதன் பொருள் குறித்து, தலைமை நீதிபதி சூர்ய காந்த் தலைமையிலான ஒன்பது நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு 5:4 என்ற விகிதத்தில் தீர்ப்பளித்துள்ளது.
- பெங்களூர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியம் எதிர் ஆர். ராஜப்பா (1978) வழக்கில் வழங்கப்பட்ட விரிவான விளக்கம், 2020 ஆம் ஆண்டின் தொழில்துறை உறவுகள் குறியீட்டின் (IRC) கீழ் எதிர்காலத்தில் எழும் வழக்குகளைக் கட்டுப்படுத்தாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- 1978 ஆம் ஆண்டின் தீர்ப்பு, ஒரு தொழில்துறையை அடையாளம் காண மூவகை சோதனையை (முறையான செயல்பாடு, முதலாளி-தொழிலாளி ஒத்துழைப்பு மற்றும் பொருட்கள் அல்லது சேவைகளின் உற்பத்தி அல்லது விநியோகம்) பயன்படுத்தியது.
- தொழில்துறை தகராறுகள் சட்டம், 1947 இன் கீழ் நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு 1978 ஆம் ஆண்டின் விளக்கம் தொடரும், அதே நேரத்தில் IRC, 2020 இன் கீழ் எதிர்கால வழக்குகளுக்குப் புதிய கட்டமைப்பு பின்பற்றப்படும்.

- IRC, 2020 இன் கீழ் "தொழில்துறை" என்பதற்கான வரையறை 1978 ஆம் ஆண்டின் தீர்ப்பின் அடிப்படையில் இல்லாமல், முற்றிலும் புதிதாக விளக்கப்பட வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- தொழில்துறை உறவுகள் குறியீடு, 2020 என்பது 29 மத்திய தொழிலாளர் சட்டங்களை ஒருங்கிணைத்த நான்கு தொழிலாளர் குறியீடுகளில் ஒன்றாகும்.

புதிய பாதுகாப்பு உள்நாட்டுமயமாக்கல் பட்டியல்

- ₹3,070 கோடி மதிப்பிலான வணிகத் திறனைக் கொண்ட, உத்திசார் ரீதியாக முக்கியமான 405 பாதுகாப்பு உபகரணங்களை உள்ளடக்கிய 6-வது நேர்மறையான உள்நாட்டுமயமாக்கல் பட்டியலை (PIL) பாதுகாப்பு உற்பத்தித் துறை (DDP) அறிவித்து உள்ளது.
- இதில் 389 உபகரணங்கள் பாதுகாப்புப் பொதுத்துறை நிறுவனங்களுக்கானவை (DPSUs) மற்றும் 16 உபகரணங்கள் இந்தியக் கடலோரக் காவல்படைக்கானவை (ICG) ஆகும்.
- இந்தப் பட்டியலில் Su-30MKI, இலகுரக போர் விமானம் (LCA), T-72, T-90 மற்றும் போர்க் கப்பல்களில் பயன்படுத்தப்படும் வரிசை மாற்றக்கூடிய அலகுகள் (LRU), துணை அமைப்புகள், உதிரிபாகங்கள், கூறுகளும் மற்றும் மூலப்பொருட்களும் அடங்கும்.
- இந்த உபகரணங்கள் 'மேக்' நடைமுறைகள் மற்றும் உள்நாட்டு ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D) மூலம் உள்நாட்டுமயமாக்கப்படும், பின்னர் அவை இந்திய விற்பனையாளர்களிடமிருந்து, குறிப்பாக குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) மற்றும் புத்தொழில் நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படும்.
- இறக்குமதிப் பதிலீடு மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தொடங்கப்பட்ட SRIJAN பாதுகாப்பு இணையதளத்தில் இதற்கான விவரங்கள் மற்றும் காலக்கெடு கிடைக்கின்றன.

லடாக் அமர்வு

- ஒன்றியப் பிரதேசமான (UT) லடாக்கில் ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் உயர் நீதிமன்றத்தின் நிரந்தர அமர்வை அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- தற்போது இந்த உயர் நீதிமன்றம் ஸ்ரீநகர் மற்றும் ஜம்முவில் அமர்வுகளைக் கொண்டு உள்ளது; லடாக் அமர்வு இதன் மூன்றாவது நீதித்துறை மையமாக மாறும்.
- இந்த அமர்வு ஜம்மு அல்லது ஸ்ரீநகருக்குச் செல்வதைக் குறைப்பதன் மூலம், லடாக்கின் தொலைதூரப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு நீதிக்கான அணுகலை மேம்படுத்தும்.
- 2026 ஆம் ஆண்டு ஜூலை 30 நிலவரப்படி, உயர் நீதிமன்றத்தில் 44,557 வழக்குகள் நிலுவையில் உள்ளன, இதில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ள 6,100-க்கும் மேற்பட்ட வழக்குகளும் அடங்கும்.
- முன்னாள் ஜம்மு காஷ்மீர் மாநிலம் மறுசீரமைக்கப்பட்ட பிறகு, 2019 ஆம் ஆண்டு அக்டோபர் 31 அன்று லடாக் ஒரு ஒன்றியப் பிரதேசமாக மாறியது.
- ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் உயர் நீதிமன்றமானது, ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் ஆகிய ஒன்றியப் பிரதேசங்களுக்கான பொதுவான உயர் நீதிமன்றமாகும்.

- பம்பாய் உயர் நீதிமன்றம் மும்பையில் அதன் முதன்மை அமர்வையும், நாக்பூர், அவுரங்காபாத், பனாஜி மற்றும் கோலாப்பூர் ஆகிய இடங்களில் பிற அமர்வுகளையும் கொண்டு மொத்தம் ஐந்து மையங்களில் செயல்படுகிறது.
- அவுரங்காபாத் அமர்வு அதிகாரப்பூர்வமாக சத்ரபதி சாம்பாஜிநகர் அமர்வு என்று அழைக்கப் படுகிறது.
- பனாஜி அமர்வு கோவா மாநிலத்திற்கும், மற்ற இடங்கள் மகாராஷ்டிராவின் பல்வேறு பகுதிகளுக்கும் சேவை செய்கின்றன.
- முதன்மை அமர்விலிருந்து வெகு தொலைவில் வசிக்கும் மக்களுக்கு நீதியை எளிதில் கிடைக்கச் செய்யவே உயர் நீதிமன்ற அமர்வுகள் நிறுவப்படுகின்றன.
- 1861 ஆம் ஆண்டின் இந்திய உயர் நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழ் 1862 ஆம் ஆண்டில் பம்பாய் உயர் நீதிமன்றம் நிறுவப்பட்டது.

CAA குடியுரிமைச் செயலாக்கம்

- 2019 ஆம் ஆண்டின் குடியுரிமை திருத்தச் சட்டத்தின் (CAA) கீழ் நிலுவையில் உள்ள குடியுரிமை விண்ணப்பங்களை பரிசீலிக்க எட்டு மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களைச் சேர்ந்த மாவட்ட ஆட்சியர்களுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் (MHA) அதிகாரம் அளித்துள்ளது.
- அந்த எட்டு அதிகார வரம்புகள் குஜராத், ராஜஸ்தான், பஞ்சாப், மேற்கு வங்கம், அசாம் (பழங்குடியினர் பகுதிகள் தவிர), திரிபுரா (பழங்குடியினர் பகுதிகள் தவிர), ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் ஆகியவையாகும்.
- 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19 அன்று அறிவிக்கப்பட்ட குடியுரிமை (மூன்றாவது திருத்தம்) விதிகள், 2026 குடியுரிமைச் சட்டத்தின் பிரிவு 6B-இன் கீழ் விண்ணப்பங்களைச் செயல்படுத்த ஆட்சியர்களுக்கு அனுமதி அளிக்கிறது.
- CAA சட்டமானது பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் வங்கதேசத்தில் இருந்து 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 31 அன்று அல்லது அதற்கு முன்னதாக இந்தியாவுக்குள் நுழைந்த இந்து, சீக்கிய, பௌத்த, சமண, பார்சி மற்றும் கிறிஸ்தவ சமூகங்களை உள்ளடக்கியது.
- ஆட்சியர்கள் ஆவணங்களைச் சரிபார்க்கவும், விசாரணைகளை மேற்கொள்ளவும், விசுவாசப் பிரமாணம் செய்து வைக்கவும் மற்றும் தகுதியான விண்ணப்ப தாரர்களுக்கு குடியுரிமை வழங்கவும் முடியும்.
- நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் முந்தைய அதிகாரம் பெற்ற குழுக்கள்/மாவட்ட அளவிலான குழுக்களிடமிருந்து சம்பந்தப்பட்ட ஆட்சியர்களுக்கு மாற்றப்படும்.

ஜல் சக்தி தரவுப் பகிர்வுக் கொள்கை

- ஜல் சக்தி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் குடிநீர் மற்றும் சுகாதாரத் துறையானது தரவுப் பகிர்வு, இயங்குதன்மை மற்றும் பங்குதாரர்களின் அணுகல் தொடர்பான கொள்கையை புது தில்லியில் வெளியிட்டது.
- இந்தக் கொள்கையானது மத்திய அரசு, மாநிலங்கள், ஒன்றியப் பிரதேசங்கள், கிராம ஊராட்சிகள் மற்றும் ஊரக குடிநீர்த் துறையில் அங்கீகரிக்கப்பட்ட பங்குதாரர்களுக்கான கூட்டாட்சி தரவுப் பகிர்வு கட்டமைப்பை உருவாக்குகிறது.

- இது பாதுகாப்பான மற்றும் சுமூகமான தரவுப் பரிமாற்றத்திற்கு பொதுவான அடையாளங்காட்டிகள், தரப்படுத்தப்பட்ட மீத்தரவு (metadata), இயங்கக்கூடிய பதிவேடுகள் மற்றும் பாதுகாப்பான டிஜிட்டல் சேவைகளைப் பயன்படுத்துகிறது.
- கிராம ஊராட்சிகள் சொத்துக் கண்காணிப்பு, குறை தீர்த்தல் மற்றும் சேவைப் பொறுப்புக்கூறல் ஆகியவற்றில் பெரும் பங்கு வகிக்கும்.
- இந்தக் கொள்கையானது, நோக்கம் சார்ந்த தரவு அணுகல் மூலம் செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான பகுப்பாய்வு, புவியியல் ரீதியான திட்டமிடல், நீரின் தரக் கண்காணிப்பு மற்றும் டிஜிட்டல் ட்வின்ஸ் (Digital Twins) ஆகியவற்றை ஆதரிக்கிறது.
- இது ஊரக குடிநீர் சேவை வழங்கலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஜல் ஜீவன் திட்டம் (JJM) 2.0-இன் கீழ் உள்ள சுஜலம் பாரத் டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பின் ஒரு பகுதியாகும்.

தேசிய தொழில்முனைவோர் பிரச்சாரம்-II

- ஊரகப் பெண்களிடையே தொழில்முனைவை ஊக்குவிக்கும் நோக்கில், ஊரக வளர்ச்சி அமைச்சகமானது தீன்தயாள் அந்தியோதயா யோஜனா-தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் (DAY-NRLM) கீழ் தேசிய தொழில்முனைவோர் பிரச்சாரம்-II-ஐத் தொடங்கியது.
- விவசாயம் மற்றும் விவசாயம் சாராத துறைகளில் பெண்கள் தலைமையிலான தொழில் நிறுவனங்களை மையமாகக் கொண்ட இந்த மூன்று மாத காலப் பிரச்சாரம் 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21 முதல் நவம்பர் 21 வரை நடைபெற உள்ளது.
- இது 5 லட்சம் சுயஉதவிக் குழு (SHG) பெண்களுக்குப் பயிற்சி அளித்தல், 50,000 ஊரகத் தொழில் நிறுவனங்களை முறைப்படுத்துதல் மற்றும் தொழில் நிறுவனங்களை மேம்படுத்துவதற்காக 50,000 சமூகப் பணியாளர்களைத் தயார்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உற்பத்தியாளர் குழுக்கள் மற்றும் தொழில் நிறுவனங்களில் 2 லட்சம் உறுப்பினர்களைச் சேர்ப்பதையும், 20 லட்சம் பெண்களிடையே நிலையான வேளாண்-சுற்றுச்சூழல் நடைமுறைகளை மேம்படுத்துவதையும் இப்பிரச்சாரம் இலக்காகக் கொண்டுள்ளது.
- டிஜிட்டல் வர்த்தகத்திற்கான திறந்தவெளி வலையமைப்பு (ONDC) மற்றும் அரசு மின்னணு-சந்தை (GeM) ஆகியவற்றில் 25,000 சுயஉதவிக் குழு உறுப்பினர்களை இணைக்க இது திட்டமிட்டுள்ளது. மேலும் தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவளிக்கும் பணியாளர்கள் உத்யாம் சகிகள் என்று அங்கீகரிக்கப் படுவார்கள்.

UPI-யின் 10 ஆண்டுகள் நிறைவு

- ஒருங்கிணைந்த கட்டண இடைமுகம் (UPI) இந்தியாவில் 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25 அன்று டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையில் 10 ஆண்டுகளை நிறைவு செய்தது.
- UPI ஆனது 2016 ஆம் ஆண்டில் இந்தியத் தேசிய கொடுப்பனவுக் கழகத்தால் (NPCI) தொடங்கப் பட்டது.
- ஆண்டு UPI பரிவர்த்தனைகள் 2016-17 ஆம் நிதியாண்டில் 1.78 கோடியிலிருந்து 2025-26 ஆம் நிதியாண்டில் 24,162 கோடிக்கும் மேலாக அதிகரித்துள்ளது, இது 13,000 மடங்கு உயர்வாகும்.

- பரிவர்த்தனை மதிப்பு ₹0.07 லட்சம் கோடியில் இருந்து சுமார் ₹314 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளதுடன் இது 4,000 மடங்குக்கும் அதிகமான வளர்ச்சியாகும்.
- தற்போது ஐக்கிய அரபு அமீரகம், பிரான்ஸ், பூட்டான், இலங்கை, நேபாளம், சிங்கப்பூர், மொரிஷியஸ், கத்தார், கம்போடியா, கிரீஸ் மற்றும் மாலத்தீவு ஆகிய 11 நாடுகளில் UPI செயல்பட்டு வருகிறது.
- சர்வதேச நாணய நிதியம் (IMF) UPI-ஐ பரிவர்த்தனை அளவின் அடிப்படையில் உலகின் மிகப்பெரிய நிகழ்நேர கட்டண அமைப்பாக அங்கீகரித்துள்ளது.

இந்தியாவின் சூரிய ஒளி மின்னாற்றல் (PV) உற்பத்தித் திறன்

- இந்தியாவின் சூரிய ஒளி மின்னழுத்த (PV) தொகுதி உற்பத்தித் திறன் 100 GW-ஐ எட்டி உள்ளது, ஆனால் இது முக்கிய உதிரிபாகங்களுக்கு பெருமளவில் இறக்குமதியையே நம்பியுள்ளது.
- இந்தியாவின் தொகுதித் திறன் 2014 ஆம் ஆண்டில் 2.3 GW ஆக இருந்து 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்குள் 100 GW ஆக உயர்ந்தது, அதே நேரத்தில் 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் மின்கலத்தின் திறன் 25 GW ஆகவும், வேஃபர் (wafer) திறன் சுமார் 2 GW ஆகவும் எட்டியது.
- பாலிசிலிகானுக்கு 100% நெருக்கமாகவும், வேஃபர்களுக்கு 90% க்கும் அதிகமாகவும், மின்கலங்களுக்கு 60% க்கும் அதிகமாகவும், தொகுதிகளுக்கு 40% க்கும் அதிகமாகவும் இந்தியாவின் இறக்குமதி சார்பு உள்ளது, இதில் சீனா முக்கிய ஆதாரமாக உள்ளது.
- உற்பத்தி இணைக்கப்பட்ட ஊக்கத்தொகை (PLI) திட்டம், அங்கீகரிக்கப்பட்ட மாதிரிகள் மற்றும் உற்பத்தியாளர்களின் பட்டியல் (ALMM) மற்றும் அடிப்படைச் சுங்க வரி (BCD) ஆகியவற்றின் மூலம் உள்நாட்டு உற்பத்தியை அரசு ஆதரிக்கிறது; PLI திட்டம் 48 GW ஒருங்கிணைந்த PV உற்பத்தி திறனை வழங்கியுள்ளது.
- 2025 ஆம் ஆண்டு மார்ச் மாத நிலவரப்படி இந்தியா 106 GW நிறுவப்பட்ட சூரிய ஆற்றல் திறனைக் கொண்டிருந்தது என்ற நிலையில் மேலும் 2030 ஆம் ஆண்டிற்குள் அதன் 280 GW சூரிய இலக்கை அடைய சுமார் 174 GW-ஐ சேர்க்க வேண்டும்.
- இந்தியாவின் சூரிய ஒளி PV ஏற்றுமதி 2025 நிதியாண்டில் எட்டு மடங்கு அதிகரித்து 1.2 பில்லியன் டாலராக உயர்ந்தது, ஆனால் அதில் 97% அமெரிக்காவிற்குச் சென்றது, இது ஏற்றுமதிச் சந்தைகளை பன்முகப்படுத்த வேண்டியதன் அவசியத்தைக் காட்டுகிறது.

2027 மக்கள் தொகை கணக்கெடுப்பில் மாற்றங்கள்

- 2027 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் முதன்முறையாக பிச்சைக் காரர்கள் மற்றும் நாடோடிகள் தனிப் பிரிவாகப் பதிவு செய்யப்பட மாட்டார்கள்.
- அதற்குப் பதிலாக அவர்கள் பொருளாதாரம் அல்லாத செயல்பாட்டுப் பிரிவில் "மற்றவர்கள்" என்பதன் கீழ் சேர்க்கப்படுவார்கள்.
- 2001 ஆம் ஆண்டில் 6.3 லட்சமாகவும், 1991 ஆம் ஆண்டில் 5.4 லட்சமாகவும் இருந்த நிலையில், 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பில் சுமார் 3.8 லட்சம் பேர் மட்டுமே பிச்சைக்காரர்கள் அல்லது நாடோடிகளாக தங்களை அடையாளப்படுத்திக் கொண்டனர்.
- 2027 மக்கள் தொகை கணக்கெடுப்பு இடம்பெயர்வுக்கு ஒரு காரணமாக இயற்கை பேரிடர்களையும் சேர்க்கும்.

- பெற்றோர்கள் ஒரே வீட்டில் பட்டியலிடப்படாத நிலையில் அல்லது உயிருடன் இல்லாத போது அவர்களின் பிறந்த தேதி, பிறந்த இடம் மற்றும் மதம் ஆகியவற்றை புதிய புலங்கள் சேகரிக்கும்.
- கிடைக்கும் இடங்களில் ஆதார், வாக்காளர் அடையாள அட்டை மற்றும் பாஸ்போர்ட் / கடவுச்சீட்டு எண்கள் போன்ற விவரங்களும் சேகரிக்கப்படலாம்.

LPG குழாய் இணைப்பு வலையமைப்பு விரிவாக்கம்

- பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியம் (PNGRB) சுமார் ₹7,000 கோடி மதிப்பீட்டிலான சுமார் 1,800 கி.மீ LPG குழாய் இணைப்புகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இக்குழாய் இணைப்புகள் தெலங்கானா, மகாராஷ்டிரா, உத்தரப் பிரதேசம், உத்தரகாண்ட், கர்நாடகா மற்றும் கோவா ஆகிய மாநிலங்களை உள்ளடக்கும்.
- அரசுக்கு சொந்தமான கெயில் (GAIL) இந்தியா நிறுவனம் இத்திட்டங்களை உருவாக்கும்.
- இத்திட்டங்களில் செர்லப்பள்ளி-நாக்பூர் (556 கிமீ), ஜான்சி-சிதர்கஞ்ச் (611 கிமீ), மற்றும் சிக்ராபூர்-கோவா & ஹூப்ளி (633 கிமீ) குழாய் இணைப்புகள் அடங்கும்.
- இத்திட்டங்கள் இந்தியாவின் LPG குழாய் இணைப்பு வலையமைப்பை சுமார் 7,700 கி.மீட்டரிலிருந்து 9,500 கி.மீட்டராக உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது, இது சுமார் 24% வளர்ச்சியாகும்.

டிஜிட்டல் வலைதளம் மூலம் திரட்டப்பட்டு செயல்படும் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள்

- இந்தியாவின் குறிப்பிட்ட கால தொழிலாளர் படை கணக்கெடுப்பு (PLFS) 2026 ஆம் ஆண்டில் முதல் முறையாக டிஜிட்டல் மற்றும் வலைதளம் மூலம் திரட்டப்பட்டு செயல்படும் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள் குறித்த தனித் தரவுகளைச் சேகரிக்க வாய்ப்புள்ளது.
- இந்தக் கணக்கெடுப்பு உணவு விநியோகம் செய்யும் ஊழியர்கள், ஓட்டுநர்கள் மற்றும் வீட்டு சேவை வழங்குநர்கள் போன்ற தொழிலாளர்களை உள்ளடக்கும்.
- அவர்களது வருவாய், வேலை நேரம் மற்றும் வேலை நிலைமைகளும் பதிவு செய்யப் படும்.
- இந்தத் தரவு பரிசோதனையின் அடிப்படையில் சேகரிக்கப்படுகிறது, அதே நேரத்தில் இத்தகையத் தொழிலாளர்கள் பரந்த சுயதொழில் செய்யும் பிரிவின் கீழ் தொடர்ந்து இருப்பார்கள்.
- PLFS 2026 ஆம் ஆண்டின் முடிவுகள் 2027 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் எதிர்பார்க்கப் படுகின்றன.
- இந்தத் தரவுகள் அரசு நலத்திட்டக் கொள்கைகளை உருவாக்கவும் சமூகப் பாதுகாப்பு குறியீட்டின் விதிகளை செயல்படுத்தவும் உதவும்.

பக்கிங்ஹாம் கால்வாய் மறுசீரமைப்பு

- பக்கிங்ஹாம் கால்வாயின் மையப்பகுதியில் உள்ள 7.2 கி.மீ தொலைவை மீண்டும் நீர்வழிப் போக்குவரத்திற்கு ஏற்றதாக மாற்றுவதற்கான ₹876.35 கோடி மதிப்பிலான திட்டத்தை தமிழ்நாடு அரசு ஆய்வு செய்து வருகிறது.

- பக்கிங்ஹாம் கால்வாய் இந்தியாவின் கிழக்குக் கடற்கரையில் சுமார் 450 கி.மீ நீளத்திற்கு பாய்கிறது; இதில் ஆந்திரப் பிரதேசத்தில் 250 கி.மீ மற்றும் தமிழ்நாட்டில் 200 கி.மீ அடங்கும்.
- இது முதலில் 1806 ஆம் ஆண்டில் பசில் கோக்ரேன் என்பவரால் கட்டப்பட்டது மற்றும் ஆரம்பத்தில் கோக்ரேன் கால்வாய் என்று அழைக்கப்பட்டது.
- 1878 ஆம் ஆண்டில் அப்போதைய மெட்ராஸ் ஆளுநரான பக்கிங்ஹாம் மற்றும் சந்தோஸ் கோமகனின் பெயரால் பக்கிங்ஹாம் கால்வாய் என மறுபெயரிடப்பட்டது.
- முன்மொழியப்பட்ட நீர்வழிப் போக்குவரத்துப் பகுதி நேப்பியர் பாலத்தில் இருந்து கிரீன்வேஸ் சாலை வழியாக அடையாறு ஆறு வரை செல்லும், இதில் பயணிகள் படகுகள், மிதக்கும் உணவகங்கள் மற்றும் சரக்கு போக்குவரத்து ஆகியவை முன் மொழியப் பட்டுள்ளன.
- வடக்கு பக்கிங்ஹாம் கால்வாய் (316 கி.மீ) மற்றும் தெற்கு பக்கிங்ஹாம் கால்வாய் (110 கி.மீ) ஆகியவை 2016 ஆம் ஆண்டில் தேசிய நீர்வழிப் பாதை 4-இன் பகுதிகளாக அறிவிக்கப் பட்டன.

'வறட்சி மீள்திறனை விரைவுபடுத்துதல்' குறித்த அமைச்சர்கள் மட்டத்திலான கலந்துரையாடல்

- மங்கோலியாவின் உலான்பாத்தரில் நடைபெற்ற பாலைவனமாதலைத் தடுப்பதற்கான ஐ.நா. மாநாட்டின் (UNCCD) COP17 மாநாட்டில், உலகளாவிய வறட்சிக் கொள்கையை, பாதிப்பு ஏற்பட்ட பின்னரான பதிலளிப்பிலிருந்து, தொழில்நுட்பத்தால் செயல்படுத்தப்படும் முன்கூட்டிய தடுப்புத்திறன் கொண்ட கொள்கையாக மாற்ற வேண்டும் என இந்தியா அழைப்பு விடுத்துள்ளது.
- முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்புகள், நீர்ப்பிடிப்புப் பகுதி மறுசீரமைப்பு மற்றும் பருவநிலை மாற்றத்தைத் தாங்கக்கூடிய விவசாயம் ஆகியவற்றை வலுப்படுத்த வேண்டும் என அது நாடுகளை வலியுறுத்தியது.
- வறட்சியினால் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளில் நீர்ப்பிடிப்புப் பகுதி மறுசீரமைப்பு, பருவநிலை மாற்றத்தைத் தாங்கக்கூடிய பயிர்ச்செய்கை மற்றும் வலுவான முன் கூட்டிய எச்சரிக்கை அமைப்புகள் உள்ளிட்ட நடவடிக்கைகளை அது வலியுறுத்தியது.
- வறட்சிக்காக ஒதுக்கப்பட்ட பேரிடர் நிதிகள், வேலைவாய்ப்பு உத்தரவாதங்கள் மற்றும் அவசரகால நீர் விநியோகம் ஆகியவற்றின் மூலம் வறட்சியைத் தாங்கும் திறனுக்கு ஆதரவளிக்கப்பட வேண்டும் என்றும் அது கூறியது.
- இந்தியாவின் மொத்த சாகுபடிப் பரப்பில் சுமார் 68 சதவீதம் வறட்சி பாதிப்புக்கு உள்ளாகும் பகுதியாகும்.
- தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம் (NDMA), வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகம், மற்றும் ஜல் சக்தி அமைச்சகம் ஆகியவற்றின் வழிகாட்டுதலின்படி இது செயல்படுகிறது.
- இந்த வறட்சி எச்சரிக்கை அமைப்பானது, இந்திய வானிலை ஆய்வுத் துறை மற்றும் மகாலனோபிஸ் தேசிய பயிர் முன்னறிவிப்பு மையம் ஆகியவற்றின் விண்வெளி அடிப்படையிலான வறட்சி முன்னறிவிப்புகளாலும் ஆதரிக்கப்படுகிறது.

இந்தியாவின் புதைபடிவமற்ற எரிபொருள் மின் உற்பத்தித் திறன் 2026

- இந்தியாவின் புதைபடிவமற்ற எரிபொருள் மின் உற்பத்தித் திறன் 300 ஜிகாவாட்டைத் தாண்டியது.
- இது, 500 ஜிகாவாட் என்ற அதன் புதைபடிவமற்ற எரிபொருள் மின் உற்பத்தித் திறன் இலக்கில் 60 சதவீதமாகும்.
- புதைபடிவமற்ற எரிபொருள் திறனில் சூரிய சக்தி, காற்றாலை சக்தி, நீர்மின் சக்தி, உயிரி சக்தி மற்றும் அணு சக்தி ஆகியவை அடங்கும்.
- இதனைப் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- நாட்டின் மொத்த புதைபடிவமற்ற எரிபொருள் திறனில், சூரிய ஆற்றல் ஒரு முக்கிய வளர்ச்சி இயந்திரமாக இருந்து வருகிறது.

துறை வாரியாக

- நிறுவப்பட்ட சூரிய சக்தி திறன் 164.59 ஜிகாவாட்டாக உயர்ந்துள்ளது.
- நிறுவப்பட்ட காற்றாலை திறன் 58.14 ஜிகாவாட்டை எட்டியுள்ளது.
- தற்போது, நீர்மின் சக்தி 57.24 ஜிகாவாட் திறனையும், உயிரி சக்தி 11.75 ஜிகாவாட் திறனையும் கொண்டுள்ளது.
- அணுசக்தி மேலும் 8.78 ஜிகாவாட் திறனைக் கொண்டுள்ளது.

மக்களவை கூட்டத் தொடர் ஒத்தி வைப்பில் தாமதம்

- மழைக்கால கூட்டத்தொடரில் மக்களவை அமர்வு காலவரையின்றி ஒத்தி வைக்கப் பட்டு பத்து நாட்கள் கடந்து விட்டன, ஆனால் அதன் கூட்டத் தொடர் ஒத்தி வைப்பு (முறையான முடிவு) குறித்து இன்னும் எந்தத் தகவலும் இல்லை.
- ஆகஸ்ட் 13 அன்று மக்களவையும் மாநிலங்களவையும் அதன் அமர்வுகளில் கால வரை இன்றி ஒத்தி வைக்கப்பட்டன.
- மக்களவை அமர்வு காலவரையின்றி ஒத்தி வைக்கப்படுவதற்கும் அதன் கூட்டத் தொடர் ஒத்தி வைப்புக்கும் (முறையான முடிவு) இடையிலான கால இடைவெளி பொதுவாக இரண்டு முதல் நான்கு நாட்கள் ஆகும்.
- இருப்பினும், அமர்வு ஒத்தி வைப்பும் கூட்டத் தொடர் ஒத்தி வைப்பும் ஒரே நாளில் நடைபெற்ற பல நிகழ்வுகளும் உள்ளன.
- 2015-ஆம் ஆண்டு மழைக்கால கூட்டத்தொடருக்கான இடைவெளி 28 நாட்களாகவும், 2021-ஆம் ஆண்டில் அது 20 நாட்களாகவும் இருந்தது என்பது உண்மையே.
- அரசியலமைப்புச் சட்டத்தின் 85(2) சரத்தின் கீழ் குடியரசுத் தலைவர் பிறப்பிக்கும் உத்தரவின் மூலம் சபையின் ஒரு கூட்டத்தொடர் முடிவுக்கு வருவது கூட்டத் தொடர் ஒத்தி வைப்பு எனப்படும்.
- சபையை ஒத்தி வைக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தும்போது, குடியரசுத் தலைவர் பிரதமரின் ஆலோசனையின் பேரிலேயே செயல்படுகிறார்.
- குடியரசுத் தலைவருக்கு ஆலோசனை சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர், பிரதமர் அமைச்சரவையுடன் கலந்தாலோசிக்கலாம்.
- சபை கூட்டத்தொடரில் இருக்கும் போது கூட, எந்த நேரத்திலும் சபையின் கூட்டத் தொடர் ஒத்தி வைக்கப்படலாம்.

- இருப்பினும், வழக்கமாக, சபையின் காலவரையற்ற அமர்வு ஒத்தி வைக்கப்பட்ட பின்னரே சபையின் கூட்டத் தொடர் ஒத்தி வைக்கப்படுகிறது.
- சபையின் கூட்டத் தொடர் ஒத்தி வைக்கப்படுவதற்கும், ஒரு புதிய அமர்வில் அது மீண்டும் கூடுவதற்கும் இடைப்பட்ட காலம் 'அமர்வுகளுக்கு இடையிலான காலம்' என்று அழைக்கப் படுகிறது.
- சபையின் அமர்வை ஒத்தி வைப்பதல்ல, சபையின் கூட்டத் தொடர் ஒத்தி வைப்பு தான் ஒரு அமர்வை முறையாக நிறைவு செய்து, அடுத்த அமர்வு கூட்டப் படுவதற்கு வழி வகுக்கிறது.

இந்திய ரயில்வேயின் நான்கு வழித்தடத் திட்டம்

- ரயில்களின் திறனை அதிகரிக்கவும் நெரிசலைக் குறைக்கவும் இந்திய ரயில்வே துறை தனது உயர் அடர்த்தி வலையமைப்பில் (HDN) சுமார் 11,000 கி.மீ தூரத்தை நான்கு வழித்தடங்களாக மாற்றத் திட்டமிட்டுள்ளது.
- ஏழு உயர் அடர்த்தி வழித்தடங்கள் ஒட்டுமொத்த ரயில் போக்குவரத்தில் சுமார் 41 சதவீதத்தைக் கொண்டுள்ளன, அதே நேரத்தில் இது ரயில்வே வலையமைப்பில் சுமார் 16 சதவீதம் மட்டுமே ஆகும்.
- டெல்லி-ஹவுரா, ஹவுரா-சென்னை, சென்னை-மும்பை, மும்பை-டெல்லி, டெல்லி-சென்னை, மும்பை-ஹவுரா மற்றும் டெல்லி-கவுகாத்தி ஆகியன அந்த ஏழு வழித் தடங்கள் ஆகும்.
- இந்தியாவின் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட தானியங்கி ரயில் பாதுகாப்பு (ATP) அமைப்பான கவாச் 4.0, டெல்லி-மும்பை மற்றும் டெல்லி-ஹவுரா வழித்தடங்களில் 2,490 கி.மீ தூரத்திற்கு செயல்பாட்டுக்கு வந்துள்ளது.
- கவச் 4.0 ஆனது, மேம்படுத்தப்பட்ட தொடர்வண்டி இருப்பிடத் துல்லியம், பெரிய தொடர்வண்டிப் யார்டுகளில் மேம்பட்ட சமிக்ஞைத் தகவல் மற்றும் தற்போதுள்ள மின்னணு இடைப்பூட்டு அமைப்புகளுடன் ஒருங்கிணைப்பு ஆகியவற்றை உள்ளடக்கி உள்ளது.

2047 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவின் ஆற்றல் தேவை

- 2047 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவின் ஆற்றல் தேவை 2.5 மடங்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.
- 2047 ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய கூடுதல் ஆற்றல் தேவையில் சுமார் 25 சதவீதம் இந்தியாவைக் கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்தியா தற்போது உலகின் மூன்றாவது பெரிய ஆற்றல் மற்றும் எண்ணெய் நுகர்வோராக உள்ளது.
- இந்தியா திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (LNG) சுத்திகரிப்பில் மூன்றாவது பெரிய நாடாகவும் இறக்குமதியில் நான்காவது பெரிய நாடாகவும் உள்ளது.
- கடந்த தசாப்தத்தில், இந்தியா ஆற்றல் மூலங்களைப் பன்முகப்படுத்தியுள்ளது, உள்நாட்டுத் திறன்களைப் பலப்படுத்தியுள்ளது மற்றும் உத்திசார் ஆற்றல் கூட்டாண்மைகளை விரிவுபடுத்தியுள்ளது.

அதிவேகமாக வளரும் கொள்கலன் துறைமுகம் - ஜவஹர்லால் நேரு துறைமுகம்

- ஆல்ஃபாலினர் (Alphaliner) தரவுகளின்படி, ஜவஹர்லால் நேரு துறைமுகம் உலகளவில் 21 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது மற்றும் 2026 ஆம் ஆண்டின் முதல் பாதியில் வேகமாக வளரும் கொள்கலன் துறைமுகமாக மாறியுள்ளது.
- இது 2026 ஜனவரி முதல் ஜூன் மாதம் வரை 4.40 மில்லியன் TEU-க்களை (இருபது-அடிக்கு சமமான அலகுகள்) கையாண்டுள்ளது, இது 2025 ஆம் ஆண்டின் இதே காலக் கட்டத்தில் 3.87 மில்லியன் TEU களாக இருந்தது, இது 13.6 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.
- உலகளாவிய தரவரிசையில் இதன் நிலை ஏழு இடங்கள் முன்னேறி, 28 ஆவது இடத்திலிருந்து 21 ஆவது இடத்திற்கு வந்துள்ளது, இது 20 ஆவது இடத்தில் உள்ள கொழும்பு துறைமுகத்திற்கு நெருக்கமாகக் கொண்டுவந்துள்ளது.
- குஜராத்தில் உள்ள முந்த்ரா துறைமுகம் மட்டுமே முதல் 30 இடங்களில் இடம்பெற்ற மற்றொரு இந்தியத் துறைமுகமாகும், இது சுமார் 2.4 சதவீத வளர்ச்சியுடன் 26 ஆவது இடத்தில் உள்ளது.
- ஜவஹர்லால் நேரு துறைமுகத்தின் வளர்ச்சியானது அதிகரித்த இந்திய ஏற்றுமதி-இறக்குமதி (EXIM) தேவை, அதிக முனையக் கொள்ளளவு மற்றும் மேற்கு ஆசியாவிற்குச் செல்லும் சில சரக்குகளை இந்தியத் துறைமுகங்களுக்கு மாற்றியது ஆகியவற்றால் ஆதரிக்கப்பட்டது.

மங்ரோல் - மூன்றாவது நீர்மூழ்கி எதிர்ப்புப் போர் ஆழமற்ற நீர்க்கப்பல்

- இது எட்டு நீர்மூழ்கி எதிர்ப்புப் போர் ஆழமற்ற நீர்க்கப்பல்களில் (ASW-SWC) மூன்றாவது ஆகும்.
- அரசுக்குச் சொந்தமான கொச்சின் ஷிப்யார்ட் லிமிடெட் (CSL) இதை வழங்கியது.
- குஜராத்தின் ஜூனாகத் மாவட்டத்தில் உள்ள மங்ரோல் என்ற கடலோரத் துறைமுக நகரத்தின் பெயர் இதற்குச் சூட்டப்பட்டது.
- ஆழமற்ற, ஒலிச்சீரற்ற கடலோரப் பகுதிகளில் செயல்படும் எதிரி நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்டறிந்து, கண்காணித்து, தாக்குவதற்காக இது வடிவமைக்கப் பட்டது.
- இது முன்னணி அழிப்புக் கப்பல்களையும் போர்க்கப்பல்களையும் ஆழ்கடல் நடவடிக்கைகளுக்காக விடுவிக்கும்.
- செயல்பாட்டு வரம்பு கடற்கரையிலிருந்து 200 கடல் மைல்கள் வரை இருக்கும்.
- வேகம் மற்றும் தாங்கும் திறன்: அதிகபட்ச வேகம் 25 நாட்ஸ்; 2 வார செயல்பாட்டுத் தாங்கும் திறன்.
- ASW-SWC திட்டம், சோவியத் வம்சாவளியைச் சேர்ந்த நான்கு அபய்-வகுப்பு போர்க் கப்பல்களுக்குப் பதிலாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இந்தியப் பெருங்கடல் பகுதியில் (IOR) அதிகரித்து வரும் சீன நீருக்கடியில் நடவடிக்கைகளுக்கு மத்தியில் இது இந்தியாவின் கடலோரப் பாதுகாப்புத் திறன்களை வலுப்படுத்துகிறது.

ஏழு மருந்துத் தரநிலைகள்

- இந்திய மருந்தியல் ஆணையம் (IPC) முதல் முறையாக நைட்ரோசமைன் மாசுகளுக்கான ஏழு குறிப்பு தரநிலைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தத் தரநிலைகள் ஆய்வகங்கள் மருந்துகளில் உள்ள நைட்ரோசமைன் மாசுகளைத் துல்லியமாகக் கண்டறிந்து அளவிட உதவும்.
- நைட்ரோசமைன்கள் என்பவை மருந்துகளின் உற்பத்தி, சேமிப்பு அல்லது பேக்கேஜிங் / பொதியிடல் ஆகியவற்றின் போது உருவாகக்கூடிய தீங்கு விளைவிக்கும் சேர்மங்கள் ஆகும்.
- இந்தத் தரநிலைகள் மருந்துப் பரிசோதனை, தர உத்தரவாதம் மற்றும் ஒழுங்குமுறை இணக்கத்தை மேம்படுத்தும்.
- மருந்துத் தரம் மற்றும் மருந்தியல் தரநிலைகள் குறித்து கொல்கத்தாவில் உள்ள மத்திய மருந்துகள் ஆய்வகத்துடன் (CDL) IPC தனது முதல் ஊடாடும் கூட்டத்தையும் நடத்தியது.

இந்தியாவின் முதல் அதிநுண்ணிய ATH ஆலை

- கர்நாடகாவின் பெலகாவியில் இந்தியாவின் முதல் அதிநுண்ணிய வீழ்படிவான அலுமினியம் ட்ரைஹைட்ரேட் (PPT ATH) ஆலையை ஹிண்டால்கோ இண்டஸ்ட்ரீஸ் தொடங்கியது.
- இந்த ஆலை ஆரம்பத்தில் ஆண்டுக்கு 30,000 டன் உற்பத்தித் திறனைக் கொண்டுள்ளது, இதனை 60,000 டன்னாக விரிவாக்க முடியும்.
- PPT ATH என்பது கேபிள்கள்/வடங்கள், மின்கடத்திகள், வண்ணப்பூச்சுகள் மற்றும் வெப்பக் காப்பு ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் ஹாலஜன் இல்லாத சுடர்-தடுப்புப் பொருளாகும்.
- இது தீங்கு விளைவிக்கும் ஹாலஜன் அமில வாயுக்களை வெளியிடாமல் தீப்பிழம்புகள் மற்றும் புகையின் பரவலைக் குறைக்கிறது.
- இந்த ஆலை உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது மற்றும் முற்றிலும் உயிரி, சூரிய மற்றும் காற்றாலை ஆற்றலில் இயங்குகிறது.
- இதன் உள்நாட்டு உற்பத்தியானது கம்பி மற்றும் கேபிள் துறையில் இந்தியாவின் பெரும்பாலான தேவையைப் பூர்த்தி செய்து இறக்குமதியைக் குறைக்கும்.

இந்தியாவின் முதல் விளையாட்டு மரபியல் திட்டம்

- குஜராத் உயிரித் தொழில்நுட்ப ஆராய்ச்சி மையம் (GBRC) மூலம் இந்தியாவின் முதல் மாநில அளவிலான விளையாட்டு மரபியல் திட்டத்தை குஜராத் மாநிலம் தொடங்கியது.
- இது விளையாட்டு வீரர்களின் வலிமை, சகிப்புத்தன்மை, மீட்பு மற்றும் காயம் ஏற்படும் அபாயம் தொடர்பான மரபணு மற்றும் உயிரியல் காரணிகளை கண்டறிகிறது.
- ஆண்டுக்கு 2,000 மாதிரிகள் மற்றும் ஐந்து ஆண்டுகளில் சுமார் 10,000 மாதிரிகளை சேகரிக்க குஜராத் திட்டமிட்டுள்ளது.
- இத்திட்டம் குஜராத் தடகள மரபணு தரவுத்தளத்தை (G-AGD) உருவாக்கும்.
- இது அறிவியல் பூர்வமான திறமைகளை அடையாளம் காணவும், தனிப்பயனாக்கப் பட்ட பயிற்சி, ஊட்டச்சத்து மற்றும் மீட்புத் திட்டங்களுக்கும் ஆதரவளிக்கும்.

சர்வதேசச் செய்திகள்

தென்கிழக்கு ஆசிய நீலப் பொருளாதார நெருக்கடி

- நிதிப் பற்றாக்குறை மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவு காரணமாகத் தென்கிழக்கு ஆசியாவின் நீலப் பொருளாதாரம் சவால்களை எதிர்கொண்டுள்ளதாகப் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு (OECD) வெளியிட்ட அறிக்கை எச்சரித்துள்ளது.
- இப்பகுதியின் பெருங்கடல் சார்ந்த பொருளாதாரம் மீன்பிடித் தொழில், நீர்வாழ் உயிரின வளர்ப்பு, கப்பல் போக்குவரத்து, சுற்றுலா மற்றும் கடல்சார் பாதுகாப்பு நடவடிக்கைகள் மூலம் வாழ்வாதாரங்களை ஆதரிக்கிறது.
- அதிகப்படியான மீன்பிடித்தல், வாழ்விட அழிவு, மாசுபாடு மற்றும் பருவநிலை மாற்றம் ஆகியவை சதுப்பு நிலங்கள், பவளப்பாறைகள் மற்றும் கடற்புல் படுகைகள் போன்ற கடல்சார் சுற்றுச்சூழல் அமைப்புகளை சேதப்படுத்துகின்றன.
- நிலையான பெருங்கடல் மேலாண்மை மற்றும் பருவநிலை தழுவலுக்காக 2030 ஆம் ஆண்டிற்குள் தென்கிழக்கு ஆசியா கிட்டத்தட்ட 2.1 டிரில்லியன் டாலர் நிதிப் பற்றாக்குறையை எதிர்கொள்கிறது.
- நீலப் பொருளாதாரத்தை ஆதரிப்பதற்காக நீல நிறப் பத்திரங்கள், நீல/கடல்சார் கார்பன் சந்தைகள், இயற்கைக்கான கடன் பரிமாற்றங்கள் மற்றும் நிலைத்தன்மை சார்ந்த கடன்கள் உள்ளிட்ட கலப்பு நிதியுதவியை விரிவுபடுத்த OECD பரிந்துரைத்து உள்ளது.

உலகளாவிய எச்.ஐ.வி (HIV) நிதியுதவி

- 2025 ஆம் ஆண்டில் உலகளாவிய மனித நோயெதிர்ப்பு குறைபாடு வைரஸ் (HIV) நிதியுதவி 1.5 பில்லியன் அமெரிக்க டாலர்கள் குறைந்துள்ளதாக எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கூட்டுத் திட்டம் (UNAIDS) தெரிவித்துள்ளது, இது 2030 ஆம் ஆண்டிற்குள் பொது சுகாதார அச்சுறுத்தலாக இருக்கும் எய்ட்ஸ் நோயை முடிவுக்குக் கொண்டுவரும் இலக்கை அச்சுறுத்துகிறது.
- சர்வதேச எச்.ஐ.வி நிதியுதவி 2024 ஆம் ஆண்டில் 8.8 பில்லியன் டாலர்களில் இருந்து 2025 ஆம் ஆண்டில் 7.3 பில்லியன் டாலர்களாகக் குறைந்துள்ளது, இது கடந்த இரண்டு தசாப்தங்களில் இல்லாத மிகக் குறைந்த அளவாகும்.
- குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுக்கு எச்.ஐ.வி திட்டங்களுக்கு ஆண்டுதோறும் 21.9 பில்லியன் அமெரிக்க டாலர்கள் தேவைப்படுகிறது, ஆனால் 2025 ஆம் ஆண்டில் 17.6 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மட்டுமே கிடைத்துள்ளன, இதனால் 4.3 பில்லியன் அமெரிக்க டாலர்கள் நிதி இடைவெளி ஏற்பட்டுள்ளது.
- நிதி குறைப்புகள் காரணமாக எச்.ஐ.வி தடுப்பு, சிகிச்சை, மருந்து விநியோகச் சங்கிலிகள் மற்றும் சமூக சுகாதார சேவைகள், குறிப்பாக சப்-சஹாரா ஆப்பிரிக்காவில் பாதிக்கப் பட்டுள்ளன.
- 149 ஐக்கிய நாடுகள் (UN) உறுப்பு நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் குறித்த 2026 ஆம் ஆண்டு அரசியல் பிரகடனம், 2030 ஆம் ஆண்டிற்குள் எய்ட்ஸ் நோயை பொது சுகாதார அச்சுறுத்தலாக மாற்றுவதை முடிவுக்கு கொண்டு வர சிகிச்சை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

IEA-வின் மின்சார இடைக்கால அறிக்கை 2026

- IEA-வின் 2026 மின்சார இடைக்கால அறிக்கையின்படி, உலகளாவிய மின்சார நுகர்வு 2025-ஆம் ஆண்டில் 28,600 டெராவாட் மணிநேரத்திலிருந்து 2027-ஆம் ஆண்டுக்குள் 30,700 டெராவாட் மணி நேரமாக உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- தொழில்துறை, மின்சார வாகனங்கள், குளிரூட்டல், வீட்டு உபகரணங்கள் மற்றும் தரவு மையங்கள் ஆகியவற்றால் இந்த வளர்ச்சி உந்தப்படும்.
- 2025-ஆம் ஆண்டில் ஏறக்குறைய சமநிலையை எட்டிய பிறகு, புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தி 2026-ஆம் ஆண்டில் உலகளவில் நிலக்கரியை விஞ்சும் என எதிர் பார்க்கப் படுகிறது.
- உலகளாவிய மின்சார விநியோக வளர்ச்சியில் சூரிய ஒளி மின்சக்தி மிகப்பெரியப் பங்களிப்பாளராகத் தொடர்கிறது.
- சூரிய ஒளிமின்சக்தி, காற்றாலை மின்சாரத்தை விஞ்சி, நீர்மின்சக்திக்கு அடுத்த படியாக உலகின் இரண்டாவது பெரிய புதுப்பிக்கத்தக்க மின்சார ஆதாரமாக மாறும்.
- கடந்த பத்தாண்டுகளில் காணப்பட்ட வளர்ச்சிப் போக்கை மாற்றி, உலகளாவிய எரிவாயு மூலமான மின்சார உற்பத்தி 2026-ஆம் ஆண்டில் பெரிய அளவில் மாற்றமின்றி இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- சீனா மற்றும் இந்தியாவில் புதிய அணு உலைகள் செயல்படத் தொடங்குவதாலும், அமெரிக்கா மற்றும் பிரான்சில் வலுவான உற்பத்தி இருப்பதாலும், 2026-ஆம் ஆண்டில் அணுமின் உற்பத்தி அதிகரித்து, 2027-ஆம் ஆண்டில் மேலும் வேகமெடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- தொழில்துறை நடவடிக்கைகள், சேவைகள் வளர்ச்சி மற்றும் வெப்ப அலைகளால் ஏற்படும் குளிரூட்டும் தேவை ஆகியவற்றின் ஆதரவுடன், 2026-ஆம் ஆண்டில் இந்தியாவின் மின்சாரத் தேவை 7% மீண்டு வரும் என கணிக்கப் பட்டுள்ளது.
- மாலை நேர உச்சபட்ச மின் தேவை தொடர்ந்து அதிகரித்து, மின் கட்டமைப்புக்கு பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தி வரும் நிலையிலும், இந்தியா ஜூலை மாதத்தில் முதன்முறையாக 100 ஜிகாவாட் மாறும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் விநியோகத்தைக் கடந்தது.
- வேகமாக அதிகரித்து வரும் மாலை நேர உச்சபட்ச மின் தேவையால், நிலக்கரி மற்றும் எரிவாயு மின் நிலையங்கள் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவை தொடர்ந்து உள்ளது.
- 2026-ஆம் ஆண்டின் முதல் பாதியில் இந்தியாவின் ஒருங்கிணைந்த சூரிய ஒளிமின்சக்தி மற்றும் காற்றாலை மின் உற்பத்தி 25 சதவீதத்திற்கும் மேலாக அதிகரித்தது.
- மொத்த மின் விநியோகத்தில் அதன் பங்கு 42.79 சதவீதத்தை எட்டியதுடன் இது இதுவரை பதிவு செய்யப்பட்டதிலேயே மிக உயர்ந்த அளவாகும்.
- உடனடி தரைவழி மாறும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி 103 ஜிகாவாட் என்ற புதிய உச்சத்தைத் தொட்டது.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் பங்கு 35 சதவீதம் முதல் 42 சதவீதம் வரை இருந்துள்ளது.
- நீர்மின்சக்தி மற்றும் அணுசக்தியையும் சேர்த்துக் கொள்ளும்போது, புதைபடிவமற்ற மூலங்கள் மொத்த மின்சார விநியோகத்தில் கிட்டத்தட்ட பாதியைக் கொண்டுள்ளன.

- சர்வதேச எரிசக்தி முகமை (IEA) என்பது 1974-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட, பாரிஸைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு தன்னாட்சி பெற்ற அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும்.
- இது உலகளாவிய எரிசக்தித் துறை குறித்த கொள்கைப் பரிந்துரைகள், பகுப்பாய்வு மற்றும் தரவுகளை வழங்குகிறது.
- IEA-வின் 32 உறுப்பு நாடுகளும் 13 கூட்டமைப்பு நாடுகளும் உலகளாவிய எரிசக்தித் தேவையின் 75%-ஐப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.
- இது 1973 ஆம் ஆண்டு எண்ணெய் நெருக்கடிக்குப் பிறகு, பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (OECD) கட்டமைப்பின் கீழ் அமைக்கப்பட்டது.
- இதன் வெளியீடுகளில் வருடாந்திர உலக எரிசக்தி கண்ணோட்டம் மற்றும் 2050-ஆம் ஆண்டுக்குள் நிகர பூஜ்ஜிய அறிக்கை ஆகியவை அடங்கும்.
- IEA-வின் அனைத்து உறுப்பு நாடுகளும் புவி வெப்பமயமாதலை 1.5 °C-ஆகக் கட்டுப்படுத்தும் நோக்கம் கொண்ட பாரிஸ் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன, மேலும் IEA உறுப்பு அரசாங்கங்களில் மூன்றில் இரண்டு பங்கு அரசாங்கங்கள் 2050-ஆம் ஆண்டுக்குள் உமிழ்வு நடுநிலைமையை அடைவதற்கான உறுதிமொழிகளை அளித்துள்ளன.
- ஆனால் அமெரிக்கா இரண்டு முறை இதிலிருந்து விலகியுள்ளது.
- இந்தியா, 2017 ஆம் ஆண்டு மார்ச் 30 அன்று சர்வதேச எரிசக்தி முகமையுடன் (IEA) தனது 'இணைவு' நிலையை அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.
- 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், பிரேசில் ஓர் உறுப்பினர் நாடாக ஆவதற்கான செயல்முறையைத் தொடங்கியது.
- IEA-வின் தூய்மையான எரிசக்தி மாற்றங்கள் திட்டம், பிரேசில், சீனா, இந்தியா, இந்தோனேசியா, மெக்சிகோ மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளை முன்னுரிமை நாடுகளாக அடையாளம் கண்டுள்ளது.

நௌருவின் காலனித்துவ பெயர் மாற்றம்

- பசிபிக் தீவு நாடான நௌரு (Nauru), 2026 ஆம் ஆண்டு மே மாதம் அதன் நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட அரசியலமைப்பு திருத்தத்திற்குப் பிறகு, தனது பெயரை நவோரோ குடியரசு (Republic of Naoero) என அதிகாரப்பூர்வமாக மாற்றியது.
- புதிய பெயரான நவோரோ என்பது தீவின் பூர்வீகப் பெயராகும், இது காலனித்துவ காலப் பெயரான நௌருவை மாற்றுகிறது.
- நவோரோ மத்திய பசிபிக் பெருங்கடலில் உள்ள மைக்ரோனேசியாவில் அமைந்துள்ளதுடன் இது வாட்டிகன் சிட்டி மற்றும் மொனாக்கோவிற்குப் பிறகு உலகின் மூன்றாவது மிகச்சிறிய இறையாண்மை கொண்ட நாடாகும்.
- இந்நாடு சுமார் 21 சதுர கிமீ பரப்பளவும், சுமார் 12,000 மக்கள் தொகையையும் கொண்டுள்ளதுடன் இது ஆஸ்திரேலிய நாட்டு டாலரை (AUD) அதன் நாணயமாகப் பயன்படுத்துகிறது.
- பூர்வீக மொழியான டோரேரின் நவோரோ (நௌருவான் மொழி) யுனெஸ்கோவால் கடுமையாக அழிந்து வரும் மொழியாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

வெனிசுலா மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்

- சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலிருந்து (ICC) விலகுவதற்கான தனது "திரும்பப் பெற முடியாத" முடிவை வெனிசுலா ஐக்கிய நாடுகள் சபைக்கு அதிகாரப்பூர்வமாகத் தெரிவித்துள்ளது.
- வெனிசுலாவின் ஆயுதப் படை உறுப்பினர்கள் மற்றும் பிற அதிகாரிகள் மீது ICC பல ஆண்டுகளாக விசாரணையை நடத்தி வந்தது.
- ஆனால், இந்த விலகல் நடவடிக்கை நடைமுறைக்கு வருவதற்கு முன்பே தொடங்கப்பட்ட விசாரணைகளையோ அல்லது சட்ட நடவடிக்கைகளையோ பாதிக்காது.
- வெனிசுலாவில் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பான தனது தற்போதைய விசாரணையை ICC தொடர்ந்து நடத்த முடியும்.
- நீதிமன்றத்திற்குள் "புவியியல் ரீதியான பாரபட்சம்" இருப்பதாகக் குற்றம் சாட்டி வெனிசுலா அரசு தனது இந்த நடவடிக்கையை நியாயப்படுத்தியது.
- குறிப்பாக ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்கா உள்ளிட்ட உலகளாவிய தெற்கு (Global South) எனப்படும் வளரும் நாடுகளை இந்த நீதிமன்றம் விகிதாச்சாரத்திற்கு மீறி குறிவைப்பதாக அது வாதிட்டது.
- சாட் (Chad) நாடும் ICC-யிலிருந்து விலகுவதற்கான திட்டங்களை அறிவித்துள்ளது.
- கடந்த ஆண்டு புர்கினா பாசோ, மாலி மற்றும் நைஜர் ஆகிய நாடுகள் மேற்கொண்ட இதே போன்ற நடவடிக்கைகளைத் தொடர்ந்து சாட் நாடும் இந்த முடிவை எடுத்துள்ளது.
- காசாவில் நடந்ததாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை விசாரிக்க ICC முற்பட்டுள்ளது.
- சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC) என்பது நெதர்லாந்தின் தி ஹேக் (The Hague) நகரைத் தலைமையிடமாகக் கொண்ட ஓர் அரசுகளுக்கிடையிலான அமைப்பும் சர்வதேச நீதிமன்றமும் ஆகும்.
- இது 2002-ஆம் ஆண்டில் பலதரப்பு ஒப்பந்தமான 'ரோம் சட்டத்தின்' கீழ் நிறுவப்பட்டது.
- உறுப்பு நாடுகள் தாங்களாகவே போர்க்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை மற்றும் ஆக்கிரமிப்புக் குற்றங்கள் ஆகியவற்றை விசாரிக்கவோ அல்லது தண்டிக்கவோ விரும்பாத அல்லது இயலாத சூழலில், அக்குற்றங்களை விசாரித்துத் தண்டிக்க இந்த நீதிமன்றம் நிறுவப்பட்டது.
- சர்வதேச குற்றங்களுக்காக தனிநபர்களை விசாரித்துத் தண்டிக்கும் அதிகார வரம்பைக் கொண்ட முதல் மற்றும் ஒரே நிரந்தர சர்வதேச நீதிமன்றம் ICC ஆகும்.
- குற்றம் சாட்டப்பட்டவர் ஒரு உறுப்பு நாட்டின் குடிமகனாக இருக்கும்போதோ, குற்றம் சாட்டப்பட்ட செயல் ஒரு உறுப்பு நாட்டின் எல்லைக்குள் நடந்த போதோ, அல்லது ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையால் ஒரு விவகாரம் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படும் போதோ ICC தனது அதிகார வரம்பைச் செயல்படுத்த முடியும்.
- ரோம் சட்டத்தில் உறுப்பினராக இல்லாத மற்றும் நீதிமன்றத்தின் அதிகார வரம்பை அங்கீகரிக்காத நாடுகளில் சீனா, இந்தியா, ரஷ்யா மற்றும் அமெரிக்கா ஆகியவை அடங்கும்.

இத்தாலி-ஸ்பெயின் எல்லைக் கட்டுப்பாடுகள்

- சியூட்டாவிற்குள் முறையற்றுக் குடியேறுவோர்கள் அதிகளவில் நுழைந்ததையடுத்து, 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1 முதல் ஸ்பெயினுடனான ஷெங்கன் தடையில்லாப் போக்குவரத்து விதிகளுக்கு ஒரு மாத காலத்திற்கு இத்தாலி தற்காலிகமாக தடை விதித்தது.
- பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளுக்கு இடையே கடவுச்சீட்டு இல்லாத பயணத்தை ஷெங்கன் பகுதி அனுமதிக்கிறது.
- ஷெங்கன் எல்லைகள் குறியீட்டின் கீழ், உறுப்பு நாடுகள் பொதுப் பாதுகாப்பு அல்லது உள்நாட்டுப் பாதுகாப்புக் காரணங்களுக்காக தற்காலிகமாக உள்நாட்டு எல்லை சோதனைகளை மீண்டும் கொண்டுவர முடியும்.
- மொராக்கோவின் வட ஆப்பிரிக்க கடற்கரையில் உள்ள ஒரு ஸ்பானியப் பகுதியான சியூட்டா ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பாவிற்கு இடையிலான ஒரு முக்கிய இடம்பெயர்வுப் பாதையாகவும் உள்ளது.
- இந்தத் தற்காலிக சோதனைகள் முக்கியமாக ஸ்பெயினில் இருந்து வரும் மூன்றாம் நாட்டு குடிமக்களுக்குப் பொருந்தும்; அதே நேரத்தில் ஐரோப்பிய ஒன்றிய (EU) குடிமக்கள் தங்களது வழக்கமான பயணத்தைத் தொடரலாம்.
- எல்லைப் பாதுகாப்பை வலுப்படுத்தவும், இடம்பெயர்வு அழுத்தத்தை நிர்வகிக்கவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இத்தாலி தெரிவித்துள்ளது.

பன்னாட்டு கடல்சார் பாதுகாப்பு கூட்டணி

- சமீபத்தில் சவூதி அரேபியாவும் மேலும் 13 நாடுகளும் ஒரு கடல்சார் பாதுகாப்பு கூட்டணியை நிறுவியுள்ளன.
- ரியாத்தில் நடைபெற்ற 'சவூதி அரேபியா + 13 நாடுகள் கூட்டணி' நிகழ்வில் இது தொடங்கப்பட்டது.
- சவூதி அரேபியா இந்தக் கூட்டணியை நிறுவிய மற்றும் வழி நடத்தும் நாடாக இருப்பதுடன், அதன் நிரந்தரத் தலைமையகமாகவும் செயல்படுகிறது.
- கடல்சார் பாதுகாப்பை மேம்படுத்துதல், கப்பல் போக்குவரத்தின் சுதந்திரத்தைப் பாதுகாத்தல், சர்வதேச வர்த்தகப் பாதைகள் மற்றும் எரிசக்தி விநியோக வழிகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பாப் எல்-மண்டேப் நீரிணை, செங்கடல் மற்றும் ஏடன் வளைகுடாவில் பகிரப்பட்ட கடல்சார் நலன்களைப் பாதுகாப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.
- சவூதி அரேபியா, குவைத், பஹ்ரைன், கத்தார், எகிப்து, ஜோர்டான், யேமன், நைஜீரியா, சூடான், ஜிபூட்டி, சோமாலியா மற்றும் பிற நாடுகள் இதன் நிறுவன உறுப்பினர்கள் ஆகும்.
- இதன் தன்மை முற்றிலும் தற்காப்பு சார்ந்ததாகவும், சர்வதேச சட்டம் மற்றும் இறையாண்மைக்கு இணக்கமானதாகவும் இருக்கும்.
- இது எந்தவொரு நாட்டையோ, கூட்டணியையோ அல்லது சர்வதேச அமைப்பையோ குறி வைக்காது.

பிரிக்ஸ் ஊழல் தடுப்புக் கூட்டம் 2026

- 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 4-5 தேதிகளில் ஹைதராபாத்தில் 2ஆவது பிரிக்ஸ் ஊழல் தடுப்புப் பணிக்குழு கூட்டத்தையும், சொத்து மீட்பு குறித்த 2ஆவது பிரிக்ஸ் நிபுணர் வலையமைப்புக் கூட்டத்தையும் இந்தியா தொகுத்து வழங்கியது.
- எல்லை தாண்டிய ஊழலுக்கு எதிரான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக இந்தியாவின் பிரிக்ஸ் 2026 ஆம் ஆண்டிற்கான தலைமையின் கீழ் பணியாளர் மற்றும் பயிற்சித் துறையால் (DoPT) இந்தக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.
- தப்பியோடிய குற்றவாளிகளைக் கண்டறிதல், சட்டவிரோத சொத்துக்களை மீட்டெடுத்தல் மற்றும் அமலாக்க முகமைகளிடையே தகவல் பகிர்வை மேம்படுத்துதல் ஆகியவற்றில் ஒத்துழைப்பது குறித்து பிரிக்ஸ் நாடுகள் விவாதித்தன.
- ஊழல் தொடர்பான வழக்குகளுக்காக சட்ட அமலாக்கப் பயிற்சியாளர்களின் பிரிக்ஸ் வலையமைப்பை உருவாக்குவது குறித்த விவாதங்களைத் தொடர உறுப்பினர்கள் ஒப்புக்கொண்டனர்.
- வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தவும் ஊழலைத் தடுக்கவும் செயற்கை நுண்ணறிவு (AI), இயந்திரக் கற்றல் (ML) மற்றும் டிஜிட்டல் அமைப்புகளைப் பயன்படுத்துவதில் இக்கூட்டம் கவனம் செலுத்தியது.

பிரிக்ஸ் வர்த்தக அமைச்சர்கள் கூட்டம் 2026

- இந்தியாவின் 2026 ஆம் ஆண்டிற்கான பிரிக்ஸ் தலைமையின் கீழ், 16வது பிரிக்ஸ் வர்த்தக அமைச்சர்கள் கூட்டம் ராஜஸ்தானின் ஜெய்ப்பூரில் நிறைவடைந்தது.
- புது தில்லியில் நடைபெறவுள்ள உச்சிமாநாட்டில் பிரிக்ஸ் தலைவர்களிடம் சமர்ப்பிப்பதற்காக, 2030 ஆம் ஆண்டிற்கான பிரிக்ஸ் பொருளாதாரக் கூட்டாண்மைக்கான வியூகத்திற்கு உறுப்பு நாடுகள் இறுதி வடிவம் அளித்தன.
- பிரிக்ஸ் தொழில்நுட்ப சபை மற்றும் பிரிக்ஸ் கனெக்ட் முன்னெடுப்பு உள்ளிட்ட உலகளாவிய மதிப்புச் சங்கிலிகள் செயல் திட்டம் 2026-2030-ஆம் ஆண்டுக்கு அவை ஒப்புதல் அளித்தன.
- சுமார் $2.5 டிரில்லியன் உலகளாவிய வர்த்தக நிதி இடைவெளியைச் சரிசெய்ய உதவும் வகையில், பணப்புழக்க அடிப்படையிலான கடன் வழங்கலை ஊக்குவிக்கும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான (MSME) கடன் வழங்கல் வழிகாட்டு நெறிமுறைகளை இக்கூட்டம் ஏற்றுக்கொண்டது.
- உலக வர்த்தக அமைப்பின் (WTO) கட்டமைப்பின் கீழ் வளரும் நாடுகளுக்கான உணவுப் பாதுகாப்பு, விவசாயிகளின் நலன்கள் மற்றும் சிறப்பு மற்றும் வேறுபட்ட சிகிச்சை (S&DT) ஆகியவற்றை இந்தியா எடுத்துரைத்தது.

பிரிக்ஸ் தொழில் துறை அமைச்சர்கள் கூட்டம்

- இந்தியாவின் 2026 ஆம் ஆண்டிற்கான பிரிக்ஸ் தலைமையின் கீழ், 10வது பிரிக்ஸ் தொழில் துறை அமைச்சர்கள் கூட்டம் ராஜஸ்தானின் ஜெய்ப்பூரில் நிறைவடைந்தது.
- குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSMEs), ஒளிமின்னழுத்தம் (photovoltaics), புத்தொழில் நிறுவனங்கள், புத்தாக்கம், போக்குவரத்து மற்றும் தளவாடங்கள் ஆகியவற்றில் தொழில்துறை ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான கூட்டறிக்கையை இக்கூட்டம் ஏற்றுக் கொண்டது.

- பிரிக்ஸ் நாடுகளுக்கிடையே MSME சூழலமைப்பை வலுப்படுத்துவதற்காக, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (SME) பணிக்குழுவில் ஒத்துழைப்பிற்கான கட்டமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- சூரிய ஆற்றலில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக ஒளிமின்னழுத்தத் தொழில் தொடர்பான பிரிக்ஸ் பணிக்குழுவிற்கான குறிப்பு விதிமுறைகள் மற்றும் செயல் திட்டம் ஆகியவை ஏற்றுக் கொள்ளப்பட்டன.
- புத்தாக்கம் சார்ந்த வளர்ச்சி மற்றும் புத்தொழில் நிறுவனங்களை ஆதரிப்பதற்காக பிரிக்ஸ் காப்பக வலையமைப்பு மற்றும் பிரிக்ஸ் புத்தொழில் நிறுவனப் புத்தாக்க நிதியத்தை இந்தியா முன்மொழிந்தது.
- புதிய தொழில்துறைப் புரட்சிக்கான பிரிக்ஸ் கூட்டாண்மையின் (PartNIR) வாயிலாக "மீள்திறன், புத்தாக்கம், ஒத்துழைப்பு மற்றும் நிலைத்தன்மைக்காக உருவாக்குதல்" என்ற கருத்துருவின் கீழ் இக்கூட்டம் நடைபெற்றது.

டானூப் நதி நெருக்கடி - ஐரோப்பா

- நீண்டகால வெப்ப அலைகள் மற்றும் சராசரிக்கும் குறைவான மழைப்பொழிவு காரணமாக ஐரோப்பாவின் டானூப் நதி சாதனை அளவாக மிகவும் குறைவான நீர் மட்டத்தை எட்டியுள்ளது.
- சுமார் 2,900 கி.மீ நீளமுள்ள இந்த நதி 10 நாடுகளின் வழியே பாய்கிறது அல்லது எல்லையாக அமைந்துள்ளதுடன் மேலும் இது தானியம், எஃகு மற்றும் எரிபொருள் போன்ற சரக்குகளைக் கொண்டு செல்வதற்கான முக்கியமான வழியாகும்.
- குறைந்த நீர்மட்டத்தால் கப்பல் போக்குவரத்து, படகுப் போக்குவரத்து மற்றும் சுற்றுலா பாதிக்கப்பட்டுள்ளன, அதே சமயம் ஆற்றுப்படுகையிலிருந்து கப்பல் சிதைவுகள், போர்க்கால எச்சங்கள் மற்றும் பிற பொருட்கள் வெளியே தெரிந்துள்ளன.
- வெப்பமான மற்றும் குறைந்த டானூப் நீர் அதன் குளிரூட்டும் அமைப்பைப் பாதிப்பதால் ஹங்கேரியின் பாக்ஸ் அணு மின் நிலையம் அதன் செயல்பாடுகளைக் குறைத்துள்ளது; ரோமானியாவும் செர்னாவோடா அணு மின் நிலையத்திற்கான அவசரகால நடவடிக்கைகளைப் பரிசீலித்து வருகிறது.
- தீவிர வானிலை மற்றும் வறட்சி ஆகியவை ஐரோப்பா முழுவதும் போக்குவரத்து, ஆற்றல், சுற்றுலா மற்றும் உள்ளூர் வாழ்வாதாரங்களை எவ்வாறு பாதிக்கலாம் என்பதை இந்த நெருக்கடி காட்டுகிறது.

பிறப்புரிமைக் குடியுரிமை - அமெரிக்கா

- அமெரிக்காவில் பிறப்புரிமைக் குடியுரிமையைக் கட்டுப்படுத்துவதற்காக, 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6 அன்று இரண்டு நிர்வாக உத்தரவுகளில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கையெழுத்திட்டார்.
- கர்ப்பிணியான வெளிநாட்டினர் தங்கள் குழந்தைகளுக்கு அமெரிக்கக் குடியுரிமை கிடைப்பதற்காக, அங்கு சென்று பிரசவிப்பதை நோக்கமாகக் கொண்ட “பிறப்பு சுற்றுலா” (birth tourism) என்பதை இந்த உத்தரவுகள் குறிவைக்கின்றன.
- வெளிநாட்டு அரசு ஊழியர்கள் மற்றும் அந்நிய நாட்டு எதிரிகள் என வகைப்படுத்தப்பட்டவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கான குடியுரிமை உரிமைகளைக் கட்டுப்படுத்தவும் இவை முற்படுகின்றன.

- பிறப்புரிமைக் குடியுரிமையைக் கட்டுப்படுத்தும் டிரம்பின் முந்தைய முயற்சியை நிராகரித்த அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் 2026 ஆம் ஆண்டு ஜூன் 30 அன்றைய 6–3 என்ற தீர்ப்பைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- பிறப்புரிமைக் குடியுரிமையானது 14வது சட்டத்திருத்தத்துடன் தொடர்புடையது; அதன் குடியுரிமைப் பிரிவானது, அமெரிக்காவில் பிறந்த அல்லது இயல்புரிமை பெற்ற மற்றும் அதன் அதிகார வரம்பிற்கு உட்பட்ட நபர்களுக்குக் குடியுரிமையை வழங்குகிறது.

மீட் ஏரியின் நீர் மட்டம்

- அமெரிக்காவின் மிகப்பெரிய நீர்த்தேக்கமான மீட் ஏரி (Lake Mead), கடல் மட்டத்திலிருந்து சுமார் 1,040.3 அடி (317.1 மீ) என்ற அதன் மிகக் குறைந்த நீர்மட்டத்தை எட்டியுள்ளது.
- அரிசோனா-நெவாடா எல்லையில் உள்ள ஹூவர் அணையால் மீட் ஏரி உருவாகிறது, மேலும் இது தென்மேற்கு அமெரிக்காவிற்கான முக்கிய நீர் ஆதாரமாகும்.
- கொலராடோ நதியின் அதிகப்படியான பயன்பாடு, அதிகரித்து வரும் வெப்பநிலை மற்றும் நீடித்த வறட்சி ஆகியவை இந்த குறைந்த நீர்மட்டத்திற்கு காரணமாகும்.
- அமெரிக்காவின் ஏழு மாநிலங்கள், பூர்வீக அமெரிக்க பழங்குடியினர் மற்றும் இரண்டு மெக்சிகன் மாநிலங்கள் நீர், விவசாயம், தொழில்துறை மற்றும் நீர் மின்சாரம் ஆகியவற்றிற்காக கொலராடோ நதிப் படுகையை நம்பியுள்ளன.
- மீட் ஏரி 1,035 அடி என்ற செயல்பாட்டு எல்லையை நெருங்கி வருகிறது, இதற்குக் கீழே சென்றால் சில ஹூவர் அணை விசையாழிகள் மூடப்படலாம் மற்றும் மின் உற்பத்தித் திறன் கடுமையாகக் குறையக்கூடும்.
- கொலராடோ நதிப் படுகையானது பவல் ஏரியிலும் (Lake Powell) குறைந்த நீர்மட்டத்தை எதிர் கொண்டு வருகிறது, இது பிராந்திய நீர் விநியோகத்தின் மீதான அழுத்தத்தை அதிகரிக்கிறது.

மரண தண்டனை - லெபனான்

- லெபனான் நாடாளுமன்றம் மரண தண்டனையை ரத்து செய்தது, இதன் மூலம் மரண தண்டனையை முறையாக ரத்து செய்த முதல் மத்திய கிழக்கு நாடாக லெபனான் உருவெடுத்துள்ளது.
- இந்தச் சட்டமானது மிகக் கடுமையான குற்றங்களுக்கு மரண தண்டனைக்குப் பதிலாக ஆயுள் தண்டனை மற்றும் கடுமையான உழைப்பு ஆகியவற்றை மாற்றுகிறது.
- லெபனான் 2004 ஆம் ஆண்டு முதல் மரண தண்டனையை நிறைவேற்றவில்லை, இருப்பினும் மரண தண்டனைகள் இன்னும் வழங்கப்பட்டு வந்தன.
- மரண தண்டனையை ரத்து செய்வதற்கான பல ஆண்டு முயற்சிகள் மற்றும் அதை நிறுத்தி வைக்கக் கோரும் ஐக்கிய நாடுகளின் (UN) தீர்மானங்களுக்கான லெபனானின் ஆதரவைத் தொடர்ந்து இந்தச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.
- அம்னெஸ்டி இன்டர்நேஷனல் அமைப்பின்படி, 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் லெபனானில் குறைந்தது 85 பேர் மரண தண்டனைக் கைதிகளாக இருந்தனர்.

சூரிய சுழற்சியில் புதிய கண்டுபிடிப்பு

- மரபு இயற்பியலின் எதிர்பார்க்கப்படும் நடத்தைக்கு சவால் விடும் வகையில், சூரியனின் மேல் வளிமண்டலம் அதன் காணக்கூடிய மேற்பரப்பை விட வேகமாக சுழல்வதை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- உத்தரகாண்டில் உள்ள ஆரியபட்டா கண்காணிப்பு அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம் (ARIES), உதய்பூர் சூரிய ஆய்வகம் (USO), இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகம் (PRL) மற்றும் அகமதுநகர் கல்லூரி ஆகியவை இந்த ஆய்வை மேற்கொண்டன.
- ஆராய்ச்சியாளர்கள் ஜப்பானின் நோபயாமா ரேடியோஹீலியோகிராஃபின் (Nobeyama Radioheliograph) தரவைப் பயன்படுத்தினர் மற்றும் சூரிய வளிமண்டல சுழற்சியை அளவிட இருபரிமாண படத்-தொடர்பு முறையைப் பயன்படுத்தினர்.
- சூரிய மேற்பரப்புக்கு மேலே உயரம் அதிகரிக்கும் போது சூரியனின் சுழற்சி வேகம் அதிகரிக்கிறது மற்றும் அதிக சூரிய செயல்பாட்டின் காலங்களில் (அதிக சூரியப் புள்ளிகள்) சற்றே குறைகிறது என்பதை இந்த ஆய்வு கண்டறிந்துள்ளது.
- இந்த கண்டுபிடிப்புகள் சூரிய செயல்பாடு மற்றும் விண்வெளி வானிலை பற்றிய புரிதலை மேம்படுத்த உதவுகின்றன, இது செயற்கைக்கோள்கள், தகவல் தொடர்பு அமைப்புகள், வழிசெலுத்தல் வலையமைப்புகள் மற்றும் மின் உள்கட்டமைப்பை பாதிக்கலாம்.

10P/Tempel 2 வால்நட்சத்திரம் - பெங்களூரு வானில் தோற்றம்

- இது கடைசியாக பூமியிலிருந்து ஐந்தரை ஆண்டுகளுக்கு முன்பு காணப்பட்டது.
- இது 1873-ஆம் ஆண்டில் கண்டறியப்பட்டது.
- இது ஒவ்வொரு 5.5 ஆண்டுகளுக்கும் ஒருமுறை சூரியனைச் சுற்றி வருகிறது. இது கடைசியாக 2021ஆம் ஆண்டில் காணப்பட்டது.
- 10P/Tempel 2 என்பது ஒரு காலமுறை வால்நட்சத்திரம் (periodic comet) ஆகும்.
- இது ஒவ்வொரு 5.5 ஆண்டுகளுக்கும் மீண்டும் வந்தாலும், பூமியிலிருந்து எப்போதும் இதை எளிதாகப் பார்க்க முடிவதில்லை.
- அதன் தெரிவுநிலை என்பது, அது மீண்டும் வரும்போது பூமிக்கு எவ்வளவு அருகில் வருகிறது என்பதையும், வானில் சூரியனைப் பொறுத்து அதன் நிலை என்ன என்பதையும் சார்ந்துள்ளது.
- அந்த வருகையின்போது அது எவ்வளவு பிரகாசமாக இருக்கிறது என்பதைப் பொறுத்து, சில வருகைகள் மிகச் சிறப்பாகவும், மற்றவை அவ்வளவு சாதகமற்றதாகவும் அமைகின்றன.
- வால்நட்சத்திரம் சூரியனுக்கு மிக அருகில் இருக்கும்போது, சூரியனின் வெப்பத்தால் அதிக அளவு பனி ஆவியாகிறது.
- இது வால்நட்சத்திரத்தின் 'கோமா' (அதன் மையப்பகுதியைச் சுற்றியுள்ள மங்கலான மேகம்) மற்றும் வால் பகுதியை உருவாக்குகிறது; இதனால் அது அதிக பிரகாசத்துடனும், எளிதாகக் காணக்கூடிய வகையிலும் மாறுகிறது.
- தெளிவான, நிலவில்லாத இரவில், நகர விளக்குகளின் வெளிச்சம் இல்லாத இருண்ட இடத்திலிருந்து இந்த வால்நட்சத்திரத்தை உற்றுநோக்குவது சிறந்தது.

ஹிரோஷிமா இடிபாடுகளில் புதிய உலோகக் கலவை கண்டுபிடிப்பு

- 1945 அணுபடிகுண்டு வெடிப்புக்குப் பிறகு உருவான, ஜப்பானின் ஹிரோஷிமா விரிகுடாவிலிருந்து மீட்கப்பட்ட கண்ணாடி போன்ற ஹிரோஷிமைட்டுகளுக்குள் முன்பு அறியப்படாத ஒரு புதிய உலோகக் கலவையை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- இந்த உலோகக் கலவையானது மணிகளுக்குள் ஒரு சிறிய உலோக தானியமாக காணப் படுகிறது. இதில் இரும்பு, குரோமியம், நிக்கல், மாங்கனீசு, மாலிப்டினம், சிலிக்கான் மற்றும் அலுமினியம் ஆகியவை உள்ளன.
- அணுவெடிப்பின் அதீத வெப்பம் மற்றும் விரைவான குளிர்ச்சி ஆகியவை ஒரு தனித்துவமான கட்டமைப்பை உருவாக்கியதன் காரணமாக இது உருவாகி இருக்கலாம் என்று அறிவியலாளர்கள் நம்புகின்றனர்.
- இந்த உலோகக் கலவையானது, வலிமை மற்றும் நிலைத்தன்மைக்காக ஆய்வு செய்யப் படும் உயர்-எண்ட்ரோபி உலோகக் கலவைகள் (HEAs) மற்றும் குவாசி கிரிஸ்டல் /படிகங்களின் (quasicrystals) அம்சங்களை ஒத்திருக்கிறது.
- அணுக்கரு வெடிப்பின் துகள்கள், தீவிரமான இயற்பியல் மற்றும் வேதியியல் நிலைமைகள் குறித்த தகவல்களைப் பாதுகாக்க முடியும் என்பதை இந்தக் கண்டுபிடிப்பு காட்டுகிறது.

கலப்பின காந்த-பாய்மவியல்மானி - ஐஐடி பாட்னா

- பீகாரில் உள்ள ஐஐடி பாட்னாவின் அறிவியலாளர்கள், காந்தப்-பாய்மவியல் (MR) பாய்மங்கள் மற்றும் திறன்மிகு பொருள் தொழில்நுட்பங்கள் குறித்த ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்காக ஒரு கலப்பின காந்த-பாய்மவியல்மானியை உருவாக்கி உள்ளனர்.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் (DST) ஆதரவுடன் இந்தக் கருவி உருவாக்கப் பட்டது.
- இது, ஒருங்கிணைந்த அமுக்கம் மற்றும் வெட்டு விசை நிலைகளின் கீழ் MR பாய்மங்களின் பாய்வு, உருக்குலைவு, உராய்வு மற்றும் தேய்மானப் பண்புகளை அளவிட முடியும்.
- MR பாய்மங்கள் என்பவை, காந்தப்புலத்திற்கு உட்படுத்தப்படும் போது பாகுத் தன்மையை மாற்றிக்கொள்ளும் திறன்மிகு பொருட்கள் ஆகும். இவை பிரேக்குகள், கிளட்சுகள், அதிர்வு உறிஞ்சிகள், தணிப்பிகள், இயக்கிகள் மற்றும் மருத்துவக் கருவிகளில் பயன்படுத்தப்படுகின்றன.
- இந்தத் தொழில்நுட்பம், சுகாதாரம், விண்வெளி, பாதுகாப்பு மற்றும் தொழில்துறை தன்னியக்கம் ஆகியவற்றில் மேம்பட்ட பயன்பாடுகளை வடிவமைக்க உதவுகிறது.

விண்வெளியில் வைரம்

- உலகின் ஆய்வகத்தில் உருவாக்கப்பட்ட முதல் வைர நகை விண்வெளிக்கு அனுப்பப் பட்டது.
- பெங்களூருவைச் சேர்ந்த ஒரு புத்தொழில் நிறுவனம், ஸ்கைரூட்டின் விக்ரம்-1 ஏவுகலன் மூலம் உலகின் முதல் ஆய்வகத்தில் உருவாக்கப்பட்ட வைர நகையை விண்வெளிக்கு அனுப்பியுள்ளது.
- அது காஸ்மோஸ் ப்ளூம் வைரம் ஆகும்; தாமரை வடிவில், தங்கத்தில் கைவினை முறையில் செய்யப்பட்டு, 16.9 காரட் ஆய்வகத்தில் உருவாக்கப்பட்ட வைரங்கள் பதிக்கப் பட்டது.
- ஸ்கைரூட்டின் விக்ரம் 1, இந்தியாவின் முதல் தனியார் சுற்றுப்பாதை ஏவுகலன் ஆகும்.

நெப்டியூனின் பண்டைய விண்வெளி மோதல்

- கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு நெப்டியூனின் நிலவுகள் மற்றும் வளையங்களை மாற்றியமைத்த ஒரு பழங்காலப் பேரழிவு நிகழ்வின் சான்றுகளை நாசாவின் ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கி கண்டறிந்துள்ளது.
- நெப்டியூனின் உள் நிலவுகளான புரோட்டியஸ், லாரிசா மற்றும் கலாட்டியா ஆகியவற்றில் களிமண் தாதுக்களை இந்தத் தொலைநோக்கி கண்டறிந்துள்ளது, இது ஒரு பெரிய அழிக்கப்பட்ட விண்பொருளிலிருந்து வந்த பொருளைக் குறிக்கிறது.
- நெப்டியூனின் மிகப்பெரிய நிலவான ட்ரைடன் (Triton) குய்பர் பட்டையிலிருந்து ஈர்க்கப்பட்டிருக்கலாம் என்றும், இது நெப்டியூனின் அசல் நிலவுகளிடையே மோதல்களை ஏற்படுத்தியிருக்கலாம் என்றும் அறிவியலாளர்கள் கருதுகின்றனர்.
- இந்த மோதல்களின் சிதைவுகள் பின்னர் நெப்டியூனின் தற்போதைய உள் நிலவுகள் மற்றும் வளையங்களை உருவாக்கின.

- சூரியக் குடும்பத்தில் தனது கோளின் சுழற்சிக்கு எதிர்த்திசையில் சுற்றும் ஒரே பெரிய நிலவு ட்ரைடன் ஆகும், இது ஈர்க்கப்பட்டிருக்கலாம் என்ற கோட்பாட்டை ஆதரிக்கிறது.

உலக சுகாதார அமைப்பின் புற்றுநோய் முகமையின் மருந்து வகைப்பாடு

- உலக சுகாதார அமைப்பின் (WHO) புற்றுநோய் ஆராய்ச்சி முகமையான புற்றுநோய் ஆராய்ச்சிக்கான சர்வதேச நிறுவனம் (IARC), பொதுவாகப் பயன்படுத்தப்படும் மூன்று மருந்துகளை "மனிதர்களுக்குப் புற்றுநோயை உண்டாக்கும் தன்மை கொண்டவை" (குழு 1) என வகைப்படுத்தியுள்ளது.
- ஹைட்ரோகுளோரோதியாசைட் (உயர் இரத்த அழுத்தத்திற்குப் பயன்படுத்தப் படுகிறது), வோரிகோனசோல் (பூஞ்சைத் தொற்றுகளுக்குப் பயன்படுத்தப் படுகிறது) மற்றும் டாக்ரோலிமஸ் (உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை நிராகரிப்பைத் தடுக்கப் பயன்படுத்தப்படும் நோயெதிர்ப்பு ஒடுக்கி) ஆகியன இந்த மருந்துகளாகும்.
- ஹைட்ரோகுளோரோதியாசைட் மற்றும் வோரிகோனசோல் ஆகியவை செதிள் உயிரணு தோல் புற்றுநோயின் அபாயத்துடன் தொடர்புடையவை, அதே சமயம் டாக்ரோலிமஸ் ஹாட்ஜ்கின் அல்லாத லிம்போமா மற்றும் மாற்று அறுவை சிகிச்சைக்குப் பிந்தைய நிணநீர் பெருக்கக் கோளாறுகளுடன் தொடர்புடையது.
- இந்த மருந்துகள் உலக சுகாதார அமைப்பின் (WHO) அத்தியாவசிய மருந்துகளின் மாதிரிப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன, மேலும் அவை உலகெங்கிலும் லட்சக்கணக்கான மக்களால் பயன்படுத்தப்படுகின்றன.
- மருத்துவ ஆலோசனையின்றி நோயாளிகள் இந்த மருந்துகளை நிறுத்திவிடக் கூடாது என நிபுணர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர், ஏனெனில் இந்த வகைப்பாடு சாத்தியமான ஆபத்துகளை மட்டுமே அடையாளம் காட்டுகிறது மற்றும் பரிந்துரைக்கப்பட்ட அளவுகளில் புற்றுநோய் அபாயத்தை அளவிடவில்லை.

இந்தியாவிற்கான ஹெக்சாவலண்ட் தடுப்பூசி ஊக்கம்

- இந்தியாவின் உலகளாவிய நோய்த்தடுப்பு திட்டத்தில் (UIP) ஹெக்சாவலண்ட் (ஆறுக்கு ஒன்று) தடுப்பூசியை அறிமுகப்படுத்துவது தடுப்பூசித் திறனை மேம்படுத்தும் என மத்திய சுகாதார அமைச்சகம் மற்றும் உலகளாவிய சுகாதார அமைப்புகளின் ஆய்வு கண்டறிந்துள்ளது.
- ஹெக்சாவலண்ட் தடுப்பூசியானது தொண்டை அடைப்பான் (Diphtheria), ரணஜன்னி (Tetanus), கக்குவான் இருமல் (Pertussis), ஹெபடைடிஸ் பி (Hepatitis B), ஹீமோபிலஸ் இன்ஃப்ளூயன்ஸா வகை b (Hib) மற்றும் போலியோ ஆகிய ஆறு நோய்களிலிருந்து பாதுகாக்கிறது.
- இது குழந்தைகளுக்குத் தேவைப்படும் ஊசிகளின் எண்ணிக்கையைக் குறைக்கவும், சுகாதாரப் பணியாளர்களின் பணிச்சுமையைக் குறைக்கவும், மற்றும் குளிர்பதனச் சங்கிலி மேலாண்மைத் தேவைகளைக் குறைக்கவும் முடியும்.
- இந்தியா ஆண்டுக்கு சுமார் 2.6 கோடி குழந்தைகளுக்குத் தடுப்பூசி செலுத்துகிறது, தற்போதைய அமைப்பில் தடுப்பூசி வருகைகளின் போது பல தடுப்பூசி அளவுகள் தேவைப்படுகின்றன.
- தடுப்பூசி ஆரம்பத்தில் அதிக செலவுகளைக் கொண்டிருந்தாலும், அதன் விலையைக் குறைப்பது அரசாங்கத்திற்கும் வீடுகளுக்கும் ஒட்டுமொத்த சேமிப்பை ஏற்படுத்தும் என அந்த ஆய்வு கண்டறிந்துள்ளது.

- எதிர்காலக் கொள்கை முடிவுகளில் தற்போதைய பென்டாவலண்ட் தடுப்பூசி மற்றும் பகுதியளவு செயலிழக்கப்பட்ட போலியோ தடுப்பூசி (IPV) அளவுகளை மாற்றுவதன் மூலம் இந்தத் தடுப்பூசி இந்தியாவின் நோய்த்தடுப்புத் திட்டத்தை எளிதாக்க முடியும்.

ஹான்லேயில் உள்ள இமயமலை சந்திரா தொலைநோக்கியின் 25 ஆண்டுகள்

- இது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் (DST) கீழ் செயல்படும் இந்திய வானியற்பியல் நிறுவனத்தால் (IIA) இயக்கப்படுகிறது.
- ஹான்லேயில் ஆண்டுதோறும் 250-க்கும் மேற்பட்ட தெளிவான இரவுகள் நிலவுவதால், இது ஒளியியல் மற்றும் அண்மை அகச்சிவப்பு வானியலுக்கு மிகவும் உகந்ததாக உள்ளது.
- இது பெங்களூரு, ஹோசகோட்டேயிலிருந்து INSAT-3B செயற்கைக்கோள் இணைப்பு மூலம் தொலைவிலிருந்து இயக்கப்படுகிறது.
- இது நோபல் பரிசு பெற்ற சுப்ரமணியன் சந்திரசேகரின் பெயரால் அழைக்கப் படுகிறது மற்றும் 2000 ஆம் ஆண்டு செப்டம்பர் 26 அன்று தனது முதல் ஒளியைப் பெற்றது.

காங்கோ எபோலா பாதிப்பு

- காங்கோ ஜனநாயகக் குடியரசில் (DRC) தற்போதைய பரவலில் 4,053 எபோலா பாதிப்புகளும் 1,850 உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன.
- 2026 ஆம் ஆண்டு மே 15 அன்று இந்தப் பரவல் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது, ஆனால் இத்தூரி மாகாணத்தில் இது 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலோ அல்லது அதற்கு முன்னதாகவோ தொடங்கியிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- எபோலா வைரஸ் நோய் (EVD) என்பது காய்ச்சல், பலவீனம், தசை வலி, வாந்தி, வயிற்றுப் போக்கு மற்றும் இரத்தப்போக்கு ஆகியவற்றை ஏற்படுத்தக்கூடிய ஒரு கடுமையான வைரஸ் நோயாகும்.
- எபோலா முக்கியமாக பாதிக்கப்பட்ட மக்களின் இரத்தம் அல்லது உடல் திரவங்களுடனான நேரடித் தொடர்பின் மூலமும், பாதிக்கப்பட்ட உடல்களுடனான தொடர்பின் மூலமும் பரவுகிறது.
- 28,000-க்கும் மேற்பட்ட பாதிப்புகளை ஏற்படுத்திய 2014-16 ஆம் ஆண்டு மேற்கு ஆப்பிரிக்கப் பரவலுக்குப் பிறகு, 2026 ஆம் ஆண்டுப் பரவல் பதிவு செய்யப்பட்ட இரண்டாவது மிகப்பெரிய எபோலா பரவலாகும்.

குளுபால் (Glueball) கண்டுபிடிப்பு

- பெய்ஜிங்கில் உள்ள BESIII பரிசோதனையின் தரவுகளைப் பயன்படுத்தும் அறிவியலாளர்கள், X(2370) ஒரு குளுபாலாக இருக்கலாம் என்பதற்கான வலுவான ஆதாரங்களைக் கண்டறிந்துள்ளனர்.
- 'குளுபால்' (glueball) என்பது strong force எனப்படும் வலிமையான விசையைக் கடத்தும் துகள்களான 'குளுவான்'களால் (gluons) மட்டுமே ஆன ஒரு கூட்டுத் துகள் ஆகும்.
- குவாண்டம் குரோமோடைனமிக்ஸ் (QCD) என்பது வலுவான தொடர்புகளை விவரிக்கும் கோட்பாடாகும், மேலும் இது குளுவான்கள் ஒன்றையொன்று ஈர்க்கவும் மற்றும் குளுபால்களை உருவாக்கவும் அனுமதிக்கிறது.

- அறிவியலாளர்கள் முதன்முதலில் 2011 ஆம் ஆண்டில் X(2370)-ஐ அதன் நிறை மற்றும் சிதைவு பண்புகளின் அடிப்படையில் சாத்தியமான குளுபால் துகளாக அடையாளம் கண்டனர்.
- புதிய BESIII தரவுகள், X(2370) ஒரு முக்கிய குளுபால் கூறுகளைக் கொண்டிருப்பதற்கான சாத்தியத்தை ஆதரிக்கும் கூடுதல் பண்புகளை வெளிப்படுத்தின.
- இது உறுதிப்படுத்தப்பட்டால், அடிப்படை விசையின் கடத்திகளிலிருந்து மட்டுமே உருவாக்கப்பட்ட பொருளின் முதல் ஆதாரமாக இது இருக்கலாம்.

இந்தியாவின் சந்திர விண்வெளித் திட்டக் கூட்டாண்மை

- ஆர்ட்டெமிஸ் ஒப்பந்தத்தின் கீழ் அதன் சந்திர தளத் திட்டத்தில் இணைவதற்கு இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திற்கு (ISRO) நாசா (NASA) அழைப்பு விடுத்துள்ளது.
- பெங்களூருவில் நடைபெற்ற 9வது இந்தியா-அமெரிக்க சிவில் விண்வெளி கூட்டுப் பணிக்குழு (CSJWG) கூட்டத்தில் இந்த அழைப்பு குறித்து விவாதிக்கப்பட்டது.
- அமைதியான சந்திர மற்றும் ஆழமான விண்வெளி ஆய்வுகளில் ஒத்துழைப்பை ஆதரிக்கும் வகையில், 2023 ஆம் ஆண்டு ஜூன் 21 அன்று ஆர்ட்டெமிஸ் ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டது.
- நாசாவும் இஸ்ரோவும் தங்களது பரந்த சிவில் விண்வெளி ஒத்துழைப்பின் கீழ் திறந்த அறிவியல் தரவுப் பகிர்வை மேம்படுத்த ஒப்புக் கொண்டுள்ளன.
- 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஏவப்பட்ட நாசா-இஸ்ரோ செயற்கை துளை ரேடார் (NISAR) திட்டத்தைத் தொடர்ந்து இந்த ஒத்துழைப்பு உருவாகியுள்ளது.

புதிய AI புற்றுநோய் கட்டமைப்பு

- எஸ். என். போஸ் தேசிய அடிப்படை அறிவியல் மையம் (SNBNCBS) மற்றும் அசோகா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், மறைந்திருக்கும் புற்றுநோய் தண்டு போன்ற செல்களை (cancer stem-like cells) அடையாளம் காண ஒரு செயற்கை நுண்ணறிவு (AI) கட்டமைப்பை உருவாக்கியுள்ளனர்.
- புதிய கட்டமைப்பான ACSCeND (செயற்கை நுண்ணறிவு சார்ந்த புற்றுநோய் தண்டு செல் போன்ற செல்களின் பண்புருவாக்கி மற்றும் நியோபிளாசம் பிரித்தறியும் செயல்முறை), முகிழ்த் திறன் கொண்டவை போன்ற (pluripotent-like), பலவகைத் திறன் கொண்டவை போன்ற (multipotent-like) மற்றும் மற்றும் ஒருவகைத் திறன் கொண்டவை போன்ற (unipotent-like) ஆகிய மூன்று வளர்ச்சி நிலைகளை அடையாளம் காட்டுகிறது.
- இது வழக்கமான பெரும் அளவிலான ஆர்.என்.ஏ (RNA - ரிபோநியூக்ளிக் அமிலம்) வரிசைமுறைத் தரவுகளைப் பகுப்பாய்வு செய்ய முடியும், இது ஆயிரக்கணக்கான நோயாளிகளின் மாதிரிகளில் மறைக்கப்பட்ட செல் எண்ணிக்கையை ஆய்வு செய்ய அனுமதிக்கிறது.
- TCGA (புற்றுநோய் மரபணுத் தொகுப்பு வரைபடம்) மற்றும் ப்ரீகாக் (PRECOG) உள்ளிட்ட தரவுத்தளங்களிலிருந்து 25,000-க்கும் மேற்பட்ட பெரும் அளவிலான மாதிரிகளுக்கு ஆராய்ச்சியாளர்கள் ACSCeND-ஐ பயன்படுத்தினர்.
- அதிக வீரியம் கொண்ட, முகிழ்த் திறன் கொண்டவை போன்ற புற்றுநோய் தண்டு செல்களைக் கொண்ட கட்டிகள் மோசமான உயிர்வாழ்வு விகிதம், அதிக கட்டி மீண்டும்

வருவதற்கான வாய்ப்பு மற்றும் நோயெதிர்ப்பு சிகிச்சைக்கு குறைவான பதிலளிப்பு ஆகியவற்றுடன் தொடர்புடையவையாக இருந்தன.

- இந்தக் கட்டமைப்பானது, நோய் மீண்டும் வருவதற்கான அதிக அபாயத்தில் உள்ள நோயாளிகளை அடையாளம் காணவும், துல்லியமான புற்றுநோய் சிகிச்சைகளை உருவாக்குவதற்கு ஆதரவளிக்கவும் உதவும்.

CO2 பிடிப்பு செயல்முறை - ஐஐடி குவஹாத்தி

- கார்பன் டை ஆக்சைடைப் (CO2) பெற்று, உயிரினத்திரளை உற்பத்தி செய்யவும் மற்றும் உயிரி ஆற்றலை உருவாக்கவும் இந்திய தொழில்நுட்பக் கழகம் குவஹாத்தி இரண்டு-கட்ட நுண்பாசி செயல்முறையை உருவாக்கியுள்ளது.
- முதல் கட்டத்தில் விரைவான நுண்பாசி வளர்ச்சிக்காக 15 சதவீத CO2 பயன்படுத்தப் படுகிறது, அதே நேரத்தில் இரண்டாவது கட்டத்தில் கால்சியம் மற்றும் பாஸ்பரஸுடன் 5 சதவீத CO2 பயன்படுத்தப்படுகிறது.
- இந்த செயல்முறையானது வழக்கமான முறைகளை விட 25.7 சதவீதம் அதிக உயிரினத்திரள் உற்பத்தி மற்றும் 35.4 சதவீதம் அதிக CO2 நிலைநிறுத்தலை அடைந்தது.
- இது 1.86 மடங்கு அதிக கொழுப்பு உற்பத்தி மற்றும் 37.65 சதவீதம் அதிக உயிரி ஆற்றல் திறனையும் பதிவு செய்துள்ளது.
- கால்சியம் சுய-திரட்டலை ஊக்குவித்தது, குறைந்த ஆற்றல் பயன்பாட்டுடன் 98.46 சதவீத நுண்பாசி உயிரினத்திரளை மீட்டெடுக்க உதவுகிறது.

முதல் ISS விண்வெளி நடை - அனில் மேனன்

- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நாசா விண்வெளி வீரர் அனில் மேனன், சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு (ISS) வெளியே தனது முதல் விண்வெளி நடையை நிறைவு செய்துள்ளார்.
- இது, சுற்றுப்பாதையில் அவரது முதல் பயணத்தில் ஒரு முக்கிய மைல்கல்லைக் குறிக்கிறது.
- மேனனும் நாசா விண்வெளி வீராங்கனை ஜெசிகா மெயரும், சுற்றுப்பாதை ஆய்வகத்திற்கு வெளியே 6 மணி நேரம் 27 நிமிடங்கள் செலவழித்த பிறகு, அமெரிக்க விண்வெளி நடை 96-ஐ நிறைவு செய்தனர்.
- எதிர்கால மேம்பாடுகளுக்காக நிலையத்தின் 3B மின்சார வழித்தடத்தைத் தயார் செய்வதே விண்வெளி வீரர்களின் முக்கியப் பணியாக இருந்தது.
- கூடுதல் சர்வதேச விண்வெளி நிலைய ரோல்-அவுட் சோலார் அரேக்களை (IROSA) நிறுவுவதற்கு இது வழி வகுக்கும் என்பதால் இந்தப் பணி முக்கியத்துவம் வாய்ந்தது.
- இந்த சோலார் அரேக்கள் (சூரிய ஆற்றல் தகடுத் தொகுப்புகள்), பழைமையான சுற்றுப்பாதை ஆய்வகத்திற்கு அதிக மின்சாரத்தை வழங்கி, அதன் அமைப்புகளுக்கு ஆற்றல் அளிக்கவும், இறுதியில் பாதுகாப்பான மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட சுற்றுப்பாதை இறக்கத்திற்கு ஆதரவளிக்கவும் உதவும்.
- விண்வெளி வீரர்கள் தங்களின் முதன்மை நோக்கங்களை நிறைவு செய்தனர், அதாவது விண்வெளி நடைக்காகத் திட்டமிடப்பட்ட முக்கியப் பணிகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டன.

- ஒரு விண்வெளி நடை என்பது அடிப்படையில் ஒரு விண்வெளி வீரரின் மிகவும் சவாலான பராமரிப்புப் பணியாகும்.
- விண்வெளி நடை என்பது, ஒரு விண்வெளி வீரர் அல்லது காஸ்மோனாட், விண்கலத்தை விட்டு வெளியேறி, விண்வெளிக்கு வெளியே செயல்படும் ஒரு செயலாகும்.
- இது EVA என்றும் அழைக்கப்படுகிறது, இதன் விரிவாக்கம் எக்ஸ்ட்ராவெஹிகுலர் ஆக்டிவிட்டி (extravehicular activity) ஆகும்.
- சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு (ISS) வெளியே, விண்வெளி வீரர்கள் விண்வெளியின் வெற்றிடத்தில் பணியாற்றுகிறார்கள்; அப்போது அவர்கள் ஆக்சிஜன், வெப்பநிலை கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்புக்காக முற்றிலும் தங்கள் விண்வெளி உடைகளையே சார்ந்திருக்கிறார்கள்.
- விண்வெளியில் உள்ள செயற்கைக்கோள்கள் அல்லது விண்கலங்களை அவர்களால் பழுதுபார்க்க முடியும்.
- விண்வெளி நடைகளில் செல்வதன் மூலம், விண்வெளி வீரர்கள் பொருட்களைப் பழுதுபார்ப்பதற்காக பூமிக்குத் திரும்பக் கொண்டு வருவதற்குப் பதிலாக, அவற்றைத் தாங்களே சரி செய்ய முடியும்.

பிஜியில் எச்.ஐ.வி பரவல்

- உலகின் மிக வேகமாக வளர்ந்து வரும் மனித நோயெதிர்ப்புச் சக்தி குறைபாடு வைரஸ் (HIV) பாதிப்புகளில் ஒன்றை பிஜி நாடு எதிர்கொண்டுள்ளது.
- வயது வந்தோரிடையே எச்.ஐ.வி பாதிப்பு 1.6 சதவீதத்தை எட்டியுள்ளது, மேலும் எச்.ஐ.வியுடன் வாழும் மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் மட்டுமே தங்களது பாதிப்பு நிலையை அறிந்துள்ளனர்.
- 2030 ஆம் ஆண்டிற்குள் புதிய எச்.ஐ.வி பாதிப்புகள் மும்மடங்காக அதிகரிக்கும் என கணிக்கப்பட்டுள்ளது, அதேவேளையில் போதைப்பொருள் பயன்பாடு, ஊசிகளைப் பகிர்ந்து கொள்வது மற்றும் சமூகக் களங்கம் ஆகியவை இந்த நோய் பரவலுடன் தொடர்புடைய முக்கிய காரணிகளாக உள்ளன.
- பிஜி நாடு 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் எச்.ஐ.வி பரவலை அதிகாரப்பூர்வமாக அறிவித்ததுடன், தேசிய எச்.ஐ.வி பரவல் தடுப்பு சிறப்பு அதிரடிப்படையையும் அமைத்துள்ளது.
- பிஜி நாடு எச்.ஐ.வி முன்காப்பு சிகிச்சை (PrEP) முறையை விரிவுபடுத்துகிறது, மேலும் உலகளாவிய நிதியத்தின் (Global Fund) மூலம் லெனகாபவிர் (Lenacapavir) என்ற நீண்ட காலம் செயல்படக் கூடிய ஊசி மூலம் செலுத்தப்படும் எச்.ஐ.வி தடுப்பு மருந்தை பெற உள்ளது.

அசாதாரண கருந்துளை கண்டுபிடிப்பு

- ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கியை (JWST) பயன்படுத்தி, பிரபஞ்சம் சுமார் 660 மில்லியன் ஆண்டுகள் பழமையானதாக இருந்தபோது உருவான ஒரு அசாதாரண கருந்துளையை சர்வதேச வானியலாளர்கள் குழு கண்டறிந்துள்ளது.
- இந்த விண்பொருள் 'லிட்டில் ரெட் டாட்ஸ்' (LRDs) வகைகளில் ஒன்றாகும், மேலும் இது ஹைட்ரஜன் வாயுவின் ஒரு பெரிய கூட்டத்தால் சூழப்பட்ட அதிவேகமாக வளரும் கருந்துளையாகத் தோன்றுகிறது.

- முன்பு கருதப்பட்டதைப்போல தூசியால் அல்லாமல், அடர்த்தியான வாயு காரணமாகவே இந்த சிவப்பு நிறம் ஏற்பட்டிருக்கலாம் என அவதானிப்புகள் கூறுகின்றன.
- ஆரம்பகாலப் பிரபஞ்சத்தில் சில கருந்துளைகள் எவ்வாறு மிக வேகமாக வளர்ந்தன என்பதை விளக்க இந்த வாயுக்கூட்டம் உதவக்கூடும்.
- இந்தக் கருந்துளையைச் சுற்றி பல மில்லியன் கிலோமீட்டர் பரப்பளவிற்கு ஒரு கன சென்டிமீட்டருக்கு சுமார் 100 பில்லியன் துகள்களைக் கொண்ட ஹைட்ரஜன் வாயு சூழ்ந்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் முதல் வணிகரீதியான புவிக் கண்காணிப்பு செயற்கைக்கோள் கூட்டமைப்பு

- பொது-தனியார் பங்களிப்பு (PPP) மாதிரியின் கீழ் இந்தியாவின் முதல் முழுமையான வணிக ரீதியான உள்நாட்டு புவிக் கண்காணிப்பு (EO) செயற்கைக்கோள் கூட்டமைப்பிற்கு IN-SPACe ஒப்புதல் அளித்துள்ளது.
- பிக்சல் ஸ்பேஸ் இந்தியா தலைமையிலான அலைடு ஆர்பிட்ஸ் பிரைவேட் லிமிடெட் கூட்டமைப்பில் துருவா ஸ்பேஸ், பியர்சைட் ஸ்பேஸ் மற்றும் சாட்சூர் அனலிட்டிக்ஸ் இந்தியா ஆகிய நிறுவனங்கள் அடங்கும்.
- இந்தக் கூட்டமைப்பு 2029 ஆம் ஆண்டிற்குள் 12 செயற்கைக்கோள்களை உருவாக்கி இயக்குவதற்கு ₹1,200 கோடிக்கு மேல் முதலீடு செய்யும்.
- இந்தச் செயற்கைக்கோள்கள் பான்குரோமாடிக், மல்டிஸ்பெக்ட்ரல், ஹைப்பர் ஸ்பெக்ட்ரல் மற்றும் செயற்கை துளை ரேடார் (SAR) படங்களை வழங்கும்.
- அனைத்து செயற்கைக் கோள்களும் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டு, இந்திய ஏவூர்திகள் மூலம் விண்ணில் செலுத்தப்படும்.

பாக்டீரியா எதிர்ப்புத் திறன் கொண்ட எலும்புப் பொருத்துதல்/உள்வைப்பு

- இந்தியத் தொழில்நுட்பக் கழகம் (IIT) மண்டியின் ஆராய்ச்சியாளர்கள், முப்பரிமாண (3D) அச்சு முறையில் தயாரிக்கப்பட்ட எலும்புப் பொருத்துதல்களுக்கான (bone implants), உயிரியல் அமைப்பால் ஈர்க்கப்பட்ட ஒரு பூச்சினை உருவாக்கியுள்ளனர்.
- இப்பூச்சு கடல் முள்ளெலிகளைப் போன்ற சிறிய ஹைட்ராக்ஸியபடைட் அமைப்புகளைப் பயன்படுத்துகிறது மற்றும் பாக்டீரியாக்களை இயந்திரத்தனமாக சேதப்படுத்தும் திறன் கொண்டது.
- இந்த உள்வைப்புகள் பாலில்லாட்டிக் அமிலம் (PLA) என்ற மட்கக்கூடிய நெகிழியைப் பயன்படுத்துகின்றன, ஆனால் இதன் மேற்பரப்பு எலும்புகளுடன் எளிதில் பிணைக்கப்படுவதில்லை.
- புதிய பூச்சு எலும்பு ஒருங்கிணைப்பை மேம்படுத்துகிறது மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பிகள் அல்லது வேதிப்பொருட்களைச் சார்ந்திருக்காமல் பாக்டீரியா தொற்றைக் குறைக்க உதவுகிறது.
- இந்த நுட்பத்தில் உள்வைப்பை காரக் கரைசலால் சிகிச்சை செய்து, பின்னர் 90°C வெப்பநிலையில் நீர்வெப்பச் சிகிச்சை அளிப்பதன் மூலம் ஊசி போன்ற ஹைட்ராக்ஸியபடைட் கொத்துகள் உருவாக்கப்படுகின்றன.

மெகா-எர்த் GJ 523b

- அறிவியலாளர்கள் "மெகா-எர்த்" (மிகப்பெரிய பூமி) என வகைப்படுத்தப்பட்ட புறக்கோளான GJ 523b-ஐ கண்டறிந்துள்ளனர்.
- இது பூமியைப் போல சுமார் 2.55 மடங்கு ஆரத்தையும், 23.5 மடங்கு நிறையையும், தோராயமாக 7.8 கி/செ.மீ^{3} அடர்த்தியையும் கொண்டுள்ளது.
- இது 538 K என்ற மதிப்பிடப்பட்ட சமநிலை வெப்பநிலையுடன், ஒவ்வொரு 17.75 நாட்களுக்கு ஒருமுறை நடுத்தர-K குறுமீனை (mid-K dwarf star) சுற்றி வருகிறது.
- நாசாவின் TESS (கடப்பு புறக்கோள் ஆய்வு செயற்கைக்கோள்) விண்கலத்தின் கடப்புக் கால உற்றுநோக்கல்கள் மற்றும் WIYN 3.5-மீட்டர் தொலைநோக்கியில் உள்ள NEID நிறமாலைமானியிலிருந்து (spectrograph) பெறப்பட்ட ஆரத் திசைவேக அளவீடுகளைப் பயன்படுத்தி இதன் பண்புகள் தீர்மானிக்கப்பட்டன.
- "மெகா-எர்த்" என்பது குறைந்தபட்சம் 2.1 பூமி ஆரமும் குறைந்தது 5.5 கி/செ.மீ^{3} அடர்த்தியும் கொண்ட பாறைகளால் ஆன புறக்கோளாகும்.
- இந்தக் கோள் அமைப்பு சுமார் 169 மில்லியன் ஆண்டுகள் பழமையானது என மதிப்பிடப் பட்டுள்ளது; இத்தகைய ஒரு கோள் தடிமனான வாயு உறையை (gas envelope) உருவாக்கும் என்ற எதிர்பார்ப்புகளுக்கு, இதன் வழக்கத்திற்கு மாறான பாரிய பாறைத் தன்மை சவாலாக அமைந்துள்ளது.

பால்வீதியின் அதிவேக நட்சத்திரம் - S301

- பால்வீதியில் உறுதிப்படுத்தப்பட்ட சுற்றுப்பாதையில் மிக வேகமாக நகரும் நட்சத்திரமாக S301-ஐ அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- S301 சுமார் 25,000 கி.மீ/வி என்ற அதிகபட்ச வேகத்தை அடைகிறது, இது ஒளியின் வேகத்தில் கிட்டத்தட்ட 8% ஆகும்.
- இது பால்வீதியின் மையத்தில் உள்ள அதிக நிறை கொண்ட கருந்துளையான (supermassive black hole) சஜிட்டேரியஸ் ஏ* (Sagittarius A*)-ஐ சுற்றி 8.7 ஆண்டுகள் கொண்ட அதிக நீள்வட்டப் பாதையைப் பின்பற்றுகிறது.
- மிக நெருக்கமான அணுகுமுறையில், S301 சஜிட்டேரியஸ் ஏ*-இன் சுமார் 12 வானியல் அலகுகளுக்குள் (AU) வருகிறது.
- சிலியில் உள்ள ஐரோப்பிய தெற்கு ஆய்வகத்தின் (European Southern Observatory) மிகப் பெரிய தொலைநோக்கி குறுக்கீட்டுமானி (VLTI) மூலம் பெறப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி இந்தக் கண்டுபிடிப்பு நிகழ்த்தப்பட்டது.

ஸ்விஃப்ட் மீட்புப் பணி

- மீட்பு விண்கலமான லிங்க் (LINK) கட்டுப்பாட்டுச் சமிக்ஞைகளைச் சந்தித்ததையடுத்து, நீல் கெஹ்ரெல்ஸ் ஸ்விஃப்ட் ஆய்வகத்தை மீட்கும் முயற்சியை நாசா கைவிட்டது.
- கேட்டலிஸ்ட் ஸ்பேஸ் (Katalyst Space) உருவாக்கிய லிங்க் மீட்பு விண்கலம், குறைந்து வரும் ஸ்விஃப்ட்டின் சுற்றுப்பாதையை உயர்த்துவதற்காக 2026 ஆம் ஆண்டு ஜூலை 3 அன்று விண்ணில் செலுத்தப்பட்டது.

- லிங்க்கின் சில எதிர்வினைச் சக்கரங்கள் பழுதடைந்ததால் அது கட்டுப்பாட்டை இழந்து சுழலத் தொடங்கியது; உந்துவிசைகள் மூலம் அதனை நிலைநிறுத்த எடுக்கப் பட்ட முயற்சிகள் தோல்வியடைந்தன.
- 2004 ஆம் ஆண்டில் விண்ணில் செலுத்தப்பட்ட ஸ்விஃப்ட், காமா கதிர் வெடிப்புகள் மற்றும் பிற அதிக ஆற்றல் கொண்ட பிரபஞ்ச நிகழ்வுகளை ஆய்வு செய்கிறது.
- சுற்றுப்பாதை உயர்த்தப்படாவிட்டால், 2026 ஆம் ஆண்டின் இறுதிக்குள் ஸ்விஃப்ட் மீண்டும் பூமியின் வளிமண்டலத்தில் நுழையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

ஆப்பிரிக்காவின் போலியோ மீதான கட்டுப்பாடு

- 2026 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூன் வரை நடத்தப்பட்ட மதிப்பீடுகளுக்குப் பிறகு புருண்டி, கானா, கினியா-பிசாவ், காங்கோ குடியரசு மற்றும் உகாண்டா ஆகிய நாடுகளில் வகை 2 போலியோ வைரஸ் பரவல் முடிவுக்கு வந்துள்ளதை உலக சுகாதார அமைப்பு (WHO) உறுதிப்படுத்தியுள்ளது.
- இந்த மதிப்பீடுகள் நோய் கண்காணிப்பு, ஆய்வக சான்றுகள், மக்களின் நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் தடுப்பூசி பிரச்சாரத்தின் செயல்திறன் ஆகியவற்றை ஆய்வு செய்தன.
- இந்த ஐந்து நாடுகளும் வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்காக வழக்கமான தடுப்பூசி செலுத்துதல், நோயைக் கண்டறிதல், கண்காணிப்பு மற்றும் இலக்கு வைக்கப்பட்ட நோய்த்தடுப்பு ஆகியவற்றை வலுப்படுத்தின.
- கினியா-பிசாவில் 2021 ஆம் ஆண்டு ஜூலை முதல் எந்தவொரு போலியோ வைரஸ் பாதிப்பும் பதிவாகவில்லை. அதேவேளையில் காங்கோ குடியரசு தனது கடைசி பாதிப்பை 2023 ஆம் ஆண்டு டிசம்பரில் பதிவு செய்தது.
- அதிக தொற்றுத்தன்மை கொண்ட ஒரு வைரஸான போலியோ வைரஸ் முக்கியமாக நரம்பு மண்டலத்தைப் பாதிக்கிறது மற்றும் குணப்படுத்த முடியாத பக்கவாதத்தை ஏற்படுத்தும், எனினும், தடுப்பூசி மூலம் போலியோவைத் தடுக்க முடியும்.

ஜிசாட்-1A திட்டம் – இஸ்ரோ

- சமீபத்தில் ஏவுதல்கள் நிறுத்தப்பட்டிருந்த நிலையில், 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஜிசாட்-1A (புவிசார் படமெடுக்கும் செயற்கைக்கோள்-1A) செயற்கைக் கோளை ஏவ இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.
- கடந்த 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மேற்கொள்ளப்பட்ட GSLV-F10 (புவி-ஒத்திசைவு செயற்கைக் கோள் ஏவு வாகனம்-F10) திட்டத்தின் போது இழக்கப்பட்ட EOS-03 (புவி கண்காணிப்பு செயற்கைக்கோள்-03) எனப்படும் ஜிசாட்-1 செயற்கைக்கோளுக்கு மாற்றாக ஜிசாட்-1A செயல்படும்.
- வால்வு கசிவு காரணமாக திரவ-ஹைட்ரஜனின் அழுத்தம் குறைந்ததால், கிரையோ ஜெனிக் மேல் நிலை இயங்காமல் போனதன் காரணமாக 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்ட அத்திட்டம் தோல்வியடைந்தது.
- ஜிசாட்-1A செயற்கைக்கோள் GSLV Mk-II (புவி-ஒத்திசைவு செயற்கைக்கோள் ஏவு வாகனம் மார்க்-II) மூலம் ஏவப்பட உள்ளது. மேலும் இது வெள்ளம், புயல், விவசாயம் மற்றும் காடுகளைக் கண்காணிப்பதற்காக இந்தியாவின் பரந்த அளவிலான பகுதிகளைக் கண்காணித்து தகவல்களை வழங்கும்.

- ஏவுகலக் கருவியின் நம்பகத்தன்மை, சுற்றுப்பாதையில் நிலைநிறுத்துதல் மற்றும் புகைப்படம் எடுக்கும் செயல்திறன் ஆகியவற்றை இத்திட்டம் சோதிப்பதுடன் NavIC (இந்திய விண்மீன் தொகுதியைக் கொண்டு வழிச்செலுத்துதல்) அமைப்புக்காக திட்டமிடப்பட்டுள்ள NVS-03 (வழிச்செலுத்தல் செயற்கைக்கோள்-03) திட்டத்திற்கு முன்னதாக இது ஒரு முக்கியமான திட்டமாகப் பார்க்கப்படுகிறது.

பாரதிய அந்தரிக்சா நிலையத்தின் (BAS) முதல் தொகுதி

- 2035-ஆம் ஆண்டுக்குள் தனது சொந்த விண்வெளி நிலையத்தை நிறுவுவதற்கான பணிகளில் இந்தியா ஈடுபட்டுள்ளது.
- முன்மொழியப்பட்ட பாரதிய அந்தரிக்சா நிலையத்தின் முதல் தொகுதிக்கு இஸ்ரோ ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த நிலையத்தின் முதல் தொகுதி BAS-01 என்று அழைக்கப்படுகிறது.
- இது 400 முதல் 450 கிலோமீட்டர் உயரத்தில், புவியின் தாழ் சுற்றுப்பாதையில் 52 டன் எடையுள்ள விண்வெளி நிலையமாகத் திட்டமிடப்பட்டுள்ளது.
- மூன்று முதல் ஆறு மாதங்கள் வரை தங்குவதற்கு, மூன்று முதல் நான்கு விண்வெளி வீரர்களைக் கொண்ட குழுவிற்கு ஆதரவளிக்கும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.
- முன்மொழியப்பட்ட இந்த நிலையம் ஐந்து தொகுதிகளைக் கொண்டிருக்கும்.
- அதே சமயம், ககன்யான் திட்டமும் செயல்பாட்டில் உள்ளது.

FWD சுப்ரீம் லைட்

- இந்தியப் பாதுகாப்புப் புத்தொழில் நிறுவனமான பிளையிங் வெட்ஜ் டிஃபென்ஸ் & ஏரோஸ்பேஸ் (FWDA), இந்தியாவின் முதல் AI மூலம் இயக்கப்படும் போர் விமானத் திட்டமான FWD சுப்ரீம் லைட்டை (FWD Supreme Lite) அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது எதிர்காலத் தன்னாட்சி போர் விமானங்களுக்கான தொழில்நுட்பங்களைச் சோதிக்க வடிவமைக்கப்பட்ட 250-கிலோ அளவிலான விமானத் தொழில்நுட்ப செயல் விளக்க அமைப்பாகும்.
- இந்தச் செயல்விளக்க மாதிரி, விமானக் கட்டமைப்பு மேம்பாடு, அமைப்பு ஒருங்கிணைப்பு மற்றும் தரைவழிச் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது. இதன் முதல் பறப்பு 2026-ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இலக்காகக் கொள்ளப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டம் பெங்களூருவை தளமாகக் கொண்ட இந்தியப் பாதுகாப்பு புத்தொழில் நிறுவனமான FWDA ஆல் உருவாக்கப்படுகிறது, மேலும் இது இந்தியாவில் வடிவமைக்கப் பட்டு உருவாக்கப்பட்டது.
- பரந்த FWD சுப்ரீம் தொகுப்பானது AI-இயக்கப்பட்ட தன்னாட்சி போர் நடவடிக்கைகளை மையமாகக் கொண்டு, நிறுவனத்தின் "மாபிங்/கும்பல் தாக்குதல் கோட்பாடு" (Mobbing Doctrine) அடிப்படையிலானது.

சுற்றுச்சூழல் செய்திகள்

ஹூபாரா கானமயில் பறவை பாதுகாப்பு முன்னெடுப்பு

- ஏரல் கடல் பகுதியில் பல்லுயிர் தன்மையை மீட்டெடுப்பதற்காக உஸ்பெகிஸ்தான், கராகல்பக்ஸ்தானில் 672 ஹூபாரா கானமயில்களை (கிளமிடோடிஸ் மேக்வீனி) விடுவித்தது.
- ஹூபாரா கானமயில், IUCN செந்நிறப் பட்டியலின் கீழ் 'எளிதில் பாதிக்கப்படக்கூடிய இனம்' என வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அழிந்து வரும் வனவிலங்குகள் மற்றும் தாவரங்களின் சர்வதேச வர்த்தக மாநாட்டின் (CITES) கீழ் பாதுகாக்கப்படுகிறது.
- கஜகஸ்தானில் உள்ள ஒரு சிறப்பு மையத்தில் சிறைப்பிடிக்கப்பட்டு வளர்க்கப்பட்ட இப்பறவைகள், உஸ்பெகிஸ்தான், கஜகஸ்தான் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் (UAE) ஆகியவற்றின் கூட்டுப் பாதுகாப்பு முயற்சியின் கீழ் விடுவிக்கப்பட்டன.
- சோவியத் காலத்து பருத்தி சாகுபடிக்காக அமு தர்யா நதியிலிருந்து தண்ணீர் திருப்பி விடப்பட்டதன் காரணமாக, ஏரல் கடல் அதன் 1960 களின் அளவிலிருந்து சுமார் 10% ஆகக் குறைந்துள்ளது.
- இந்த பாதுகாப்புத் திட்டமானது வாழ்விடங்களை மீட்டெடுப்பதையும், வலசை போகும் உயிரினங்களைப் பாதுகாப்பதையும், மத்திய ஆசியாவில் சுற்றுச்சூழல் நிலைத் தன்மையை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

புலிகள் காப்பகங்களுக்கு வெளியே புலிகளைப் பாதுகாக்கும் முன்னெடுப்பு

- பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கு வெளியே வாழும் புலிகளைப் பாதுகாக்கவும், மனித-புலி மோதலைக் குறைக்கவும் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் (MoEFCC) 'புலிகள் காப்பகங்களுக்கு வெளியே புலிகளைப் பாதுகாக்கும் திட்டம்(TOTR)' என்ற முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது.
- தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் (NTCA) கூற்றுப்படி, இந்தியாவின் புலி எண்ணிக்கையில் 35–40% இப்போது நியமிக்கப்பட்ட புலிகள் காப்பகங்களுக்கு வெளியே வாழ்கின்றன என்ற நிலையில் இதனால் நிலப்பரப்பு அளவிலான பாதுகாப்பு அவசியமாகிறது.
- இதன் முதல் கட்டமானது, உத்தரகாண்ட், உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, கர்நாடகா, தமிழ்நாடு, தெலங்கானா மற்றும் அசாம் ஆகிய ஒன்பது மாநிலங்களில் உள்ள 40 வனக் கோட்டங்களை உள்ளடக்கும்.
- இந்த முன்னெடுப்பானது, முன்னெச்சரிக்கை அமைப்புகள், விரைவு அதிரடிப் படைகள், மீட்பு உள்கட்டமைப்பு, கேமரா பொறிகள், ஆளில்லா விமானங்கள், செயற்கை நுண்ணறிவு (AI), உலகளாவிய இடமறிதல் அமைப்பு (GPS) அடிப்படையிலான கண்காணிப்பு, சமூகப் பங்கேற்பு மற்றும் உரிய நேரத்தில் வழங்கப் படும் இழப்பீடு ஆகியவற்றை வலுப்படுத்தும்.
- இந்தியா 84,488 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் 58 புலிகள் காப்பகங்களைக் கொண்டுள்ளது, மேலும் அகில இந்திய புலிகள் மதிப்பீடு (2022) 3,682 புலிகளைப் பதிவு செய்துள்ளது, இது உலகின் காட்டுப் புலிகள் எண்ணிக்கையில் 70% க்கும் அதிகமாகும்.

காவல் புலிகள் காப்பகம்

- தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையம் (NTCA), தெலங்கானாவில் உள்ள காவல் புலிகள் காப்பகத்தை, புலிகளை மீட்டெடுப்பதற்கான ஒரு முன்னுரிமைத் தளமாக அடையாளம் கண்டுள்ளது.
- தமக்கு ஏற்ற வறண்ட இலையுதிர் காடுகள் வாழ்விடத்தைக் கொண்டிருந்த போதிலும், தற்போது இங்கு நிரந்தரமாக வசிக்கும் இனப்பெருக்கப் புலிகளின் கூட்டம் இல்லை.
- அகில இந்தியப் புலிகள் கணக்கெடுப்பில் (AITE), காவலில் நிரந்தரமாக வசிக்கும் புலி எதுவும் பதிவு செய்யப்படவில்லை.
- காவல் புலிகள் காப்பகம், மத்திய இந்தியப் புலிகள் நிலப்பரப்பை, தடோபா-அந்தாரி (மகாராஷ்டிரா) மற்றும் இந்திராவதி (சத்தீஸ்கர்) காப்பகங்களுடன் இணைக்கிறது.
- இது வடக்கு தெலங்கானாவில் கோதாவரி மற்றும் கடம் நதிப் படுகைகளின் ஓரத்தில் அமைந்து ள்ளது.
- இந்தப் பரிந்துரையானது, NTCA மற்றும் இந்திய வனவிலங்கு நிறுவனம் இணைந்து வெளியிட்ட 'இந்தியாவில் புலிகளைத் தீவிரமாக நிர்வகிப்பதற்கான செயல் திட்டத்தின்' ஒரு பகுதியாகும்.
- காவலில் வெப்பமண்டல வறண்ட இலையுதிர் காடுகள், தேக்கு மரங்கள் நிறைந்த வனப்பகுதிகள், மூங்கில் தோப்புகள் மற்றும் ஆற்றோர வாழ்விடங்கள் உள்ளன.
- இது மத்திய இந்தியா மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் உள்ள புலிகளின் கூட்டங்களுக்கு இடையில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ளது.

உலகின் முன்னணி மீத்தேன் மையங்கள்

- உலகெங்கிலும் உள்ள நெல் வயல்களில் இருந்து வெளியேறும் பசுமை இல்ல வாயுக்களின் (GHG) வெளியேற்றம் 1960-களில் இருந்து இருமடங்காகியுள்ளது.
- உலகெங்கிலும் உள்ள நெல் வயல்கள் ஆண்டுதோறும் சுமார் 1.1 பில்லியன் டன் கார்பன் டை ஆக்சைடுக்கு இணையான (CO_2-e) வாயுவை வெளியிடுகின்றன என்ற நிலையில் இது 1961 மற்றும் 1980-ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட ஆண்டு வெளியேற்றத்தை விட 90.4% அதிகமாகும்.
- இந்தியாவின் நெல் வயல்கள் தற்போது உலகின் முன்னணி மீத்தேன் மையங்களில் ஒன்றாகத் திகழ்கின்றன.
- இது ஜெர்மனியின் மொத்த ஆண்டு மீத்தேன் வெளியேற்றத்தை விட அதிகமாக இருந்தது.
- மேலும், கிழக்கு இந்தியாவில் உள்ள நெல் வயல்கள் உலகளாவிய மீத்தேன் மையங்களில் ஒன்றாக இருந்தன.
- மண்ணின் கரிம கார்பனைத் தவிர, நெல் வயல்களில் இருந்து வெளியேறும் மீத்தேனும் இந்த வெளியேற்றத்திற்கு ஒரு முக்கிய காரணமாக இருந்தது.
- நீர் நிரம்பிய வயல்களில் குறைந்த ஆக்சிஜன் சூழல் உருவாகிறது, அங்கு மீத்தேன் உற்பத்தி செய்யும் நுண்ணுயிரிகள் செழித்து வளர்கின்றன.
- 2025-26-ஆம் ஆண்டில் 154 மில்லியன் டன் அரிசியை உற்பத்தி செய்து, அரிசி உற்பத்தியில் இந்தியா நாடுகளின் பட்டியலில் முதலிடம் வகிக்கிறது.

- 1970-களிலிருந்து நெல் சாகுபடி செய்யப்படும் பரப்பளவும் சுமார் 25% அதிகரித்துள்ளதுடன், தற்போது இந்தியாவின் மானாவாரி அறுவடைப் பரப்பில் 55%-ஐ இது உள்ளடக்கியுள்ளது.

வரையாடுகளுக்கான புதிய வாழ்விடம்

- கேரளாவின் இடுக்கி மாவட்டத்தில் உள்ள வரையாட்டுமுடி, அழிந்துவரும் நிலையில் உள்ள வரையாடுகளின் (நீலகிரி தார்) முக்கிய வாழ்விடமாக உருவெடுத்துள்ளதுடன், அதன் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது.
- வாழ்விடம் மறுசீரமைப்பு முயற்சிகளுக்குப் பிறகு வரையாடுகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் சுமார் 50 ஆக இருந்த நிலையில் தற்போது 150 ஆக உயர்ந்துள்ளது.
- அந்நிய ஆக்கிரமிப்புத் தாவரங்களை அகற்றி, இயற்கை புல்வெளிகளை மீட்டெடுப்பதன் மூலம் 22.5 ஹெக்டேர் பரப்பளவில் கேரள வனத்துறை சூழலியல் மறுசீரமைப்புப் பணிகளை நிறைவு செய்துள்ளது.
- இப்பகுதியின் புல்வெளிகள், சோலை காடுகள், பாறை முகடுகள் மற்றும் குளிர்ந்த பருவநிலை ஆகியன இந்த இனத்திற்கு பொருத்தமான வாழ்விடத்தை வழங்குகின்றன.
- வனத்துறை பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தியுள்ளதுடன், பாதுகாப்பிற்கு ஆதரவளிப்பதற்கும் உள்ளூர் பழங்குடியினச் சமூகங்களுக்கு நிலையான வாழ்வாதாரங்களை வழங்குவதற்கும் ஒரு சூழலியல் சுற்றுலா மலையேற்றத் திட்டத்தையும் முன்மொழிந்துள்ளது.

ஜப்பானின் செயல்படும் எரிமலை - கிகாய் கால்டெரா

- ஜப்பானின் கிகாய் கால்டெராவின் அடியில் உள்ள மாக்மா நீர்த்தேக்கம் மீண்டும் நிரம்புவதை அறிவியலாளர்கள் கவனித்துள்ளனர் என்ற நிலையில் இது பெரிய எரிமலைகள் பெரும் வெடிப்புகளுக்குப் பிறகு எவ்வாறு மீட்கப்படுகின்றன என்பது பற்றிய நுண்ணறிவுகளை வழங்குகிறது.
- கிகாய் கால்டெரா என்பது ஜப்பானின் கியூஷு தீவின் தெற்கே கிழக்கு சீனக் கடலில் அமைந்துள்ள ஒரு மிகப் பெரிய நீர்மூழ்கி கால்டெரா ஆகும்.
- இந்த கால்டெரா சுமார் 19 கிலோமீட்டர் விட்டம் கொண்டது மற்றும் கடல் மட்டத்திற்கு மேலே உயர்ந்துள்ள மூன்று சிறிய தீவுகளையும் உள்ளடக்கியது.
- சுமார் 7,300 ஆண்டுகளுக்கு முன்பு, ஹோலோசீன் சகாப்தத்தின் மிகப்பெரிய எரிமலை வெடிப்புகளில் ஒன்றை இது உருவாக்கியதுடன் அதில் சுமார் 150 கன கிலோ மீட்டர் சாம்பல் வெளியேற்றப்பட்டது.
- இந்த வெடிப்பு எரிமலை வெடிப்பு குறியீட்டில் (VEI) 7 என்ற அளவைக் கொண்டிருந்தது, மேலும் கால்டெரா எரிமலைத் தன்மையுடன் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது என்பதோடு இது சமீபத்திய ஆய்வுகள் புதிய லாவா குவிமாடம் உருவாவதைக் குறிக்கின்றன.

புதிய பழ ஈ இனங்கள் கண்டுபிடிப்பு

- மேகாலயாவின் ரி-போய் (Ri-Bhoi) மாவட்டத்தில் நடந்த மூன்று ஆண்டு ஆய்வின் போது, ஜியுகோடாகஸ் உமியம் (Zeugodacus umiam) மற்றும் ஜியுகோடாகஸ் நாசிவிட்டாடஸ் (Zeugodacus nasivittatus) ஆகிய இரண்டு புதிய பழ ஈ இனங்களை அறிவியலாளர்கள் கண்டுபிடித்தனர்.

- ஜியுகோடாகஸ் உமியம் கண்டுபிடிக்கப்பட்ட இடமான மேகாலயாவின் உமியம் (Umiam) நினைவாகப் பெயரிடப்பட்டது, மேலும் இது புவிசார் குறியீடு (GI) பெற்ற காசி மாண்டரின் பழத்தில் காணப்பட்டது.
- இரண்டாவது புதிய இனமான ஜியுகோடாகஸ் நாசிவிட்டாடஸ், இனிப்பு ஆரஞ்சு மற்றும் காசி மாண்டரின் பயிர்களுடன் தொடர்புடையது.
- ஆராய்ச்சியாளர்கள் 35,000-க்கும் மேற்பட்ட பழ ஈக்களை சேகரித்து, காடுகள், பழத்தோட்டங்கள் மற்றும் காய்கறி சுற்றுச்சூழல் அமைப்புகளில் 37 இனங்களை ஆவணப்படுத்தியுள்ளனர்.
- பாக்ட்ரோசெரா அப்ரிவியாட்டா (Bactrocera abbreviata), எரெக்டோவேனா டெஸ்பெராட்டா (Erectovena desperata) மற்றும் ஃபோரெல்லியோசோமா ஹிலாரட்டம் (Phorelliosoma hilaratum) ஆகிய மூன்று இனங்கள் இந்தியத் துணைக்கண்டத்தில் முதல்முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

புதிய கெளுத்தி மீன் இனம்

- ஒடிசாவின் மயூர்பஞ்ச் மாவட்டத்தில் உள்ள புதாபாலங்கா நதியில் சூடோலாகுவியா கைரி (Pseudolaguvia khairii) என்ற புதிய நன்னீர் கெளுத்தி மீன் இனம் கண்டறியப் பட்டு உள்ளது.
- ஒடிசாவில் வனவிலங்குப் பாதுகாப்போடு தொடர்புடைய, ஆதரவற்று வளர்ந்த 'கைரி' (Khairi) எனும் ராயல் பெங்கால் பெண் புலியின் நினைவாகவே இப்பகுதிக்கு இப்பெயர் சூட்டப்பட்டது.
- சூடோலாகுவியா கைரி, சூடோலாகுவியா பேரினம் மற்றும் சிலுரிஃபார்ம்ஸ் (கெளுத்தி மீன் குழு) வரிசையைச் சேர்ந்ததாகும்.
- இந்த இனம் வேகமாக பாயும் நன்னீர் நதிகளுக்கு ஏற்றவாறு தகவமைத்துக் கொண்ட ஒரு சிறிய மலைநீரோடை கெளுத்தி மீன் ஆகும், மேலும் அதன் முதுகுப்புற துடுப்பின் அடிப்பகுதியில் உள்ள தனித்துவமான சதைப்பற்றுள்ள புடைப்பு மூலம் இது அடையாளம் காணப்படுகிறது.
- கைரி 1970-களில் ஒடிசாவின் சிமிலிபால் காடுகளிலிருந்து மீட்கப்பட்டு, வனவிலங்கு பாதுகாவலரான சரோஜ் ராஜ் சௌத்ரி மற்றும் நிஹார் நளினி ஸ்வைன் ஆகியோரால் வளர்க்கப்பட்டது.

பல்லுயிர்ப் பெருக்கம் தொடர்பான SBSTTA28 கூட்டம்

- உயிரியல் பன்முகத்தன்மை ஒப்பந்தத்தின் (CBD) கீழான அறிவியல், தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைக்கான துணை அமைப்பின் 28வது கூட்டம் (SBSTTA28) கென்யாவின் நைரோபியில் முடிவடைந்தது.
- ஆர்மீனியாவின் யெரெவனில் நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ள உயிரியல் பன்முகத் தன்மை ஒப்பந்தத்தின் (CBD) 17வது தரப்பினரின் மாநாட்டிற்கு (COP17) முன்னதாக இக்கூட்டம் நடைபெற்றது.
- 2030 ஆம் ஆண்டிற்கான 23 பல்லுயிர் இலக்குகளைக் கொண்ட குன்மிங்-மாண்ட்ரீல் உலகளாவிய பல்லுயிர் கட்டமைப்பை (KMGBF) செயல்படுத்துவதற்கான அறிவியல் அடிப்படையிலான ஆலோசனைகளை SBSTTA வழங்குகிறது.

- கடல் மற்றும் கடலோரப் பல்லுயிர் பெருக்கம், நிலையான வனவிலங்கு மேலாண்மை, பாதுகாக்கப்பட்ட பகுதிகள் மற்றும் உலகளாவிய பல்லுயிர் இலக்குகளை நோக்கிய முன்னேற்றம் குறித்து நாடுகள் விவாதித்தன.
- செயற்கை உயிரியல் (உயிரியல் அமைப்புகளை வடிவமைக்க அல்லது மாற்றுவதற்கு மரபணுப் பொறியியலின் பயன்பாடு) மற்றும் அதன் சாத்தியமான நன்மைகள் மற்றும் சுற்றுச்சூழல் அபாயங்கள் குறித்த முக்கிய விவாதம் நடைபெற்றது.
- வரைவு செயற்கை உயிரியல் செயல் திட்டம் ஒரு நல்ல அடிப்படை என்பதை நாடுகள் ஒப்புக் கொண்டன. ஆனால் நெகிழ்வுத்தன்மை, நிபுணர் குழுக்கள் மற்றும் தொழில் நுட்பப் பகிர்வு வழிமுறைகள் போன்ற சிக்கல்களில் வேறுபட்டன.

குள்ள காட்டுப் பன்றி பாதுகாப்பு முன்னெடுப்பு

- தேசிய வனவிலங்கு வாரியத்தின் நிலைக்குழு (SC-NBWL), மத்திய பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மிகவும் அழிந்து வரும் உயிரினங்களின் பட்டியலில் குள்ள காட்டுப் பன்றியைச் சேர்க்கப் பரிந்துரை செய்துள்ளது.
- குள்ள காட்டுப் பன்றி (போர்குலா சால்வினியா) என்பது உலகின் மிகச்சிறிய மற்றும் அரிய காட்டுப் பன்றி இனமாகும் என்பதோடு முக்கியமாக அசாமின் புல்வெளிகளில் இது காணப் படுகிறது.
- சர்வதேச இயற்கைப் பாதுகாப்புச் சங்கம் (IUCN) தனது செந்நிறப் பட்டியலில் குள்ள காட்டுப் பன்றியை அருகி வரும் இனமாக அதிகாரப்பூர்வமாக வகைப்படுத்தியுள்ளது.
- இந்தப் பரிந்துரையானது, உயிரினங்களை மீட்டெடுப்பதற்கும் மற்றும் பாதுகாப்பு ஆதரவிற்காகவும் வனவிலங்கு வாழ்விடங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டு (IDWH) திட்டத்தின் கீழ் இந்த இனத்தைக் கொண்டுவரும்.
- இந்த உயிரினத்தை பாதுகாக்கும் முயற்சிகளை அசாமில் இருந்து ஜல்தாபாரா (மேற்கு வங்கம்) மற்றும் உத்தரப் பிரதேசத்தின் சில பகுதிகள் போன்ற பொருத்தமான வாழ்விடங்களுக்கு விரிவுபடுத்த இந்திய வனவிலங்கு நிறுவனம் (WII) பரிந்துரைத்து உள்ளது.

இந்தியாவின் புலி எண்ணிக்கை 2026

- உலகில் உள்ள மொத்த காட்டுப் புலிகளில் சுமார் 70 சதவீதத்தைக் கொண்டுள்ள இந்தியா, உலகின் மிகப்பெரிய காட்டுப் புலிகள் எண்ணிக்கையைக் கொண்ட நாடாகத் திகழ்கிறது.
- ராஜஸ்தானின் ஐந்து புலிகள் காப்பகங்களில் புலிகளின் எண்ணிக்கை 149-ஆக உயர்ந்துள்ளது; இதில் ரந்தம்பூர் காப்பகத்தில் மட்டும் 72 புலிகள் உள்ளன.
- புலிகளின் இனப்பெருக்கம் மற்றும் குட்டிகளின் உயிர்வாழும் விகிதம் ஆகியவற்றில், இந்தியாவின் மிகச் சிறந்த புலிகள் காப்பகங்களில் ஒன்றாக ரந்தம்பூர் விளங்குகிறது.
- ரந்தம்பூரில் புலிகளின் உயிர்வாழும் விகிதம் சுமார் 80 சதவீதமாக உள்ளது; இது நாட்டின் முக்கிய புலிகள் காப்பகங்களில் பதிவான மிக உயர்ந்த விகிதங்களில் ஒன்றாகும்.
- 2008-ஆம் ஆண்டில் சரிஸ்கா காப்பகம் தனது அனைத்துப் புலிகளையும் இழந்தபோது, ரந்தம்பூரைச் சேர்ந்த 'மச்லி' (Machli) என்ற பெண் புலியின் வழித்தோன்றல்களைக் கொண்டு அங்கு மீண்டும் புலிகள் குடியேற்றப்பட்டன.

- புலிகளை அறிவியல் பூர்வமாக ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு வெற்றிகரமாக மாற்றியமைத்த உலகின் முதல் நிகழ்வாக சரிஸ்கா புலிகள் காப்பகம் ஒரு வரலாற்றுச் சாதனையைப் படைத்தது.
- ஒரு காலத்தில் புலிகள் முற்றிலும் அழிந்துபோயிருந்த சரிஸ்கா காப்பகத்தில், தற்போது 53 புலிகள் வசிக்கின்றன.
- இது புலிகளை அறிவியல் பூர்வமாக மீண்டும் அறிமுகப்படுத்திய உலகின் முதல் வெற்றிகரமான முயற்சியாகக் கருதப்படுகிறது.
- இந்தியாவின் "புலிகள் மாநிலம்" (Tiger State) என்று அழைக்கப்படும் மத்தியப் பிரதேசத்தில், இந்த ஆண்டில் மட்டும் 45 புலிகள் உயிரிழந்துள்ளன; இது நாட்டின் மொத்த உயிரிழப்புகளில் சுமார் 40 சதவீதமாகும்.
- 2022-ஆம் ஆண்டில் மத்தியப் பிரதேசம் அதிகபட்சமாக 785 புலிகளைக் கொண்டிருந்ததாகப் பதிவு செய்தது.
- 20 மாநிலங்களை உள்ளடக்கிய 'அகில இந்தியப் புலிகள் கணக்கெடுப்பு (2022)'-இன் படி, இந்தியாவில் புலிகளின் எண்ணிக்கை 3,682-ஆக உள்ளது.
- 'புலிகள் பாதுகாப்புத் திட்டம்' (Project Tiger), புலிகள் வாழும் 18 மாநிலங்களில் 58 புலிகள் காப்பகங்களைக் கொண்ட ஒரு கட்டமைப்பை உருவாக்கியுள்ளது.
- இக்காப்பகங்கள் சுமார் 84,500 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளன; இது இந்தியாவின் மொத்தப் புவியியல் பரப்பளவில் சுமார் 2.56 சதவீதமாகும்.

புலிகள் காப்பக அறிக்கை 2026

- 2022 ஆம் ஆண்டின் அகில இந்தியப் புலிகள் மதிப்பீட்டின் அடிப்படையில் "Roadmap for Active Management of Tigers in India என்ற அறிக்கையை தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் (NTCA) வெளியிட்டது.
- இந்தியாவின் புலிகள் காப்பகங்களில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு (58 இல் 38) காப்பகங்களில் இரைத் தளம் குறைந்து வருகிறது, மோசமான வாழ்விடத் தரம் அல்லது இரண்டும் காணப்படுவதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- 20 புலிகள் காப்பகங்கள் மட்டுமே போதுமான இரை மற்றும் நல்ல வாழ்விடத்தைக் கொண்டுள்ள அதே சமயம் 36 காப்பகங்கள் கடும் இரை பற்றாக்குறையை எதிர் கொள்கின்றன மற்றும் 17 காப்பகங்கள் மோசமான வாழ்விடம் மற்றும் போதிய இரையின்மை ஆகிய இரண்டையும் கொண்டுள்ளன.
- ஒன்பது புலிகள் காப்பகங்களில் புலிகளின் எண்ணிக்கை பூஜ்ஜியமாக அல்லது மிகக் குறைவான அளவிலேயே உள்ளன, மேலும் 25 காப்பகங்களில் புலிகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது.
- இந்தியாவில் மதிப்பிடப்பட்ட 3,682 புலிகள் உள்ளன, இவற்றில் 2,338 புலிகள் காப்பகங்களுக்கு உள்ளேயும் 1,344 புலிகள் பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கு வெளியேயும் உள்ளன; உலகின் காட்டுப் புலிகளில் சுமார் 75% இந்தியாவில் காணப் படுகின்றன.
- புலிகள் பாதுகாப்பை மேம்படுத்த வாழ்விட மறுசீரமைப்பு, இரை மீட்பு, வேட்டையாடுதல் தடுப்பு நடவடிக்கைகள், ஆக்கிரமிப்பு இனங்களை அகற்றுதல் மற்றும் வனவிலங்கு வழித்தடங்களை பாதுகாத்தல் ஆகியவற்றை இந்த அறிக்கை பரிந்துரைக்கிறது.

101வது ராம்சார் தளம் - க்லாவ் ஏரி

- அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள க்லாவ் ஏரி இந்தியாவின் 101வது ராம்சார் தளமாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இது அம்மாநிலத்தின் முதல் ராம்சார் தளமாகும்.
- இதன் மூலம், 2014 ஆம் ஆண்டில் 26 ஆக இருந்த இந்தியாவின் மொத்த ராம்சார் தளங்களின் எண்ணிக்கை தற்போது 101 ஆக உயர்ந்துள்ளது.
- க்லாவ் ஏரி என்பது கிழக்கு இமயமலையில் உள்ள கம்லாங் புலிகள் காப்பகம் மற்றும் வனவிலங்கு சரணாலயத்தின் உள்ளே அமைந்துள்ள ஒரு தூய்மையான நன்னீர் ஏரியாகும்.
- இந்த ஈரநிலம் ஒரு பல்லுயிர் பெருக்க மையமாகவும், அதன் நீர்ப்பிடிப்பு பகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் 150 க்கும் மேற்பட்ட மர வகைகளுக்கும் 49 ஆர்க்கிட் வகைகளுக்கும் ஆதரவளிக்கிறது.
- ராம்சார் தளம் என்ற அங்கீகாரம் ஈரநிலப் பாதுகாப்பு, பல்லுயிர் பாதுகாப்பு, நீர் மற்றும் பருவநிலை பாதுகாப்பு மற்றும் நிலையான வாழ்வாதாரங்களை மேம்படுத்துகிறது.

வன உரிமைகள் சட்டம் (FRA) தொடர்பான பிரச்சினை

- சமூக வன வள மேலாண்மைத் திட்டங்கள் (CFRMP) குறித்து பழங்குடியினர் விவகார அமைச்சகம் மற்றும் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் (MoEFCC) விடுத்த தகவல்தொடர்பு, கிராம சபையின் அதிகாரங்கள் குறித்த கவலைகளை எழுப்பியுள்ளது.
- வனத்துறையின் செயல்பாட்டுத் திட்டங்களுடன் சமூக வன வள மேலாண்மைத் திட்டங்களை ஒருங்கிணைக்குமாறு மாநிலங்களை அந்த கடிதம் கேட்டுக் கொண்டு உள்ளது.
- 2006 ஆம் ஆண்டின் வன உரிமைகள் சட்டம் (FRA), சமூக வன உரிமைகளைத் தீர்மானிப்பதற்கும் நிர்வகிப்பதற்கும் கிராம சபையை முதன்மை அதிகார அமைப்பாக அங்கீகரிக்கிறது.
- வன உரிமைகள் சட்டம் 2006 இன் பிரிவு 5-இன் கீழ், காடுகள், வனவிலங்குகள் மற்றும் பல்லுயிரியலைப் பாதுகாப்பதற்கும், பேணுவதற்கும், நிர்வகிப்பதற்கும் கிராம சபைகளுக்கு அதிகாரங்கள் உள்ளன.
- பழங்குடியினர் (STs) மற்றும் பிற பாரம்பரிய வனவாசிகளின் உரிமைகளை அங்கீகரிப்பதையும், வரலாற்று ரீதியான அநீதிகளைச் சரிசெய்வதையும் வன உரிமைகள் சட்டம், 2006 நோக்கமாகக் கொண்டுள்ளது.

சுற்றுச்சூழல் செயல்திறன் குறியீடு (EPI) 2026

- இது தரவுகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு உலகளாவிய அளவுகோலாகும்.
- மேலும், ஐ.நா.வின் நீடித்த வளர்ச்சி இலக்குகள் மற்றும் பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தின் நோக்கங்கள் போன்ற உலகளாவிய நிலைத்தன்மை இலக்குகளை அடைவதில் நாடுகளின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கான ஒரு முக்கிய பகுப்பாய்வுக் கருவியாகவும் இது செயல்படுகிறது.
- இது மெக்கால் மெக்பெய்ன் அறக்கட்டளையின் ஆதரவுடன் யேல் மற்றும் கொலம்பியா பல்கலைக்கழக நிறுவனங்களால் உருவாக்கப்பட்டது.

- இதன் உள்ளடக்கம், மூன்று முக்கிய நோக்கங்களின் கீழ் 177 நாடுகள், 47 குறிகாட்டிகள் மற்றும் 12 சிக்கல் பிரிவுகளை உள்ளடக்கும்.
- சுற்றுச்சூழல் சுகாதாரம், சூழல் மண்டலத்தின் உயிர்ச்சக்தி மற்றும் பாவநிலை மாற்றம் ஆகியவையே மூன்று முக்கிய கொள்கை நோக்கங்கள் ஆகும்.

சுற்றுச்சூழல் சுகாதாரம்

- காற்றின் தரம் (PM2.5 போன்ற மாசுபடுத்திகளின் வெளிப்பாட்டை அளவிடுதல்)
- சுகாதாரம் மற்றும் குடிநீர்
- கன உலோகங்களின் வெளிப்பாடு

சூழல் மண்டலத்தின் உயிர்ச்சக்தி

- பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் வாழ்விடப் பாதுகாப்பு
- காடுகள் மற்றும் மர இழப்பு
- மீன்வளம் மற்றும் மீன் இருப்பு
- வேளாண்மை மற்றும் நிலையான நடைமுறைகள்
- நீர் வளங்கள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு

பருவநிலை மாற்றம்

- பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தைக் குறைத்தல்
- பல்வேறு துறைகளிலிருந்து வெளியாகும் CO2 வெளியேற்றம்
- தூய்மையான ஆற்றல் மாற்றம் மற்றும் கார்பன் அடர்த்தியைக் கண்காணித்தல்
- முதல் இடங்கள் – எஸ்டோனியா (1வது, மதிப்பெண் 74.79); அதனைத் தொடர்ந்து லக்சம்பர்க், இங்கிலாந்து, பின்லாந்து, நெதர்லாந்து (முதல் 5 இடங்கள் – அனைத்தும் ஐரோப்பாவைச் சேர்ந்தவை).
- இந்தியா 176வது இடத்தில் (மதிப்பெண் 22.46) உள்ளது, இது இரண்டாவது மிகக் குறைந்த மதிப்பெண் ஆகும்; கடுமையான காற்றின் தரம் மற்றும் பல்லுயிர் தன்மை இழப்பு.
- 2022 ஆம் ஆண்டு முதல் சுற்றுச்சூழல் செயல்திறன் குறியீட்டில் (EPI) மிக மோசமாகச் செயல்படும் ஐந்து நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகத் தொடர்ந்து இருந்து வருகிறது.
- சுற்றுச்சூழல் சுகாதாரம், காற்றின் தரம் மற்றும் பல்லுயிர் தன்மை ஆகியவற்றில் இந்தியா மோசமாகச் செயல்பட்டுள்ளது (காற்றின் தரம் மற்றும் பல்லுயிர் தன்மை ஆகிய இரண்டிலும் 174வது இடத்தில் உள்ளது).

படைச்சிறுத்தை பாதுகாப்புச் செயல் திட்டம்

- வடகிழக்கு இந்தியாவில் உள்ள இந்த அரிய வகை காட்டுப் பூனையைப் பாதுகாப்பதற்காக சர்வதேச படைச்சிறுத்தை தினத்தில் (2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 4) இந்தியா படைச்சிறுத்தை பாதுகாப்புச் செயல் திட்டத்தை (CAP) தொடங்கியது.
- இந்தச் செயல் திட்டமானது இந்திய அரசு-உலகளாவிய சுற்றுச்சூழல் வசதி (GEF)-ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம் (UNDP) முன்னெடுப்பின் கீழ் தயாரிக்கப்பட்டது மற்றும் தமிழ்நாடு, கோயம்புத்தூரில் நடைபெற்ற தேசிய வனவிலங்கு வாரியத்தின் நிலைக்குழுவின் (SCNBWL) 91-வது கூட்டத்தில் வெளியிடப்பட்டது.

- இத்திட்டம் வடகிழக்கு இந்தியாவில் முன்னுரிமை அளிக்க வேண்டிய 14 பாதுகாப்பு நிலப்பரப்புகளை அடையாளப்படுத்துகிறது மற்றும் வாழ்விடப் பாதுகாப்பு, வனப் பாதைகள் மறுசீரமைப்பு மற்றும் நிலப்பரப்பு அளவிலான பாதுகாப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- கேமரா பொறிகள், ஆக்கிரமிப்பு ஆய்வுகள், மரபியல் மற்றும் சுற்றுச்சூழல் டிஎன்ஏ (eDNA) முறைகள் மூலம் அறிவியல் ரீதியான கண்காணிப்பு இதில் அடங்கும்.
- பாதுகாப்பு முயற்சிகளை வலுப்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த வனவிலங்கு வாழ்விடங்கள் மேம்பாட்டு (IDWH) திட்டத்தின் இனங்கள் மீட்பு திட்டத்தின் கீழ் இந்த இனம் சேர்க்கப்பட்டுள்ளது.
- வேட்டையாடுதல் தடுப்பு நடவடிக்கைகள், முன்களப் பணியாளர்களுக்கான பயிற்சி, சமூகப் பங்கேற்பு, நிலையான வாழ்வாதாரங்கள் மற்றும் பருவநிலை-தாங்கும் பாதுகாப்பு ஆகியவற்றிலும் இத்திட்டம் கவனம் செலுத்துகிறது.

பூச்சியுண்ணும் தாவரத்தில் டார்வினின் கோட்பாடு

- சாக்ஸிஃப்ராகா காண்டலப்ரம் (Saxifraga candelabrum) என்ற தாவரம் பூச்சியுண்ணும் தாவரம் என சார்லஸ் டார்வினின் 150 ஆண்டுகள் பழமையான கணிப்பை அறிவியலாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.
- சுரப்பி ட்ரைக்கோம்கள் எனப்படும் ஒட்டும் முடி போன்ற அமைப்புகளைப் பயன்படுத்தி சிறிய பூச்சிகளை இந்தத் தாவரம் ஈர்த்துப் பிடிக்கிறது என்பதை இந்த ஆய்வு காட்டுகிறது.
- சிக்கிய பூச்சிகளைச் செரிமானம் செய்யவும் ஊட்டச்சத்துக்களை உறிஞ்சவும் பாஸ்படேஸ் என்ற நொதியை இந்தத் தாவரம் பயன்படுத்துகிறது என ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- ஐசோடோப் லேபிளிங்/அடையாளமிடல் மூலம் பூச்சிகளிலிருந்து தாவரத்திற்கு நைட்ரஜன்-15 மாற்றப்படுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், இது இரையிலிருந்து ஊட்டச்சத்து உறிஞ்சப்படுவதை நிரூபிக்கிறது.
- சாக்ஸிஃப்ராகா காண்டலப்ரம் தாவரம் சீனாவின் கிங்காய்-திபெத் பீடபூமி மற்றும் ஹெங்டுவான் மலைகளில் அதிக உயரங்களில் (2,500–3,300 மீட்டர்) வளர்கிறது.

ஈர நிலங்களுக்கான 10 கி.மீ சுரங்கத் தாங்கல் மண்டலம்

- ஈரநில இருப்புப் பகுதிகளுக்கு தனித் தாங்கல் மண்டலம் அறிவிக்கப்படாத போதிலும், அறிவிக்கப்பட்ட அனைத்து ஈரநில இருப்புப் பகுதிகளுக்கும் 10 கி.மீ சுரங்கத் தாங்கல் மண்டலம் பொருந்தும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- சுரங்க நடவடிக்கைகளின் தீங்கு விளைவிக்கும் தாக்கங்களிலிருந்து சூழலியல் ரீதியாக உடையக்கூடிய ஈரநிலங்களைப் பாதுகாப்பதை இந்தத் தீர்ப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டு ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகளின் கீழ் ஈரநிலங்கள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.
- ஒவ்வொரு மாநிலம்/ஒன்றியப் பிரதேசத்திலும் (UT) அறிவிக்கப்பட்ட ஈரநிலங்களைப் பாதுகாப்பதற்கும் நிர்வகிப்பதற்கும் மாநில ஈரநில ஆணையம் (SWA) பொறுப்பாகும்.

- ஈரநிலங்களின் பாதுகாப்பு மற்றும் விவேகமான பயன்பாட்டை ஊக்குவிக்கும் ராம்சர் ஈரநிலங்கள் மாநாட்டில் (1971) இந்தியா கையெழுத்திட்டுள்ளது.
- 2026 ஆம் ஆண்டு நிலவரப்படி, இந்தியாவில் 91 ராம்சர் தளங்கள் உள்ளன.

துவரை T2T மரபணு - ICAR

- இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையானது (ICAR), இந்தியாவின் முதல் முழுமையாக குறிப்பேற்றப்பட்ட 'ஆஷா' துவரை ரகத்தின் டீலோமியர் முதல் டீலோமியர் வரை (T2T) குறிப்பு மரபணுவை உருவாக்கியது.
- இந்த மரபணுவில் 752.65 மில்லியன் கார ஜோடிகள், 11 குரோமோசோம்கள், 11 சென்ட்ரோமியர்கள் மற்றும் 22 டெலோமியர்கள் உள்ளன.
- குறிப்பேற்றப்பட்ட இந்த மரபணு 36,557 மரபணுக்களையும் 48,008 mRNA-களையும் கொண்டுள்ளதுடன் இது 99.9%க்கும் அதிகமான வாசிப்பு சீரமைப்பு துல்லியத்தைக் கொண்டுள்ளது.
- சிவப்பு கிராம் அல்லது அர்ஹர் என்றும் அழைக்கப்படும் துவரை ஒரு முக்கிய பருப்புப் பயிராகும், இது 'ஃபேபேசியே' குடும்பத்தைச் சேர்ந்தது.
- அதிக மகசூல் தரக்கூடிய மற்றும் பருவநிலை மாற்றத்தைத் தாங்கி வளரக்கூடிய துவரை ரகங்களை உருவாக்குவதற்கு இந்த மரபணு ஆதரவளிக்கும்.

பட்டாம்பூச்சிகள் மற்றும் அந்துப்பூச்சிகளின் தேசியப் பட்டியல்

- மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்திய விலங்கியல் ஆய்வு நிறுவனமானது (ZSI), லெபிடோப்டெராவின் (பட்டாம் பூச்சிகள் மற்றும் அந்துப்பூச்சிகள்) தேசியப் பட்டியல் நிறைவடைந்ததை அறிவித்தது; அதன் இறுதித் தொகுதி Zoo taxa-வில் வெளியிடப்பட்டது.
- பல்லுயிர் அறிவியலில் இந்தியா வரலாற்றுச் சிறப்புமிக்க மைல்கல்லை எட்டியுள்ளது.
- இந்திய லெபிடோப்டெரா என்பது 3,705 பேரினங்கள், 240 துணைக்குடும்பங்கள், 102 குடும்பங்கள், 31 பேரினங்கள் எனப் பரவியுள்ள 13,703 சிற்றினங்களைக் கொண்டது.
- இது உலகளவில் அறியப்பட்ட அனைத்து பட்டாம்பூச்சி மற்றும் அந்துப்பூச்சி சிற்றினங்களில் ஏறக்குறைய 8.25%-ஐப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.
- ஜியோமெட்ராய்டியா அந்துப்பூச்சிகளுக்கு இந்தியா ஒரு உலகளாவிய முக்கிய மையமாக விளங்குகிறது.
- இந்த முன்னெடுப்பின் ஒரு முக்கிய மைல்கல், ஜியோமெட்ராய்டியா (Geometroidea) எனும் அந்துப்பூச்சி பேரினத்திற்கென அர்ப்பணிக்கப்பட்ட ஒரு முன்னோடிப் பட்டியல் ஆகும்.
- இது, இரவு நேர மகரந்தச் சேர்க்கையாளர்களுக்கான உலகளாவிய சரணாலயமாக இந்தியாவை நிறுவுகிறது.
- இந்தியாவில் உள்ள ஜியோமெட்ராய்டியா பேரினம், 479 பேரினங்கள், 13 துணைக் குடும்பங்கள் மற்றும் 4 குடும்பங்களில் பரவியுள்ள 2,205 சிற்றினங்களைக் கொண்டு உள்ளது.
- இந்தப் பேரினத்தில் உலகில் அறியப்பட்ட சிற்றினங்களில் இது 8.80% ஆகும்.

- உயரமான, உறைபனி நிறைந்த இமயமலைப் பகுதிகள் முதல் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் ஈரப்பதமான, பசுமையான வெப்பமண்டல மழைக்காடுகள் வரை பரந்துள்ள இந்தியாவின் முற்றிலும் மாறுபட்ட சூழல் மண்டலங்கள், பரிணாம சரணாலயங்களாகச் செயல்படுகின்றன.

பயன் பகிர்வு வழிமுறையின் கீழ் நிதியமைப்பு

- தேசியப் பல்லுயிர் ஆணையம் (NBA), மூன்று ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் 33 மாநில பல்லுயிர் வாரியங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேச பல்லுயிர் மன்றங்களுக்கு ₹8.22 கோடி நிதியை விடுவித்துள்ளது.
- இது, அரிசிக்கான மிகப்பெரிய ஒற்றை அணுகல் மற்றும் பயன் பகிர்வு (ABS) நிதி ஒதுக்கீடுகளில் ஒன்றாகும்.
- இந்த நிதி ஒதுக்கீடு, நாட்டின் உயிரியல் வளங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் பயன்களை நியாயமாகவும் சமமாகவும் பகிர்வதை உறுதி செய்வதில் இந்தியாவின் அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கிறது.
- ஆராய்ச்சி நிறுவனங்கள் இந்த நிதியை, மரபணு வளப் பாதுகாப்பை வலுப்படுத்தவும், விதை சேகரிப்புகளைப் பராமரிக்கவும், ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கு ஆதரவளிக்கவும் பயன்படுத்தும்.
- மாநில பல்லுயிர் வாரியங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேச பல்லுயிர் மன்றங்கள், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை, அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தும். இதில், உள்ளூர் பயிர் பன்முகத்தன்மையைப் பாதுகாத்தல், சூழல் மண்டலங்களை மீட்டெடுத்தல், பாரம்பரிய அறிவை ஆவணப்படுத்துதல் மற்றும் உள்ளூர் விவசாயிகள் மற்றும் பாரம்பரிய அறிவு உள்ளவர்களுக்கு ஆதரவளித்தல் ஆகியவை அடங்கும்.
- இது, மரபணு வளங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பாரம்பரிய அறிவைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகளை நியாயமாகவும் சமமாகவும் பகிர்வதை ஊக்குவிக்கும் குன்மிங்-மான்ட்ரியல் உலகளாவிய பல்லுயிர் கட்டமைப்பின் இலக்கு 13-ஐ ஆதரிக்கிறது.
- மேலும் இது, SDG 2 (பசியின்மை), SDG 12 (பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி), SDG 15 (நிலத்தில் வாழ்வு) மற்றும் SDG 17 (இலக்குகளுக்கான கூட்டாண்மை) உள்ளிட்ட பல நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கும் பங்களிக்கிறது.
- NBA என்பது சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் கீழ், 2002-ஆம் ஆண்டின் பல்லுயிர் சட்டத்தின்படி நிறுவப்பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும்.
- இது இந்தியாவின் உயிரியல் வளங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பாரம்பரிய அறிவை அணுகுவதை ஒழுங்குபடுத்துகிறது மற்றும் நாகோயா நெறிமுறையின் நியாயமான மற்றும் சமமான நன்மைப் பகிர்வுக் கொள்கையைச் செயல்படுத்துகிறது.

CBD

- உயிரியல் பன்முகத்தன்மை மீதான உடன்படிக்கை (CBD) என்பது 1992 ரியோ புவி உச்சி மாநாட்டில் உருவான ஒரு உலகளாவிய சட்ட ஒப்பந்தமாகும். இது மூன்று முக்கிய இலக்குகளைக் கொண்டுள்ளது - உயிரியல் பன்முகத்தன்மையைப் பாதுகாத்தல்; அதன் கூறுகளின் நீடித்த பயன்பாடு; மற்றும் மரபணு வளங்களிலிருந்து எழும் நன்மைகளை நியாயமாகவும் சமமாகவும் பகிர்ந்துகொள்ளுதல்.

- இந்த உடன்படிக்கையை அங்கீகரிக்காத ஒரே ஐ.நா. உறுப்பு நாடு அமெரிக்கா ஆகும்.
- இது கார்டஜெனா நெறிமுறை மற்றும் நகோயா நெறிமுறை என இரண்டு துணை ஒப்பந்தங்களைக் கொண்டுள்ளது.
- உயிரியல் பன்முகத்தன்மை மீதான உடன்படிக்கையின் உயிரிப் பாதுகாப்பு மீதான கார்டஜெனா நெறிமுறை என்பது, நவீன உயிரித் தொழில்நுட்பத்தின் விளைவாக உருவாகும் உயிருள்ள மரபணு மாற்றப்பட்ட உயிரினங்கள் (LMOs) ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குக் கொண்டு செல்லப்படுவதை நிர்வகிக்கும் ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும்.
- உயிரியல் பன்முகத்தன்மை மீதான உடன்படிக்கையின் மரபணு வளங்களுக்கான அணுகல் மற்றும் அவற்றின் பயன்பாட்டிலிருந்து எழும் நன்மைகளை நியாயமாகவும் சமமாகவும் பகிர்ந்துகொள்ளுதல் (ABS) மீதான நகோயா நெறிமுறை என்பது CBD-க்கான மற்றொரு துணை ஒப்பந்தமாகும்.

சூப்பர் எல் நினோ மற்றும் நேர்மறை IOD

- 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மற்றும் அக்டோபர் மாதங்களுக்கு இடையில் உலக வானிலை அமைப்பு (WMO) ஒரு வலுவான சூப்பர் எல் நினோவுடன் நேர்மறை இந்தியப் பெருங்கடல் இருமுனையம் (Indian Ocean Dipole - IOD) இணையும் என எதிர்பார்க்கிறது.
- எல் நினோ என்பது மத்திய மற்றும் கிழக்கு பூமத்திய ரேகை பசிபிக் பெருங்கடலில் கடல் மேற்பரப்பு மற்றும் அதற்குக் கீழ் உள்ள நீரின் அசாதாரண வெப்பமயமாதல் ஆகும் என்பதோடு இது இயல்பான வர்த்தகக் காற்றை பலவீனப்படுத்துகிறது அல்லது திருப்புகிறது.
- இது இந்தியாவில் பருவமழையைக் குறைப்பதற்கும், உலகளாவிய வெப்பநிலை அதிகரிப்பதற்கும், வெப்ப அலைகள், வறட்சிகள், காட்டுத்தீ மற்றும் கடல் வெப்ப அலைகள் ஆகியவற்றிற்கும் வழிவகுக்கும்.
- 2026 ஆம் ஆண்டுக்கான எல் நினோவை, 2026 ஆம் ஆண்டு ஜூன் 11 அன்று தேசிய பெருங்கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகம் (NOAA) அறிவித்ததோடு இது வேகமாக வலுவடைந்து வருகிறது.
- கடல் மேற்பரப்பு வெப்பநிலை 2.9°C-ஐ தாண்டும் என கணிக்கப்பட்டுள்ளதுடன் இது வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட மிகவும் வலிமையான நிகழ்வுகளில் ஒன்றாக அமைய வாய்ப்புள்ளது.
- நேர்மறை IOD என்பது மேற்கு இந்தியப் பெருங்கடலில் வழக்கத்தை விட வெப்பமான நீரையும், கிழக்கு இந்தியப் பெருங்கடலில் குளிர்ந்த நீரையும் குறிக்கிறது. இது இந்தியாவின் மழைப்பொழிவை ஆதரிப்பதோடு, எல் நினோவின் தாக்கத்தை ஓரளவு ஈடு செய்யும்.
- இவற்றின் ஒருங்கிணைந்த தாக்கம் உலகின் பல்வேறு பகுதிகளில் அதிக வெப்பம், வறட்சி, வெள்ளம் மற்றும் காட்டுத்தீ போன்ற அபாயங்களை அதிகரிக்கக் கூடும்.

இந்தியாவின் முதல் மீன் அகற்றும் திட்டம்

- பம்பாய் இயற்கை வரலாற்றுச் சங்கமானது (BNHS), இந்தியாவின் முதல் மீனவர்களால் வழிநடத்தப்படும் ஆக்கிரமிப்பு மீன்களை அகற்றும் மற்றும் உள்நாட்டு மீன் இனங்களை மீட்டெடுக்கும் திட்டத்தை மகாராஷ்டிராவின் உஜானி நீர்த்தேக்கத்தில் தொடங்கியுள்ளது.

- இத்திட்டமானது ஆக்கிரமிப்பு இனங்களான உறிஞ்சுவாய் கெளுத்தி, திலேப்பியா மற்றும் ஆப்பிரிக்கக் கெளுத்தி ஆகியவற்றை இலக்காகக் கொண்டுள்ளது.
- இந்த அந்நிய மீன்கள் உள்நாட்டு மீன்களின் பல்லுயிர்த் தன்மையையும் உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் பாதித்துள்ளன.
- ஆக்கிரமிப்பு மீன்களை அகற்றுவது மற்றும் நீர்த்தேக்கத்தில் உள்நாட்டு மீன் இனங்களை மீட்டெடுப்பது ஆகியவை இம்முயற்சியில் அடங்கும்.

வங்காள விரிகுடாவில் ஓசோன் முரண்பாடு

- வடக்கு வங்காள விரிகுடாவிற்கு மேல் 21-23 கி.மீ உயரத்தில் வழக்கத்திற்கு மாறாக ஒரு தடிமனான ஓசோன் படலத்தை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- கிழக்கு இந்தியாவின் மீது ஓசோன் செறிவானது இயல்பை விட அதிகமாக இருந்ததுடன், அந்தப் படலம் 24 மணி நேரத்திற்கும் மேலாக நீடித்திருந்தது.
- நைனிடாலில் உள்ள ஆரியபட்டா கண்காணிப்பு அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம் (ARIES) மற்றும் பிற இந்திய நிறுவனங்களைச் சேர்ந்த அறிவியலாளர்கள், முதல் கட்ட NetRAD-ASMA பிரச்சாரத்தின் கீழ் இந்த நிகழ்வை ஆய்வு செய்தனர்.
- இந்த ஆய்வில் 206.5 மெகா ஹெர்ட்ஸ் அடுக்குமண்டல- அடிவளிமண்டல (ST) ரேடார்கள், வானிலை பலூன்கள், செயற்கைக்கோள்கள் மற்றும் வளிமண்டல மாதிரிகள் பயன்படுத்தப்பட்டன.
- கீழ் அடுக்குமண்டலத்தில் தொடர்ச்சியான கீழ்நோக்கிய காற்று இயக்கம் மற்றும் ஓசோன் நிறைந்த காற்றின் இடமாற்றம் ஆகியவற்றை கண்காணிப்புகள் காட்டுகின்றன.
- கிடைமட்டமான ஓசோன் இடமாற்றம், கீழ்நோக்கிய இயக்கம் மற்றும் காற்றின் சுருக்கம் ஆகியவை இந்த அசாதாரண ஓசோன் அதிகரிப்புக்கு முக்கியக் காரணம் என்று அறிவியலாளர்கள் முடிவு செய்துள்ளனர்.

உலகளாவியப் பெருங்கடல் வெப்பநிலை – 2026 ஜூலை

- துருவப் பகுதிகளுக்கு வெளியே உள்ள உலகளாவிய கடல் மேற்பரப்பு வெப்ப நிலை ஆனது (SST) 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் சாதனை அளவை எட்டியது.
- 60° வடக்கு மற்றும் 60° தெற்கு ஆகியவற்றுக்கு இடையேயான சராசரி கடல் மேற்பரப்பு வெப்பநிலை 20.96°C ஆக இருந்ததோடு இது 2023 ஆம் ஆண்டில் ஜூலை மாத முந்தைய சாதனையான 20.89°C ஐ முறியடித்தது.
- பூமத்திய ரேகை பசிபிக் பெருங்கடலில் எல் நினோ நிலைகள் வேகமாக வலுவடைந்து வருவதுடன், அதிக பெருங்கடல் வெப்பநிலைக்கு பங்களிக்கின்றன.
- 16.90°C சராசரி மேற்பரப்பு காற்று வெப்பநிலையுடன், 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதமானது உலக அளவில் இரண்டாவது வெப்பமான மாதமாக அமைந்தது.
- மேற்கு ஐரோப்பா அதன் வெப்பமான ஜூன்-ஜூலை காலகட்டத்தை வெப்ப அலைகள், வறண்ட நிலைகள் மற்றும் காட்டுத்தீயுடன் பதிவு செய்தது.
- மேற்கு ஐரோப்பா மிகக் குறைந்த மேற்பரப்பு மண்ணின் ஈரப்பதத்தையும் பதிவு செய்தது. அதேவேளையில், கனடா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆசியா மற்றும் தென் அமெரிக்காவின் சில பகுதிகளை வறண்ட காலநிலைகள் பாதித்தன.

படைச்சிறுத்தை மீதான மேகாலயாவின் பாதுகாப்புத் திட்டம்

- மேகாலயா மாநில முதலமைச்சர் கான்ராட் கே. சங்மா, படைச்சிறுத்தை பாதுகாப்புத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- மாநில விலங்கான படைச்சிறுத்தையைப் (நியோஃபெலிஸ் நெபுலோசா) பாதுகாப்பதே இதன் நோக்கம்.
- இது போர்னியோ மற்றும் சுமாத்ரா தீவுகளில் காணப்படும் சுண்டா படைச் சிறுத்தையிலிருந்து வேறுபட்டது.
- படைச்சிறுத்தையானது, பன்னாட்டு இயற்கை பாதுகாப்பு ஒன்றியத்தின் (IUCN) செந்நிறப் பட்டியலில் "எளிதில் பாதிக்கப்படக்கூடிய இனம்" எனப் பட்டியலிடப் பட்டு உள்ளது.
- மேலும் இது, 1972 ஆம் ஆண்டின் வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் அட்டவணை I-இன் கீழ் பாதுகாக்கப்படுகிறது.
- பூடான், மியான்மர், தாய்லாந்து, தீபகற்ப மலேசியா மற்றும் வடகிழக்கு இந்தியாவின் சில பகுதிகள் இதன் உலகளாவிய வாழிடங்களில் அடங்கும்.
- இதற்கு மாறாக, வங்கதேசம், வியட்நாம் மற்றும் சீனாவின் பெரும் பகுதிகளில் இதன் எண்ணிக்கை கடுமையாகக் குறைந்துள்ளது.
- சிங்கப்பூர் மற்றும் தைவானில் இது உள்ளூரில் அழிந்துவிட்டது.
- இந்தியாவில், இது சிக்கிம், வடக்கு மேற்கு வங்காளம், திரிபுரா, மிசோரம், மணிப்பூர், அசாம், நாகாலாந்து மற்றும் அருணாச்சல பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும், மேகாலயாவின் மிதவெப்பமண்டல காடுகளிலும் காணப்படுகிறது.

அகத்தியமலை வெளியேற்றப் பிரச்சினை

- தமிழ்நாட்டின் அகத்தியமலை உயிர்க்கோளக் காப்பகத்தில் (ABR) உள்ள வன நிலங்களை ஆக்கிரமித்துள்ளதாகக் கூறி வனத்துறை ஆயிரக்கணக்கான குடியிருப்புகளுக்கு வெளியேற்ற நோட்டீஸ் அனுப்பியுள்ளது.
- மத்திய அதிகாரமளிக்கப்பட்ட குழுவின் (CEC) அறிக்கைகளின் அடிப்படையில், ஆக்கிரமிப்புகளை குறிப்பிட்ட காலத்திற்குள் வெளியேற்றவும், பொருந்தக்கூடிய இடங்களில் மறுவாழ்வு அளிக்கவும் மற்றும் சூழலியல் மறுசீரமைப்பு செய்யவும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.
- வன உரிமைகள் சட்டம் (FRA) 2006-இன் கீழ், பரிந்துரைக்கப்பட்ட சரிபார்ப்பு செயல்முறைக்கு உட்பட்டு 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 13-க்கு முன்னர் வன நிலங்களை ஆக்கிரமித்த பழங்குடியினர் மற்றும் பிற பாரம்பரிய வனவாசிகளின் வன உரிமைகளை அங்கீகரிக்கிறது.
- வன உரிமைகள் சட்டமானது கிராம சபைகள் மூலம் உரிமை கோரல்களைச் சரி பார்க்கக் கோருகிறது, மேலும் 2005 ஆம் ஆண்டுக்கு முந்தைய மூன்று தலைமுறைகளாக (75 ஆண்டுகள்) ஆக்கிரமித்திருப்பதை மற்ற பாரம்பரிய வனவாசிகள் நிரூபிக்க வேண்டியதில்லை.
- 2020 ஆம் ஆண்டின் பதிவேடுகளின் அடிப்படையில், ஸ்ரீவில்லிபுத்தூர்-மேகமலை புலிகள் காப்பகத்தில் சுமார் 4,595 ஆக்கிரமிப்பாளர்கள் 5,071.2 ஹெக்டேர் நிலத்தை ஆக்கிரமித்துள்ளதாக மத்திய அதிகாரமளிக்கப்பட்ட குழு தெரிவித்துள்ளது.

- அகத்தியமலை உயிர்க்கோளக் காப்பகம் தமிழ்நாடு மற்றும் கேரளா முழுவதும் சுமார் 3,500 சதுர கி.மீ பரப்பளவைக் கொண்டுள்ளது, இதில் பல புலிகள் காப்பகங்கள் மற்றும் வனவிலங்கு சரணாலயங்களும் அடங்கும்.

ப்ளூ ஹார்ட் ஏரி - அகமதாபாத்

- குஜராத்தின் அகமதாபாத்தில் இருந்து சுமார் 35 கி.மீ தொலைவில் உள்ள 100 ஏக்கர் பரப்பளவிலான 'பை தி வாட்டர்ஸ்' என்ற குடியிருப்பு வளாகத்தில் 72,600 சதுர கெஜம் பரப்பளவில் 'ப்ளூ ஹார்ட்' என்ற மனிதனால் உருவாக்கப்பட்ட ஏரி உருவாக்கப்பட்டு வருகிறது.
- இந்த ஏரி நிலத்தடி நீர், மழைநீர் சேகரிப்பு, நிலத்தடி நீர் மறுஊட்டம் மற்றும் பருவமழை நீரைப் பிடிப்பது ஆகியவற்றை உள்ளடக்கிய மூடிய-கட்டமைப்பு அமைப்பைப் பயன்படுத்துகிறது.
- டச்சுப் பொறியியல் நிறுவனமான Witteveen+Bos ஏரியின் நீரியல் வடிவமைப்பைத் திட்டமிட்டுள்ளது, இதில் தானியங்கி நீர் இயக்கம் மற்றும் உணரி அடிப்படையிலான கண்காணிப்பு திட்டமிடப்பட்டுள்ளது.
- இத்திட்டம் 1.5 கி.மீ ஏரிக்கரை நடைபாதை மற்றும் 2 கி.மீ கயாக் பாதையை உள்ளடக்கியது; ஊட்டச்சத்துக்களை உறிஞ்சவும் பல்லுயிர்களை ஆதரிக்கவும் உதவும் வகையில் பூர்வீக தாவரங்களை நடத் திட்டமிடப்பட்டுள்ளது.
- ராம்சர் அங்கீகரிக்கப்பட்ட ஈரநிலமான தோல் ஏரிக்கு (Thol Lake) அருகே இந்த ஏரி அமைந்துள்ளதால், நீர், பல்லுயிர் தன்மை மற்றும் நீரியல் தாக்கங்களை மதிப்பிடுவதற்கு சுற்றுச்சூழல் கண்காணிப்பு மையம் நிறுவப்பட்டு வருகிறது.

16-வது ஆசியச் சிங்கங்கள் எண்ணிக்கை மதிப்பீடு 2026

- குஜராத்தின் 'கிரேட்டர் கிர்' (Greater Gir) நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட 16-வது சிங்கங்கள் எண்ணிக்கை மதிப்பீட்டில் (2025 ஆம் ஆண்டு மே மாதம்), ஆசியச் சிங்கங்களின் எண்ணிக்கை 891-ஆக அதிகரித்துள்ளது பதிவு செய்யப்பட்டுள்ளது.
- இது 2020-ஆம் ஆண்டில் இருந்த 674 சிங்கங்களின் எண்ணிக்கையிலிருந்து 32 சதவீத வளர்ச்சியைக் குறிக்கிறது.
- 2015-ஆம் ஆண்டில் 523-ஆக இருந்த எண்ணிக்கை 2025-ஆம் ஆண்டில் 891-ஆக உயர்ந்துள்ளது.
- இது ஒரு தசாப்தத்தில் 70 சதவீதத்திற்கும் அதிகமான அதிகரிப்பைக் காட்டுகிறது.
- வரலாற்று ரீதியாக, ஆசியச் சிங்கங்கள் பாரசீகம் மற்றும் மெசொப்பொத்தேமியா முதல் இந்தியத் துணைக்கண்டம் வரையிலான ஆசியப் பகுதிகளில் வாழ்ந்து வந்தன.
- அதிகப்படியான வேட்டை மற்றும் வாழ்விட இழப்பு காரணமாக, 1900-களின் முற்பகுதியில் கிர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுமார் 40 முதல் 60 சிங்கங்கள் மட்டுமே எஞ்சியிருந்தன.
- இந்தியா 1965-ஆம் ஆண்டில் கிர் வனவிலங்கு சரணாலயத்தை நிறுவியது.
- ஜூனாகத் சமஸ்தானம் (அன்றைய சுதேச அரசு) இந்த இனத்தைப் பாதுகாத்த முதல் அரசுகளில் ஒன்றாகும்.

- கடுமையான சட்டப் பாதுகாப்பு, சிங்கங்களின் இரையாக அமையும் விலங்குகளின் எண்ணிக்கையை மீட்டெடுத்தல் மற்றும் நிலப்பரப்பு அளவிலான பாதுகாப்பு அணுகுமுறை ஆகியவை இந்த அதிகரிப்புக்குக் காரணமென அரசு தெரிவித்துள்ளது.
- புள்ளிமான், சாம்பர் மான், நீல்காய் (நீலான்) மற்றும் காட்டுப்பன்றி போன்ற காட்டு விலங்குகள் தற்போது சிங்கங்களின் உணவில் சுமார் 74 சதவீதத்தைப் பங்களிக்கின்றன.
- குஜராத்தில் உள்ள பர்தா (Barda) வனவிலங்கு சரணாலயத்திற்குச் சிங்கங்கள் மீண்டும் திரும்பியது இந்த விரிவாக்கத்தின் குறிப்பிடத்தக்க பகுதியாகும்.
- எண்ணிக்கை அதிகரித்ததால், சிங்கங்கள் புதிய பகுதிகளுக்குப் பரவின; இது கிர் தேசியப் பூங்கா மற்றும் கிர்னார், மிதியாலா, பானியா மற்றும் பர்தா போன்ற வனவிலங்குச் சரணாலயங்கள் உட்பட மேலும் பல பாதுகாக்கப்பட்ட பகுதிகளை உருவாக்கத் தூண்டுகோலாக அமைந்தது.
- பாதுகாப்பு முயற்சியில் சமூகப் பங்கேற்பும் முக்கியப் பங்காற்றியுள்ளது.
- 2020-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சிங்கப் பாதுகாப்புத் திட்டமானது, தற்போது சௌராஷ்டிரா பிராந்தியத்தில் சுமார் 60,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவை உள்ளடக்கியுள்ளது.
- ஆசியச் சிங்கம் என்பது 'பாந்தெரா லியோ பெர்சிகா' (Panthera leo persica) என்று அறிவியல் ரீதியாக அழைக்கப்படும் சிங்கத்தின் ஒரு துணை இனமாகும்.
- சிங்கம் (பாந்தெரா லியோ) என்பது ஒரு பெரிய, வலிமையான மற்றும் உணவுச் சங்கிலியின் முதன்மையாக உள்ள வேட்டையாடும் விலங்கு ஆகும்; இது புலிக்கு அடுத்தபடியாக உலகின் இரண்டாவது மிகப்பெரிய பூனை இனமாகும்.
- இதன் இயற்கையான காட்டு இனம் இந்தியாவில், குறிப்பாக குஜராத்தின் சௌராஷ்டிரா பிராந்தியத்தில் மட்டுமே எஞ்சியுள்ளது.
- இந்த இனம் IUCN-இன் செந்நிறப் பட்டியலில் அருகி வரும் இனம் எனப் பட்டியலிடப்பட்டுள்ளது; உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட ஏழு வகையான பெரிய பூனை இனங்களின் பட்டியலில் புலி, சிங்கம், சிறுத்தை, பனிச்சிறுத்தை, சீட்டா, ஜாகுவார் மற்றும் பூமா ஆகியவை அடங்கும்.
- சர்வதேச பெரும் பூனை இனங்களின் கூட்டமைப்பால் (IBCA) உலகளவில் அங்கீகரிக்கப் பட்ட இந்த ஏழு முக்கிய பெரும் பூனை இனங்களில் ஐந்து இனங்கள் இந்தியாவில் காணப்படுகின்றன; ஜாகுவார் மற்றும் பூமா ஆகிய இரண்டு இனங்கள் மட்டுமே இங்கு இல்லை.

காசிரங்கா ESZ குறைப்பு

- உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல்களுக்கு இணங்க, காசிரங்கா தேசியப் பூங்கா மற்றும் புலிகள் காப்பகத்தை (KNPTR) சுற்றியுள்ள சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலத்தை (Eco-Sensitive Zone - ESZ) 10 கிலோ மீட்டரிலிருந்து 1 கிலோ மீட்டராகக் குறைக்க அசாம் அரசு திட்டமிட்டுள்ளது.
- பாதுகாக்கப்பட்ட காடுகள், தேசியப் பூங்காக்கள் மற்றும் வனவிலங்கு சரணாலயங்களைச் சுற்றி குறைந்தபட்சம் 1 கி.மீ சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலம் அறிவிக்கப்பட வேண்டும் என்று 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

- 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் உச்ச நீதிமன்றம் இந்த உத்தரவில் திருத்தம் செய்து, ஒரே மாதிரியான 1 கி.மீ விதி உள்ளூர் நடவடிக்கைகளை பாதிக்கலாம் மற்றும் மனித-வனவிலங்கு மோதலை அதிகரிக்கலாம் என்று கூறியது, ஆனால் பாதுகாக்கப்பட்ட பகுதிகளிலிருந்து 1 கி.மீ தூரத்திற்குள் சுரங்கப் பணிகளுக்கு தடை நீடிக்கிறது.
- முன்மொழியப்பட்ட குறைப்பு, கட்டுமானத் திட்டங்கள் உட்பட காசிரங்காவைச் சுற்றியுள்ள மேம்பாட்டுப் பணிகளை எளிதாக்கும் நோக்கம் கொண்டது.
- காசிரங்கா தேசியப் பூங்கா ஒரு யுனெஸ்கோ உலக பாரம்பரியத் தளமாகும், மேலும் இது அழிந்து வரும் ஒற்றைக் கொம்பு காண்டாமிருகத்தின் முக்கிய வாழ்விடமாகும்.
- சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலத்தை 1 கி.மீ ஆகக் குறைப்பது தொடர்பான முன்மொழிவை மத்திய அரசுக்கு அசாம் அரசு அனுப்பவுள்ளது.

CBD SBI-7 கூட்டம்

- பல்லுயிர் மரபுகள் (CBD) தொடர்பான அமலாக்க துணை அமைப்பின் 7-வது கூட்டம் (SBI 7) கென்யாவின் நைரோபியில் 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 4 முதல் 12 வரை நடைபெற்றது.
- பல்லுயிர் மரபுகள் (CBD), அதன் நெறிமுறைகள் மற்றும் குன்மிங்-மாண்ட்ரீல் உலகளாவியப் பல்லுயிர் கட்டமைப்பு (GBF) ஆகியவற்றை செயல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை SBI மதிப்பாய்வு செய்கிறது.
- இந்தக் கூட்டமானது GBF-இன் உலகளாவிய இடைக்கால மதிப்பாய்வைக் கருத்தில் கொண்டதுடன், 17-வது தரப்பினரின் மாநாட்டிற்கான (COP17) பரிந்துரைகளையும் தயார் செய்தது.
- வளங்களைத் திரட்டுதல், திறன் மேம்பாடு, செயற்கை உயிரியல், பாதுகாக்கப்பட்ட பகுதிகள் மற்றும் துணை தேசிய அரசாங்கங்களின் பங்கேற்பு ஆகியவை முக்கியப் பிரச்சினைகளில் அடங்கும்.
- இதன் பரிந்துரைகள் 2026 ஆம் ஆண்டு அக்டோபரில் ஆர்மீனியாவின் யெரெவனில் நடைபெறவுள்ள CBD COP17-இல் பல்லுயிர் பேச்சுவார்த்தைகளை வடிவமைக்க உதவும்.

இந்தியாவின் முதல் உயரமான பகுதியில் வனவிலங்கு உலா

- லடாக் பிராந்தியத்தில் இந்தியாவின் முதல் 'உயரமான பகுதி வனவிலங்கு உலா' (Altitude Wildlife Safari) திட்டத்தை லடாக் நிர்வாகம் அறிவித்துள்ளது.
- லடாக் துணைநிலை ஆளுநரின் தலைமையிலான 'பனிச்சிறுத்தை மற்றும் உயரமான பகுதி இயற்கைப் பாதுகாப்புச் சங்கம்' (SHAN), இப்பகுதியில் உலாவிற்கான சாத்தியமான வழித்தடங்களை அடையாளம் காணும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.
- ஹெமிஸ் தேசியப் பூங்கா, சாங்தாங் பள்ளத்தாக்கு, காரகோரம் வனவிலங்கு சரணாலயம் மற்றும் டிராஸ், நுப்ரா, ஷாம் போன்ற பகுதிகள் இந்தத் திட்டத்தின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.
- ஜூன் 16 அன்று உருவாக்கப்பட்ட SHAN அமைப்பு, லடாக் முழுவதும் பொறுப்பான மற்றும் நெகிழிப் பயன்பாடற்ற சுற்றுலாவை ஊக்குவித்து வருகிறது.
- இந்த நடவடிக்கையின் மூலம், அங்கீகரிக்கப்படாத பாதைகளில் வாகனங்களை ஓட்டுதல் (off-roading) மற்றும் வனவிலங்குகளுக்கு இடையூறு விளைவித்தல் போன்ற செயல்களைக் கட்டுப்படுத்த லடாக் அரசு முயற்சிக்கிறது.

- லடாக்கின் வனவிலங்குகளைப் பாதுகாப்பதிலும் மேம்படுத்துவதிலும் உள்ளூர் சமூகங்களைச் சமமான பங்காளிகளாக்கி, அதன் மூலம் அவர்கள் பொருளாதார ரீதியாகப் பயனடைவதை உறுதிசெய்யும் முதல் அரசுத் திட்டம் இதுவாகும்.
- இமயமலைப் பகுதி முழுவதும் மொத்தம் 718 பனிச்சிறுத்தைகள் உள்ளன.
- அவற்றில் 477 பனிச்சிறுத்தைகள் லடாக் மலைப்பகுதிகளில் காணப்படுகின்றன; அடுத்தடுத்த இடங்களில் உத்தரகண்ட் (124) மற்றும் இமாச்சலப் பிரதேசம் (51) ஆகியவை உள்ளன.

அறிவிக்கப்பட்ட இயற்கை பேரிடர்கள் குறித்த அறிவிப்பு

- இந்திய அரசு தனது 'அறிவிக்கப்பட்ட இயற்கை பேரிடர்கள்' பட்டியலில் வெப்ப அலைகள் (heatwaves) மற்றும் மின்னல் தாக்குதல் ஆகியவற்றைச் சேர்த்துள்ளது.
- 2026-31 ஆம் ஆண்டிற்கான மாநில பேரிடர் மீட்பு நிதியம் (SDRF) மற்றும் தேசிய பேரிடர் மீட்பு நிதியம் (NDRF) ஆகியவற்றின் நிர்வாகத்திற்கான செயல்பாட்டு வழிகாட்டுதல்களை மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- இதன் மூலம், இந்தியா அதிகாரப்பூர்வமாக 14 வகையான பேரிடர்களை 'அறிவிக்கப் பட்ட தேசிய பேரிடர்களாக' அங்கீகரித்துள்ளது.
- இது, பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005-இன் கீழ் மாநிலங்கள் நிதி உதவி பெறுவதற்குத் தகுதி அளிக்கிறது.
- 16-வது நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப் பட்டு உள்ளது; மேலும், பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் தீவிர வானிலை நிகழ்வுகள் குறித்த கவலைகள் அதிகரித்து வரும் சூழலில் இது மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இனி மாநிலங்கள் வெப்ப அலை மற்றும் மின்னல் தொடர்பான நிவாரணப் பணிகளுக்குத் தங்கள் மாநில பேரிடர் மீட்பு நிதியம் மற்றும் பேரிடர் தணிப்பு நிதியங்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம்; மாநில நிதிகள் போதுமானதாக இல்லாத பட்சத்தில் தேசியப் பேரிடர் மீட்பு நிதியத்தின் உதவியையும் பெறலாம்.
- இதுவரை, பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட பேரிடர் பட்டியலில் வெப்ப அலைகள் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.
- அந்தப் பட்டியலில் புயல், வறட்சி, நிலநடுக்கம், தீ விபத்து, வெள்ளம், சுனாமி, ஆலங்கட்டி மழை, நிலச்சரிவு, பனிச்சரிவு, மேக வெடிப்பு (cloudburst), பூச்சித் தாக்குதல் மற்றும் உறைபனி/குளிர் அலை ஆகிய 12 வகைகள் மட்டுமே இடம் பெற்றிருந்தன.
- முன்பு, மாநிலங்கள் வெப்ப அலைகளைத் தங்கள் அளவில் அறிவிக்க வேண்டி இருந்ததுடன், அதற்கான நிவாரணப் பணிகளுக்குத் தங்கள் ஆண்டு SDRF ஒதுக்கீட்டில் அதிகபட்சம் 10 சதவீத நிதியை மட்டுமே செலவிட முடிந்தது.
- தற்போது வெளியிடப்பட்டுள்ள புதிய அறிவிப்பின்படி, மாநிலங்கள் தங்கள் பேரிடர் மீட்பு மற்றும் தணிப்பு நிதியங்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும்; அத்துடன், பேரிடரை எதிர்கொள்ள மாநில நிதிகள் போதுமானதாக இல்லாத போது தேசிய நிதியத்தின் உதவியையும் பெற முடியும்.
- வெப்பம் தொடர்பான நோய்களுக்கான தேசிய செயல் திட்டத்தின் (NAPHRI) அடிப்படையில், பருவநிலை மாற்றம் மற்றும் மனித ஆரோக்கியத்திற்கான தேசியத் திட்டத்தின் (NPCCHH) மூலம் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் வெப்பம் சார்ந்த சுகாதார நடவடிக்கைகளைச் செயல்படுத்தி வருகிறது.

- மேலும், நாடு முழுவதும் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் (PHCs) மற்றும் உயர்நிலை மருத்துவமனைகள் உட்பட 51,000-க்கும் மேற்பட்ட மையங்களை உள்ளடக்கிய 'தேசிய வெப்பம் தொடர்பான நோய் மற்றும் இறப்பு கண்காணிப்பு அமைப்பு' (NHRIDS) செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.
- SDRF - உள்ளூர் அளவில் விரைவான உதவிகளை வழங்க மாநிலங்கள் 'மாநில பேரிடர் மீட்பு நிதியை' (State Disaster Response Fund) பயன்படுத்துகின்றன.
- NDRF - உள்ளூர் நிதிகள் போதுமானதாக இல்லாத பட்சத்தில், மத்திய அரசு 'தேசிய பேரிடர் மீட்பு நிதியிலிருந்து' (National Disaster Response Fund) கூடுதல் நிதியை வழங்குகிறது.
- இவை இரண்டும் 'பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005'-இன் கீழ் நிறுவப்பட்டன; இவை 2010-ஆம் ஆண்டில் பழைய 'தேசிய பேரிடர் அவசரகால நிதி'க்கு (National Calamity Contingency Fund) மாற்றாக அமைக்கப்பட்டன.
- இதற்கான நிதி முழுமையாக மத்திய அரசால், முக்கியமாக குறிப்பிட்ட வரிகள் (cesses) மற்றும் தீர்வைகள் (duties) மூலம் திரட்டப்படுகிறது.
- இது இந்தியாவின் பொதுக் கணக்கில் (Public Account of India) வட்டி இல்லாத இருப்பு நிதியாகப் பராமரிக்கப்படுகிறது; இதனால் நாடாளுமன்றத்தின் கூடுதல் ஒப்புதல் இல்லாமலேயே விரைவாக நிதியை அணுக முடிகிறது.
- அறிவிக்கப்பட்ட பேரிடர்களுக்குப் பதிலளிக்கும் நடவடிக்கைகளுக்காக மாநில அரசுகளிடம் உள்ள முதன்மையான நிதி 'மாநில பேரிடர் மீட்பு நிதி' (SDRF) ஆகும்.
- பொதுப் பிரிவு மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களுக்கு SDRF ஒதுக்கீட்டில் 75 சதவீதத்தையும், சிறப்புப் பிரிவு மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களுக்கு (வடகிழக்கு மாநிலங்கள், சிக்கிம், உத்தரகண்ட், இமாச்சலப் பிரதேசம், ஜம்மு மற்றும் காஷ்மீர்) 90 சதவீதத்தையும் மத்திய அரசு வழங்குகிறது.
- பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கான செலவுகளை ஈடுகட்ட மட்டுமே SDRF பயன்படுத்தப்பட வேண்டும்.
- இது சொத்து அல்லது பயிர் இழப்பிற்கான இழப்பீடாகச் செயல்படாது.
- கடுமையான தன்மை கொண்ட பேரிடர்களின் போது, SDRF-ல் போதுமான நிதி இல்லாத பட்சத்தில், ஒரு மாநிலத்தின் SDRF-க்குத் துணையாக 'தேசிய பேரிடர் மீட்பு நிதி' (NDRF) செயல்படுகிறது.

சிறை பிடித்து வளர்க்கப்பட்ட மெலிந்த அலகுடைய கழுகுகள் (slender-billed vultures) முதன்முறையாக உலகில் விடுவிக்கப் படுதல்

- அசாம், உலகிலேயே முதன்முறையாக கூண்டில் வளர்க்கப்பட்ட மெல்லிய அலகு கழுகுகளை (ஜிப்ஸ் டெனுயிரோஸ்ட்ரிஸ்) விடுவித்துள்ளது.
- அசாமில் உள்ள பம்பாய் இயற்கை வரலாற்றுச் சங்கத்தின் (BNHS) பாதுகாப்பு மையத்தில் கூண்டில் வளர்க்கப்பட்ட ஐந்து மெல்லிய அலகு கழுகுகள் விடுவிக்கப் பட்டன.
- இவை, காசிரங்கா தேசியப் பூங்கா மற்றும் புலிகள் காப்பகத்தின் பிஸ்வநாத் பிரிவில் உள்ள ஜடாயு மென் விடுவிப்பு மையத்தில் விடுவிக்கப்பட்டன.
- கால்நடை வலி நிவாரணிகளின் பயன்பாடு காரணமாக, கடந்த 20 ஆண்டுகளில் இந்தியாவில் ஜிப்ஸ் கழுகுகளின் எண்ணிக்கை 99% குறைந்துள்ளது.

- டிக்ளோஃபெனாக், அசெக்ளோஃபெனாக், கீட்டோபுரோஃபென் மற்றும் நிமெசுலைடு ஆகிய நான்கு மருந்துகளை மத்திய அரசு தடை செய்திருந்தாலும், பூச்சிக்கொல்லி நச்சுத்தன்மை அசாமில் உள்ள கழுகுகளுக்கு ஒரு அச்சுறுத்தலாகவே உள்ளது.
- மெல்லிய அலகு கழுகு என்பது துணை-இமயமலைப் பகுதிகள் மற்றும் தென்கிழக்கு ஆசியாவைத் தாயகமாகக் கொண்ட ஒரு பழைய உலகக் கழுகு இனமாகும்.
- இந்தியத் துணைக்கண்டத்தில் இதன் எண்ணிக்கை வேகமாக குறைந்து வருவதால், 2002 ஆம் ஆண்டு முதல் இது மிக அருகி வரும் இனமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- இது முன்னர் "நீண்ட அலகு கழுகு" என்ற பெயரில் இந்தியக் கழுகு என்றும் அழைக்கப் பட்டது.
- ஆனால், இந்தியக் கழுகு கங்கைக்குத் தெற்கே மட்டுமே காணப்படுகிறது மற்றும் செங்குத்துப் பாறைகளில் இனப்பெருக்கம் செய்கிறது, அதே சமயம் மெல்லிய அலகு கழுகு சாலையோரம் காணப்படுகிறது மற்றும் மரங்களில் கூடு கட்டுகிறது.
- மெல்லிய அலகு கழுகு இந்தியாவில் வடக்கே கங்கைச் சமவெளி, மேற்கே இமாச்சலப் பிரதேசம், தெற்கே வடக்கு ஒடிசா வரை, மற்றும் கிழக்கே அசாம் வரை காணப் படுகிறது.
- அவை பொதுவாக ஓரிடத்திலேயே தங்கும் பறவைகள்; அவை நீண்ட தூரம் பயணம் செய்வதோ அல்லது எந்தக் காரணத்திற்காகவும் வலசை போவதோ இல்லை.
- 1883-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட பம்பாய் இயற்கை வரலாற்றுச் சங்கம் (BNHS), இந்தியாவில் பாதுகாப்பு மற்றும் பல்லுயிர் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள மிகப்பெரிய அரசு சாரா அமைப்புகளில் ஒன்றாகும்.
- ஆசிய நீர்ப்பறவைகள் கணக்கெடுப்பு என்பது, பம்பாய் இயற்கை வரலாற்றுச் சங்கத்தால் வெட்லண்ட்ஸ் இன்டர்நேஷனல் அமைப்புடன் இணைந்து இந்தியாவில் மேற்கொள்ளப்படும் ஒரு வருடாந்திரப் பணியாகும்.
- இந்தப் பணி, 'சர்வதேச நீர்ப்பறவைகள் கணக்கெடுப்பு' என்ற சர்வதேசப் பணியின் ஒரு பகுதியாகும்.
- BNHS, இந்தியாவில் பேர்ட்லைஃப் இன்டர்நேஷனல் அமைப்பின் பங்குதாரராகும்.
- பேர்ட்லைஃப் இன்டர்நேஷனல் என்பது பறவைகளையும் அவற்றின் வாழ்விடங்களையும் பாதுகாக்கப் பாடுபடும் அரசு சாரா அமைப்புகளின் ஒரு உலகளாவிய கூட்டமைப்பாகும்.
- இது, இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியத்தின் (IUCN) பறவைகளுக்கான செம்பட்டியல் அதிகார அமைப்பாகும்.
- பேர்ட்லைஃப் இன்டர்நேஷனல், ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆசியா, ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் பசிபிக் ஆகிய பகுதிகளில் ஒன்பது பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது.
- அவற்றில் முக்கியமான பறவை மற்றும் பல்லுயிர் பகுதிகள் திட்டம், கடல்சார் திட்டம், அழிவுகளைத் தடுக்கும் திட்டம் மற்றும் பறவைப் பாதைகள் திட்டம் ஆகியவை அடங்கும்.
- வெட்லண்ட்ஸ் இன்டர்நேஷனல் என்பது, மக்கள் மற்றும் பல்லுயிர்களுக்காக ஈரநிலங்களையும் அவற்றின் வளங்களையும் பேணிப் பாதுகாக்கவும் மீட்டெடுக்கவும் செயல்படும் ஒரு உலகளாவிய அமைப்பாகும்.
- இது உலகெங்கிலும் உள்ள அரசாங்க மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் உறுப்பினர் ஆதரவுடன் இயங்கும் ஒரு சுதந்திரமான, இலாப நோக்கற்ற, உலகளாவிய அமைப்பு ஆகும்.

கருங்கழுத்துக் கொக்குத் திருவிழா – லடாக்

- அச்சுறுத்தலுக்கு உள்ளான இந்த இனத்தின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக லடாக் தனது முதல் கருங்கழுத்துக் கொக்குத் திருவிழாவை நடத்துகிறது.
- இந்த திருவிழா லடாக்கில் நடைபெறுகிறது, அங்குள்ள சாங்தாங் குளிர் வனவிலங்கு சரணாலயம் மட்டுமே இந்தியாவில் கருங்கழுத்துக் கொக்குகளின் ஒரே இனப்பெருக்க மையமாக உள்ளது.
- இந்தக் கொக்குகள் கிழக்கு லடாக்கின் சாங்தாங் பகுதியில் உள்ள சோ கர் மற்றும் ஹன்லே சதுப்பு நிலங்களில் கடல் மட்டத்திலிருந்து சுமார் 2,500–5,000 மீட்டர் உயரத்தில் இனப்பெருக்கம் செய்கின்றன.
- கருங்கழுத்துக் கொக்கு (க்ரூஸ் நிக்ரிகால்லிஸ்) உலகின் ஒரே அதிஉயரப் பகுதியில் வாழும் கொக்கு இனமாகும், மேலும் இது IUCN செந்நிறப் பட்டியலில் அச்சுறுத்தல் நிலையை அண்மித்த இனமாக உள்ளதாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- இது லடாக்கின் மாநிலப் பறவையாகும், மேலும் அப்பகுதியில் இது புனிதமானதாகக் கருதப்படுகிறது.
- இந்தியா, பூட்டான், நேபாளம் மற்றும் சீனா முழுவதும் சுமார் 16,000 கருங்கழுத்துக் கொக்குகள் காணப்படுகின்றன.

ஆசியாவின் முதல் பாலைவனக் கருத்துரு கொண்ட இரவு நேர வனவிலங்கு உலா

- குஜராத்தின் பனஸ்கந்தா மாவட்டத்தில் உள்ள டீசாவில் பாலைவன விலங்கியல் பூங்கா மற்றும் இரவு நேர வனவிலங்கு உலாவை அமைப்பதற்கான திட்டத்திற்கு மத்திய விலங்கியல் பூங்கா ஆணையம் (CZA) ஒப்புதல் அளித்துள்ளது.
- ஆசியாவின் முதல் பாலைவனக் கருத்துரு கொண்ட, வாகனத்தில் சுற்றிப் பார்க்கும் இரவு நேர வனவிலங்கு உலாவை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.
- முன்மொழியப்பட்ட இந்தப் பூங்காவில் மற்ற பாலைவனச் சூழல் மண்டலங்களைச் சேர்ந்த உயிரினங்களும் இடம்பெறும்.
- இந்தத் திட்டத்தில் பட்டியலிடப்பட்டுள்ள ஆப்பிரிக்க இனங்களில் அங்கோலா ஒட்டகச் சிவிங்கி, கிரேவியின் வரிக்குதிரை, சிமிட்டார் ஓரிக்சு, ஆப்பிரிக்க குடு, ஸ்பிரிங்போக், அட்ரா கெஸல், கருப்பு காண்டாமிருகம், சிம்பன்சி, மீர்கட், ஆப்பிரிக்க சிறுத்தை, ஆப்பிரிக்க சிங்கம், ஃபென்னெக் நரி, வெளவால் காது கொண்ட நரி மற்றும் நெருப்புக் கோழி ஆகியவை அடங்கும்.
- கங்காருக்கள், ஈமுக்கள் மற்றும் வாலபிக்கள் ஆகியவை இந்தப் பூங்காவிற்காகத் திட்டமிடப் பட்டுள்ள ஆஸ்திரேலிய இனங்களில் அடங்கும்.
- முன்மொழியப்பட்ட பாலைவன விலங்கியல் பூங்கா மற்றும் இரவு சஃபாரி குஜராத்தில் அமைந்துள்ளதுடன் அதேசமயம் நன்கு அறியப்பட்ட பாலைவன தேசியப் பூங்கா ராஜஸ்தானில் அமைந்துள்ளது.
- பாலைவன தேசியப் பூங்கா என்பது இந்திய மாநிலமான ராஜஸ்தானில், ஜெய்சல்மர் மற்றும் பார்மர் நகரங்களுக்கு அருகில் அமைந்துள்ள ஒரு தேசியப் பூங்காவாகும்.
- பூங்காவின் சுமார் 44% மணல் குன்றுகளால் ஆனது.

வெளிமான் பாதுகாப்பு – குஜராத்

- ஜாம்நகரில் உள்ள வந்தாராவில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, குஜராத்தின் கட்ச் பகுதியில் உள்ள பன்னி புல்வெளிகளில் இருபது வெளிமான்கள் (15 பெண் மான்கள், 5 ஆண் மான்கள்) காடுகளில் விடப்பட்டன.
- வெளிமான் (ஆன்டிலோப் செர்விகாப்ரா) என்பது ஒரு தெற்காசிய புல்வெளி மான் ஆகும், இது IUCN செந்நிறப் பட்டியலில் தீவாய்ப்பு கவலை குறைந்த இனம் என வகைப் படுத்தப் பட்டுள்ளது.
- இந்தியாவில், இது 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் அட்டவணை I-இன் கீழ் பாதுகாப்பைப் பெறுகிறது.
- பன்னி புல்வெளிகள் வெளிமான், சின்காரா மற்றும் நீல்காய் போன்ற பூர்வீக தாவர உண்ணிகளை ஆதரிக்கும் ஒரு முக்கிய வறண்ட மற்றும் பகுதி வறண்ட சுற்றுச்சூழல் அமைப்பாகும்.
- குஜராத்தின் பரந்த பாதுகாப்புத் திட்டமானது பூர்வீக தாவர உண்ணிகளின் எண்ணிக்கையை மீட்டெடுப்பதற்காக 500 வெளிமான்கள் மற்றும் 100 சின்காராக்களை இடமாற்றம் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

UNCCD COP17 – மங்கோலியா

- பாலைவனமாதலை தடுப்பதற்கான ஐக்கிய நாடுகளின் மாநாட்டின் (UNCCD) 17-வது தரப்பினரின் மாநாடு (COP17) மங்கோலியாவின் உலான்பாதரில் தொடங்கியது.
- ரியாத்தில் நடைபெற்ற COP16 மாநாட்டில் சட்டப்பூர்வமாக பிணைக்கக்கூடிய ஒப்பந்தத்தில் உடன்படத் தவறியதைத் தொடர்ந்து, உலகளாவிய வறட்சிக் கட்டமைப்பு குறித்து நாடுகள் தற்போது விவாதித்து வருகின்றன.
- உலகளவில் 1.5 முதல் 2 பில்லியன் ஹெக்டேர் நிலம் சீரழிந்துள்ளதாக மதிப்பிடப் பட்டு உள்ள நிலையில், சுமார் 1 பில்லியன் ஹெக்டேர் சீரழிந்த நிலங்களை மீட்டெடுக்க நாடுகள் உறுதியளித்துள்ளன.
- இந்த மாநாடு வறட்சி மற்றும் நில சீரழிவைச் சமாளிப்பதற்கான நிதி, தொழில்நுட்பம் மற்றும் நடவடிக்கைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- தமது நாட்டின் நிலப்பரப்பில் 77 சதவீதம் பாலைவனமாதல் மற்றும் நில சீரழிவால் பாதிக்கப் பட்டுள்ளதாக மங்கோலியா தெரிவித்துள்ளது.

இந்தியாவின் முதல் புல்வெளிகள் வழிகாட்டி

- மங்கோலியாவின் உலான்பாத்தாரில் நடைபெற்ற பாலைவனமாதலை எதிர்ப்பதற்கான ஐக்கிய நாடுகள் சாசனத்தின் (UNCCD) COP17 மாநாட்டில், 'இந்தியாவின் புல்வெளிகள் மற்றும் பிற திறந்தவெளி இயற்கை சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கான வழிகாட்டி' முதன்முறையாக வெளியிடப்பட்டது.
- இந்த வழிகாட்டி இந்தியாவின் புல்வெளிகள், சவானாக்கள், பாலைவனங்கள் மற்றும் பிற திறந்தவெளி இயற்கை சுற்றுச்சூழல் அமைப்புகளை உள்ளடக்கியது.
- இதில் அவற்றின் புவியியல், சூழலியல், பல்லுயிர் மற்றும் தொடர்புடைய சமூகங்கள் மற்றும் பழங்குடியினர் பற்றிய தகவல்கள் அடங்கியுள்ளன.

- காடுகளுடன் சேர்த்து இந்த சுற்றுச்சூழல் அமைப்புகளையும் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை இந்த வழிகாட்டி அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.
- இது கொள்கை வகுப்பாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், பாதுகாப்பு அமைப்புகள், மேம்பாட்டு முகமைகள் மற்றும் உள்ளூர் சமூகங்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளது.

புதிய இமயமலைத் தாவரம் - இம்பேடியன்ஸ் நிம்ஸ்புர்ஜாய்

- ஒரு புதிய இமயமலைப் பூக்கும் தாவரத்திற்கு நேபாள மலையேறுபவரான நிர்மல் நிம்ஸ்டாய் புர்ஜாவின் பெயரால் 'இம்பேடியன்ஸ் நிம்ஸ்புர்ஜாய்' என்று பெயரிடப் பட்டுள்ளது.
- இந்தத் தாவரம் 2011 ஆம் ஆண்டில் நேபாளத்தின் மேற்கு மியாக்டி மாவட்டத்தில் முதன்முதலில் காணப்பட்டதுடன், மேலும் ஒரு தசாப்தத்திற்கும் மேலான ஆய்வுக்குப் பிறகு முறைப்படி விவரிக்கப்பட்டுள்ளது.
- இம்பேடியன்ஸ் நிம்ஸ்புர்ஜாய் தாவரமானது பால்சாமினேசி குடும்பத்தையும், இம்பேடியன்ஸ் பேரினத்தையும் சேர்ந்ததாகும்.
- இது இமயமலையில் சுமார் 2,800–2,900 மீட்டர் உயரத்தில் ஈரப்பதமான சரிவுகள் மற்றும் வன விளிம்புகளில் வளர்கிறது.
- நிம்ஸ்டாய் அறக்கட்டளை மூலம் புர்ஜா செய்த மலையேற்றச் சாதனைகள் மற்றும் சுற்றுச்சூழல் பணிகளை கௌரவிக்கும் வகையில் இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது.

ICAR-NRCB - இரண்டு புதிய வாழை ரகங்கள்

- தமிழ்நாட்டின் திருச்சியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி சபை - தேசிய வாழை ஆராய்ச்சி மையம் (ICAR-NRCB) காவேரி தங்கம் மற்றும் காவேரி நாடன் ஆகிய இரண்டு புதிய வாழை ரகங்களை வெளியிட்டுள்ளது.
- காவேரி தங்கம் என்பது வழக்கமான ரகங்களை விட கிட்டத்தட்ட 10 மடங்கு அதிக வைட்டமின் ஏ, மஞ்சள் நிற சதைப்பகுதி மற்றும் 15 நாட்கள் வரை சேமித்து வைக்கும் ஆயுட்காலம் கொண்ட ஒரு பிரீமியம்/உயர்வகை ரகமாகும்.
- காவேரி நாடன் ஒரு அதிக மகசூல் தரும் ரகமாகும் என்பதோடு இது ஹெக்டேருக்கு 75 டன்கள் வரை உற்பத்தி செய்யக் கூடியது, இது வழக்கமான ரகங்களின் மகசூலை விட கிட்டத்தட்ட இருமடங்காகும்.
- வாழை விவசாயிகளுக்கு நீரைச் சேமிக்கவும் மற்றும் பருவநிலை தொடர்பான சவால்களைச் சமாளிக்கவும் உதவும் வகையில் செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் சென்சார் அடிப்படையிலான நீர்ப்பாசனத்தையும் ICAR-NRCB ஊக்குவிக்கிறது.
- மத்திய கிழக்கு நாடுகளுக்கு நேந்திரன் வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்வதற்கான தொழில் நுட்ப ஆதரவை இந்த மையம் வழங்கும், ஏற்றுமதி சார்ந்த உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்காக நான்கு தொகுப்புகள் திட்டமிடப் பட்டுள்ளன.

ஆப்பிரிக்காவின் அதீத வெப்ப நெருக்கடி

- ஓர் ஆய்வில், ஆப்பிரிக்காவின் முறைசாரா குடியிருப்புகளில் நிலவும் அதீத வெப்பம் சுகாதார ஏற்றத்தாழ்வுகளை மோசமாக்குகிறது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

- இந்த முறையான மதிப்பாய்வானது 11 கல்வி தரவுத்தளங்களில் உள்ள 96,608 பதிவுகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு 2010 மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கு இடையில் வெளியிடப்பட்ட 21 ஆய்வுகளை ஆய்வு செய்தது.
- தென்னாப்பிரிக்கா, கென்யா, தான்சானியா, கேமரூன், எகிப்து, நைஜீரியா மற்றும் கானா ஆகிய நாடுகளை இந்த ஆய்வுகள் உள்ளடக்கியிருந்ததுடன் மோசமான வீடுகள், அதிக மக்கள் நெரிசல், வரையறுக்கப்பட்ட தண்ணீர் மற்றும் பலவீனமான உள்கட்டமைப்பு ஆகியவை வெப்ப பாதிப்பை அதிகரித்துள்ளன.
- நீரிழப்பு, வெப்பச் சோர்வு, வெப்பத் தாக்கம் (heatstroke), தலைவலி, தூக்கப் பிரச்சனைகள், சுவாச நோய்கள், மனநலப் பிரச்சனைகள் மற்றும் பிற நோய்கள் ஆகியவை வெப்பம் தொடர்பான விளைவுகளில் அடங்கும்.
- பாதிக்கப்படக்கூடிய சமூகங்களில் அதீத வெப்பத்தின் தாக்கம் மற்றும் அடிப்படையான சமூக-பொருளாதார நிலைமைகள் ஆகிய இரண்டிற்கும் தீர்வு காணும் வகையிலான தழுவல் நடவடிக்கைகளின் தேவையை இந்த ஆய்வு எடுத்துக் காட்டுகிறது.

கேரளாவின் இரண்டாவது உள்நாட்டு மாட்டு இனம்

- இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையின் தேசிய விலங்கு மரபணு வளப் பணியகம் (ICAR-NBAGR), பெரியார் குள்ளன் என்றும் அழைக்கப்படும் பெரியார் மாட்டை ஒரு உள்நாட்டு மாட்டு இனமாக அதிகாரப் பூர்வமாகப் பதிவு செய்துள்ளது.
- வெச்சூர் மாடு இந்தியாவின் மிகச்சிறிய மாட்டு இனங்களில் ஒன்றாகும் என்பதோடு மேலும் இது கேரளாவைப் பூர்வீகமாகக் கொண்டது.
- வெச்சூர் மாட்டுக்கு அடுத்தபடியாக தேசிய அங்கீகாரம் பெற்ற கேரளாவின் இரண்டாவது உள்நாட்டு மாட்டு இனம் பெரியார் மாட்டு இனமாகும்.
- பெரியார் குள்ளன் என்பது மத்திய கேரளாவின் மேற்குத் தொடர்ச்சி மலை வனப் பகுதிகள் மற்றும் தோட்டப் பகுதிகளைப் பூர்வீகமாகக் கொண்ட ஒரு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான குள்ள மாட்டு இனமாகும்.
- இது முக்கியமாக எர்ணாகுளம் மற்றும் திருச்சூர் மாவட்டங்களில் காணப்படுகிறது என்பதோடு மேலும் உள்ளூரில் இது குட்டம்புழா மாடு மற்றும் அண்டுகண்ணி என்று அழைக்கப் படுகிறது.

நேபாள திடீர் வெள்ளம் 2026

- போடே கோஷி-திரிசூலி நதி அமைப்பைப் பாதிக்கும் வகையில் திபெத் பக்கத்திலிருந்து திடீரென ஏற்பட்ட நீர்வரத்துக்குப் பிறகு, 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26 அன்று நேபாளத்தை ஒரு பெரிய திடீர் வெள்ளம் தாக்கியதுஎன்ற நிலையில் இதில் குறைந்தது 157 பேர் உயிரிழந்தனர்.
- அதிக உயரத்தில் ஏற்பட்ட பனி-பாறை பனிச்சரிவு அல்லது பனிப்பாறை சரிவு இந்த வெள்ளத்தைத் தூண்டியிருக்கலாம் என்றும், அதனால் தண்ணீர், பனி, பாறைகள் மற்றும் குப்பைகள் கீழ்நோக்கி வந்திருக்கலாம் என்றும் நிபுணர்கள் தெரிவித்தனர்.
- இந்த வெள்ளத்தால் போடே கோஷி மற்றும் திரிசூலி நதிகளில் நீர்மட்டம் வேகமாக உயர்ந்ததுடன் இது ரசுவா, நுவாகோட் மற்றும் தாடிங் மாவட்டங்களை கடுமையாக பாதித்தது.
- போடே கோஷி என்பது கோஷி நதி அமைப்பின் ஒரு பகுதியாகும் எனும் அதே நேரத்தில் திரிசூலி நதி நாராயணி நதியில் கலக்கிறது.

- கோவி மற்றும் நாராயணி நதிப் படுகைகளில் நீர்வரத்து மிகவும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் பட்டது என்ற நிலையில் கண்டகி நதியில் ஏற்படக்கூடிய வெள்ள அலை காரணமாக பீகாரில் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன.
- இந்தப் பேரிடர் 19 மோட்டார் பாலங்கள் மற்றும் சுமார் 40 கி.மீ சாலைகளை சேதப் படுத்தியது என்பதுடன் மேலும் குடியிருப்புகள் மற்றும் நீர்மின் உள்கட்டமைப்பையும் பாதித்தது.

நீலக்குறிஞ்சி பாதுகாப்புத் திட்டம்

- நீலக்குறிஞ்சிக்கான வருடாந்திரப் பாதுகாப்பு திட்டங்களை சமர்ப்பிக்குமாறு கேரளா, தமிழ்நாடு மற்றும் கர்நாடகா மாநிலங்களுக்கு உத்தரவிடுமாறு தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தை (NGT) சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் (MoEFCC) வலியுறுத்தியுள்ளது.
- நீலக்குறிஞ்சி (ஸ்ட்ரோபிலாந்தஸ் குந்தியனா) என்பது மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு உள்ளூர் புதர்ச் செடியாகும்; இது 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும்.
- இது நீலகிரி, பழனி-கொடைக்கானல், ஆனைமலை மற்றும் மூணார்-இடுக்கி நிலப் பரப்புகள் உட்பட 14 சூழலியல் பகுதிகளில் 34 இடங்களில் பதிவு செய்யப் பட்டுள்ளது.
- கேரளாவின் திருவனந்தபுரத்தில் உள்ள ஜவஹர்லால் நேரு வெப்பமண்டல தாவரவியல் பூங்கா மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (JNTBGRI), ஒரு சிற்றின-குறிப்பிட்ட பாதுகாப்பு செயல் திட்டத்தை முன்மொழிந்தது.
- முக்கியப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் சூழலியல் கண்காணிப்பு, சீரழிந்த மலைப் பகுதி புல்வெளிகளை மீட்டெடுத்தல், ஆக்கிரமிப்பு இனங்களை அகற்றுதல் மற்றும் சுற்றுலாவை ஒழுங்குபடுத்துதல் ஆகியவை அடங்கும்.
- பாதுகாப்புத் திட்டம் வனவிலங்கு வாழ்விட மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மாநில அரசுகளால் முக்கியமாகச் செயல்படுத்தப்படும் என்பதோடு இதற்கு சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவியை வழங்கும்.

கிஷ்கிந்தா மலைகளில் புலி

- கர்நாடகாவின் கொப்பல் மாவட்டத்தில் உள்ள கிஷ்கிந்தா மலைகளில் ஒரு புலி கேமரா பொறியில் சிக்கியுள்ளது.
- இப்பகுதியின் இந்த வனப்பகுதியில் கிட்டத்தட்ட ஐந்து தசாப்தங்களுக்குப் பிறகு இது கடைசியாகக் காணப்பட்டது.
- இது ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள ஸ்ரீசைலம் வனவிலங்கு வழித்தடத்திலிருந்து இங்கு வந்திருக்கலாம்.

கிஷ்கிந்தா மலைகள் பற்றிய குறிப்பு

- இந்த மலை துங்கபத்ரா ஆற்றின் வடக்குக் கரையில் அமைந்துள்ளது.
- இதனைச் சுற்றியுள்ள பீடபூமி சுமார் 3,000 மில்லியன் ஆண்டுகள் பழமையானது என மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இது பூமியின் மிகப் பழமையான மேற்பரப்பு அமைப்புகளில் ஒன்றாக விளங்குகிறது.
- இது கர்நாடகாவில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஹம்பிக்கு அருகே அமைந்துள்ளது.

திஹிங் பட்காய் வண்ணத்துப்பூச்சி பன்முகத்தன்மை

- அஸ்ஸாமில் உள்ள திஹிங் பட்காய் தேசியப் பூங்காவில் 37 அழிந்து வரும் இனங்கள் உட்பட மொத்தம் 165 வகையான வண்ணத்துப்பூச்சி இனங்கள் பதிவு செய்யப்பட்டு உள்ளன.
- திஹிங் பட்காய் தேசியப் பூங்கா அஸ்ஸாமின் திப்ருகர் மற்றும் தின்சுகியா மாவட்டங்களில் 234.26 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது.
- இது அஸ்ஸாம் பள்ளத்தாக்கு வெப்பமண்டல ஈரமான பசுமைமாறாக் காடுகளின் எஞ்சிய பகுதிகளில் ஒன்றாகும்.
- இப்பூங்கா 937 சதுர கிலோமீட்டர் பரப்பளவுள்ள திஹிங் பட்காய் யானைகள் காப்பகத்தின் முக்கியப் பகுதியாக அமைகிறது.

உலகளாவிய வறட்சி மீள்திறன் கட்டமைப்பு

- பாலைவனமாதலைத் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகளின் மாநாட்டில் (UNCCD COP17) ஒரு புதிய உலகளாவிய வறட்சி மீள்திறன் கட்டமைப்பு தொடங்கப்பட்டது.
- வறட்சியை எதிர்பார்ப்பதற்கும், தயாராகுவதற்கும் மற்றும் தாங்குவதற்குமான ஒரு நாட்டின் திறனை மதிப்பிடுவதற்கான உலகின் முதல் வறட்சி மீள்திறன் குறியீட்டை (DRI) இது உள்ளடக்கியுள்ளது.
- தரவு அடிப்படையிலான வறட்சித் திட்டமிடலை ஆதரிப்பதற்காக, செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் இயங்கும் பகுப்பாய்வு மற்றும் பாதிப்பு குறித்த வரைபடமாக்கல் ஆகியவற்றை DRI பயன்படுத்துகிறது.
- வறட்சி மீள்திறன் முதலீட்டு வசதி (DRIF) என்பது வறட்சி மீள்திறன் திட்டங்களை அளவிடுவதற்கான உலகளாவிய நிதித் தளமாகும்.
- நீர் பாதுகாப்பு, நிலையான விவசாயம் மற்றும் நில சீரமைப்பு ஆகியவற்றிற்கான முதலீட்டு அபாயங்களைக் குறைக்கவும், தனியார் மற்றும் நிறுவன நிதியை ஈர்க்கவும் பொது நிதியைப் பயன்படுத்துவதை DRIF நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்தியாவின் முதல் மண் அமைப்பு வரைபடம்

- தேசிய மண் ஆய்வு மற்றும் நிலப் பயன்பாட்டுத் திட்டமிடல் பணியகம் (NBSS&LUP) இந்தியாவின் முதல் மண் அமைப்பு வரைபடத்தை உருவாக்கியுள்ளது.
- இது நாடு முழுவதும் ஹெக்டேர் அளவில் எண்ணிமப்படுத்தப்பட்ட மண் வகைப்பாடு தரவுகளை வழங்குகிறது.
- இது குறிப்பிட்ட நிலங்களுக்கு சிறந்த பயிர்களை அடையாளம் காண விவசாயிகளுக்கு உதவுகிறது, மேலும் பிராந்தியத்திற்கேற்ற கொள்கைகள், பயிர் திட்டமிடல் மற்றும் நிலப் பயன்பாட்டு உத்திகளுக்கு ஆதரவளிக்கிறது.
- மண்ணில் உள்ள மணல், வண்டல் மற்றும் களிமண் ஆகியவற்றின் விகிதத்தைக் கொண்டு மண் அமைப்பு தீர்மானிக்கப்படுகிறது.
- இந்தியாவின் முதல் மண் ஆழ வரைபடம், மண் அமைப்பு வரைபடத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்பே உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டது.
- மண் ஆழ வரைபடமும் NBSS&LUP நிறுவனத்தால் வெளியிடப்பட்டது.

- NBSS&LUP என்பது ICAR-இன் கீழ் உள்ள ஒரு தேசிய நிறுவனம் ஆகும் என்பதோடு இது மகாராஷ்டிராவின் நாக்பூரில் அமைந்துள்ளது.

மெட்ராஸ் முதலைப் பண்ணை – 50வது ஆண்டு

- சென்னையில் உள்ள மெட்ராஸ் முதலை பண்ணை அறக்கட்டளை (MCBT) ஊர்வன பாதுகாப்பில் 50 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.
- முதலைகள் மற்றும் பிற ஊர்வனவற்றைப் பாதுகாப்பதற்காக ரோமுலஸ் 'ரோம்' விட்டேக்கர் மற்றும் சாய் விட்டேக்கர் ஆகியோரால் இது நிறுவப்பட்டது.
- 8.5 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த மையத்தில் 47 கரியால்கள், ஆமைகள், பாம்புகள் மற்றும் பல்லிகள் உட்பட 400 க்கும் மேற்பட்ட முதலைகள் உள்ளன.
- MCBT சிறைபிடிக்கப்பட்ட இனப்பெருக்கம், ஆராய்ச்சி, ஊர்வன கல்வி மற்றும் பாம்புக் கடி குறைப்பு திட்டங்களை நடத்துகிறது.
- இது அந்தமான் மற்றும் நிக்கோபார் சுற்றுச்சூழல் குழு (ANET) மற்றும் இருளர் பாம்பு பிடிப்போர் தொழில்துறை கூட்டுறவு சங்கம் போன்ற பாதுகாப்பு முயற்சிகளையும் ஆதரிக்கிறது.

தமிழ்நாட்டில் மூன்று யானை வழித்தடங்கள்

- ஓசூர் வனக்கோட்டம், காவிரி வடக்கு வனவிலங்கு சரணாலயத்தில் மூன்று புதிய யானை வழித்தடங்களை தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.
- இந்த வழித்தடங்கள் தமிழ்நாடு மற்றும் கர்நாடகா இடையே ஆசிய யானைகளால் பயன்படுத்தப்படும் காவிரிக்கு அப்பாலான இயக்கப் பாதையின் ஒரு பகுதியாகும்.
- ஜவளகிரி-உலிபண்டா-தக்கட்டி வழித்தடமானது 18.50 கி.மீ நீளம்; 3,241.53 ஹெக்டேர் பரப்பளவைக் கொண்டுள்ளது.
- ஜவளகிரி-பனை-அஞ்செட்டி வழித்தடமானது 20.90 கி.மீ நீளம்; 6,881.47 ஹெக்டேர் பரப்பளவைக் கொண்டுள்ளது.
- பிலிக்கல்-ஜவளகிரி வழித்தடமானது 2.20 கி.மீ நீளம்; 196 ஹெக்டேர் பரப்பளவைக் கொண்டுள்ளது.
- இந்த மூன்று வழித்தடங்களும் பாதுகாக்கப்பட்ட வனம் மற்றும் சரணாலய எல்லைகளுக்குள் உள்ளன, எந்தவொரு தனியார், பொது அல்லது வருவாய் கிராம நிலங்களும் பாதிக்கப்படவில்லை.

புதிய கடல்வாழ் உயிரினங்கள் 2026

- மகாராஷ்டிராவின் கொங்கன் கடற்கரையில் உள்ள அலைகளுக்கிடையேயான படிவுகளில் சாம்போபாகா ஹோல்ஸ்மேனே (Psammophaga holzmannae) மற்றும் சாம்போபாகா சின்ஹாய் (Psammophaga sinhai) என்ற இரண்டு புதிய நுண்ணிய கடல்வாழ் உயிரினங்களை புனேயைச் சேர்ந்த அறிவியலாளர்கள் கண்டுபிடித்தனர்.
- அவை சாம்போபாகா என்ற பேரினத்தைச் சேர்ந்த ஒருசெல் கடல்வாழ் புரோட்டிஸ்டுகள் ஆகும், இது பென்திக் ஃபோராமினிஃபெரா குழுவைச் சேர்ந்தது.

- அவை நுண்துகள்களை உட்கொண்டு, மணல் துகள்களை ஒன்றாகச் சேர்த்து சோதனைகள் (tests) எனப்படும் பாதுகாப்பான ஓடு போன்ற அமைப்புகளை உருவாக்குகின்றன.
- ஃபோராமினிஃபெரா ஆழமற்ற அலைகளுக்கிடையேயான பகுதிகள் முதல் ஆழமான கடல் அகழிகள் வரை காணப்படுகின்றன, மேலும் அவை உப்புத்தன்மை, வெப்பநிலை, கன உலோகங்கள் மற்றும் பெருங்கடல் அமிலமயமாக்கல் ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களைக் குறிக்கக் கூடியவை.
- அவற்றின் புதைபடிவ ஓடுகள் கடந்தகால கடல் வெப்பநிலை மற்றும் கடல் மட்ட மாற்றங்களை மறுகட்டமைக்கவும் பயன்படுத்தப் படுகின்றன.

குஜராத் ஈரநிலம் - கருங்கழுத்து நாரை இனப்பெருக்கம்

- குஜராத்தில் உள்ள கிஜாடியா பறவைகள் சரணாலயம் கருங்கழுத்து நாரைகளின் முக்கிய இனப்பெருக்க தளமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.
- கருங்கழுத்து நாரை IUCN செம்பட்டியலில் அச்சுறுத்தல் நிலையை அண்மித்த இனம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு ஜூலை முதல் 2025 ஆம் ஆண்டு மார்ச் வரை நடத்தப்பட்ட ஆய்வுகளின் போது, ஆராய்ச்சியாளர்கள் 21–23 நாரைகள் என்ற அதிகபட்ச எண்ணிக்கையைப் பதிவு செய்தனர்.
- அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான இனப்பெருக்க காலத்தில் நான்கு கூடுகளில் எட்டு இளம் பறவைகள் உருவாகின.
- அனைத்து கூடுகளும் நெல்டுமா ஜூலிஃப்ளோரா (Neltuma juliflora) என்ற மரத்தின் மீது கட்டப்பட்டிருந்தன, இது உள்நாட்டில் 'கண்டோ பவால்' என அழைக்கப்படும் ஒரு ஆக்கிரமிப்பு மரமாகும்.
- கிஜாடியா பறவைகள் சரணாலயம் குஜராத்தின் ஜாம்நகர் மாவட்டத்தில் அமைந்து உள்ள ஒரு ராம்சர் ஈரநிலப் பகுதியாகும்.

அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

சந்தை விலகல்கள் செயல்திறன் குறியீடு

- காம்பிடேர் அறக்கட்டளை (Competere Foundation) அறிக்கையின்படி, சந்தை விலகல்கள் செயல்திறன் குறியீட்டில் இந்தியா 2010 ஆம் ஆண்டில் 82 வது இடத்திலிருந்து 2023 ஆம் ஆண்டில் 57வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- சரக்கு மற்றும் சேவை வரி (GST), திவால்நிலை மற்றும் நொடிப்புநிலை சட்டம் (IBC), ஒழுங்குமுறைச் சீர்திருத்தங்கள் மற்றும் வர்த்தக வசதி நடவடிக்கைகள் போன்ற சீர்திருத்தங்களே இந்தியாவின் இந்த முன்னேற்றத்திற்குக் காரணம் என அந்த அறிக்கை கூறுகிறது.
- நாடுகளின் உரிமைகளைப் பாதுகாத்தல், உள்நாட்டுப் போட்டி மற்றும் சர்வதேசப் போட்டி ஆகியவற்றின் அடிப்படையில் இந்தக் குறியீடு நாடுகளை மதிப்பிடுகிறது.

- இந்தச் சீர்திருத்தங்கள் எளிதாக தொழில் செய்தல், சந்தைப் போட்டி மற்றும் முதலீட்டாளர் நம்பிக்கையை மேம்படுத்தியுள்ளன என்று இந்த அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.
- புது தில்லியில் இந்திய வெளிநாட்டு வர்த்தகக் கழகத்தின் (IIFT) வர்த்தகம் மற்றும் முதலீட்டுச் சட்ட மையம் (CTIL) மற்றும் காம்பிடேர் அறக்கட்டளை ஆகியவை ஏற்பாடு செய்திருந்த கலந்துரையாடலின் போது இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

ICMM அறிக்கை 2026

- உலகின் சுரங்கம் மற்றும் உலோக அலகுகளில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கு, குறைந்தபட்சம் ஒரு குறிப்பிடத்தக்க இயற்பியல் நீர் அபாயத்திற்கு உள்ளாகியுள்ளன.
- இந்த ஆய்வு 148 நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் உள்ள 12,000-க்கும் மேற்பட்ட வசதிகளைப் பகுப்பாய்வு செய்தது.
- அடிப்படை நீர்ப் பற்றாக்குறையே மிகவும் பொதுவான அச்சுறுத்தலாகும் என்பதோடு இது 38% வசதிகளைப் பாதிக்கிறது, அதே நேரத்தில் வறட்சி அபாயம் உலகளவில் 27% என்ற அளவைப் பாதிக்கிறது.
- சிலி, பெரு, தெற்கு ஆப்பிரிக்கா, வடக்கு சீனா, மத்திய இந்தியா, மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் மேற்கு அமெரிக்கா ஆகிய பகுதிகளில் கூட்டு நீர் அபாயப் பகுதிகளை இந்த அறிக்கை அடையாளம் காட்டுகிறது.
- இது சர்வதேசச் சுரங்கம் மற்றும் உலோகங்கள் மன்றத்தின் புதிய அறிக்கையாகும்.
- சுரங்கம் மற்றும் உலோகங்கள் துறையில் உள்ள நீர் அபாயங்கள் குறித்த முதல் விரிவான, பல்வேறு பொருட்கள் சார்ந்த பகுப்பாய்வு இதுவாகும்.
- இந்த மதிப்பீடு வெள்ளம், வறட்சி, அடிப்படை நீர் பற்றாக்குறை, அடிப்படை நீர் வறட்சி மற்றும் ஆண்டுக்கு ஆண்டு மாறுபாடு ஆகிய ஐந்து இயற்பியல் நீர் அபாயக் குறிகாட்டிகளைக் கருத்தில் கொள்கிறது.
- சுரங்கம் மற்றும் உலோகங்கள் துறை எதிர்கொள்ளும் மிகவும் பொதுவான அபாயம் அடிப்படை நீர்ப் பற்றாக்குறையாகும்.
- வறட்சி இரண்டாவது மிகவும் பரவலான நீர் அபாயமாகும்.
- அலுமினா, அலுமினியம், எஃகு மற்றும் மாலிப்டினம் உற்பத்தி ஆலைகளில் வெள்ளப் பாதிப்பு குறிப்பாக அதிகமாக உள்ளது.
- சர்வதேச சுரங்கம் மற்றும் உலோகங்கள் மன்றம், சுரங்கம் மற்றும் உலோகத் தொழில் துறையில் நிலையான வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கத்தில், தலைமைச் செயல் அதிகாரி தலைமையிலான ஒரு தலைமைத்துவ அமைப்பாக 2001-ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.

UNEP-இன் மாற்றத்திற்கான அறிக்கை

- ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டமானது (UNEP) "நீதியின்றி மாற்றமில்லை" (No Transition Without Justice) என்ற அறிக்கையை வெளியிட்டதுடன், இது ஒரு நியாயமான மாற்றத்தை அடைவதில் சுற்றுச்சூழல் சட்டத்தின் விதியை வலியுறுத்துகிறது.

- நியாயமான மாற்றம் என்பது, யாரும் பின்தங்கவில்லை என்பதை உறுதிசெய்து, சுற்றுச்சூழல் ரீதியாக நிலையான மற்றும் பருவநிலை-தாங்கும் பொருளாதாரங்களை நோக்கி நியாயமான, உள்ளடக்கிய மற்றும் உரிமைகள் அடிப்படையிலான மாற்றத்தைக் குறிக்கிறது.
- வலுவான சுற்றுச்சூழல் சட்டங்கள், சுற்றுச்சூழல் மனித உரிமைப் பாதுகாவலர்களின் (EHRDs) பாதுகாப்பு, மக்கள் பங்கேற்பு, பொறுப்புக்கூறல் மற்றும் ஒருங்கிணைந்த நிர்வாகம் ஆகியவற்றை இந்த அறிக்கை வலியுறுத்துகிறது.
- இடைக்கால நிதியின் நியாயமான மேலாண்மை, விரைவான தகராறு தீர்வு மற்றும் மாற்றத்தின் போது பழங்குடியினர் மற்றும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களின் பாதுகாப்பு ஆகியவற்றை இது எடுத்துக்காட்டுகிறது.
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சமூக நீதி மற்றும் நிலையான வளர்ச்சி ஆகியவற்றை சமநிலைப்படுத்தும் சூழல் சார்ந்த கொள்கைகளை இந்த அறிக்கையானது பரிந்துரை செய்கிறது.

நீதித்துறை வெளிப்படைத்தன்மை குறியீட்டு அறிக்கை 2026

- விதி சட்டக் கொள்கை மையமானது, உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களின் அதிகாரப்பூர்வ இணையதளங்கள் வாயிலாக அவற்றின் வெளிப்படைத்தன்மையை மதிப்பிடும் நீதித்துறை வெளிப்படைத்தன்மை குறியீட்டு அறிக்கையை வெளியிட்டது.
- இந்தக் குறியீடானது 2025 ஆம் ஆண்டில் JALDI (இந்தியாவில் நீதி, அணுகல் மற்றும் தாமதங்களை குறைத்தல்) முன்னெடுப்பால் உருவாக்கப்பட்டது.
- நீதித்துறை செயல்முறைகள், நிறுவன ஆளுகை மற்றும் நிர்வாகம் மற்றும் நீதித்துறை / நிர்வாகப் பணியாளர்கள் ஆகிய மூன்று பிரிவுகளில் இது வெளிப்படைத்தன்மையை மதிப்பிடுகிறது.
- நீதிபதிகள் வழக்கில் இருந்து விலகுவதற்கான அளவுகோல்களை வெளியிடாமை, உச்ச நீதிமன்ற நேரடி ஒளிபரப்பு வழிகாட்டுதல்கள் இன்மை மற்றும் வரையறுக்கப் பட்ட பட்ஜெட் மற்றும் செலவு குறித்த வெளிப்படுத்தல்கள் போன்ற இடைவெளிகளை இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.
- எந்தவொரு உயர் நீதிமன்றமும் அனைத்து நீதிபதிகளின் முழுமையான சொத்து விவரங்களை வெளியிடவில்லை; சில உயர் நீதிமன்றங்களில் உள்ள ஒரு சில நீதிபதிகள் மட்டுமே சொத்துக்களை பகிரங்கமாக அறிவிக்கின்றனர்.
- வெளிப்படையான, அணுகக்கூடிய மற்றும் பொறுப்புள்ள நீதித்துறை நிறுவனங்களை ஊக்குவிப்பதை இந்த அறிக்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

FAO-இன் பீட்லேண்ட்/கரிம மண் நிலங்கள் உமிழ்வு அறிக்கை 2026

- ஐக்கிய நாடுகள் சபையின் (UN) உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO), கரிம மண் நிலங்களில் (peatlands) இருந்து வெளியேறும் பசுமைக்குடில் வாயு உமிழ்வு மதிப்பீடுகளின் துல்லியத்தை மேம்படுத்துவதற்காக Peat-Emit Report 2026 என்ற அறிக்கையை வெளியிட்டது.
- இந்த அறிக்கை புதுப்பிக்கப்பட்ட உமிழ்வுக் காரணிகளை அறிமுகப்படுத்தியதுடன், குறிப்பாக வளரும் நாடுகளில் பருவநிலை கண்காணிப்பை வலுப்படுத்துவதற்கான தரவு இடைவெளிகளையும் அடையாளம் கண்டுள்ளது.

- கரிம மண் நிலங்கள் பூமியின் நிலப்பரப்பில் 3-4% மட்டுமே உள்ளன, ஆனால் உலகளாவிய மண் கரிம கார்பனில் சுமார் 30% ஐ (சுமார் 450-650 ஜிகா டன்கள்) சேமித்து வைத்துள்ளன.
- வடிகட்டப்பட்ட, சீரழிந்த அல்லது எரிக்கப்பட்ட கரிம மண் நிலங்கள் அதிக அளவிலான கார்பன் டை ஆக்சைடு (CO_2), மீத்தேன் (CH_4) மற்றும் நைட்ரஸ் ஆக்சைடு (N_2O) ஆகியவற்றை வெளியேற்றி, பருவநிலை மாற்றத்திற்கு பங்களிக்கின்றன.
- Peat-Emit திட்டம் வளரும் நாடுகளில் இருந்து 560 உமிழ்வு மற்றும் அகற்றுதல் தரவுப் புள்ளிகளைத் தொகுத்து, பசுமைக்குடில் வாயு மதிப்பீடுகளுக்கான ஆதார அடிப்படையை மேம்படுத்தியுள்ளது.

உலக வங்கி செயற்கை நுண்ணறிவு அறிக்கை 2026

- வளரும் நாடுகளில் ஏற்றத்தாழ்வைக் குறைப்பதற்கான செயற்கை நுண்ணறிவின் (AI) திறனை எடுத்துக்காட்டும் "உலக மேம்பாட்டு அறிக்கை 2026: செயற்கை நுண்ணறிவின் வாக்குறுதி" என்ற அறிக்கையை உலக வங்கி வெளியிட்டது.
- உருவாக்கமுறை செயற்கை நுண்ணறிவானது வளரும் பொருளாதாரங்களில் உள்ள தற்போதைய வேலைகளில் 16% க்கும் அதிகமான வேலைகளில் உற்பத்தித்திறனை மேம்படுத்த முடியும் என அந்த அறிக்கை கூறுகிறது.
- குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் உள்ள நாடுகளை (4.5%) ஒப்பிடுகையில், அதிக வருமானம் உள்ள நாடுகளில் உள்ள வேலைகள் அதிக தானியங்கு அமைப்பு அபாயங்களை (14.2%) எதிர்கொள்கின்றன என அது குறிப்பிட்டுள்ளது.
- செயற்கை நுண்ணறிவிலிருந்து பயனடைய வளரும் நாடுகளுக்கு நம்பகமான மின்சாரம், இணைய வசதி, தரவு அமைப்புகள், திறன்கள் மற்றும் வலுவான நிறுவனங்கள் போன்ற அடிப்படை வசதிகள் தேவை என அந்த அறிக்கை எச்சரித்துள்ளது.
- சரியான கொள்கைகள் மற்றும் உள்கட்டமைப்புகளால் ஆதரிக்கப்படும் போது, சுகாதாரம், வேளாண்மை, வணிகம் மற்றும் அரசு சேவைகள் போன்ற துறைகளுக்கு செயற்கை நுண்ணறிவு ஆதரவளிக்க முடியும் என அது சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தியாவின் R மற்றும் D அறிக்கை 2025–26

- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையானது (DST) ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு (R&D) புள்ளியியல் 2025-26 என்ற அறிக்கையை வெளியிட்டது.
- 2022 ஆம் ஆண்டில் அறிவியல் வெளியீடுகளில் சீனா மற்றும் அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக இந்தியா உலகளவில் 3வது இடத்தைப் பிடித்ததுடன், 2024-25 ஆம் ஆண்டில் 1.10 லட்சம் காப்புரிமைகளையும் தாக்கல் செய்துள்ளது.
- ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான இந்தியாவின் மொத்தச் செலவினம் (GERD) 2020-21 ஆம் ஆண்டில் 0.64% ஆக இருந்ததிலிருந்து, 2023-24 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 0.84% என்ற சாதனை அளவை எட்டியுள்ளது.
- ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான இந்தியாவின் மொத்தச் செலவினம் (GERD) 2013-14 ஆம் ஆண்டில் ₹79,356 கோடியாக இருந்த நிலையில், 2023-24 ஆம் ஆண்டில் ₹2.45 லட்சம் கோடியாக மூன்று மடங்கிற்கும் மேல் அதிகரித்துள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் (R&D) தனியார் துறையின் பங்கு 45.2% ஆக அதிகரித்துள்ளது, அதே சமயம் இந்தியாவின் R&D பணியாளர்களில் 29% பெண்கள் ஆவர்.

- இந்தியாவில் சுமார் 5 லட்சம் முழு நேர சமமான ஆராய்ச்சியாளர்கள் உள்ளனர், இது ஒரு மில்லியன் மக்கள் தொகைக்கு 354 ஆராய்ச்சியாளர்களுக்குச் சமமாகும்.

FAO உணவு விலை குறியீடு - ஜூலை 2026

- உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் (FAO) உணவு விலை குறியீடு 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் 3 ஆண்டு உச்சமான 131.1 புள்ளிகளாக உயர்ந்தது, இது 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குப் பிறகான அதிகபட்ச அளவாகும்.
- வெப்ப பாதிப்பு மற்றும் கருங்கடல் ஏற்றுமதி குறித்த கவலைகள் காரணமாக கோதுமை விலை 5.8% உயர்ந்தது உட்பட, தானியங்களின் விலையில் ஏற்பட்ட 3.4% அதிகரிப்பால் இந்த ஏற்றம் முக்கியமாக உந்தப்பட்டது.
- காய்கறி எண்ணெய் விலைகள் 2% உயர்ந்தன, அதே நேரத்தில் வானிலை தொடர்பான கவலைகள் மற்றும் எத்தனால் தேவையின் அதிகரிப்பு காரணமாக சர்க்கரை விலைகள் 5.6% அதிகரித்தன.
- இறைச்சி விலைகள் அதன் ஜூன் மாத உச்சத்திலிருந்து 2.8% குறைந்துள்ளன, அதே நேரத்தில் பால் பொருட்களின் விலைகள் 0.7% சரிந்தன.
- தீவிர வானிலை, வெப்ப அலைகள், வறட்சி மற்றும் உணவு உற்பத்தி மற்றும் வர்த்தகத்தைப் பாதிக்கும் மோதல்கள் ஆகியவையே உணவு விலை உயர்வுக்குக் காரணம் என FAO தெரிவித்துள்ளது.

நிதி ஆயோக் பள்ளிக் கல்வி குறியீடு 2026

- நிதி ஆயோக்கின் பள்ளி கல்வித் தரக் குறியீடு 2026-இல், கேரளாவைப் பின்னுக்குத் தள்ளி பஞ்சாப் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- பள்ளிக் கல்வித் துறையில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் செயல் பாட்டை மதிப்பிடுவதற்காக நிதி ஆயோக் (NITI Aayog) இதனை உருவாக்கியது.
- கல்விக்கான அணுகல், உள்கட்டமைப்பு, சமத்துவம், நிர்வாகம் மற்றும் கற்றல் விளைவுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய 30 குறியீடுகளை இந்தக் குறியீடு பயன்படுத்துகிறது.

இந்தியாவை உலகளாவிய உற்பத்தி மையமாக நிலை நிறுத்துவதற்கான முக்கியத் துறைகள் - நிதி ஆயோக் அறிக்கை

- "இந்தியாவை உலகளாவிய உற்பத்தி மையமாக நிலைநிறுத்துவதற்கான முக்கியத் துறைகள்" (Key Sectors to Position India as a Global Manufacturing Hub) என்ற தலைப்பிலான அறிக்கையை நிதி ஆயோக் (NITI Aayog) வெளியிட்டுள்ளது.
- இது ஒரு கட்டமைக்கப்பட்ட மற்றும் தரவு சார்ந்த வரைபடமாகும்; உலகளாவிய உற்பத்தி சக்தியாக மாறுவதற்கான இந்தியாவின் லட்சியத்திற்கு வலுசேர்க்கக்கூடிய முக்கியத் துறைகளை இது அடையாளம் காட்டுகிறது.

நோக்கங்கள்

- இந்த அறிக்கை வேதியியல், தொலைத்தொடர்பு மற்றும் நெட்வொர்க்கிங் உபகரணங்கள், ஜவுளி மற்றும் சூரிய மின்சக்தி (Solar PV) உற்பத்தி ஆகிய நான்கு துறைகளை விரிவாக ஆய்வு செய்துள்ளது.

- இவை இந்தியாவின் உற்பத்தி வளர்ச்சியை ஊக்குவிக்கவும், உலகளாவிய மதிப்புச் சங்கிலிகளில் (global value chains) நாட்டின் நிலையை வலுப்படுத்தவும் கூடிய அதிக திறன் கொண்ட நான்கு துறைகளாகும்.

ஜவுளித் துறை

- இது நாட்டின் மிக முக்கியமான உற்பத்தித் துறைகளில் ஒன்றாகும்; இது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) சுமார் 2 சதவீதத்தையும், உற்பத்தித் துறையின் மொத்த மதிப்புக் கூட்டலில் (GVA) 11 சதவீதத்தையும், சரக்கு ஏற்றுமதியில் 9 சதவீதத்தையும் பங்களிக்கிறது.
- விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிக வேலைவாய்ப்பை வழங்கும் துறையாகவும் இது திகழ்கிறது; 4.5 கோடிக்கும் அதிகமான மக்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்குவதோடு, குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) சார்ந்த பரவலான தொழில் வளர்ச்சிக்கும் இது துணைபுரிகிறது.
- 2025 ஆம் நிதியாண்டில், இந்தியா 37.7 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான ஜவுளிப் பொருட்களை ஏற்றுமதி செய்தது. உலகளாவிய ஜவுளி மற்றும் ஆடை ஏற்றுமதியில் 4.1 சதவீத பங்களிப்பை அளித்து, உலகின் ஆறாவது பெரிய ஜவுளி ஏற்றுமதியாளராக இந்தியா திகழ்கிறது.

தொலைத்தொடர்பு மற்றும் நெட்வொர்க்கிங் உபகரணங்கள் துறை

- 120 கோடிக்கும் அதிகமான சந்தாதாரர்கள், சுமார் 85 சதவீத தொலைத்தொடர்பு ஊடுருவல் மற்றும் கிட்டத்தட்ட 75 சதவீத இணையப் பயன்பாட்டுடன், இந்தியா தற்போது உலகின் இரண்டாவது பெரிய தொலைத்தொடர்பு சந்தையாக உள்ளது.
- இத்துறையின் மாற்றத்தை உருவாக்கும் திறனை உணர்ந்து, தேசிய தொலைத் தொடர்பு கொள்கை 2025 (NTP-25) சில முக்கிய இலக்குகளை நிர்ணயித்துள்ளது: 2030-ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இத்துறையின் பங்களிப்பை இரட்டிப்பாக்குதல், தொலைத்தொடர்பு பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியை இரட்டிப்பாக்குதல், பத்து லட்சம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் முதலீடு மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு (R&D) செலவினங்களை கணிசமாக அதிகரித்தல் ஆகியவை இதில் அடங்கும்.

சூரிய மின்சக்தி (Solar PV) துறை

- 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் இந்தியா 106 ஜிகாவாட் (GW) சூரிய மின்சக்தித் திறனை நிறுவியிருந்தது; 2030-ஆம் ஆண்டுக்குள் நிர்ணயிக்கப்பட்ட 280 ஜிகாவாட் இலக்கை அடைய மேலும் சுமார் 174 ஜிகாவாட் திறனைச் சேர்க்க வேண்டியுள்ளது.
- இதைத் தொடர்ந்து மேலும் எட்டு துறைகள் குறித்த மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.

இளைஞர்களுக்கான உலகளாவிய வேலைவாய்ப்புப் போக்குகள் 2026: எதிர் காலத்தை நோக்கிய மீள்வரவு

- ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) வெளியிட்டுள்ள புதிய அறிக்கை ஒன்று, கோவிட்-19 பெருந்தொற்றுக்குப் பிறகு உலகளவில் குறைந்து இருந்த இளைஞர்களுக்கான வேலையின்மை விகிதம், தற்போது மீண்டும் மோசமடையத் தொடங்கியுள்ளதாக எச்சரித்துள்ளது.
- 2023-ஆம் ஆண்டில் கடந்த இருபது ஆண்டுகளில் இல்லாத அளவுக்குக் குறைந்திருந்த இளைஞர்களுக்கான வேலையின்மை விகிதம், தற்போது அதிகரிக்கத் தொடங்கி உள்ளதை இந்த அறிக்கை காட்டுகிறது.

- அதிக வருமானம் கொண்ட நாடுகள், குறைந்த-நடுத்தர வருமானம் கொண்ட நாடுகள் மற்றும் குறைந்த வருமானம் கொண்ட நாடுகள் என அனைத்துப் பொருளாதாரப் பிரிவுகளிலும் இந்த விகிதங்கள் அதிகரித்துள்ளன.
- அரபு நாடுகள் மற்றும் வட ஆப்பிரிக்கப் பகுதிகள் தொடர்ந்து உலகின் மிக உயர்ந்த இளைஞர் வேலையின்மை விகிதங்களைக் கொண்டுள்ளன.

தொழில்முறை சேவைகள் குறித்த நிதி ஆயோக் அறிக்கை

- தொழில்முறை சேவைகளுக்கான இந்தியாவின் ஒழுங்குமுறைக் கட்டமைப்பு குறித்த அறிக்கையை நிதி ஆயோக் வெளியிட்டது.
- இந்த அறிக்கை சட்டம், கணக்கியல், கட்டிடக்கலை, பொறியியல் மற்றும் சுகாதாரச் சேவைகளை உள்ளடக்கியது.
- தொழில் வல்லுநர்களின் இயக்கம் மற்றும் உலகளாவிய போட்டித்தன்மையை பாதிக்கும் ஒழுங்குமுறை பிளவுகள் மற்றும் கட்டுப்பாடுகளை இது எடுத்துக் காட்டுகிறது.
- 2024 ஆம் ஆண்டில் உலகளாவிய சேவைகள் ஏற்றுமதியில் 4.3 சதவீத பங்களிப்புடன், சேவைகள் ஏற்றுமதி செய்யும் 7-வது பெரிய நாடாக இந்தியா திகழ்கிறது.
- ஒழுங்குமுறை ஒருங்கிணைப்பு, பரந்த அளவிலான பரஸ்பர அங்கீகார ஒப்பந்தங்கள் (MRAs), தொடர்ச்சியான தொழில்முறை மேம்பாடு (CPD) மற்றும் நவீன வணிக கட்டமைப்புகள் ஆகியவற்றை நிதி ஆயோக் பரிந்துரைக்கிறது.
- உயர் மதிப்புமிக்க சேவைகள் ஏற்றுமதியை மேம்படுத்த செயற்கை நுண்ணறிவு (AI), தானியக்கமாக்கல் மற்றும் உலகளாவிய சிறந்த நடைமுறைகளைப் பயன்படுத்தவும் இது பரிந்துரைக்கிறது.

உலகளாவிய HIV மக்கள் தொகை

- மனித நோயெதிர்ப்புச் சக்தி குறைபாட்டு வைரஸால் (HIV) பாதிக்கப்பட்டு வாழும் முதியவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது குறித்து லான்செட் HIV வயதாதல் ஆணையம் தனது 2026 ஆம் ஆண்டு அறிக்கையை வெளியிட்டது.
- 2025 ஆம் ஆண்டில், சுமார் 11.5 மில்லியன் HIV பாதிப்புள்ள நபர்கள் 50 வயது அல்லது அதற்கும் மேற்பட்ட வயதுடையவர்களாக இருந்தனர்.
- இந்த எண்ணிக்கை 2040 ஆம் ஆண்டிற்குள் 20.2 மில்லியனை எட்டும் எனத் திட்டமிடப் பட்டுள்ளது, இது HIV-யுடன் வாழும் அனைத்து மக்களிலும் 51% ஐக் குறிக்கிறது.
- இந்த முதியவர்களில் சுமார் 96% பேர் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் வசிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ஆன்டிரெட்ரோவைரல் சிகிச்சை (ART) HIV உள்ள நபர்கள் நீண்ட காலம் வாழ உதவி உள்ளது.
- HIV பராமரிப்பானது வயது தொடர்பான நோய்கள் மற்றும் மனநலத்திற்கான சேவைகளுடன் இணைக்கப்பட வேண்டும் என்று அறிக்கை அழைப்பு விடுத்துள்ளது.

உலகளாவிய எரிவாயு அறிக்கை 2026

- உலகளாவிய எரிவாயு அறிக்கை 2026 இன் படி, உலகளாவிய இயற்கை எரிவாயு தேவையானது 2025 ஆம் ஆண்டில் சாதனை அளவாக 4,202 பில்லியன் கன மீட்டரை (bcm) எட்டியுள்ளது.
- இந்த அறிக்கையை சர்வதேச எரிவாயு ஒன்றியம் (IGU), ஸ்னாம் மற்றும் ரைஸ்டாட் எனர்ஜி ஆகியவை வெளியிட்டன.
- முக்கியமாக விநியோக இடையூறுகள் மற்றும் ஹார்முஸ் நீர்ச்சந்தி நெருக்கடியுடன் தொடர்புடைய அதிக விலைகள் காரணமாக 2026 ஆம் ஆண்டில் உலகளாவிய எரிவாயு தேவை 7 bcm குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டில் உலகளாவிய எரிவாயு விநியோகமும் சாதனை அளவாக 4,147 bcm ஐ எட்டியது, அதே வேளையில் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (LNG) நிகர இறக்குமதி 580 bcm ஐ எட்டியது.
- அதிக LNG விலையால் ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா அதிகம் பாதிக்கப்பட்டன, அதே நேரத்தில் வட அமெரிக்காவின் எரிவாயு தேவை 2026 ஆம் ஆண்டில் 10 bcm அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்தியாவில், 2026 ஆம் ஆண்டு மே மாதத்தில் அதிகபட்ச மின் தேவை சாதனை அளவாக 271 ஜிகாவாட் (GW) ஆக உயர்ந்தது, இது இயற்கை எரிவாயு சார்ந்த மின் உற்பத்தி நிலையங்களின் பயன்பாட்டை அதிகரித்தது.

மாநிலச் செய்திகள்

விசாகப்பட்டினம் துறைமுகம் - கடல்சார் ஏற்றுமதி

- ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள விசாகப்பட்டினம் துறைமுகம், 2024-25 ஆம் நிதி ஆண்டில் இந்தியாவின் மொத்த கடல்சார் பொருட்கள் ஏற்றுமதியில் 50.87% கையாண்டுள்ளது.
- விசாகப்பட்டினம் துறைமுகம் ஆந்திரப் பிரதேசத்தின் கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ள ஒரு பெரிய துறைமுகமாகும், மேலும் இது சரக்கு போக்குவரத்தின் முக்கிய நுழைவாயிலாக செயல்படுகிறது.
- இந்தியாவின் கடல்சார் ஏற்றுமதியில் உறைந்த இறால், மீன், கணவாய் மீன், நண்டு மற்றும் பிற கடல் உணவுப் பொருட்கள் அடங்கும்.
- 2025-26 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் கடல்சார் பொருட்கள் ஏற்றுமதி 1.93 மில்லியன் டன் அளவில், ₹72,325.82 கோடியை (8.28 பில்லியன் டாலர்) எட்டியுள்ளது.
- வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள கடல்சார் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (MPEDA), கடல் உணவு ஏற்றுமதி மேம்பாடு, தரக் கட்டுப்பாடு மற்றும் சந்தை மேம்பாடு ஆகியவற்றை ஆதரிக்கிறது.

முதல் அரிய பூமிக் கனிமங்கள் ஆய்வு உரிமம் – ராஜஸ்தான்

- இது ராஜஸ்தானில் உள்ள பலோத்ரா மற்றும் ஜோத்பூர் மாவட்டங்களில் பரவியுள்ளது.
- தேசிய முக்கிய கனிமங்களின் கட்டமைப்பின் கீழ், இது மத்திய சுரங்கத் திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு நிறுவனத்திற்கு (CMPDI) வழங்கப்பட்டுள்ளது.

- புவியியல் ஆய்வுகள், ஆய்வுத் தொகுதிகளில் லாந்தனம், சீரியம், பிரசியோடைமியம் மற்றும் நியோடைமியம் ஆகியவை இருப்பதைக் குறிப்பிடுகின்றன.
- அரிய மண் தனிமங்கள் மின்சார வாகனங்கள் (EVs), புதுப்பிக்கத்தக்க ஆற்றல், பாதுகாப்பு, விண்வெளி, குறைக்கடத்திகள், மின்னணுவியல் மற்றும் தொலைத்தொடர்பு ஆகியவற்றில் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.

பித்தோரா ஓவியம்

- இது குஜராத்தின் ரத்வா பழங்குடி சமூகத்தினரின் பல நூற்றாண்டுகள் பழமையான சுவர் ஓவியப் பாரம்பரியமாகும்.
- இது முக்கியமாக பஞ்சமஹால் மற்றும் சோட்டா உதய்பூரில் காணப்படுகிறது.
- இது சுமார் 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது - ரத்வா, பில் மற்றும் பிலாலா போன்ற பழங்குடியினரால் வரையப்பட்டது.
- இது வீடுகளின் சுவர்களில் உருவாக்கப்பட்டது.
- திருமணங்கள், பிறப்புகள் மற்றும் பண்டிகைகள் போன்ற வாழ்க்கையின் முக்கிய நிகழ்வுகளின் போது இந்த ஓவியங்கள் பெரும்பாலும் வரையுமாறு பணிக்கப்பட்டன.
- பட்வா என்றழைக்கப்படும் ஒரு பூசாரியின் வழிகாட்டுதலின் கீழ், லக்கராக்கள் என்று அழைக்கப்படும் சிறப்பு வாய்ந்த சடங்கு ஓவியர்களால் இவை வரையப்பட்டன.
- பசுவின் சாணம் மற்றும் களிமண் கலவையைப் பூசி சுவர்கள் தயார் செய்யப் படுகின்றன.
- கலைஞர்கள் தங்கள் ஓவியங்களுக்கான வண்ணங்களை உருவாக்க, கனிமங்கள், தாவரங்கள் மற்றும் பிற கரிமப் பொருட்களிலிருந்து பெறப்பட்ட இயற்கை நிறமிகளைப் பயன்படுத்துகின்றனர்.
- ஓவியர்கள் மூங்கில் குச்சிகள், பருத்தி மற்றும் மர அச்சுகள் ஆகியவற்றின் கலவையைப் பயன்படுத்துகின்றனர்.
- இந்த ஓவியங்கள் பழங்குடியினர் மற்றும் இந்து தெய்வங்கள், குதிரைகள், விலங்குகள் மற்றும் விவசாயம், வேட்டையாடுதல், நடனம் போன்ற அன்றாட வாழ்க்கைக் காட்சிகளைச் சித்தரிக்கின்றன.
- சிவப்பு, மஞ்சள், பச்சை மற்றும் நீலம் ஆகியவை பொதுவான வண்ணங்களாகும்; இவை ஒவ்வொன்றும் குறிப்பிட்ட இயற்கை மூலங்களிலிருந்து பெறப்பட்டவை.
- இன்றைய பித்தோரா ஓவியர்கள் தாங்கள் வணிகரீதியாக விற்கும் காகிதம் மற்றும் கேன்வாஸை / கித்தானைப் பயன்படுத்துகின்றனர்.

ஹொய்சாலர் காலத்து நடுகல் கண்டுபிடிப்பு

- கர்நாடகாவின் நீரகுண்டாவில் கன்னட கல்வெட்டுடன் கூடிய பல நூற்றாண்டுகள் பழமையான ஹொய்சாலர் ஆட்சியாளர் விஷ்ணுவர்த்தனனின் மரணம் குறித்த தகவல்களை வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ள வீரகல்லு (நடுகல்) ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- பங்காபுராவில் விஷ்ணு வர்த்தனன் இறந்த சிறிது நேரத்திலேயே போப்பா என்ற போர்வீரன் இறந்ததாகவும், அவரது நினைவாக அவரது மனைவி மரவ்வே என்பவரால் இக்கல்வெட்டு உருவாக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

- இக்கல்வெட்டின் காலம் துன்மதி ஆண்டு, புஷ்ய மாதத்தின் ஏகாதசி, அதாவது 1064 எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இது 1141 ஆம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் தேதியைக் குறிக்கிறது.
- விஷ்ணுவர்த்தனன் பங்காபுராவில் இறந்ததாக நம்பப்படுகிறது, ஆனால் அவரது மரணம் நிகழ்ந்த ஆண்டு 1149 முதல் 1152 வரை இருந்திருக்கலாம் என வரலாற்றாசிரியர்கள் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளனர்.
- கர்நாடக மாநிலம் ஹாசன் மாவட்டத்தில் உள்ள நீரகுண்டா கிராமத்தில் உள்ள லட்சுமி நாராயண சுவாமி கோயிலில் இந்த வீரகல்லு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அசாமின் மிசிங் பழங்குடியினர்

- சர்வதேச உலகப் பழங்குடியினர் தினத்தில் (ஆகஸ்ட் 9), அசாமின் இரண்டாவது பெரிய சமவெளிப் பழங்குடியினரான 'மிசிங்' பழங்குடியினர், வெள்ளப் பெருக்கை சமாளிக்க அவர்கள் கையாளும் பாரம்பரிய முறைகளுக்காக முன்னிலைப்படுத்தப்பட்டனர்.
- மிசிங் மக்கள் முக்கியமாக பிரம்மபுத்திரா மற்றும் அதன் துணை நதிகளின் கரையோரப் பகுதிகளில், குறிப்பாக தேமாஜி, லக்கிம்பூர், மஜூலி, ஜோர்ஹட் மற்றும் சோனித்பூர் ஆகிய மாவட்டங்களில் வாழ்கின்றனர்.
- அவர்கள் பாரம்பரியமாக மூங்கில் தூண்களின் மீது கட்டப்பட்ட 'சாங் கர்' (Chang Ghar) வீடுகளைப் பயன்படுத்துகின்றனர்; இது வசிக்கும் இடத்தை வெள்ள நீரிலிருந்து பாதுகாப்பாக மேலே வைத்திருக்கிறது.
- மூங்கில் மற்றும் கூரைப்புல் போன்ற உள்ளூரில் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி நெல் சாகுபடி, கால்நடை வளர்ப்பு, மீன்பிடித்தல் மற்றும் கைத்தறி நெசவு ஆகியவை இவர்களின் பாரம்பரிய வாழ்வாதாரங்களில் அடங்கும்.
- இந்த சமூகம் அவர்களின் பாரம்பரிய விதைப்புத் திருவிழாவான 'அலி-ஆயே-லிகாங்' (Ali-Aye-Ligang) என்பதைக் கொண்டாடுகிறது. மேலும் இவர்கள் சூரியன் மற்றும் சந்திரனுடன் தொடர்புடைய 'டோனி-போலோயிசம்' (Donyi-Poloism) என்ற வழிபாட்டு முறையைப் பின்பற்றுகின்றனர்.
- பருவநிலை விவசாயம், வெள்ளத்திற்கு ஏற்ற வீடுகள் அமைத்தல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகளில் உள்ளூர் சூழலியல் அறிவைப் பயன்படுத்துதல் ஆகியவை மிசிங் மக்களின் பாரம்பரிய நடைமுறைகளாகும்.

லடாக்கின் மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027

- லடாக் தனது 2027 ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகை கணக்கெடுப்பின் இரண்டாம் கட்டத்தை 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17 அன்று தொடங்கும். மேலும், சாதி விவரங்களைப் பதிவு செய்யும் முதல் பகுதிகளில் இதுவும் ஒன்றாக இருக்கும்.
- பதிலளிப்பவர்கள் தங்கள் சாதியைக் கூறுவதற்கான திறந்தநிலை நெடுவரிசை உட்பட, கணக்கெடுப்புப் படிவத்தில் சுமார் 40 கேள்விகள் இருக்க வாய்ப்புள்ளது.
- 'உண்மையான கட்டுப்பாட்டுக் கோட்டின்' (LAC) பகுதிக்கு அருகிலுள்ள பாதுகாப்பு அமைப்புகளைப் பாதுகாப்புக் காரணங்களுக்காக 'புவிசார் குறியிடல்' செய்ய முடியாது என்பதால், லடாக்கின் சில பகுதிகளில் காகித அடிப்படையிலான படிவங்கள் பயன்படுத்தப்படும்.

- ஆகஸ்ட் 17 முதல் 31 வரை சுய கணக்கெடுப்பும், அதைத் தொடர்ந்து வீடு வீடாக மக்கள் தொகை கணக்கெடுப்பும் நடைபெறும்.
- பதிலளிப்பவர் அறிவிக்கும் சாதிப் பெயரைப் பதிவு செய்வதன் மூலம் சாதித் தரவு சேகரிக்கப்படும்.
- லடாக், ஜம்மு காஷ்மீர், இமாச்சலப் பிரதேசம் மற்றும் உத்தராகண்ட் ஆகிய பனி மூடிய பகுதிகள், இந்தியாவின் மற்ற பகுதிகளுக்கு முன்னதாகவே கணக்கெடுப்பை நடத்தும்.

கேரளா (பெயர் மாற்றம்) மசோதா, 2026

- கேரளா (பெயர் மாற்றம்) மசோதா, 2026 மக்களவையில் உள்துறை இணையமைச்சர் நித்யானந்த் ராய் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- அரசியலமைப்பின் முதல் அட்டவணையில் உள்ள கேரள மாநிலத்தின் பெயரை "கேரளம்" என்று மாற்றுவதை இந்த மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது தொடர்பான தீர்மானம் ஒன்று 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் கேரளச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்பட்டது.
- அதனைத் தொடர்ந்து, பெயர் மாற்றம் குறித்த சட்டமன்றத்தின் தீர்மானத்தை கேரள அரசு மத்திய அரசுக்கு அனுப்பியது.
- பின்னர், இந்தியாவின் குடியரசுத் தலைவர், இம்மசோதா குறித்த கருத்துக்களைத் தெரிவிக்குமாறு மாநில சட்டமன்றத்திற்கு அதனை அனுப்பினார்.
- இக்கோரிக்கை குறித்த குடியரசுத் தலைவரின் பரிந்துரையை கேரள சட்டமன்றம் ஒருமனதாக ஏற்றுக் கொண்டது.
- மசோதாவின் தலைப்பு மற்றும் அதன் விதிகள் உட்பட, அதில் உள்ள 10 பிரிவுகள் குறித்து குடியரசுத் தலைவர் எழுப்பிய அனைத்துக் கேள்விகளையும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஒருமனதாக ஏற்றுக்கொண்டனர்.
- கேரள சட்டமன்றத்தின் கருத்தைக் கோரி குடியரசுத் தலைவர் ஒரு பரிந்துரையை அனுப்பியது இதுவே முதல் முறையாகும்.
- அரசியலமைப்பின் முதல் அட்டவணையில் தமது மாநிலத்தின் பெயர் 'கேரளா' என்று குறிப்பிடப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டிய அச்சட்டமன்றம், அரசியலமைப்பின் 3-வது சரத்தின் கீழ் தனது மாநிலத்தின் பெயரை அதிகாரப்பூர்வமாக 'கேரளம்' என மாற்ற நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசை வலியுறுத்தியது.
- தற்போதைய மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு அறிவிக்கை வெளியிடப் பட்டதும், மாநிலத்தின் அதிகாரப்பூர்வ பெயர் 'கேரளா' என்பதிலிருந்து 'கேரளம்' என மாற்றப்படும்.
- அரசியலமைப்பின் 3-வது சரத்தின்படி, அரசியலமைப்பின் முதல் அட்டவணையில் 'கேரளா' என்ற மாநிலத்தின் பெயர் 'கேரளம்' என மாற்றியமைக்கப்படும்.

அரசியலமைப்பின் சரத்து 3

- இந்திய அரசியலமைப்பின் சரத்து 3-இன் படி, நாடாளுமன்றம் சட்டத்தின் மூலம் எந்தவொரு மாநிலத்தின் பெயரையும் மாற்றலாம்.
- இந்தப் பிரிவு மேலும் குறிப்பிடுவது என்னவென்றால், இதற்கான மசோதா எதையும் குடியரசுத் தலைவரின் பரிந்துரையின்றி நாடாளுமன்றத்தின் எந்த அவையிலும் அறிமுகப்படுத்த முடியாது.

- மேலும், மசோதாவில் உள்ள முன்மொழிவு ஏதேனும் ஒரு மாநிலத்தின் பரப்பளவு, எல்லைகள் அல்லது பெயரைப் பாதிக்கும் பட்சத்தில், அந்த மசோதாவைக் குடியரசுத் தலைவர் சம்பந்தப்பட்ட மாநில சட்டமன்றத்திற்கு அனுப்பி, அதன் கருத்துக்களைக் கோர வேண்டும், இதற்கெனக் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள்ளோ அல்லது குடியரசுத் தலைவர் அனுமதிக்கும் கூடுதல் காலத்திற்குள்ளோ மாநிலம் தனது கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும்; அத்தகைய காலக்கெடு முடிந்திருக்க வேண்டும்.
- எளிமையாகச் சொன்னால், மாநில சட்டமன்றம் முதலில் பெயர் மாற்றத்திற்கான தீர்மானத்தை நிறைவேற்றி, அதை உள்துறை அமைச்சகத்திற்கு (MHA) அனுப்புகிறது.
- பின்னர் அது குடியரசுத் தலைவரின் பரிந்துரையைப் பெறுவதற்காக நாடாளுமன்றத்திற்கு அனுப்பப்படுகிறது.
- குடியரசுத் தலைவர் பரிந்துரைத்த பின்னரே இத்தகைய மசோதாவை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்த முடியும்.
- அடுத்த கட்டமாக, பாதிக்கப்பட்ட மாநிலத்தின் சட்டமன்றத்திற்கு அந்த மசோதா அனுப்பப்பட்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் அவர்களின் கருத்துக்கள் பெறப் படுகின்றன.
- இங்கு கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் என்னவென்றால், மாநிலத்தின் கருத்து நாடாளுமன்றத்தைக் கட்டுப்படுத்தாது என்பதோடு மாநிலம் உடன்படாத நிலையிலும் நாடாளுமன்றம் அடுத்தக் கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.
- பின்னர் அந்த மசோதா மக்களவை (கீழ் அவை) அல்லது மாநிலங்களவை (மேல் அவை) ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் அறிமுகப்படுத்தப்பட்டு, எளிய பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும்; அதாவது, அவையில் உள்ள உறுப்பினர்களில் 50%-க்கும் அதிகமானோர் வருகை தந்து வாக்களிக்க வேண்டும்.
- நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிறகு, மசோதா இறுதி ஒப்புதலுக்காகக் குடியரசுத் தலைவரிடம் செல்கிறது.
- அவர் கையெழுத்திட்டதும் அது சட்டமாகிறது; மேலும் அரசியலமைப்பின் முதல் மற்றும் நான்காவது அட்டவணைகளில் அந்தப் பெயர் அதிகாரப்பூர்வமாக மாற்றப்படுகிறது.
- ஒரு மாநிலத்தின் பெயரை மாற்றுவதை விட, நாட்டின் பெயரை மாற்றும் செயல்முறை மிகவும் சிக்கலானது.
- சரத்து 3 மாநிலங்களின் பெயரை மாற்றுவது பற்றி மட்டுமே குறிப்பிடுவதால், இந்தியாவின் பெயரை மாற்ற சரத்து 368-இன் கீழ் முறையான அரசியலமைப்புத் திருத்தம் தேவைப்படும்.
- நாட்டை "இந்தியா, அதாவது பாரதம், மாநிலங்களின் ஒன்றியமாக இருக்கும்..." என்று வரையறுக்கும் அரசியலமைப்பின் சரத்து 1-லும் திருத்தம் செய்யப்பட வேண்டும்.
- நாட்டிற்கு ஒரே ஒரு பெயரை மட்டும் பயன்படுத்தும் வகையில், நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் வருகை தந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவுடன் அந்தத் திருத்த மசோதா நிறைவேற்றப்பட வேண்டும். இதற்கு ஒவ்வொரு அவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 50 சதவீதத்திற்கும் அதிகமானோரின் ஆதரவும் தேவைப்படுகிறது.
- இந்தியாவின் பெயரை 'பாரத்' என்று மாற்றுவதற்கான கோரிக்கைகளை இந்திய உச்ச நீதிமன்றம் இருமுறை (2016 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில்) நிராகரித்துள்ளது.
- அவ்விரு பெயர்களும் ஏற்கனவே அதிகாரப்பூர்வமானவை என்றும், அரசியலமைப்புச் சட்டம் 'பாரத்' மற்றும் 'இந்தியா' ஆகிய இரு பெயர்களையும் குறிப்பிடுவதால் அவற்றை ஒன்றுக்கொன்று மாற்றாகப் பயன்படுத்தலாம் என்றும் அது சுட்டிக் காட்டியது.

அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள 27 இடங்கள்

- அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள 27 முக்கிய இடங்களையும் புவியியல் அம்சங்களையும் அவற்றின் வழக்கமான இந்தியப் பெயர்களுடன் முறையாக அடையாளம் கண்டு குறிப்பதற்காக, இந்தியா தனது நில அளவை வரைபடத்தை அதிகாரப்பூர்வமாகப் புதுப்பித்துள்ளது.
- எல்லை மாநிலமான அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள இடங்களுக்குப் பெயர் மாற்ற சீனா தொடர்ந்து முயற்சி செய்து வரும் நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- இவற்றில் நிலப்பகுதிகள், கணவாய்கள், ஒரு ஏரி மற்றும் ஒரு நினைவுச் சின்னம் ஆகியவை அடங்கும்.
- உண்மையான கட்டுப்பாட்டுக் கோட்டில் அமைந்துள்ள லாங் ஜூவும் இதில் அடங்கும்.
- 1959-ஆம் ஆண்டில் சீனப் படைகள் இப்பகுதிக்குள் நுழைந்தபோது, இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே ஏற்பட்ட ஆரம்பகாலப் பதற்றப் புள்ளிகளில் இதுவும் ஒன்றாகும்.
- இப்பகுதியில் உள்ள மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த உயரமான மலைக் கணவாயான பிசா கிராமம், சோ லா, ரிசா லா மற்றும் புகூர் லா ஆகியவையும் இந்தப் பட்டியலில் அடங்கும்.
- 1962-ஆம் ஆண்டில் இந்திய மற்றும் சீனப் படைகளுக்கு இடையே நடந்த ஆரம்பகட்டப் போர்களில் ஒன்றான, மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த உயரமான கணவாய்களில் ஒன்றான தாக் லாவும் அதிகாரப்பூர்வ வரைபடத்தில் முறையாக அடையாளம் காணப்பட்டுள்ளது.
- சாங்லாங் மாவட்டத்தில் உள்ள ஒரு முக்கிய தளவாட மையமான ஜெய்ராம்பூர், கிழக்கு அருணாச்சலப் பிரதேசம் மற்றும் மியான்மர் எல்லை நோக்கிய பாதுகாப்புப் படைகளின் நகர்வுகளுக்கு ஆதரவளிக்கும் கிழக்கு எல்லைப் பிராந்தியத்திற்கான நுழைவாயிலாக அறியப்படுகிறது.
- சீனாவின் இந்தப் பெயர் மாற்ற நடவடிக்கையை இந்தியா "வீண் மற்றும் அபத்தமானது" என்று பலமுறை வர்ணித்துள்ளது.
- மேலும், அருணாச்சலப் பிரதேசம் இந்தியாவின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாக "இருந்தது, இருக்கிறது, இருக்கும்" என்ற "மறுக்க முடியாத" உண்மையை மாற்றப் போவதில்லை என்றும் இந்தியா திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

ஹைதராபாத்தில் நான்காவது இந்திய கிளவுட் (மேக கணினி) மண்டலம்

- மைக்ரோசாப்ட் தனது மிகப்பெரிய இந்திய தரவு மையத்தை ஹைதராபாத்தில் திறக்கிறது.
- அஸூர் கிளவுட் (மேக கணினி) வணிகத்தை மைக்ரோசாப்ட் நடத்துகிறது.
- நாட்டின் வேகமாக வளர்ந்து வரும் கிளவுட் (மேக கணினி) சந்தையில் ஒரு பெரிய பங்கைப் பெறுவதற்காக கூகுள் மற்றும் அமேசானுடன் போட்டியிடுவதால், அது தனது செயற்கை நுண்ணறிவு (AI) உள்கட்டமைப்பை வலுப்படுத்தி வருகிறது.
- இந்த மையம், புனே, சென்னை மற்றும் மும்பையில் ஏற்கனவே உள்ள தரவு மையங்களுடன் சேர்த்து, இந்தியாவில் மைக்ரோசாப்டின் கிளவுட் தடத்தை நான்கு மண்டலங்களாக விரிவுபடுத்துகிறது.

- இவ்வாறு, இது அந்நாட்டின் மிகப்பெரிய கிளவுட் (மேக கணினி) உள்கட்டமைப்பு வழங்குநராக மாறுகிறது.
- கிளவுட் உள்கட்டமைப்பு, செயற்கை நுண்ணறிவு சேவைகளின் முதுகெலும்பாக மாறியுள்ளது.
- தொடர்ச்சியான கிளவுட் (மேக கணினி) பயன்பாடு, செயற்கை நுண்ணறிவு சார்ந்த கணினித் தேவை மற்றும் விரைவான நிறுவன டிஜிட்டல்மயமாக்கல் ஆகியவற்றால் உந்தப்பட்டு, இந்தியாவின் தரவு மையத் துறை ஒரு முதிர்ச்சியான கட்டத்திற்குள் நுழைகிறது.
- AWS, மைக்ரோசாப்ட் மற்றும் ஆரக்கிள் ஆகியவை தங்களுக்குச் சொந்தமான கிளவுட் (மேக கணினி) மண்டலங்கள் மற்றும் கோலொகேஷன் கூட்டாண்மைகள் மூலம் விரிவடைந்து வருகின்றன.

பரிச்சா அணைக்கட்டு - ICIDயின் பாரம்பரிய அங்கீகாரம்

- உத்தரப் பிரதேசத்தின் ஜான்சி மாவட்டத்தில் உள்ள 140 ஆண்டுகள் பழமையான நீர்ப்பாசனக் கட்டமைப்பான வரலாற்றுச் சிறப்புமிக்க 'பரிச்சா அணைக்கட்டு' (Parichha Weir), சர்வதேச நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் ஆணையத்தால் (ICID) 'உலகப் பாரம்பரிய நீர்ப்பாசனக் கட்டமைப்பு' (WHIS) எனத் தேர்ந்தெடுக்கப்பட்டு உலகளாவியப் பாரம்பரிய வரைபடத்தில் இடம் பிடித்துள்ளது.
- பரிச்சா அணைக்கட்டு 1886-ஆம் ஆண்டில் பெட்வா ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டது.
- இத்திட்டத்தின் தொடக்கம் 1855-ஆம் ஆண்டிலேயே அமைந்தது; அப்போது கேப்டன் ஸ்ட்ராச்சி (Captain Strachey) என்பவர் பந்தேல்கண்ட் பகுதிக்கு ஒரு கால்வாய் அமைப்பை உருவாக்க முன்மொழிந்தார்.
- இது பெட்வா கால்வாய் அமைப்பின் முதன்மை நீர்ப்பாசனக் கட்டமைப்பாக (headworks) விளங்குகிறது.
- பெட்வா கால்வாய் அமைப்பு என்பது வறட்சிக்கு ஆளாகக்கூடிய பந்தேல்கண்ட் பகுதிகளுக்கு நீரை வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு விரிவான நீர்ப்பாசன வலையமைப்பாகும்.
- இந்த பாரம்பரிய அங்கீகாரம், அக்டோபர் மாதம் பிரான்சில் நடைபெறவுள்ள 26-வது ICID சர்வதேச மாநாடு மற்றும் 77-வது சர்வதேச நிர்வாகக் குழு கூட்டத்தின் போது அதிகாரப்பூர்வமாக வழங்கப்படும்.
- 2022-ஆம் ஆண்டில், ஜான்சியில் உள்ள சுகுவா-துக்வான் (Sukwa-Dukwan) அணைக் கட்டும் ICIDயின் பாரம்பரியப் பட்டியலில் சேர்க்கப்பட்டது.

WHIS திட்டம்

- 100 ஆண்டுகளுக்கும் மேலான பழமையான மற்றும் தங்களின் அசல் நோக்கத்திற்காகத் தொடர்ந்து பயன்பாட்டில் உள்ள நீர்ப்பாசனக் கட்டமைப்புகளை இத்திட்டம் அங்கீகரிக்கிறது.
- இது சர்வதேச நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் ஆணையத்தால் (ICID) வழங்கப்படுகிறது.
- 1950-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ICID, நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் ஒரு உலகளாவிய அமைப்பாகும்.
- நிலையான விவசாய நீர் மேலாண்மையை ஊக்குவிக்கவும் அடையவும் நீர்ப்பாசனம், வடிகால் மற்றும் வெள்ள மேலாண்மை ஆகிய துறைகளில் செயல்படும் ஒரு முன்னணி

அறிவியல், தொழில்நுட்ப மற்றும் தொழில்முறை சார்ந்த இலாப நோக்கற்ற சர்வதேச அமைப்பு இதுவாகும்.

பெட்வா ஆறு

- இது மத்திய மற்றும் வட இந்தியாவில் பாயும் 590 கிலோமீட்டர் நீளமுள்ள ஒரு ஆறாகும்.
- இது யமுனை ஆற்றின் வலது கரையில் இணையும் ஒரு முக்கிய துணை ஆறாகும்.
- இது மத்தியப் பிரதேசத்தின் ரைசென் மாவட்டத்தில் உள்ள விந்திய மலைத்தொடரில் உற்பத்தியாகி, மத்தியப் பிரதேசம் மற்றும் உத்தரப் பிரதேசம் வழியாக வடகிழக்கு திசையில் பாய்ந்து, ஹமீர்பூர் அருகே யமுனை ஆற்றுடன் கலக்கிறது.

லித்தியம் மற்றும் கேலியம் ஆய்வு ஒப்பந்தம்

- கடப்பா படுகையின் (Kadapa Basin) வெம்பல்லே (Vempalle) பகுதியில் லித்தியம் மற்றும் கேலியம் படிவுகளை விரிவாக ஆய்வு செய்வதற்காக, ஆந்திரப் பிரதேச அரசு CSIR-தேசிய புவி இயற்பியல் ஆராய்ச்சி நிறுவனத்துடன் (NGRI) புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது.
- இங்கு லித்தியத்தின் செறிவு 1,000 ppm (மில்லியனில் ஒரு பங்கு) வரையிலும், கேலியத்தின் அளவு 250 ppm வரையிலும் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
- தேசியப் புவி இயற்பியல் ஆராய்ச்சி நிறுவனம் (NGRI) என்பது அறிவியல் மற்றும் தொழில் துறை ஆராய்ச்சி சபையின் (CSIR) கீழ் 1961-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஒரு புவி அறிவியல் ஆராய்ச்சி அமைப்பாகும்.
- CSIR இந்தியாவின் மிகப்பெரிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பாகும்.
- இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் உள்ள அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சித் துறையின் (DSIR) மேற்பார்வையில், 1942-ஆம் ஆண்டில் CSIR ஒரு தன்னாட்சி அமைப்பாக நிறுவப்பட்டது.
- கடப்பா படுகை (வரலாற்று ரீதியாக 'கடப்பா பேசின்' என்று அழைக்கப்படுகிறது) என்பது இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்தில் அமைந்துள்ள பிறை வடிவத்திலான ஒரு பெரிய படிவுப் பாறைப் படுகையாகும்; இது தனது அபரிமிதமான கனிம வளம் மற்றும் பழமையான புரோடெரோசோயிக் (Proterozoic) காலப் பாறை அமைப்புகளுக்குப் பெயர் பெற்றது.

CBDC அடிப்படையிலான உணவு மானியப் பரிமாற்றங்கள்

- மத்திய வங்கியின் டிஜிட்டல் நாணய (CBDC) அடிப்படையிலான நேரடிப் பலன் பரிமாற்றம் (DBT) மூலம் தகுதியான பயனாளிகளுக்கு உணவு மானியப் பரிமாற்றங்களை வழங்கும் முதல் ஒன்றியப் பிரதேசங்களாக சண்டிகர் மற்றும் தாத்ரா மற்றும் நகர் ஹவேலி ஆகியவை உருவெடுத்துள்ளன.
- வழக்கமான வங்கிக் கணக்குகளுக்குப் பதிலாக பயனாளிகளின் டிஜிட்டல் ரூபாய் (e₹) வாலட்டுகளுக்கு நேரடியாக மானியம் மாற்றப்படும்.
- திறன்பேசிகளில் விரைவு பதில் (QR) குறியீடுகள் மூலமாகவோ அல்லது சாதாரண அலைபேசிகளில் ஒருமுறை பயன்படுத்தும் கடவுச்சொற்கள் (OTP) மூலமாகவோ பணப்பரிமாற்றங்களைச் செய்யலாம்.

- இந்த முயற்சியானது மத்திய அரசின் நலத்திட்டத்தில் CBDC-யின் முதல் பெரிய அளவிலான பயன்பாடாகும், மேலும் இது குஜராத் மற்றும் புதுச்சேரியில் மேற்கொள்ளப்பட்ட சோதனைத் திட்டங்களைத் தொடர்ந்து வருகிறது.
- CBDC (மத்திய வங்கி டிஜிட்டல் நாணயம்) என்பது இந்திய ரிசர்வ் வங்கியால் (RBI) வெளியிடப் படும் இறையாண்மை கொண்ட டிஜிட்டல் நாணயமாகும்.
- பிரதான் மந்திரி காரிப் கல்யாண் அன்ன யோஜனாவின் (PMGKAY) கீழ் உணவு மானிய விநியோகத்தில் வெளிப்படைத்தன்மை, கண்காணிப்பு மற்றும் நிதி உள்ளடக்கத்தை மேம்படுத்துவதை இந்த அமைப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஆயுஷ்மான் பாரத் திட்டம் - மேற்கு வங்கம்

- ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா (AB-PMJAY) திட்டத்தை செயல்படுத்தும் 36-வது மற்றும் இறுதி மாநிலமாக மேற்கு வங்கம் மாறியதன் மூலம், நாடு தழுவிய இதன் அமலாக்கம் முழுமையடைந்துள்ளது.
- தகுதியான பயனாளிகளுக்கு இத்திட்டம் குடும்பத்திற்கு ஆண்டுக்கு ₹5 லட்சம் வரையிலான சுகாதாரக் காப்பீட்டை வழங்குகிறது.
- இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக தேசிய சுகாதார ஆணையம் (NHA) மற்றும் மேற்கு வங்க அரசு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்தானது.
- இத்திட்டத்தின் கீழ் 36,000-க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- நாடு முழுவதும் 44 கோடிக்கும் அதிகமான ஆயுஷ்மான் அட்டைகள் வழங்கப் பட்டு உள்ளன.
- இத்திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து, சுமார் ₹1.82 லட்சம் கோடிக்கும் அதிகமான மதிப்புள்ள 12 கோடிக்கும் மேற்பட்ட சிகிச்சைகளைப் பயனாளிகள் பெற்றுள்ளனர்.

எரிக் பட்டு நெசவு மையம்

- மேகாலயா மாநிலம் ரி-போய் மாவட்டம் நாங்போவில் எரிக் பட்டு நெசவுக்கான திறன்மிகு மையத்தை (CoE) மேகாலயா முதலமைச்சர் கான்ராட் கே. சங்மா திறந்து வைத்தார்.
- இந்த மையம் எரிக் பட்டு நெசவின் பாரம்பரிய திறனைப் பாதுகாக்கவும், அதனை எதிர்கால சந்ததியினருக்குக் கடத்தவும் உதவும்.
- ரைண்டியா (Ryndia) என்றும் அழைக்கப்படும் எரிக் பட்டு, மேகாலயாவின் பாரம்பரிய கைத்தறி நெசவு ஜவுளியாகும்.
- மேகாலயாவின் கலாச்சார அடையாளம் மற்றும் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும் கைத்தறி வண்ணங்கள், வடிவங்கள் மற்றும் வடிவமைப்புகளுக்கு எரிக் பட்டு பெயர் பெற்றது.
- இந்தத் திறன்மிகு மையம் நெசவு மற்றும் கைத்தறி நடவடிக்கைகளில் திறன் மேம்பாடு மற்றும் புதுமைகளை ஊக்குவிக்கும்.

சுவடிகள் டிஜிட்டல் மயமாக்கல் - கேரளா

- மருத்துவச் சுவடிகளை டிஜிட்டல் மயமாக்குவதற்காக ஆயுர்வேத அறிவியல்களுக்கான மத்திய ஆராய்ச்சிக் குழு (CCRAS)-தேசிய இந்திய மருத்துவ மரபு நிறுவனம் (NIIMH), கேரளாவில் உள்ள சேவாதி அருங்காட்சியகம் மற்றும் இந்தியவியல் ஆராய்ச்சி நிறுவனத்துடன் (SEMIRI) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டது.
- ஆயுர்வேதம் மற்றும் பாரம்பரிய மருத்துவ அறிவு குறித்த அரிய படைப்புகள் உட்பட 30,000-க்கும் மேற்பட்ட சுவடிகளை SEMIRI நிறுவனம் பாதுகாத்து வருகிறது.
- நூற்றுக்கணக்கான மருத்துவச் சுவடிகளை டிஜிட்டல் மயமாக்கவும், விளக்கமான பட்டியல் ஒன்றைத் தயாரிக்கவும் CCRAS-NIIMH தொழில்நுட்ப மற்றும் அறிவார்ந்த ஆதரவை வழங்கும்.
- இந்தப் பட்டியலில் சுவடிகளின் தலைப்பு, ஆசிரியர், பொருள், எழுத்துவடிவம், மொழி, பொருள், நிலை மற்றும் தோற்றம் போன்ற விவரங்கள் இடம்பெறும்.
- இந்தத் திட்டம் மிகவும் பழமையான சுவடிகளைப் பாதுகாக்கவும், ஆயுர்வேதம் மற்றும் இந்திய அறிவு அமைப்புகள் (IKS) குறித்த ஆராய்ச்சிக்கு அவற்றை அணுகக் கூடியதாக மாற்றவும் உதவும்.

மகாராஷ்டிராவில் அறிவிக்கப்பட வேண்டிய நோய் - பாம்புக்கடி

- மகாராஷ்டிரா மாநிலம் பாம்புக்கடியை அறிவிக்கப்பட வேண்டிய நோயாக அறிவித்தது, இதன் மூலம் சந்தேகத்திற்குரிய, சாத்தியமான மற்றும் உறுதிப்படுத்தப் பட்ட அனைத்துவித பாதிப்புகளையும் இறப்புகளையும் தெரிவிப்பது கட்டாயமாக்கப் பட்டுள்ளது.
- அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரிகள் மற்றும் சுகாதாரப் பயிற்சியாளர்கள் நோய்களைப் பற்றிய தகவல்களைச் சுகாதார மேலாண்மை தகவல் அமைப்பு (HMIS) மற்றும் ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்புத் திட்டம் (IDSP) ஆகியவற்றின் மூலம் தெரிவிக்க வேண்டும்.
- இந்த அறிவிப்பில், கடித்த தேதி மற்றும் இடம், நோயாளியின் வயது மற்றும் பாலினம், விஷத்தின் அறிகுறிகள் மற்றும் செலுத்தப்பட்ட பாம்பு விஷ முறிவு மருந்து (ASV) அளவு போன்ற விவரங்கள் கோரப்பட்டுள்ளன.
- மகாராஷ்டிராவில் 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 2026 ஆம் ஆண்டு மார்ச் வரை சுமார் 1.29 லட்சம் பாம்புக்கடி பாதிப்புகளையும் 655 இறப்புகளையும் பதிவு செய்துள்ளது.
- 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9 அன்று கட்சிரோலியில் உள்ள அரசு உதவி பெறும் உறைவிடப் பள்ளியில் நடந்த பாம்புக்கடி சம்பவத்தைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப் பட்டுள்ளதுடன், அங்கு மூன்று பழங்குடியின பள்ளி மாணவிகள் இறந்தனர், மற்றும் மூவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

திலேப்பியா ஏற்றுமதி – சத்தீஸ்கர்

- மதிப்பு கூட்டப்பட்ட திலேப்பியா மீன் பொருட்களை ஏற்றுமதி செய்யத் தொடங்கிய இந்தியாவின் முதல் உள்நாட்டு மாநிலமாக சத்தீஸ்கர் உருவெடுத்துள்ளது.
- இந்த மாநிலம் 382 டன் திலேப்பியா தயாரிப்புகளை அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்துள்ளது.

- பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனாவின் (PMMSY) கீழ் சத்தீஸ்கர் மீன்வளத் துறையில் சுமார் ₹900 கோடி முதலீடு செய்துள்ளது.
- குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் தொட்டிகள் போன்ற உள்நாட்டு நீர் வளங்களைப் பயன்படுத்தி மாநிலத்தின் மீன் உற்பத்தி சுமார் 10 லட்சம் டன்களை எட்டியுள்ளது.
- சத்தீஸ்கரின் ராய்ப்பூரில் திலேப்பியா தொகுப்பு குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.
- திலேப்பியா என்பது நன்னீர் மீனாகும், இது குளங்கள், தொட்டிகள், கூண்டுகள் மற்றும் பிற மீன்வளர்ப்பு அமைப்புகளின் மூலம் பரவலாக வளர்க்கப்படுகிறது.

அனலாக் பன்னீர் தடை - கர்நாடகா

- கர்நாடகா மாநிலம் முழுவதும் 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17 முதல் 2027 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17 வரை ஓராண்டு காலத்திற்கு அனலாக் பன்னீரை "பன்னீர்" எனத் தயாரிப்பது, சேமித்து வைப்பது, விநியோகிப்பது மற்றும் விற்பனை செய்வதற்கு அம்மாநிலம் தடை விதித்துள்ளது.
- அனலாக் பன்னீர் என்பது பால் கொழுப்பு அல்லது பால் திடப்பொருட்களுக்கு பதிலாக தாவர எண்ணெய், தாவரக் கொழுப்பு அல்லது பால் அல்லாத பிற பொருட்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் பால் அல்லாத ஒரு பொருளாகும்.
- 2006 ஆம் ஆண்டின் உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டத்தின் கீழ், முக்கியமாக பிரிவுகள் 30(2)(a), 18 மற்றும் 29 ஆகியவற்றைப் பயன்படுத்தி இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
- பதப்படுத்தப்பட்ட பாலாடைக்கட்டி (சீஸ்), உறைந்த இனிப்புகள் மற்றும் கலப்புக் கொழுப்பு விரிப்புகள் போன்ற தனித்தனி உணவு வகைகளைக் கொண்ட தரப்படுத்தப்பட்ட பொருட்களுக்கு இந்தத் தடை பொருந்தாது.
- அனலாக் பன்னீரைக் கட்டுப்படுத்துவதில் இமாச்சலப் பிரதேசம், மகாராஷ்டிரா, குஜராத், சத்தீஸ்கர் மற்றும் மத்தியப் பிரதேசத்துடன் தற்போது கர்நாடகாவும் இணைகிறது.

கிளைபோசேட் தடை - இமாச்சலப் பிரதேசம்

- வனப் பகுதிகளில் கிளைபோசேட் (Glyphosate) கலந்த களைக்கொல்லிகளைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்க வேண்டும் என 44 சமூக மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகள், ஓய்வுபெற்ற வனத்துறை அதிகாரிகள் மற்றும் அறிவியலாளர்கள் இமாச்சலப் பிரதேச அரசை வலியுறுத்தியுள்ளனர்.
- சட்டவிரோதமான பட்டாணி மற்றும் சணல் சாகுபடிக்காக தாவரங்களை அழிப்பதற்கு கிளைபோசேட் பயன்படுத்தப்படுவதாகக் கூறப்படுகிறது; அதிக உயரமுள்ள வனப் பகுதிகளில் இத்தகைய நடைமுறை காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இத்தகைய சாகுபடியானது 1980 ஆம் ஆண்டின் வனச் (பாதுகாப்பு) சட்டம், 1927 ஆம் ஆண்டின் இந்திய வனச்சட்டம் மற்றும் 2002 ஆம் ஆண்டின் பல்லுயிர் பரவல் சட்டம் ஆகியவற்றை மீறுவதாக அக்குழுக்கள் தெரிவித்துள்ளன.
- களைக்கொல்லிப் பயன்பாடு பதிவாகியுள்ள பகுதிகளில் இரசாயன எச்சங்கள் உள்ளதா என்பதை அறிய மண், நீர், தாவரங்கள் மற்றும் பல்லுயிர் ஆகியவற்றின் அறிவியல் பூர்வமான பரிசோதனையை அவர்கள் கோரியுள்ளனர்.

- வனத்துறையானது இதுதொடர்பாக பூஜ்ஜிய சகிப்புத்தன்மை அணுகுமுறையைக் கையாண்டு வருவதுடன், இது வரை ஐந்து சிறிய வனப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பட்டாணி சாகுபடியை அழித்துள்ளது.

சம்ரித் கான் திட்டம்

- மத்தியப் பிரதேசத்தின் இரண்டு வட்டாரங்களில் தொடங்கப்பட்ட சோதனைத் திட்டங்களுடன், ஒன்றிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் சம்ரித் கான் திட்டம் என்ற திட்டத்தை தொடங்கி வைத்தார்.
- இந்தத் திட்டம் அடிப்படை வசதிகள் மற்றும் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்காக மத்திய மற்றும் மாநில நலத்திட்டங்களை ஒன்றிணைக்கும் ஒரு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி கட்டமைப்பாகும்.
- இந்த முன்னோடித் திட்டம் மத்தியப் பிரதேசத்தின் சிஹோர் மாவட்டத்தில் உள்ள புத்னி வட்டாரம் மற்றும் தேவாஸ் மாவட்டத்தில் உள்ள காதேகான் வட்டாரம் ஆகியவற்றை உள்ளடக்கும்.
- இது ஒருங்கிணைந்த வேளாண் அமைப்புகள், பெண் விவசாயிகளின் நிறுவனங்கள், ஊரக உள்கட்டமைப்பு, கிடங்குகள், குளிர்பதனச் சங்கிலிகள் மற்றும் கிராம அளவிலான செயலாக்கம் ஆகியவற்றை மேம்படுத்துகிறது.
- தன்னிறைவு பெற்ற, வறுமையற்ற மற்றும் பொருளாதார ரீதியாக துடிப்பான கிராமங்களை உருவாக்குவதையும், துயரத்தால் உந்தப்படும் கிராமப்புறங்களில் இருந்து நகர்ப்புறங்களுக்கான இடம்பெயர்வை குறைப்பதையும் இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

யுரேனியச் சுரங்கம் - மேகாலயா

- மாநிலத்தில் யுரேனியச் சுரங்கம் அமைப்பதற்கும் யுரேனியம் தாது பதப்படுத்தும் வசதிகளுக்கும் எதிர்ப்புத் தெரிவித்து மேகாலயா சட்டமன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.
- மேகாலயா முதலமைச்சர் 60 சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றத்தில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.
- இந்தத் தீர்மானம் நிலம் மற்றும் அதன் அடியில் உள்ள கனிமங்கள் மீது தனியார் மற்றும் சமூக நில உரிமையாளர்களின் உரிமைகளை அங்கீகரிக்கும் 2019 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்ற உத்தரவைக் குறிப்பிட்டுள்ளது.
- மேகாலயாவின் ஆறாவது அட்டவணை கட்டமைப்பானது நிலம் மற்றும் வளங்களின் மீதான சமூகம், குலம் மற்றும் தனிநபர் உரிமையைப் பாதுகாக்கிறது.
- மேகாலயாவில் சுமார் 9.22 மில்லியன் டன் யுரேனியம் படிவுகள் உள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளதுடன் இது இந்தியாவின் மொத்த இருப்பில் சுமார் 16% ஆகும், மேலும் இது ஜார்க்கண்ட் மற்றும் ஆந்திரப் பிரதேசத்திற்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்தில் உள்ளது.

கூர்க்காலாந்து விவகாரக் குழு

- டார்ஜிலிங் மலைப்பகுதியில் உள்ள கூர்க்கா விவகாரத்திற்கு "நிரந்தர அரசியல் தீர்வை" இறுதி செய்ய மத்திய அரசு ஒரு குழுவை அமைத்துள்ளது.

- முன்னாள் துணை தேசியப் பாதுகாப்பு ஆலோசகரும் தற்போதைய பேச்சுவார்த்தையாளருமான பங்கஜ் குமார் சிங் இக்குழுவிற்கு தலைமை தாங்குவார்.
- கூர்க்கா சமூகத்தின் அடையாளம், சுயராஜ்ஜியம் மற்றும் அரசியலமைப்பு அங்கீகாரம் தொடர்பான கோரிக்கைகளை இக்குழு கவனிக்கும்.
- டார்ஜிலிங் மலைப்பகுதி, தராய் மற்றும் டூவர்ஸ் ஆகியவற்றின் சில பகுதிகளை உள்ளடக்கிய தனி மாநிலத்தை கூர்க்காலாந்து கோரிக்கை வலியுறுத்துகிறது.
- கூர்க்கா பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த 2025 ஆம் ஆண்டு அக்டோபரில் பங்கஜ் குமார் சிங்கை மத்திய அரசு பேச்சுவார்த்தையாளராக நியமித்தது.
- டார்ஜிலிங் உத்திசார் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தது, ஏனெனில் இது பிரதான இந்தியாவிற்கும் வடகிழக்கு மாநிலங்களுக்கும் இடையிலான முக்கிய நில இணைப்பான சிலிகுரி வழித்தடத்திற்கு அருகில் அமைந்துள்ளது.

ஆஸ்திரேலிய மெரினோ செம்மறி ஆடுகள் - இமாச்சலப் பிரதேசம்

- கம்பளித் தரத்தை மேம்படுத்தவும், மாநிலத்தின் கம்பளி உற்பத்தியை அதிகரிக்கவும் ஆஸ்திரேலிய மெரினோ செம்மறி ஆடுகளை இமாச்சலப் பிரதேசம் அறிமுகப் படுத்தியது.
- தேசிய வாழ்வாதார இயக்கத்தின் கீழ் ஆஸ்திரேலியாவிலிருந்து 240 மெரினோ செம்மறி ஆடுகள் இறக்குமதி செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டில் ₹6 கோடி மதிப்பிலான இத்திட்டம் தொடங்கியது.
- செயற்கை கருவூட்டல் மூலம் மெரினோ மற்றும் உள்நாட்டு காடி செம்மறி ஆடுகள் கலப்பினம் செய்யப்பட்டு, 800 ஆரோக்கியமான குட்டிகள் உருவாக்கப்பட்டன.
- சிறந்த, ஆடை தரத்திலான கம்பளியை உற்பத்தி செய்வதற்காக கம்பளியின் தடிமனை சுமார் 27 மைக்ரான்களில் இருந்து 21-22 மைக்ரான்களாகக் குறைப்பதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இமாச்சலப் பிரதேசம் தனது ஆண்டு கம்பளி உற்பத்தியை சுமார் 1,500 டன்னில் இருந்து 2027 ஆம் ஆண்டிற்குள் 3,000 டன்னாக அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளது.

பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

ஃபீல்ட்ஸ் பதக்கம் 2026

- கணிதத் துறையின் மிக உயரிய விருதான 2026 ஆம் ஆண்டிற்கான ஃபீல்ட்ஸ் பதக்கம், அமெரிக்காவின் பிலடெல்பியாவில் நடைபெற்ற சர்வதேச கணிதவியலாளர்கள் காங்கிரஸில் (ICM 2026) அறிவிக்கப்பட்டது.
- நவீன கணிதத்தில் முக்கிய பங்களிப்புகளுக்காக யு டெங் (சீனா), ஜான் பார்டன் (அமெரிக்கா), ஹாங் வாங் (சீனா) மற்றும் ஜேக்கப் சிம்மர்மேன் (கனடா) ஆகியோருக்கு இப்பதக்கம் வழங்கப்பட்டது.
- சர்வதேச கணித ஒன்றியத்தால் (IMU) நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை வழங்கப்படும் இது, 40 வயதிற்குட்பட்ட கணிதவியலாளர்களை அங்கீகரிக்கிறது.
- மரியம் மிர்சகானி (2014) மற்றும் மரினா வியாசோவ்ஸ்கா (2022) ஆகியோருக்குப் பிறகு ஃபீல்ட்ஸ் பதக்கம் பெறும் மூன்றாவது பெண் என்ற பெருமையை ஹாங் வாங் பெற்றார்.

- ஃபீல்ட்ஸ் பதக்கம் "கணிதத்தின் நோபல் பரிசு" என்று பிரபலமாக அழைக்கப்படுகிறது என்பதோடு இது 15,000 கனடிய டாலர்கள் (CAD) ரொக்கப் பரிசைக் கொண்டுள்ளது.

பிங்கலி வெங்கய்யாவின் 150வது பிறந்தநாள்

- 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 2 அன்று பிங்கலி வெங்கய்யாவின் 150-வது பிறந்தநாளை இந்தியா அனுசரித்தது என்பதோடுபிரதமர் அவருக்கு அஞ்சலி செலுத்தினார்.
- பிங்கலி வெங்கய்யா (1876-1963) ஒரு இந்திய சுதந்திரப் போராட்ட வீரர், கல்வியாளர், புவியியலாளர், எழுத்தாளர் மற்றும் இந்திய தேசியக் கொடியின் (மூவர்ணக் கொடி) ஆரம்ப வடிவத்தை வடிவமைத்தவர் ஆவார்.
- இவர் ஆந்திரப் பிரதேசத்தின் கிருஷ்ணா மாவட்டத்தில் உள்ள பட்லபெனுமர்ரு கிராமத்தில் பிறந்தார்.
- 1921 ஆம் ஆண்டில் விஜயவாடாவில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி (AICC) கூட்டத்தொடரின் போது அவர் தனது கொடி வடிவமைப்பை மகாத்மா காந்தியிடம் சமர்ப்பித்தார்.
- 1923-ஆம் ஆண்டு ஏப்ரல் 13-ஆம் தேதி, நாக்பூரில் ஜாலியன் வாலாபாக் படுகொலையை நினைவு கூரும் வகையில் உள்ளூர் காங்கிரஸ் தொண்டர்கள் நடத்திய ஊர்வலத்தின் போது, ராட்டைச் சின்னம் பொறித்த 'சுயராஜ்யக் கொடி' ஏற்றப் பட்டது.
- வெங்கய்யாவின் வடிவமைப்பை அடிப்படையாகக் கொண்டு, ராட்டைக்கு (Charkha) பதிலாக அசோகச் சக்கரத்தை மாற்றி, இந்தியாவின் தற்போதைய தேசியக் கொடி ஆனது 1947 ஆம் ஆண்டு ஜூலை 22 அன்று அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- அப்போது, ராட்டைச் சின்னத்திற்குப் பதிலாக அடர் நீல நிறத்திலான 24 ஆரங்களைக் கொண்ட அசோகச் சக்கரம் அதில் இடம் பெறச் செய்யப் பட்டது.

நீதிபதி எம்.எஸ்.லிபரான் மறைவு

- ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றம் மற்றும் மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதியான எம்.எஸ்.லிபரான் தனது 87ஆவது வயதில் சண்டிகரில் காலமானார்.
- 1992 ஆம் ஆண்டு டிசம்பர் 6 அன்று நிகழ்ந்த பாபர் மசூதி இடிப்பு குறித்து விசாரிக்க அமைக்கப்பட்ட லிபரான் ஆணையத்திற்கு நீதிபதி லிபரான் தலைமை தாங்கினார்.
- லிபரான் ஆணையம் கிட்டத்தட்ட 17 ஆண்டுகளுக்குப் பிறகு தனது அறிக்கையை சமர்ப்பித்தது என்பதோடு இது இந்தியாவின் மிக நீண்ட காலம் செயல்பட்ட விசாரணை ஆணையங்களில் ஒன்றாகும்.
- இவர் பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியாக இருந்தார் மற்றும் ஆந்திரப் பிரதேசம் மற்றும் மெட்ராஸ் உயர் நீதிமன்றங்களின் தலைமை நீதிபதியாகவும் பணியாற்றினார்.
- நீதிபதி லிபரான் தனது நீண்டகால நீதித்துறை சேவைக்காகவும், சட்டத்தின் ஆட்சி மற்றும் இந்திய நீதித்துறைக்கான தனது பங்களிப்பிற்காகவும் அறியப்பட்டவர்.

COSPAR விக்ரம் சாராபாய் பதக்கம் 2026

- விண்வெளி ஆராய்ச்சிக்கான தனது பங்களிப்பிற்காக வானியற்பியல் அறிவியலாளர் அன்னபூர்ணி சுப்பிரமணியம் 2026 ஆம் ஆண்டிற்கான COSPAR விக்ரம் சாராபாய் பதக்கத்தைப் பெற்றார்.
- இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தை டாக்டர் விக்ரம் சாராபாய் அவர்களை கௌரவிக்கும் வகையில் விக்ரம் சாராபாய் பதக்கம் 1990 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- வளரும் நாடுகளைச் சேர்ந்த அறிவியலாளர்களுக்கு விண்வெளி ஆராய்ச்சிக்கான குழு (COSPAR) மற்றும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) ஆகியவை இணைந்து இந்தப் பதக்கத்தை வழங்குகின்றன.
- இந்தப் பதக்கத்தைப் பெறும் 4வது இந்தியர் மற்றும் முதல் இந்திய பெண் அறிவியலாளர் என்ற பெருமையை அன்னபூர்ணி சுப்பிரமணியம் பெற்றுள்ளார்; மேலும் இவ்விருதைப் பெறும் மூன்றாவது பெண் இவராவார்.
- யு.ஆர்.ராவ் (1996), குர்பக்ஸ் சிங் லகினா (2014), மற்றும் அனில் பரத்வாஜ் (2024) ஆகியோர் இந்தப் பதக்கத்தைப் பெற்ற பிற இந்தியர்கள் ஆவர்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு விருது 2026

- சென்னையில் நடைபெற்ற விழாவில், பி. பேச்சியம்மாள் மற்றும் கோவிந்தம்மாள் ஆகியோர் 'சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் விருது 2026'-ஐப் பெற்றனர்.
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பல்லுயிர் தன்மை பாதுகாப்பு, கடல்சார் நெகிழிக் கழிவுகளை அகற்றுதல் மற்றும் நிலையான விவசாயம் ஆகியவற்றில் சிறப்பான பங்களிப்பை வழங்கிய அடித்தள நிலையில் செயல்படும் தனிநபர்கள் மற்றும் அமைப்புகளை இவ்விருது அங்கீகரிக்கிறது.
- எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை (MSSRF), கேவின்கேர் (CavinKare) பிரைவேட் லிமிடெட் மற்றும் ரோட்டரி கிளப் ஆஃப் மெட்ராஸ் ஈஸ்ட் ஆகியவற்றுடன் இணைந்து இவ்விருது நிறுவப்பட்டுள்ளது.
- கடல்வாழ் உயிரினங்கள் மற்றும் பவளப்பாறைகளைப் பாதுகாக்கும் வகையில், கைவிடப்பட்ட மீன்பிடி வலைகளை அகற்றியதற்காக பி. பேச்சியம்மாள் (ராமநாதபுரம்) கௌரவிக்கப்பட்டார்.
- இயற்கை விவசாயம் மற்றும் பருவநிலை மாற்றத்தைத் தாங்கி வளரும் விவசாய முறைகளை ஊக்குவித்தமைக்காகவும், விவசாய உற்பத்தியாளர் நிறுவனங்களை (FPCs) வலுப்படுத்தியதற்காகவும் கோவிந்தம்மாள் (விழுப்புரம்) கௌரவிக்கப்பட்டார்.

சர்வோத்தம் ஜீவன் ரக்ஷா பதக்கம் 2026

- புது தில்லியில் மனித உயிர்களைக் காப்பாற்றுவதில் வீரச் செயல்கள் புரிந்த 12 எலி-வளை சுரங்கத் தொழிலாளர்களுக்கு (Rat-hole miners) மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் 'சர்வோத்தம் ஜீவன் ரக்ஷா' பதக்கத்தை வழங்கினார்.
- இது மத்திய உள்துறை அமைச்சகத்தால் (MHA) நிர்வகிக்கப்படும் குடிமக்களுக்கான உயிர்காக்கும் விருதான ஜீவன் ரக்ஷா பதக்கத்தின் மிக உயர்ந்த பிரிவாகும்.

- இந்த விருதானது 1961 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 அன்று நிறுவப்பட்டது, பின்னர் இது சர்வோத்தம், உத்தம் மற்றும் ஜீவன் ரக்ஷா பதக்கம் என மூன்று நிலைகளாக வகைப்படுத்தப் பட்டது.
- சுரங்கச் சரிவுகள், தீ விபத்துகள், வெள்ளம் மற்றும் பிற பேரிடர்களின் போது தங்களுக்கு ஏற்படும் அதீத ஆபத்தையும் பொருட்படுத்தாமல் மனித உயிர்களைக் காப்பாற்றுபவர்களை இது கௌரவிக்கிறது.
- இந்த விருது அனைத்து குடிமக்களுக்கும் திறந்திருக்கும் மற்றும் மரணத்திற்குப் பின்னரும் வழங்கப்படலாம்; பெறுநர்களுக்கு ₹2 லட்சம் ரொக்க மானியம், பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

2025 ஆம் ஆண்டுக்கான சந்த் கபீர் கைத்தறி விருதுகள்

- புதுடெல்லியில் உள்ள ராஷ்டிரபதி பவன் கலாச்சார மையத்தில், 2025 ஆம் ஆண்டுக்கான சந்த் கபீர் கைத்தறி விருதுகள் மற்றும் தேசிய கைத்தறி விருதுகளை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வழங்கினார்.
- மொத்தம் 22 விருதுகள் வழங்கப்பட்டன - அதில் 3 சந்த் கபீர் கைத்தறி விருதுகள் மற்றும் 19 தேசிய கைத்தறி விருதுகள் அடங்கும்.
- சந்த் கபீர் விருதுகள் ராம் மெஹர் (ஒடிசா), ருனிமா செட்டியா சௌத்ரி (அசாம்) மற்றும் ஷா முகமது அன்சாரி (உத்தரப் பிரதேசம்) ஆகியோருக்கு வழங்கப்பட்டன.
- தேசிய கைத்தறி விருதுகளில் காஞ்சிபுரம் பட்டு (தமிழ்நாடு), இகாட் (தெலங்கானா) மற்றும் கனி சால்வைகள் (ஜம்மு மற்றும் காஷ்மீர்) உள்ளிட்ட பாரம்பரிய ஜவுளிகள் அங்கீகரிக்கப்பட்டன.
- இந்தியாவின் நெசவு மரபுகளைப் போற்றும் வகையில் நான்கு நினைவு தபால் தலைகளையும் குடியரசுத் தலைவர் வெளியிட்டார்.

டிராக் பதக்கம் 2026

- கோட்பாட்டு இயற்பியலில் வழங்கப்படும் மிக உயரிய விருதுகளில் ஒன்றான 2026 ஆம் ஆண்டிற்கான டிராக் பதக்கத்தின் (Dirac Medal) இணை-பெறுநராக இந்திய இயற்பியலாளர் தீபக் தர் அறிவிக்கப்பட்டுள்ளார்.
- இப்பதக்கமானது இத்தாலியில் உள்ள அப்துஸ் சலாம் கோட்பாட்டு இயற்பியலுக்கான சர்வதேச மையத்தால் (ICTP) 1985 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- 2022 ஆம் ஆண்டில் போல்ட்ஸ்மேன் பதக்கத்தைப் (Boltzmann Medal) பெற்ற முதல் இந்தியர் என்ற பெருமையை தீபக் தர் பெற்றார்.
- அவர் இப்போது டிராக் மற்றும் போல்ட்ஸ்மேன் ஆகிய இரண்டு பதக்கங்களையும் பெற்ற 10 பேரில் ஒருவராக உள்ளார்.
- எளிமையான தொடர்புகள் எவ்வாறு பெரிய அமைப்புகளில் சிக்கலான நடத்தையை உருவாக்கும் என்பதை இவரது ஆராய்ச்சி கண்டறிகிறது.

ஏ. எஸ். ராஜீவ் - பொறுப்பு வகிக்கும் மத்திய விழிப்புணர்வு ஆணையர்

- மத்திய விழிப்புணர்வு ஆணையராக (CVC) செயல்பட, விழிப்புணர்வு ஆணையர் ஏ. எஸ். ராஜீவ் அவர்களுக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்தார்.

- பதவிக்காலம் நிறைவடைந்த பிரவீன் குமார் ஸ்ரீவாஸ்தவாவிற்குப் பிறகு இவர் இப்பொறுப்பை ஏற்றுள்ளார்.
- பணியாளர், பொதுமக்கள் குறைதீர்ப்பு மற்றும் ஓய்வூதிய அமைச்சகத்தின் கீழ் உள்ள பணியாளர் மற்றும் பயிற்சித் துறையால் (DoPT) இது குறித்த அறிவிப்பு வெளியிடப் பட்டது.
- இந்திய அரசின் தீர்மானத்தின் மூலம், 1964 ஆம் ஆண்டு பிப்ரவரி 11 அன்று மத்திய விழிப்புணர்வு ஆணையம் (CVC) ஒரு நிர்வாக அமைப்பாக நிறுவப்பட்டது.
- கே. சந்தானம் தலைமையிலான ஊழல் தடுப்புக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இது அமைக்கப்பட்டது.
- அரசுத் துறைகளில் நிலவும் ஊழலைக் கையாள்வதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- 2003ம் ஆண்டில், நாடாளுமன்றம் இயற்றிய சட்டத்தின் மூலம் CVC-க்குச் சட்டப்பூர்வ அந்தஸ்து வழங்கப்பட்டதோடு இது எந்தவொரு நிர்வாக அதிகார அமைப்பின் கட்டுப்பாட்டிற்கும் உட்படாத ஒரு தன்னாட்சி அமைப்பாகச் செயல்படுகிறது.
- இந்திய மத்திய அரசின் கீழ் நடைபெறும் அனைத்து விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் கண்காணிப்பதும், மத்திய அரசு நிறுவனங்களில் விழிப்புணர்வுப் பணிகளைத் திட்டமிடுதல், செயல்படுத்துதல், ஆய்வு செய்தல் மற்றும் சீரமைத்தல் ஆகியவற்றில் பல்வேறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குவதும் இதன் பொறுப்பாகும்.
- CVC ஒரு புலனாய்வு அமைப்பு அல்ல; அரசாங்கத்தின் சிவில் பணிகளை ஆய்வு செய்வது மட்டுமே CVC மேற்கொள்ளும் ஒரே புலனாய்வு நடவடிக்கையாகும்.

கஜ் கௌரவ் விருதுகள் 2026

- 2026 ஆம் ஆண்டிற்கான கஜ் கௌரவ் விருதுகள் ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப் பட்டினத்தில் உலக யானைகள் தினக் கொண்டாட்டங்களின் போது 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13 அன்று வழங்கப்பட்டன.
- மேற்கு வங்காளத்தின் ஜல்தாபாரா தேசியப் பூங்காவைச் சேர்ந்த ஏழு யானைப் பாகன்களுக்கு யானை மற்றும் வனவிலங்கு மீட்புப் பணிகளுக்காக இந்த விருதுகள் வழங்கப் பட்டன.
- கடும் வெள்ளத்தின் போது சிக்கித் தவித்த வளர்ப்பு யானைகள் 6-ஐ பிகாஷ் காரியா மற்றும் ராஜீவ் ஓரோன் ஆகியோர் மீட்டனர்.
- அஜிபுல் ஹக், அஜித் கபூர், மும்தாஜ் ஆலம், அமசூர் காரியா மற்றும் திலீப் முண்டா ஆகியோர் இடம் பெயர்ந்த 13 காண்டாமிருகங்களைப் பாதுகாப்பாக வழிநடத்தினர்.
- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், யானைகள் பாதுகாப்புத் திட்டத்தின் (2020-2026) கீழ் 30 சாதனைகளை உள்ளடக்கிய "30 Giant Steps" என்ற நூலை வெளியிட்டது.
- கர்நாடகா, கேரளா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாட்டில் மனித-யானை மோதலை நிர்வகிக்க ₹500 கோடி மதிப்பிலான பிராந்திய செயல்திட்டம் தொடங்கப் பட்டது.

தகைசால் தமிழர் விருது 2026

- 2026 ஆம் ஆண்டுக்கான தகைசால் தமிழர் விருதுக்கு தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் (TNCC) முன்னாள் தலைவர் திரு. எம். கிருஷ்ணசாமி அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு உள்ளார்.

- இவர் 1991 முதல் 1996 ஆம் ஆண்டு வரை வந்தவாசி மக்களவைத் தொகுதியையும், 2009 முதல் 2014 ஆம் ஆண்டு வரை ஆரணி மக்களவைத் தொகுதியையும் பிரதிநிதித்துவப் படுத்தியுள்ளார்.
- தமிழ்நாடு மற்றும் தமிழ் சமுதாயத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பை வழங்கிய சிறந்த நபர்களைக் கௌரவிக்கும் வகையில் இந்த விருது 2021 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- இவ்விருது ரூபாய் 10 லட்சம் ரொக்கப் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழை உள்ளடக்கியது.
- என். சங்கரய்யா (2021), ஆர். நல்லகண்ணு (2022), கி. வீரமணி (2023), குமரி அனந்தன் (2024) மற்றும் கே. எம். காதர் மொய்தீன் (2025) ஆகியோர் இதற்கு முன் இவ்விருதினைப் பெற்றவர்களாவர்.

சுமித் சர்க்கார் மறைவு

- நவீன கால இந்திய வரலாறு குறித்த தனது படைப்புகளுக்காக அறியப்பட்ட சிறந்த வரலாற்றாசிரியர் சுமித் சர்க்கார் தனது 87-வது வயதில் காலமானார்.
- அவர் 1974 முதல் 2004 ஆம் ஆண்டு வரை டெல்லி பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றினார், மேலும் கல்கத்தா பல்கலைக்கழகம், பர்த்வான் பல்கலைக்கழகம் மற்றும் ஆக்ஸ்போர்டு ஆகியவற்றிலும் கற்பித்துள்ளார்.
- அவரது 'மாடர்ன் இந்தியா' (Modern India) என்ற புத்தகம் விவசாயிகள், தொழிலாளர்கள் மற்றும் சாதாரண மக்களை இந்திய வரலாற்று ஆய்வுக்குள் கொண்டு வந்தது.
- அவரது 'சுதேசி மூவ்மென்ட் இன் பெங்கால்' (Swadeshi Movement in Bengal) என்ற புத்தகம் செய்தித்தாள்கள், நாடகங்கள், நாவல்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் போன்ற ஆதாரங்களைப் பயன்படுத்தி 1905 வங்கப் பிரிவினையை ஆராய்ந்தது.
- அவர் தேசியம், சாதி, மதம், உழைப்பு மற்றும் விளிம்புநிலை மக்களின் அனுபவங்களை வரலாற்றுச் சான்றுகள் மூலம் ஆய்வு செய்தார்.
- அவரது பிற படைப்புகளில் 'மாடர்ன் டைம்ஸ்' (Modern Times) மற்றும் 'காக்கி ஷார்ட்ஸ் அண்ட் சாஃப்ரான் ஃப்ளாக்ஸ்' (Khaki Shorts and Saffron Flags) ஆகியவை அடங்கும், அவை இந்திய சமூகம் மற்றும் அரசியலின் பல்வேறு அம்சங்களை ஆய்வு செய்தன.

இந்தியாவின் முதல் பெண் போர் விமானப் படைத் தலைவர் - பாவனா காந்த்

- இந்திய விமானப்படையின் முதல் பெண் 'டாப் கன்' (Top Gun) விமானியாகி பாவனா காந்த் வரலாறு படைத்துள்ளார்.
- அவனி சதுர்வேதி மற்றும் மோகனா சிங் ஆகியோருடன் இணைந்து, நாட்டின் முதல் பெண் போர் விமானிகள் குழுவின் ஒரு பகுதியாக 2016 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இவர் இந்திய விமானப்படையில் பணியில் சேர்ந்தார்.
- 2019-ஆம் ஆண்டில், பகல் நேரப் போர் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தகுதி பெற்ற முதல் இந்தியப் பெண் விமானி ஆனார்.
- 2021-ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்ற முதல் பெண் போர் விமானி இவராவார்; பின்னர் 2024-ஆம் ஆண்டு குடியரசு தின விமான சாகச நிகழ்ச்சியிலும் (fly-past) இவர் பங்கேற்றார்.

- குவாலியரில் உள்ள 'தந்திரோபாய மற்றும் வான்வழிப் போர் மேம்பாட்டு நிறுவனம்' (TACDE)-இல், மதிப்புமிக்க 'போர் விமானப் படைத் தலைவர்' (FCL) பயிற்சியை வெற்றிகரமாக முடித்த முதல் பெண் போர் விமானி இவராவார்.
- இந்தப் பயிற்சி, அமெரிக்கக் கடற்படையின் "டாப் கன்" (Top Gun) பயிற்சிக்கு இணையானதாகக் கருதப்படுகிறது; இது அதிகாரப்பூர்வமாக 'ஸ்டிரைக் ஃபைட்டர் டாக்டிக்ஸ் இன்ஸ்ட்ரக்டர்' (Strike Fighter Tactics Instructor) திட்டம் என்று அழைக்கப் படுகிறது.

Triumph of the Indian Republic: My Life, My Struggles - ராம்நாத் கோவிந்த் எழுதிய நூல்

- 'Triumph of the Indian Republic: My Life, My Struggles' என்பது 2017 முதல் 2022 ஆம் ஆண்டு வரை இந்தியாவின் 14வது குடியரசுத் தலைவராகப் பணியாற்றிய ராம் நாத் கோவிந்தின் அதிகாரப்பூர்வ சுயசரிதையாகும்.
- புது தில்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் பிரதமர் நரேந்திர மோடியால் இப்புத்தகம் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது.
- இந்தியாவின் குடியரசுத் தலைவரான உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த முதல் நபர் மற்றும் பாரதிய ஜனதா கட்சியின் (BJP) முதல் உறுப்பினர் ராம் நாத் கோவிந்த் ஆவார்.

தேசிய அனுபவ் விருதுகள் 2026

- புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில், தேசத்தைக் கட்டியெழுப்பிய பங்களிப்பிற்காக 15 பேருக்கு 'தேசிய அனுபவ் விருதுகள் 2026' வழங்கப்பட்டது.
- பாஸ்போர்ட்/கடவுச்சீட்டு சேவா கேந்திராக்கள், விதி சீர்திருத்தங்கள், தொழில்நுட்ப தழுவல் மற்றும் அரசு கணக்குகள் உள்ளிட்ட திட்டங்களில் விருது பெற்றவர்கள் பங்காற்றியுள்ளனர்.
- மத்திய அரசுப் பணியாளர்கள், ஓய்வுபெற்ற ஊழியர்கள், 12 பொதுத்துறை வங்கிகள் மற்றும் மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் தங்களது பணி அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள 'அனுபவ்' தளம் வழிவகை செய்கிறது.
- 'பென்ஷன் மித்ரா' கையேடு மற்றும் 5-வது தேசிய அளவிலான டிஜிட்டல் ஆயுள் சான்றிதழ் இயக்கத்திற்கான வழிகாட்டுதல்களும் வெளியிடப்பட்டன.
- ஓய்வூதிய நடைமுறைகளை எளிமைப்படுத்துவதற்கும் குடும்ப ஓய்வூதிய விதிகளை வலுப்படுத்துவதற்குமான சீர்திருத்தங்களை அரசு சுட்டிக் காட்டியது.

PMIS விருது 2026

- இந்தியப் பவர் கிரிட் கார்ப்பரேஷன் நிறுவனமானது (POWERGRID) பிரதமர் வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டத்தின் (PMIS) 'எக்சிட் பாத்வேஸ்' கண்டுபிடிப்புக்கான அங்கீகரிக்கப் பட்ட கூட்டாளர் நிறுவன விருதைப் பெற்றது.
- POWERGRID என்பது மின்சாரத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் ஒரு மகாநவரத்னா பொதுத்துறை நிறுவனமாகும் (PSU).
- வேலைவாய்ப்பு மற்றும் பணியமர்த்தல் ஆதரவுக்காக மின்சாரத் துறை திறன் சபையின் (PSSC) ரோஸ்கார் இணையதளத்தில் அனைத்து PMIS பயிற்சி பெறுநர்களின் பயிற்சி விவரங்களைப் பதிவேற்றியதற்காக POWERGRID-ஐ இவ்விருது அங்கீகரித்து உள்ளது.

- இளைஞர்கள் மற்றும் தொழில்துறை ஈடுபாட்டிற்கான தேசிய வேலைவாய்ப்புப் பயிற்சி முயற்சியாக PMIS 2024 ஆம் ஆண்டு டிசம்பரில் தொடங்கப்பட்டது.
- பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம் புது தில்லியில் உள்ள இந்தியா ஹாபிடேட் மையத்தில் PMIS தொழில்துறை விருதுகளை வழங்கியது.
- மகிந்திரா அண்ட் மகிந்திரா லிமிடெட் ஒட்டுமொத்த தொழில்துறை சாம்பியனாகத் தேர்ந்தெடுக்கப் பட்டது, அதே சமயம் IBM இந்தியா பிரைவேட் லிமிடெட் 'திட்டம் செயல்படுத்துதலில் புதுமை' விருதைப் பெற்றது.

இந்தியப் இராணுவ வீரர்களுக்கு ஐ.நா. பதக்கம்

- தெற்கு சூடானின் ஜூபா நகரில் 210 இந்திய அமைதிப் படையினர் ஐக்கிய நாடுகளின் (ஐ.நா.) பதக்கத்தைப் பெற்றனர்.
- பதக்கம் பெற்றவர்களில் தெற்கு சூடானில் உள்ள ஐக்கிய நாடுகளின் தூதரகத்தில் (UNMISS) பணியாற்றும் ஆறு பெண்கள் மற்றும் ஏழு அதிகாரிகளும் அடங்குவர்.
- ஐ.நா. அமைதி காக்கும் நடவடிக்கைகளுக்கு இராணுவ வீரர்களை வழங்கும் இரண்டாவது பெரிய நாடாக இந்தியா உள்ளதுடன், 2026 ஆம் ஆண்டில் உலகளவில் 4,200க்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் இதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
- 1948 ஆம் ஆண்டு முதல் நிறுவப்பட்ட 71 ஐ.நா. அமைதிப் படை பணிகளில் 49 பணிகளுக்கு இந்தியா 2 லட்சத்திற்கும் அதிகமான இராணுவ வீரர்களை அளித்துள்ளது.
- UNMISS 2011 ஆம் ஆண்டில் தெற்கு சூடான் சுதந்திரம் அடைந்த பிறகு நிறுவப்பட்டது.
- இது பொதுமக்கள் பாதுகாப்பு, மனிதாபிமான உதவி மற்றும் அமைதிச் செயல்முறை ஆகியவற்றுக்காக செயல்படுகிறது.

இணையத் தமிழ்ச் செம்மல் விருது 2026

- டிஜிட்டல் தளத்தில் தமிழ் மொழி மேம்பாட்டிற்கான பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு இணையத் தமிழ்ச் செம்மல் விருதை அறிமுகப்படுத்தி உள்ளது.
- இணையதளங்கள், டிஜிட்டல் தளங்கள் மற்றும் இணையவழி ஆய்வுகள் மூலம் தமிழை மேம்படுத்தி வளர்க்கும் தமிழறிஞர்கள் மற்றும் ஆர்வலர்களை இது கௌரவிக்கிறது.
- இவ்விருது இணையத் தமிழ்ச் செம்மல் என்ற பட்டத்தையும் ₹25,000 ரொக்கப் பரிசையும் உள்ளடக்கியது.
- டிஜிட்டல் தமிழ் சேவைகள் மற்றும் யூனிகோட் (Unicode) மேம்பாட்டிற்கான முயற்சிகளை இது அங்கீகரிக்கிறது.
- தமிழ் மொழிப் பணிக்கான அங்கீகாரத்தை இந்த விருது டிஜிட்டல் சகாப்தத்திற்கும் விரிவுபடுத்துகிறது.

நம்மாழ்வார் விருதுகள் 2025-26

- 2025-26 ஆம் ஆண்டிற்கான இயற்கை விவசாயத்தில் சிறந்து விளங்கியவர்களுக்கான நம்மாழ்வார் விருதுகளை தமிழ்நாடு முதலமைச்சர் வழங்கினார்.

- சி. நல்லசிவம் (நாமக்கல்), ஏ. சுப்பிரமணியன் (புதுக்கோட்டை), மற்றும் சாதனா (செங்கல்பட்டு) ஆகியோருக்கு இவ்விருதுகள் வழங்கப்பட்டன.
- ஒவ்வொரு விருதும் ₹2 லட்சம் ரொக்கப் பரிசையும் ஒரு பதக்கத்தையும் உள்ளடக்கியது.
- 2025 ஆம் ஆண்டிற்கான சர்வோத்தம் ஜீவன் ரக்ஷா பதக்கத்தை, மறைந்த தலைமை ஆசிரியர் பி.எஸ். கௌரிசங்கர் ராஜாவின் மனைவி ஸ்ரீஷாவிடம் முதலமைச்சர் வழங்கினார்.
- விவசாயப் பண்ணைக் குட்டையில் தவறி விழுந்த எட்டு வயது மாணவியைக் காப்பாற்றும் முயற்சியில் வீரமரணமடைந்த கௌரிசங்கர் ராஜாவிற்கு மரணத்திற்குப் பின் இவ்விருது வழங்கப்பட்டது.

விளையாட்டுச் செய்திகள்

2026 ISSF உலகக் கோப்பை

- ரைபிள், பிஸ்டல் மற்றும் ஷாட்கன் நிகழ்வுகளில் நான்கு பதக்கங்களுடன் (1 தங்கம், 1 வெள்ளி மற்றும் 2 வெண்கலப் பதக்கங்கள்) சர்வதேச துப்பாக்கிச் சுடுதல் விளையாட்டுக் கூட்டமைப்பின் (ISSF) 2026 ஆம் ஆண்டிற்கான உலகக் கோப்பைப் பயணத்தை இந்தியா நிறைவு செய்துள்ளது.
- 2026 ISSF உலகக் கோப்பையில் அதிகப் பதக்கங்களை வென்று சீனா பதக்கப் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளது.
- மகளிர் 25மீ பிஸ்டல் பிரிவில் ஈஷா சிங் தங்கம் வென்றார்.
- மகளிர் 10மீ ஏர் பிஸ்டல் பிரிவில் சன்யம் விஜ் வெள்ளிப் பதக்கமும், மகளிர் 25மீ பிஸ்டல் பிரிவில் மனு பாக்கர் வெண்கலப் பதக்கமும் வென்றனர்.
- 10மீ ஏர் ரைபிள் கலப்பு அணிகள் பிரிவில் சோனம் மஸ்கர் மற்றும் ஹிமான்ஷு தில்லான் ஆகியோர் வெண்கலம் வென்றனர்.

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் 2026 - இந்தியா

- கிளாஸ்கோவில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டிற்கான காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் (CWG) இந்தியா 39 பதக்கங்களுடன் (13 தங்கம், 17 வெள்ளி, 9 வெண்கலம்) 4-வது இடத்தைப் பிடித்தது.
- 1998 கோலாலம்பூர் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளுக்குப் பிறகு, 24 ஆண்டுகளில் இந்தியா மிகக்குறைந்த பதக்கப் பட்டியலைப் பதிவு செய்தது. இருப்பினும் குறைக்கப்பட்ட போட்டி அட்டவணைக்கு மத்தியிலும் வலுவான நிலையை அடைந்துள்ளது.
- குத்துச்சண்டை, ஜூடோ, தடகளம், பாரா-தடகளம் மற்றும் பளுதூக்குதல் ஆகியவற்றில் இந்தியா சிறப்பாகச் செயல்பட்டு குத்துச்சண்டையில் 7 தங்கப் பதக்கங்கள் உட்பட 10 பதக்கங்களை வென்றுள்ளது.
- ஈட்டி எறிதலில் நீரஜ் சோப்ரா வெள்ளிப் பதக்கம் வென்றார்; அதேசமயம் மீராபாய் சானு பளுதூக்குதலில் தொடர்ந்து மூன்றாவது முறையாக காமன்வெல்த் தங்கப் பதக்கத்தை வென்றார்.

- ஆஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் கனடாவுக்கு அடுத்தபடியாக இந்தியா 4-வது இடத்தைப் பிடித்ததுடன், வெள்ளிப் பதக்கக் கணக்கீட்டின் அடிப்படையில் போட்டியை நடத்தும் நாடான ஸ்காட்லாந்தை விட முன்னிலைப் பெற்றது.

தேசிய விளையாட்டு விருதுகள் 2025

- இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகமானது தேசிய விளையாட்டு விருதுகளை அறிவித்தது.
- 2025 ஆம் ஆண்டிற்கான மேஜர் தியான் சந்த் கேல் ரத்னா விருதுக்கு எந்த வீரரும் / வீராங்கனையும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.
- விதித் குஜராத்தி மற்றும் திவ்யா தேஷ்முக் (செஸ்), தேஜஸ்வின் சங்கர் (தடகளம்), காயத்ரி கோபிசந்த் மற்றும் ட்ரீசா ஜாலி (பேட்மிண்டன்) உள்ளிட்ட 17 விளையாட்டு வீரர்களுக்கு அர்ஜுனா விருது வழங்கப்பட்டது.
- முன்னாள் கால்பந்து வீரரும் பயிற்சியாளருமான ஐ. அருமைநாயகம் அர்ஜுனா விருதினை (வாழ்நாள்) பெற்றார்.
- பர்பீர் சிங் (தடகளம்), சோட்டே லால் யாதவ் (குத்துச்சண்டை), நேஹா நந்தகுமார் சவான் (துப்பாக்கிச் சுடுதல்), தர்மேந்திர சிங் யாதவ் (குத்துச்சண்டை), மற்றும் வீரேந்தர் குமார் (மல்யுத்தம்) ஆகியோருக்கு துரோணாச்சார்யா விருது வழங்கப் பட்டது.
- விளையாட்டை மேம்படுத்தியதற்காக புனேவில் உள்ள ராணுவ பாராலிம்பிக் நோட் அமைப்பு (Army Paralympic Node), ராஷ்ட்ரிய கேல் புரோட்சஹான் புரஸ்கார் விருதைப் பெற்றது.

முக்கிய தினங்கள்

உலக நுரையீரல் புற்றுநோய் விழிப்புணர்வு தினம் 2026 - ஆகஸ்ட் 01

- நுரையீரல் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தடுப்பு, ஆரம்பகால கண்டறிதல், சரியான நேரத்தில் சிகிச்சை மற்றும் நோயாளிகளுக்கான ஆதரவை ஊக்குவிக்கவும் இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.
- உலகளவில் புற்றுநோய் தொடர்பான இறப்புகளுக்கு நுரையீரல் புற்றுநோய் முக்கிய காரணங்களில் ஒன்றாகும், ஆனால் முன்கூட்டியே கண்டறிதல் உயிர்வாழ்வு மற்றும் சிகிச்சை விளைவுகளை கணிசமாக மேம்படுத்தும்.
- இந்த நோய் புகைபிடிப்பவர்கள் மற்றும் புகைபிடிக்காதவர்கள் இருவரையும் பாதிக்கலாம் மற்றும் புகையிலைப் பயன்பாடு, மறைமுகப் புகைபிடித்தல், காற்று மாசுபாடு, ரேடான் வாயு, தீங்கு விளைவிக்கும் இரசாயனங்கள் உள்ள பணிச்சூழல் மற்றும் மரபணு காரணிகளுடன் தொடர்புடையது.
- புகையிலையை கைவிடுதல், காற்று மாசுபாட்டை குறைத்தல், ஆரோக்கியமான நுரையீரலை பராமரித்தல் மற்றும் பரிசோதனை, நோயறிதல் மற்றும் சிகிச்சைக்கு சமமான அணுகலை உறுதி செய்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் இந்த நாள் எடுத்துக்காட்டுகிறது.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு Together Through Lung Cancer என்பதாகும்.

சர்வதேச நட்பு தினம் 2026 - ஜூலை 30

- 2026 ஆம் ஆண்டு ஜூலை 30 அன்று சர்வதேச நட்பு தினம் அனுசரிக்கப்பட்டது, அதே நேரத்தில் இந்தியாவில் 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 2 அன்று (ஆகஸ்ட் முதல் ஞாயிற்றுக் கிழமை) நட்பு தினம் கொண்டாடப்பட்டது.
- மக்களுக்கும் நாடுகளுக்கும் இடையே நட்பு, அமைதி மற்றும் புரிதலை மேம்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபை (UN) 2011 ஆம் ஆண்டில் ஜூலை 30 ஆம் தேதியை சர்வதேச நட்பு தினமாக அறிவித்தது.
- இந்தியாவில் பாரம்பரியமாக ஆகஸ்ட் மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை நட்பு தினமாகக் கொண்டாடப்படுகிறது, இந்த நடைமுறை பல ஆண்டுகளாகப் பின்பற்றப் பட்டு வருகிறது.
- உலகளாவிய நட்பு தினம் என்ற யோசனை முதன்முதலில் 1958 ஆம் ஆண்டில் பராகுவேயின் டாக்டர் ராமன் ஆர்டெமியோ பிராச்சோ என்பவரால் முன்மொழியப் பட்டு, உலக நட்புப் படைப்பிரிவுக்கு வழிவகுத்தது.
- சமூகங்கள் மற்றும் நாடுகள் முழுவதும் நட்பை வலுப்படுத்தவும், கருணையை மேம்படுத்தவும் மற்றும் பரஸ்பர புரிதலை வளர்க்கவும் இந்த நாள் மக்களை ஊக்குவிக்கிறது.

இந்திய உடல் உறுப்பு தான விழிப்புணர்வு தினம் 2026 – ஆகஸ்ட் 03

- உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், மக்கள் தங்கள் உடல் உறுப்புகளை தானம் செய்ய முன்வருவதை ஊக்குவிப்பதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1994 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 3 அன்று புது தில்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தில் (AIIMS) உயிரிழந்த கொடையாளரிடம் இருந்து பெறப்பட்ட இதயத்தை வெற்றிகரமாக மாற்று அறுவை சிகிச்சை செய்த முதல் நிகழ்வை இந்த நாள் நினைவுகூருகிறது.
- உடல் உறுப்பு தானம் என்பது உயிரைக் காப்பாற்ற அல்லது மேம்படுத்த ஆரோக்கியமான உறுப்புகளை (சிறுநீரகங்கள், கல்லீரல், இதயம், நுரையீரல், கணையம் மற்றும் குடல்) அல்லது திசுக்களை (கருவிழி, தோல், எலும்பு மற்றும் இதய வால்வுகள்) தானம் செய்வதை உள்ளடக்கியதாகும்.
- இந்தியாவில் உடல் உறுப்பு தானமானது மனித உறுப்புகள் மற்றும் திசுக்கள் மாற்று சட்டம் (THOTA) மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது மற்றும் கடுமையான மருத்துவ மற்றும் சட்ட நடைமுறைகளைப் பின்பற்றுகிறது.
- சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் (MoHFW) கூற்றுப்படி, வளர்ந்து வரும் பொது விழிப்புணர்வை பிரதிபலிக்கும் வகையில், 2026 ஆம் ஆண்டில் 5 லட்சத்திற்கும் அதிகமான உடல் உறுப்பு தான உறுதிமொழிகளை இந்தியா பதிவு செய்துள்ளது.

சர்வதேச படைச் சிறுத்தை பாதுகாப்பு தினம் 2026 - ஆகஸ்ட் 04

- இந்த தினமானது படைச் சிறுத்தைகளின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

- பெரிய பூனை இனங்களில் மிகச்சிறியதான படைச் சிறுத்தையானது நிலப்பரப்பு படைச் சிறுத்தை (நியோஃபெலிஸ் நெபுலோசா) மற்றும் சுண்டா படைச் சிறுத்தை (நியோபெலிஸ் டியார்டி) என இரண்டு வகைகளை உள்ளடக்கியது.
- வாழ்விட இழப்பு, சட்டவிரோத வனவிலங்கு வர்த்தகம் மற்றும் மனித-வனவிலங்கு மோதல் ஆகியவற்றின் காரணமாக இவ்விரண்டு இனங்களும் இயற்கை பாதுகாப்பிற்கான சர்வதேச ஒன்றியத்தின் (IUCN) செந்நிறப் பட்டியலில் எளிதில் பாதிக்கப்படக்கூடிய இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளன.
- இந்தியாவின் பாதுகாப்புச் செயல் திட்டம் (CAP) 14 முன்னுரிமை நிலப்பரப்புகள், வாழ்விடப் பாதுகாப்பு, அறிவியல் கண்காணிப்பு, வேட்டையாடுதல் தடுப்பு நடவடிக்கைகள், சமூகப் பங்கேற்பு மற்றும் பருவநிலை தாங்கும் பாதுகாப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

தேசிய எலும்பு மற்றும் மூட்டு விழிப்புணர்வு தினம் 2026 - ஆகஸ்ட் 4

- எலும்பு, மூட்டு, முதுகுத்தண்டு மற்றும் தசைக்கூட்டு (எலும்புகள், மூட்டுகள், தசைகள் மற்றும் தொடர்புடைய திசுக்கள்) ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்த தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்திய எலும்பியல் சங்கத்தால் (IOA) 2012 ஆம் ஆண்டில் "வலுவான எலும்புகள், வலுவான இந்தியா" என்ற முழக்கத்துடன் இந்த தினம் தொடங்கப்பட்டது.
- எலும்பு மற்றும் மூட்டு கோளாறுகளைக் குறைப்பதற்காக ஆரம்பகால நோயறிதல், தடுப்பு பராமரிப்பு மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறை பழக்கங்களை இது ஊக்குவிக்கிறது.
- முதுமை மூட்டழற்சி, முடக்கு வாதம், ஆஸ்டியோபோரோசிஸ், கீல்வாதம், மற்றும் முதுகு மற்றும் முதுகுத்தண்டு கோளாறுகள் ஆகியவை பொதுவான எலும்பு மற்றும் மூட்டு நோய்களில் அடங்கும்.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Healthy Bones, Healthy Joints, Healthier India" என்பதாகும்.

தேசிய கைத்தறி தினம் 2026 - ஆகஸ்ட் 07

- இந்த தினமானது இந்தியாவின் கைத்தறி நெசவாளர்களைக் கௌரவிப்பதையும் கைத்தறித் துறையை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உள்நாட்டுப் பொருட்களின் பயன்பாட்டை ஊக்குவித்த 1905 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7 ஆம் தேதி சுதேசி இயக்கம் தொடங்கப்பட்டதை நினைவுகூரும் வகையில் 2015 ஆம் ஆண்டு முதல் இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.
- நான்காவது அகில இந்திய கைத்தறி கணக்கெடுப்பின் (2019–20) படி, இந்தியாவில் 35.22 லட்சம் கைத்தறி நெசவாளர்கள் மற்றும் அதனைச் சார்ந்த தொழிலாளர்கள் உள்ளனர், அவர்களில் 72% க்கும் அதிகமானோர் பெண்கள் ஆவர்.
- இந்தியாவில் 28.20 லட்சம் கைத்தறிகள் உள்ளன, இவற்றில் கிட்டத்தட்ட 90% கிராமப்புறங்களில் அமைந்துள்ளன, இது கிராமப்புற வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரங்களுக்கு ஆதரவளிக்கிறது.
- 2026 ஆம் ஆண்டு ஜூன் மாத நிலவரப்படி, 106 கைத்தறிப் பொருட்கள் புவிசார் குறியீடு (GI) பதிவைப் பெற்றுள்ளன, மேலும் இந்தியாவின் கைத்தறி ஏற்றுமதி 2025–26 ஆம் ஆண்டில் சுமார் ₹1,330.96 கோடியை எட்டியுள்ளது.

உலகப் பழங்குடியின மக்களின் சர்வதேச தினம் 2026 - ஆகஸ்ட் 09

- பழங்குடியினரின் உரிமைகள், கலாச்சாரங்கள், பாரம்பரிய அறிவு, சமத்துவம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதை இந்தத் தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை (UNGA) 1994 ஆம் ஆண்டில் இந்தத் தினத்தை நிறுவியது.
- 1982 ஆம் ஆண்டில் நடைபெற்ற பழங்குடியின மக்களுக்கான ஐக்கிய நாடுகளின் பணிக்குழுவின் முதல் கூட்டத்தை ஆகஸ்ட் 9 ஆம் தேதி குறிக்கிறது.
- பழங்குடியின கலாச்சாரங்கள், மொழிகள், பாரம்பரிய அறிவு, நில உரிமைகள் மற்றும் தன்னாட்சி ஆகியவற்றின் பாதுகாப்பை இந்தத் தினம் ஊக்குவிக்கிறது.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Honouring Indigenous Midwives: Safeguarding Life and Well-being" என்பதாகும்.

உலக சிங்கங்கள் தினம் 2026 - ஆகஸ்ட் 10

- சிங்கங்களின் பாதுகாப்பு குறித்தும், வாழ்விட இழப்பு, வேட்டையாடுதல் மற்றும் மனித-வனவிலங்கு மோதல் போன்ற அச்சுறுத்தல்கள் குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சிங்கங்கள் வேட்டையாடும் விலங்குகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தவும், சுற்றுச்சூழல் அமைப்புகளின் சமநிலையைப் பராமரிக்கவும் உதவும் முதன்மை வேட்டையாடிகளாகும்.
- உலகில் எஞ்சியிருக்கும் காட்டு ஆசிய சிங்கங்களின் தாயகமாக இந்தியா உள்ளது. இவை முக்கியமாக குஜராத்தின் கிர் நிலப்பரப்பில் காணப்படுகின்றன.
- வாழ்விட மேலாண்மை, எண்ணிக்கை கண்காணிப்பு, ஆராய்ச்சி மற்றும் மனித-வனவிலங்கு மோதல் குறைப்பு ஆகியவற்றின் மூலம் ஆசிய சிங்கங்களைப் பாதுகாப்பதற்காக 2020 ஆம் ஆண்டில் இந்தியா சிங்க பாதுகாப்புத் திட்டத்தைத் தொடங்கியது.
- சிங்கங்களின் எண்ணிக்கை ஒரே நிலப்பரப்பில் குவிந்திருக்கும் அபாயத்தைக் குறைப்பதற்காக, குஜராத்தில் உள்ள பர்தா வனவிலங்கு சரணாலயம் கூடுதல் வாழ்விடமாக உருவாக்கப்பட்டு வருகிறது.

உலக உயிரி எரிபொருள் தினம் 2026 - ஆகஸ்ட் 10

- புதைபடிவ எரிபொருட்களுக்கு புதுப்பிக்கத்தக்க மாற்றாக உயிரி எரிபொருட்களை ஊக்குவிப்பதுடன், தூய்மையான போக்குவரத்து மற்றும் எரிசக்தி பாதுகாப்பை ஆதரிப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்நாள் இந்தியாவில் முதன்முதலில் 2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தால் அனுசரிக்கப்பட்டது.
- இது 1893 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9 அன்று சர் ருடால்ப் டீசல் கடலை எண்ணெயைப் பயன்படுத்தி ஒரு இயந்திரத்தை வெற்றிகரமாக இயக்கியதை நினைவு கூருகிறது.
- பயிர்கள், விவசாய கழிவுகள், விலங்கு கழிவுகள், பாசிகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெய் போன்ற உயிரிப் பொருட்களிலிருந்து உயிரி எரிபொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

- முக்கிய வகைகளில் உயிரி எத்தனால், உயிரி டீசல், உயிரி-CNG (அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு) மற்றும் மேம்பட்ட உயிரி எரிபொருட்கள் ஆகியவை அடங்கும்.

உலக யானைகள் தினம் 2026 - ஆகஸ்ட் 12

- யானைகள் பாதுகாப்பு மற்றும் அவற்றின் வாழ்விடங்கள் மற்றும் வழித்தடங்களைப் பாதுகாப்பதை மேம்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலகின் காட்டு ஆசிய யானைகளில் கிட்டத்தட்ட 60% இந்தியாவில் உள்ளன, 2021-25 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி 22,446 யானைகள் இருப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளது.
- இந்தியா முழுவதும் உள்ள 33 யானைகள் காப்பகங்கள் மற்றும் 150 அடையாளம் காணப் பட்ட வழித்தடங்கள் மூலம் இவை பாதுகாக்கப்படுகின்றன.
- 1992 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட யானைகள் பாதுகாப்புத் திட்டமானது, வாழ்விடப் பாதுகாப்பு, அறிவியல் கண்காணிப்பு மற்றும் மனித-யானை மோதலைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை ஆதரிக்கிறது.
- இந்தியாவின் முதல் டிஎன்ஏ அடிப்படையிலான ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பு, யானைகளை மரபணு ரீதியாக அடையாளம் காண சாண மாதிரிகளைப் பயன்படுத்தியது.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு “Bringing the world together to help elephants” என்பதாகும்.

இந்தியாவில் பிரிவினை சார்ந்த பயங்கரங்கள் நினைவு தினம் 2026 - ஆகஸ்ட் 14

- 1947 ஆம் ஆண்டு இந்தியப் பிரிவினையால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர் பிழைத்தவர்களை நினைவு கூருவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தப் பிரிவினை ஆங்கிலேய ஆட்சியின் முடிவோடு சேர்ந்து வந்தது மற்றும் இந்திய சுதந்திரச் சட்டம், 1947-இன் கீழ் இந்தியா மற்றும் பாகிஸ்தான் உருவாக்கப்படுவதற்கு வழிவகுத்தது.
- 1947 ஆம் ஆண்டு ஜூன் 3 அன்று மவுண்ட்பேட்டன் பிரபு பிரிவினைத் திட்டத்தை அறிவித்தார், அதே சமயம் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான எல்லை ராட்கிளிஃப் ஆணையத்தால் வரையப்பட்டது.
- இந்தப் பிரிவினையானது நவீன வரலாற்றில் மிகப்பெரிய மக்கள் இடம்பெயர்வுகளில் ஒன்றைத் தூண்டியது, புதிதாக உருவாக்கப்பட்ட எல்லைகளில் மில்லியன் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்தனர்.
- 2021 ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கம் ஆகஸ்ட் 14-ஐ இந்தியாவில் பிரிவினை சார்ந்த பயங்கரங்கள் நினைவு தினமாக அறிவித்தது.
- 1947 ஆம் ஆண்டுப் பிரிவினையானது, குறிப்பாக பஞ்சாப் மற்றும் வங்காளத்தில் பெருமளவிலான இடம்பெயர்வு, வகுப்புவாத வன்முறை, கொலைகள், கடத்தல்கள், சொத்து அழிவு மற்றும் குடும்பங்கள் பிரிந்து செல்வதற்கு வழி வகுத்தது.

உலக கொசு தினம் – ஆகஸ்ட் 20

- கொசுக்களால் பரவும் நோய்கள் மற்றும் அவற்றைத் தடுப்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1897 ஆம் ஆண்டில் பெண் அனாபிலிஸ் கொசுக்கள் மலேரியா ஒட்டுண்ணிகளை மனிதர்களுக்குப் பரப்புகின்றன என்பதைக் கண்டுபிடித்த சர் ரொனால்ட் ரோஸை இந்த நாள் நினைவு கூறுகிறது.
- சர் ரொனால்ட் ரோஸ், 1857 ஆம் ஆண்டில் இந்தியாவின் அல்மோராவில் பிறந்த ஒரு பிரிட்டிஷ்-இந்திய மருத்துவர் மற்றும் அறிவியலாளர் ஆவார்.
- மலேரியா குறித்த அவரது பணிக்காக 1902 ஆம் ஆண்டில் உடலியல் அல்லது மருத்துவத்திற்கான நோபல் பரிசைப் பெற்றார், இதன் மூலம் மருத்துவத்தில் முதல் பிரிட்டிஷ் நோபல் பரிசு பெற்றவர் ஆனார்.
- கொசுக்களால் பரவும் முக்கிய நோய்களில் மலேரியா, டெங்கு, சிக்கன்குனியா, ஜப்பானிய மூளைக்காய்ச்சல் மற்றும் ஜிகா வைரஸ் நோய் ஆகியவை அடங்கும்.
- மலேரியா முக்கியமாக நோய்த்தொற்றுக்கு உள்ளான பெண் அனாபிலிஸ் கொசுக்களால் பரவுகிற அதே நேரத்தில் டெங்கு மற்றும் சிக்கன்குனியா முக்கியமாக ஏடிஸ் கொசுக்களால் பரவுகின்றன.

தேசிய விண்வெளி தினம் 2026 - ஆகஸ்ட் 23

- இந்தியாவின் சந்திரயான்-3 விண்கலப் பயணத் திட்டத்தை இந்த தினம் நினைவு கூருகிறது
- அந்தத் திட்டம் 2023 ஆம் ஆண்டில் சந்திரனின் தென் துருவப் பகுதியில் விக்ரம் தரையுறங்கு கலத்தை வெற்றிகரமாக மெதுவாகத் தரையிறக்கியது.
- 2023 ஆம் ஆண்டில், நிலவில் வெற்றிகரமாக மெதுவாகத் தரையிறங்கிய நான்காவது நாடாகவும், சந்திரனின் தென் துருவப் பகுதியில் தரையிறங்கிய முதல் நாடாகவும் இந்தியா ஆனது.
- இந்தச் சாதனையை கொண்டாடும் வகையிலும், அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) ஆகியவற்றில் ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையிலும் ஆகஸ்ட் 23 ஆம் தேதியை தேசிய விண்வெளி தினமாக இந்திய அரசு அறிவித்தது.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு Towards Viksit Bharat – Innovating, Collaborating and Aspiring Global Space Leadership என்பதாகும்.
- இந்த நாள் ககன்யான் மற்றும் சந்திரயான்-4 உள்ளிட்ட இந்தியாவின் வரவிருக்கும் விண்வெளிப் பயணங்களையும் சிறப்பித்துக் காட்டுகிறது.

உலக ஏரிகள் தினம் 2026 - ஆகஸ்ட் 27

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபை (UNGA) இந்த நாளை அங்கீகரித்து, 2025 ஆம் ஆண்டில் முதன்முதலாக உலகளவில் கடைபிடிக்கப்பட்டது.

- ஏரிகளுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, அவற்றின் பாதுகாப்பு, மறுசீரமைப்பு மற்றும் நிலையான மேலாண்மையை ஊக்குவிப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நன்னீர் வழங்கல், பல்லுயிர்த் தன்மை பெருக்கம், பருவநிலை ஒழுங்குமுறை, வாழ்வாதாரம் மற்றும் வெள்ள மேலாண்மை ஆகியவற்றிற்கு ஏரிகள் முக்கியமானவை.
- மாசுபாடு, அதிகப்படியான நீர் பயன்பாடு, விவசாயக் கழிவுகள், பருவநிலை மாற்றம் மற்றும் வாழ்விடச் சீரழிவு ஆகியவை முக்கிய அச்சுறுத்தல்களாகும்.
- பைக்கால் ஏரி உலகின் மிக ஆழமான நன்னீர் ஏரியாகும், அதே சமயம் சுப்பீரியர் ஏரி பரப்பளவின் அடிப்படையில் மிகப்பெரிய நன்னீர் ஏரியாகும்.

அணு ஆயுதச் சோதனைகளுக்கு எதிரான சர்வதேச விழிப்புணர்வு தினம் 2026 - ஆகஸ்ட் 29

- 2009 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை (UNGA) இந்த நாளை அங்கீகரித்தது.
- அணு ஆயுத சோதனைகளின் தீங்கு விளைவிக்கும் விளைவுகள் பற்றிய விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதையும் அவற்றை நிறுத்துவதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29 அன்று கஜகஸ்தானில் உள்ள செமிபாலாடின்ஸ்க் அணு ஆயுதச் சோதனை தளம் மூடப்பட்டதை இந்த நாள் நினைவுபடுத்துகிறது.
- அனைத்து அணு ஆயுத சோதனைகளையும் முடிவுக்குக் கொண்டுவருவதற்காக 1996 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த அணு ஆயுதச் சோதனை தடை ஒப்பந்தம் (CTBT) ஏற்றுக் கொள்ளப் பட்டது, ஆனால் இது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை.
- இந்த நாள் முதன்முதலில் 2010 ஆம் ஆண்டில் கடைபிடிக்கப்பட்டது.

சர்வதேச திமிங்கல தினம் 2026 - ஆகஸ்ட் 30

- திமிங்கலப் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்திய வனவிலங்கு அறக்கட்டளை (WTI) கடலோர கர்நாடகா, கேரளா மற்றும் லட்சத் தீவுப் பகுதிகளில் 'Save the Whale Shark Campaign' என்ற பிரச்சாரத்தைத் தொடங்கியது.
- திமிங்கலமானது (ரைன்கோடான் டைபஸ்) பூமியிலுள்ள மிகப்பெரிய மீன் ஆகும், மேலும் இது கடல் சுற்றுச்சூழல் அமைப்புகளில் ஒரு முக்கிய இனமாகும்.
- இந்தியாவில், திமிங்கலங்கள் முழு கடற்கரையோரத்திலும் காணப்படுகின்றன, இதில் மிகப்பெரிய கூட்டமைப்பு குஜராத் கடற்கரையில் காணப்படுகிறது.
- இது இயற்கைப் பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியத்தின் (IUCN) செந்நிறப் பட்டியலில் ஆபத்தான நிலையில் உள்ளதாகவும் மற்றும் 1972 ஆம் ஆண்டின் வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் அட்டவணை I இன் கீழும் பட்டியலிடப்பட்டுள்ளது.

இதரச் செய்திகள்

ஐரோப்பிய காட்டுத்தீ நெருக்கடி

- பல தசாப்தங்களில் இல்லாத மிக மோசமான காட்டுத்தீ நெருக்கடியை பிரான்சும் ஸ்பெயினும் எதிர்கொண்டுள்ளன, பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து 325,000 க்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.
- தீவிர வெப்ப அலைகள், நீடித்த வறண்ட வானிலை, பலத்த காற்று மற்றும் காட்டுத்தீ காலத்தை நீட்டித்த பருவநிலை மாற்றத்தின் விளைவுகளால் காட்டுத்தீ தீவிரம் அடைந்துள்ளது.
- 2026 ஆம் ஆண்டு ஜனவரி முதல், பாதுகாக்கப்பட்ட காடுகள் மற்றும் இயற்கை இருப்புப் பகுதிகள் உட்பட பிரான்சில் சுமார் 69,500 ஹெக்டேர் நிலங்களும் ஸ்பெயினில் கிட்டத்தட்ட 150,000 ஹெக்டேர் நிலங்களும் எரிந்துள்ளன.
- இந்தத் தீ விபத்துகள் காடுகள், வீடுகள், போக்குவரத்து உள்கட்டமைப்புகளை அழித்துள்ளதுடன், திராட்சைத் தோட்டங்கள் மற்றும் வனவிலங்கு வாழ்விடங்களை அச்சுறுத்தியுள்ளன, மேலும் உயிரிழப்புகள், காயங்கள் மற்றும் பெரிய அளவிலான வெளியேற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.
- இக்காட்டுத்தீ நெருக்கடி இத்தாலி, ஸ்காட்லாந்து மற்றும் பிற மத்திய தரைக்கடல் நாடுகளுக்கும் பரவியுள்ளது, இது ஐரோப்பாவில் பருவநிலை தொடர்பான பேரழிவுகளின் அதிகரித்து வரும் அதிர்வெண் மற்றும் தீவிரத்தை எடுத்துக் காட்டுகிறது.

ஹரப்பா நாகரிகத்தின் வீழ்ச்சி

- பீர்பால் சாஹ்னி தொல்லுயிர் அறிவியல் நிறுவனம் (BSIP) நடத்திய ஆய்வில், தற்போதைய காலகட்டத்திற்கு முன்பு (BP) சுமார் 4,200 ஆண்டுகளுக்கு முன்பு பலவீனமான இந்திய கோடைக்காலப் பருவமழை (ISM) ஹரப்பா நாகரிகத்தின் வீழ்ச்சிக்குப் பங்களித்ததாகக் கண்டறியப்பட்டுள்ளது.
- கடந்தகால தாவரங்கள் மற்றும் பருவநிலை மாற்றங்களை மறுகட்டமைக்க, கர்வால் இமயமலையில் உள்ள தியோரியா தால் ஏரியிலிருந்து மகரந்தப் பதிவுகளை ஆராய்ச்சியாளர்கள் பகுப்பாய்வு செய்தனர்.
- 4.2 ka நிகழ்வு (4,200 ஆண்டுகளுக்கு முந்தைய பருவநிலை மாற்றம்) ஆனது குளிர்ந்த மற்றும் வறண்டப் பருவநிலையை ஏற்படுத்தியதாகவும், பருவமழையை பலவீனப் படுத்தியதாகவும், சிந்து மற்றும் கக்கர்-ஹக்ரா நதிப் பகுதிகளில் விவசாயத்தை பாதித்ததாகவும் ஆய்வு கண்டறிந்துள்ளது.
- நதி வெள்ளம் மற்றும் நீர் இருப்பு குறைந்ததன் காரணமாக, ஹரப்பா மக்கள் கிழக்கு கங்கை சமவெளிகளை நோக்கி இடம்பெயர்ந்துள்ளனர்.
- இந்த பருவநிலை மாற்றம், 'வெப்பமண்டலங்களுக்கிடையிலான ஒருங்கு மண்டலம்' (ITCZ), 'எல் நினோ' (El Niño) மற்றும் 'இந்தியப் பெருங்கடல் இருமுனை' (IOD) ஆகியவற்றின் மாற்றங்கள் போன்ற காரணிகளுடன் தொடர்புடையது என ஆய்வு இணைக்கிறது.

நாது லா கணவாய் வழியாக எல்லை வர்த்தகம்

- கோவிட்-19 பெருந்தொற்று மற்றும் எல்லைப் பதற்றம் காரணமாக ஆறு ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சிக்கிமின் நாது லா கணவாய் வழியான இந்தியா-சீனா எல்லை வர்த்தகம் 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1 அன்று மீண்டும் தொடங்கியது.

- நாது லா கணவாய் என்பது இந்தியா மற்றும் சீனாவிற்கு இடையேயான நியமிக்கப் பட்ட எல்லை வர்த்தகப் புள்ளிகளில் ஒன்றாகும் என்பதோடு மேலும் இது பண்டைய பட்டுப் பாதையின் ஒரு பகுதியாகும்.
- தற்போதுள்ள இருதரப்பு வர்த்தக நெறிமுறைகளின் கீழ் நவம்பர் மாதம் வரை (திங்கள் முதல் வியாழன் வரை) இந்த பருவகால வர்த்தகம் நடைபெறும்.
- கூடுதலாகப் பணியாளர்களை நியமித்தல் மற்றும் முதன்முறையாக ஒரு பெண்கள் படையணியை நிறுவுதல் உள்ளிட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளை இந்தோ-திபெத்திய எல்லைக் காவல் படை (ITBP) செயல்படுத்தியுள்ளது.
- 1962 ஆம் ஆண்டு இந்தியா-சீனா போரைத் தொடர்ந்து நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக மூடப்பட்டிருந்த நாது லா எல்லை வர்த்தகம் 2006 ஆம் ஆண்டில் மீண்டும் திறக்கப் பட்டது.

81வது ஹிரோஷிமா குண்டு வீச்சு நினைவு தினம்

- ஜப்பான் 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6 அன்று 81ஆவது ஹிரோஷிமா அணுகுண்டு வீச்சு நினைவு தினத்தை அனுசரித்தது.
- அமெரிக்கா 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6 அன்று ஹிரோஷிமா மீது உலகின் முதல் போர்க்கால அணுகுண்டான "லிட்டில் பாய்" (Little Boy) என்பதை வீசியது, இது நகரத்தின் பெரும்பகுதியை அழித்ததுடன் 1945 ஆம் ஆண்டின் இறுதிக்குள் சுமார் 1,40,000 பேரைக் கொன்றது.
- "ஃபேட் மேன்" (Fat Man) என்ற இரண்டாவது அணுகுண்டு 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9 அன்று நாகசாகி மீது வீசப்பட்டது, இதனால் 1945 ஆம் ஆண்டின் இறுதிக்குள் சுமார் 70,000 இறப்புகள் ஏற்பட்டன.
- ஜப்பான் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று சரணடைந்தது, இது இரண்டாம் உலகப் போரை முடிவுக்குக் கொண்டுவந்தது.
- ஹிரோஷிமா அணுகுண்டு வீச்சில் உயிர் பிழைத்தவர்களின் (ஹிபாகுஷா - Hibakusha) எண்ணிக்கை 91,105 ஆகக் குறைந்துள்ளதுடன், அவர்களின் சராசரி வயது இப்போது 86 ஆண்டுகளுக்கும் மேலாகும்.

நாகசாகி குண்டுவீச்சின் 81வது நினைவு தினம்

- 1945 ஆம் ஆண்டு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூரும் வகையில், நாகசாகி அணுகுண்டு வீச்சின் 81வது நினைவு தினத்தை 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9 அன்று ஜப்பான் அனுசரித்தது.
- இரண்டாம் உலகப் போரின் போது 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9 அன்று அமெரிக்கா "ஃபேட் மேன்" (Fat Man) என்ற அணுகுண்டை நாகசாகியில் வீசியது.
- ஃபேட் மேன் என்பது புளூட்டோனியம் அடிப்படையிலான உள்வெடிப்பு வகை அணுகுண்டாகும், ஹிரோஷிமாவில் வீசப்பட்ட குண்டு யுரேனியம் அடிப்படையிலான "லிட்டில் பாய்" (Little Boy) ஆகும்.
- நாகசாகி குண்டு சுமார் 21 கிலோ டன் TNT வெடிபொருளின் ஆற்றலைக் கொண்டிருந்ததுடன் மிகப்பெரிய அழிவையும் உயிர் இழப்பையும் ஏற்படுத்தியது.
- அணுகுண்டுகள் அணுக்கரு பிளவு அல்லது இணைவின் மூலம் அபரிமிதமான ஆற்றலை வெளியிட்டு, ஒரு சக்திவாய்ந்த வெடிப்பு, கடுமையான வெப்பம் மற்றும் கதிர்வீச்சை உருவாக்குகின்றன.

இந்தியா தினப் பிரகடனம் - ஆகஸ்ட் 15

- 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதியை மாசசூசெட்ஸ் மாநிலம் முழுவதும் இந்தியா தினமாக அறிவித்தது, அதேபோன்று பாஸ்டன் நகரமும் இதேபோன்ற ஒரு பிரகடனத்தை வெளியிட்டது.
- இந்தியாவின் சுதந்திரத்தின் 79வது ஆண்டு விழாவைக் குறிக்கும் வகையில் 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1 அன்று மாசசூசெட்ஸ் ஆளுநர் மௌரா ஹீலியால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.
- பாஸ்டன் நகர மேயர் மிச்செல் வூ ஆகஸ்ட் 15 ஆம் தேதியை நகரத்தில் இந்தியா தினமாக அறிவித்ததுடன், பாஸ்டனில் புதிய இந்தியத் துணைத் தூதரகம் திறக்கப்படுவதையும் வரவேற்றார்.
- அமெரிக்காவில் உள்ள இந்தியப் புலம்பெயர்ந்தோரில் 5 மில்லியனுக்கும் அதிகமான இந்திய வம்சாவளியினர் உள்ளனர், மருத்துவம், அறிவியல், தொழில்நுட்பம், கல்வி, வணிகம் மற்றும் பொது சேவையில் இவர்களின் பங்களிப்புகள் முக்கியமானவை.
- SAILBOSTON-250 நிகழ்வுக்காக இந்தியக் கடற்படையின் பாய்மரப் பயிற்சிக் கப்பலான ஐ.என்.எஸ் சுதர்ஷினி பாஸ்டன் வருவதையும் அந்தப் பிரகடனம் குறிப்பிட்டுள்ளது.
- பாஸ்டன் துறைமுகத்தில் நடைபெற்ற 4வது சர்வதேச இந்தியா தின அணிவகுப்பைத் தொடர்ந்து, மாசசூசெட்ஸ் இதற்கு முன்னதாக 2025 ஆம் ஆண்டிலும் ஆகஸ்ட் 15 ஆம் தேதியை இந்தியா தினமாக அறிவித்திருந்தது.

வெள்ளையனே வெளியேறு இயக்க தினம் 2026

- 1942 ஆம் ஆண்டில் வெள்ளையனே வெளியேறு இயக்கம் (பாரத் சோடோ அந்தோலன்) தொடங்கப்பட்டதை நினைவு கூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 8 அன்று வெள்ளையனே வெளியேறு இயக்க தினம் அனுசரிக்கப்படுகிறது.
- அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் (AICC) அமர்வின் போது, பம்பாயில் (தற்போதைய மும்பை) உள்ள கோவாலியா டேங்க் மைதானத்தில் 1942 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8 அன்று இவ்வியக்கம் தொடங்கப்பட்டது.
- மகாத்மா காந்தி இவ்வியக்கத்திற்குத் தலைமை தாங்கியதுடன் பிரிட்டிஷ் ஆட்சிக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கக் கோரி, "செய் அல்லது செத்து மடி" என்ற புகழ் பெற்ற அழைப்பை அவர் விடுத்தார்.
- இவ்வியக்கம் முக்கியமாக கிரிப்ஸ் தூதுக்குழுவின் (1942) தோல்வி மற்றும் இரண்டாம் உலகப் போரின்போது பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக வளர்ந்து வந்த எதிர்ப்பு ஆகியவற்றால் தூண்டப்பட்டது.
- 1942 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9 அன்று காந்தி மற்றும் பிற காங்கிரஸ் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். ஆனால் மாணவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் பெண்கள் தொடர்ந்து போராட்டங்கள் மற்றும் தலைமறைவு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.
- இவ்வியக்கம் ஆங்கிலேயர்களால் ஒடுக்கப்பட்டாலும், இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்ததுடன், 1947 ஆம் ஆண்டில் சுதந்திரத்தை நோக்கிய பாதையை வலுப்படுத்தியது.

பாதுகாக்கப்பட்ட பட்டியலிலிருந்து 18 நினைவுச் சின்னங்கள் நீக்கம்

- 1958 ஆம் ஆண்டின் பழங்கால நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்பொருள் ஆய்விடங்கள் மற்றும் எஞ்சியவைகள் (AMASR) சட்டத்தின் கீழ், 18 நினைவுச் சின்னங்கள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருப்பதனை நிறுத்தியதை அடுத்து, 2021 ஆம் ஆண்டு முதல் மத்தியப் பாதுகாக்கப்பட்ட பட்டியலிலிருந்து அந்த 18 நினைவுச் சின்னங்களை மத்திய அரசு நீக்கியுள்ளது.
- நிக்கல்சன் சிலை மற்றும் மேடை, பரா கம்பா கல்லறை, இன்ச்லா வாலி கும்டி (தில்லி); கோஸ் மினார் எண் 13, கோஸ் மினார் (அரியானா); பச்சௌன் கோட்டையில் உள்ள கல்வெட்டு (மத்தியப் பிரதேசம்); 12-ம் நூற்றாண்டு கோயில், கோட்டையில் உள்ள கல்வெட்டு (ராஜஸ்தான்); குடும்பரி பகுதி (உத்தரகாண்ட்) ஆகியவை அந்த 18 இடங்களில் அடங்கும்.
- உத்தரப் பிரதேசத்தில் உள்ள பழமையான ஆலமரம், மூடப்பட்ட கல்லறை, கன்னர் பர்கில்ஸ் கல்லறை, கௌகாட்டில் உள்ள கல்லறை, ஜஹ்ரைலா சாலையில் உள்ள கல்லறைகள், லக்னோ-பைசாபாத் சாலையில் உள்ள கல்லறைகள், அஹுகியில் உள்ள மூன்று சிறிய லிங்கக் கோயில்கள், தெலியா நாலா பௌத்த இடிபாடுகள் மற்றும் கருவூலக் கட்டிடத்தில் உள்ள பலகை ஆகியவை அந்த இடங்களில் அடங்கும்.
- இந்தியத் தொல்லியல் துறை (ASI) இப்போது 3,688 மத்தியப் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் மற்றும் தளங்களைப் பராமரிக்கிறது; AMASR சட்டத்தின் 35-வது பிரிவு, தேசிய முக்கியத்துவத்தை இழக்கும் நினைவுச் சின்னங்களைப் பட்டியலிலிருந்து நீக்க வழி வகை செய்கிறது.
- அமெரிக்காவிலிருந்து 589, ஆஸ்திரேலியாவிலிருந்து 51, இங்கிலாந்திலிருந்து 21 மற்றும் நெதர்லாந்திலிருந்து 1 உட்பட, 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை வெளிநாடுகளிலிருந்து 662 வரலாற்றுத் தொல்பொருட்களை இந்தியா மீட்டுள்ளது.

2026 ஆம் ஆண்டு சத்பாவனா திவாஸ்

- முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் பிறந்த நாளைக் குறிக்கும் வகையிலும், தேசிய ஒருமைப்பாடு, மத நல்லிணக்கம், அமைதி மற்றும் நல்லெண்ணத்தை மேம்படுத்தும் வகையிலும் ஒவ்வொரு ஆண்டும் சத்பாவனா திவாஸ் (Sadbhavana Diwas) அனுசரிக்கப் படுகிறது.
- ராஜீவ் காந்தி 1944 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20 ஆம் தேதி மகாராஷ்டிராவின் பம்பாயில் (தற்போதைய மும்பை) பிறந்தார்.
- அவர் இந்திரா காந்தியின் மகனும் ஜவகர்லால் நேருவின் பேரனும் ஆவார்.
- இந்திரா காந்தியின் படுகொலைக்குப் பிறகு 1984 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் தேதி அவர் பிரதமரானார், மேலும் அந்தப் பதவியில் 1989 ஆம் ஆண்டு டிசம்பர் 2 ஆம் தேதி வரை பணியாற்றினார்.
- தனது 40 வயதில், இந்தியாவின் மிக இளைய பிரதமராக ராஜீவ் காந்தி ஆனார்.
- அரசியலில் நுழைவதற்கு முன்பு, அவர் இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தில் வணிக ரீதியான விமானியாகப் பணிபுரிந்தார்.
- கல்விக்கான அணுகல் மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்காக 1986 ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கை (NPE), அவரது பதவிக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

- குறிப்பாக கிராமப்புறங்களைச் சேர்ந்த திறமையான மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்குவதற்காக ஜவஹர் நவோதயா வித்யாலயா (JNV) அமைப்பு 1986 ஆம் ஆண்டில் அறிமுகப் படுத்தப் பட்டது.
- 1985 ஆம் ஆண்டின் 52வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் கட்சித் தாவல் தடைச் சட்டத்தை அறிமுகப்படுத்தியது மற்றும் அரசியலமைப்பில் பத்தாவது அட்டவணையைச் சேர்த்தது.
- 1988 ஆம் ஆண்டின் 61வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் வாக்களிக்கும் வயதை 21 லிருந்து 18 ஆகக் குறைத்து, தேர்தலில் இளைஞர்களின் பங்கை அதிகரித்தது.
- டெல்லி மற்றும் மும்பையில் தொலைத்தொடர்பு சேவைகளை வழங்குவதற்காக அவரது பதவிக்காலத்தில் 1986 ஆம் ஆண்டில் மகாநகர் டெலிபோன் நிகாம் லிமிடெட் (MTNL) நிறுவப் பட்டது.
- அவர் 1991 ஆம் ஆண்டு மே 21 ஆம் தேதி தமிழ்நாட்டில் உள்ள ஸ்ரீபெரும்புதூரில் ஒரு தேர்தல் பிரச்சாரத்தின் போது படுகொலை செய்யப்பட்டார்.
- அவருக்கு 1991 ஆம் ஆண்டில் இந்தியாவின் உயரிய சிவிலியன் விருதான பாரத ரத்னா மரணத்திற்குப் பின் வழங்கப்பட்டது.
- சத்பாவனா திவாஸ் என்பது உணர்வுபூர்வமான ஒற்றுமை, மத நல்லிணக்கம், அமைதியான சகவாழ்வு மற்றும் உரையாடல் மற்றும் அரசியலமைப்பு வழிகள் மூலம் வேறுபாடுகளைத் தீர்ப்பது ஆகிய மதிப்புகளை எடுத்துக்காட்டுகிறது.

பழமையான நுண்ணுயிர் வாழ்க்கையின் தடயங்கள்

- கிழக்கு இந்தியாவில் உள்ள ஒரு பாறையில் குறைந்தது 3.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முந்தைய நுண்ணுயிர் வாழ்க்கையின் ஆதாரங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்தப் பாறையானது ஜார்கண்ட் மற்றும் ஒடிசாவின் சில பகுதிகளை உள்ளடக்கிய சிங்பூம் நிலைக் கண்டப்பகுதியில் (Singhbhum Craton) உள்ள பிதார்தாரியில் (Bhitardari) கண்டறியப்பட்ட கார்பன் கலந்த கருங்கல் ஆகும்.
- ஆய்வு செய்யப்பட்ட எட்டு சிர்கான் படிகங்களில் (zircon crystals) நான்கு சுமார் 3,497 மில்லியன் ஆண்டுகள் வயதைக் கொடுத்தன, இது பாறையின் வயதை நிறுவுவதற்கு உதவியது.
- கார்பன் ஐசோடோப்பு வடிவங்கள் மற்றும் சிதைந்த கரிமப் பொருட்கள் உள்ளிட்ட வேதியியல் சான்றுகள், கார்பன் உயிரினங்களால் உற்பத்தி செய்யப்பட்டது என்பதைக் குறிக்கின்றன.
- உறுதிப்படுத்தப்பட்ட உயிரி-கையெழுத்துடன் (biosignature) நேரடியாகக் கணிக்கப் பட்ட மிகப்பழமையான பாறையாக இந்தக் கண்டுபிடிப்பு இருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.
- பூமி உருவாகி சுமார் 1 பில்லியன் ஆண்டுகளுக்குப் பிறகு, பூமியின் வரலாற்றில் ஒப்பீட்டளவில் மிக விரைவாகவே நுண்ணுயிர் வாழ்க்கை இருந்ததை இந்தக் கண்டுபிடிப்பு உணர்த்துகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★